வரு.75 இல. 35 ★

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.vaaramanjari.lk

24 பக்கங்கள் 100/-




# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI




2023 செப்டெம்பர் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

September 03 Sunday, 2023

/ Thinakaran.lk / ThinakaranLK













மட்டக்களப்பு முதல் பொலன்னறுவை வரையான

# ரயில்வே காணிகளில் பல சட்டவிரோத குடியிருப்பாளர்கள்

## உடன் வெளியேறுமாறு ஆளுநர் செந்தில், அதிகாரிகளுக்கு அமைச்சர் பந்துல பணிப்பு



பொலன்னறுவை முதல் மட்டக்களப்புவரையான ரயில்வே திணைக்களத்துக்குரிய காணிகளிலுள்ள சட்டவிரோத குடியிருப்பாளர்களை உடனடியாக வெளியேற்றுமாறு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன பணித்துள்ளார்.

இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் கடந்த 31ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே அமைச்சர் இவ்வாறு பணித்துள்ளார்.

ரயில்வே கட்டளைச் சட்டம் பிரித்தானியர்களால் இயற்றப்பட்ட மிகக் கடுமையான சட்டமாகுமெனத் தெரிவித்த அமைச்சர், ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான காணியில் எவரும் குடியேறவோ, கட்டடங்கள் கட்டவோ அனுமதி இல்லையெனவும் வலியுறுத்தினார்.

ரயில்வே பொது முகாமையாளரின் அதிகாரத்தின் கீழும் கூட, இந்த ஒதுக்கப்பட்ட நிலத்தை 5 ஆண்டு ஒப்பந்தத்தின் படி, தற்காலிக குத்தகை அடிப்படையில் மட்டுமே

06

## இந்தியா, மித்ரா குழும தலைவர் மூர்த்தி ஜனாதிபதி ரணிலுடன் முதலீடு குறித்து பேச்சு



இந்தியாவின் ஆந்திரா பிரதேசத்தில் இயங்கும் மித்ரா குழும நிறுவனத் தலைவரும் மித்ரா டைம்ஸ் மாத இதழ் பிரதம ஆசிரியரும் தமிழ் ஊடக மற்றும் பத்திரிகையாளர் நலச் சங்கத் தலைவருமான எம்.எஸ்.மூர்த்தி, இலங்கையில் சுற்றுலா மற்றும் மின்சாரத்துறையில் முதலீடு செய்வது தொடர்பாக ஜனாதிபதி

06

## வித்யோதய சாகித்திய விருது விழா; சிறந்த நாவல் மனோஹரியின் 'கிரிஜா'



(படம்: சிந்தக குமாரசிங்க)

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 14ஆவது வித்யோதய சாகித்திய விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (01) பிற்பகல் பல்கலைக்கழக சுமங்கலா மண்டபத்தில் நடைபெற்றது. விழாவில் 2022ஆம் ஆண்டின் சிறந்த நாவலாக மனோஹரி ஜயலத்தின் 'கிரிஜா' நாவல் விருதை வென்றது.

06



06

## உழவு இயந்திரத்தில் சிக்கி சிறுவன் பலி!

வவுனியாவில் சோக சம்பவம்

மேல் மாகாணத்தில் முதற்கட்டமாக

# இ.போ.சவுடன் இணைந்ததாக 200 மின்சார பஸ்கள் சேவைக்கு

## ஆர்வலர்களுக்கு போக்குவரத்து அமைச்சு அழைப்பு

இலங்கை போக்குவரத்து சபையுடன் இணைந்ததாக மேல் மாகாணத்தில் 200 மின்சார பஸ்களை சேவையில் இணைத்துக்கொள்வதற்காக நிறுவனங்களிடமிருந்து ஆர்வத்தை கோரும் (Expression Of Interest) அறிவித்தலை அடுத்த வாரம் வெளியிடுமாறு போக்குவரத்து சபை தலைவருக்கு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன அறிவித்துள்ளார்.

வரலாற்றில் முதன்முறையாக இலங்கை போக்குவரத்து சபையுடன் இணைந்து மேல் மாகாணத்தில் 200 மின்சார பஸ்கள் திட்டத்தை ஆரம்பிக்க அண்மையில் அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

50 மின்சார பஸ்களை முன்னோடி திட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கு அமைச்சரவை முன்னர் அனுமதி வழங்கியிருந்ததாக, அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன

06

- ஆர்வத்தை கோரும் (Expression Of Interest) அறிவித்தலை அடுத்த வாரம் வெளியிடுமாறு இ.போ.ச. தலைவருக்கு அமைச்சர் பந்துல பணிப்பு



## லிற்றோ Gas விலையில் திங்கள் முதல் மாற்றம்

### நாளை உத்தியோகபூர்வமாக அறிவிப்பு



லிற்றோ சமையல் எரிவாயு சிலிண்டர்களின் விலையை நாளை திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் லிற்றோ நிறுவனம் மாற்றியமைக்கவுள்ளது.

06

கெஹெலியவுக்கு எதிரான பிரேரணை;

## சபையில் 6,7,8 இல் விவாதம் 8ஆம் திகதி வாக்கெடுப்பு

### கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம்



சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை எதிர்வரும் 6,7,8ஆம் திகதிகளில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

06

## புதிய ஸ்டிக்கர் இல்லாது மதுவை விற்றால் சிக்கல்

### அபராதத்துடன் அனுமதிப்பத்திரமும் ரத்து



மதுபானப் போத்தல்களுக்கான புதிய ஸ்டிக்கர் முறையை மாற்றியமைத்து, மதுபானத்தை விற்பனை செய்து மோசடி நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக அபராதம் விதிக்கப்படுமென, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

06

இந்திய அமைச்சரின்

## இலங்கை விஜயம் திடீரென ஒத்திவைப்பு



இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஸ்ரீ ராஜ்நாத் சிங்கின் இலங்கை விஜயம் திடீரென்று

06

## எங்கள் கருத்து

வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி வாரமஞ்சரி

### வானத்தை வசப்படுத்தும் இந்திய சாதனைப் பெண்கள்!

விண்வெளி அறிவியல்துறையில் உலக அரங்கில் உச்சத்தைத் தொட்டிருக்கின்றது இந்தியா. இதுவரை காலமும் கண்டறியப்படாத மர்மங்கள் நிலவிய நிலவின் தென்துருவப் பகுதிக்கு உலகில் முதன்முதலில் சந்திரயான்3 விண்கலத்தை வெற்றிகரமாக அனுப்பி தரையிறக்கியதனால் உருவான சர்வதேசப் பரபரப்பு அடங்குவதற்கிடையில், சூரியனை ஆய்வு செய்வதற்கான ஆதித்யா எல்1 என்ற விண்கலத்தை நேற்றுக்காலை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது இந்தியா.

விண்வெளி ஆய்வு சோதனைகளைப் பொறுத்தவரை ‘வானம் வசப்படும்’ என்பதைப் போன்று, அடுத்தடுத்து சாதனைகளை குவித்தவாறு செல்கின்றது பாரத தேசம். இந்தியாவின் இந்த அறிவியல் சாதனைகளைப் பொறுத்தவரை அயல்நாடு என்ற ரீதியிலும், இன்னல் வேளையில் தோள் கொடுக்கும் நட்புநாடு என்ற வகையிலும் இலங்கையும் மகிழ்ச்சியடைய முடியும்.

இந்திய விண்வெளி ஆய்வு நிலையமான இஸ்ரோ சூரிய ஆய்வுக்காக நேற்று விண்ணில் செலுத்திய ஆதித்யா எல் 1 விண்கலமானது 100 தொடக்கம் 120 நாட்கள் வரை பயணித்து L1 சுற்றுவட்டப்பாதையை அடைந்து ஆய்வில் ஈடுபடவுள்ளது. சூரியப் புயல்,

06

## இலங்கை – இந்திய சமுதாய பேரவையின் தலைவராக ஜீவன்

### பேரவையின் உயர்மட்டத்தினரால் ஏகமனதாக தெரிவு



இலங்கை இந்திய சமுதாயப் பேரவையின் புதிய தலைவராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை இந்தியாவுக்கிடையிலான வர்த்தக மற்றும் கலாசார ரீதியிலான

06

இலங்கை, யாழ்ப்பாணத் தமிழரான

## தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூர் ஜனாதிபதியானார்



சிங்கப்பூரின் ஒன்பதாவது ஜனாதிபதியாக தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தர்மன் சண்முகரத்தினம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தர்மன் சண்முகரத்னத்தை தவிர, காக் சோங் (வயது 75), டான் கின் லியான் (வயது 75) ஆகிய

06

## ஜப்பான் பிரதமர் இலங்கை வருகிறார்

### இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பு



ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா ஒருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளதாக, இராஜதந்திர வட்டாரங்கள்

06

வடக்கு, கிழக்கின் சில பகுதிகளில்

## அரச அனுசரணையுடன் காணிகள் அபகரிப்பா?

### சந்தேகத்தில் CV விக்கி முறைப்பாடு



வடக்கு, கிழக்கில் குருந்தூர், தையிட்டி, செட்டிகுளம், நாவற்குழி போன்ற இடங்களில் அரச அனுசரணையுடன் காணி அபகரிப்புகள் இடம்பெறுகின்றன

06

## அவசரகால கொள்முதலின் கீழ் 400 வகை மருந்துகள் இறக்குமதி

### நாட்டிலுள்ள வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பு



அவசரகால கொள்வனவின் கீழ் 400 வகையான மருந்துகள் கொள்வனவு செய்யப்பட்டு வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக, சுகாதார அமைச்சு தெரிவித்தது.

இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட 378 வகையான மருந்துகளும் வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக,

06

## கோழி இறைச்சியின் விலையில் மாற்றம்

### 01Kg இறைச்சி 1,250 ரூபாவாகியது



ஒரு கிலோகிராம் 1,450 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட கோழி இறைச்சியை 1,250 ரூபாவுக்கு பல்பொருள்

06

# மெதுமெதுவாக வியாபிக்கும் மெனின்ஹோகொக்கல் நோய்



**இலங்கையின் தென் மாகாணத்திலுள்ள காலி மாவட்டத்தின் சிறைச்சாலையில் இரண்டு கைதிகள் அண்மையில் (2023 ஆகஸ்ட் மாத நடுப்பகுதியில்) மரணமடைந்தனர். மேலும் சில கைதிகள் கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். இவர்களது மரணத்துக்கு நோய்க்கிருமியொன்று காரணமென முதலில் அறிவித்த மருத்துவ துறையினர், இரண்டொரு தினங்களுக்குள் அந்த நோய்க்கான காரணியை சரியாக அடையாளம் கண்டு அறிவிக்கவும் தவறவில்லை.**



- காலி சிறைச்சாலையில் முதலில் பதிவான நோய்
- ஜா-எல நபர் பணிபுரியும் நிறுவனத்தில் 30 பேருக்கு சோதனை
- நோய்க்கான ஒரிரு அறிகுறி தென்பட்டாலும் துரிதமாக சிகிச்சை பெறுவதன் முக்கியத்துவம்
- கவனயீனமும் தாமமும் ஆபத்தாகலாம்

என்றாலும் நோய்க் காரணியொன்றினால் இரு கைதிகள் உயிரிழந்த விடயம் தென் பகுதி உட்பட நாட்டின் பல பிரதேசங்களிலும் பேசுபொருளாகியது. இந்நிலையில் அந்நோய்க்காரணி மெனின்ஹோகொக்கல் (Meningococcal) என்ற பக்றீரியா தான் என்று குறிப்பிட்ட சுகாதாரத் துறையினர், இப்பக்றீரியா மக்கள் மத்தியில் பரவவில்லை என்றும் கூறினர். அதனால் இப்பக்றீரியா குறித்து மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த அச்சம் நீங்கியது. ஆனால் அந்த அச்சம் முற்றாக நிங்கி விடவில்லை.

காலி, கராப்பிட்டிய வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்த எட்டு மாதக் குழந்தையொன்று இப்பக்றீரியா தொற்றினால் கடந்த 26 ஆம் திகதி (அகஸ்ட் மாதம்)



உயிரிழந்தமை இதற்கு காரணமாக அமைந்தது.

இந்நிலையில் காலி மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் கொனர சோமரட்ன, 'இக்குழந்தை மெனின்ஹோ கொக்கல் பக்றீரியா தொற்றினால் உயிரிழந்துள்ள போதிலும் இக்குழந்தைக்கும் ஏற்கனவே உயிரிழந்த இரு சிறைக் கைதிகளுக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இருக்கவில்லை' என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில் இப்பக்றீரியா குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்படும் நிலை மக்கள் மத்தியில் மீண்டும் ஏற்பட்டுள்ளது. காலியில் இரண்டு கைதிகள் மற்றும் எட்டு மாதக் குழந்தையின் மரணத்திற்கு காரணமாக அமைந்த பக்றீரியாவின் தொற்றுக்குள்ளான நபரொருவர் இரத்மலானையிலுள்ள நிறுவனமொன்றில் அடையாளம் காணப்பட்டுள்ளார். 49 வயது மதிக்கத்தக்க இந்நபர் ஜா-எல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் அவர் கடமையாற்றும் நிறுவனத்தில் அவருடன் பணிபுரியும் சுமார் 30 பேர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் இரத்மலானை சுகாதார மருத்துவ அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார்.

காலியில் சிறைக்கைதிகள் சிலரில் முதலில் அடையாளம் காணப்பட்ட இப்பக்றீரியா, சில தினங்களுக்குள் இச்சிறைச்சாலைக்கு வெளியே காலிப் பிரதேசத்திலேயே பதிவான தோடு நில்லாது ஜா- எலவில் வசிக்கும் இரத்மலானையில் தொழில் புரியும் நபரொருவருக்கும் தொற்றிருப்பது அடையாளம் காணப்பட்டிருக்கிறது. இது இப்பக்றீரியா மெதுமெதுவாக வியாபிப்பதன் சமிக்ஞையாக விளங்குகிறது. ஆன போதிலும் அந்நபரும் மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்.

காலி சிறைச்சாலையில் முதலில் அடையாளம் காணப்பட்ட இப்பக்றீரியா தொற்று தற்போது மேல் மாகாணத்திலும் பாதிவாகி இருப்பது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தவும் செய்திருக்கிறது. ஏனெனில் இப்பக்றீரியா தாக்கத்திற்கு உள்ளானவர்களாக இற்றை வரையும் பத்துக்கு உட்பட்டவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் மூவர் உயிரிழந்துமிருப்பது இப்பக்றீரியா தொடர்பிலான அச்சத்திற்கு வழிவகுத்துள்ளது. அதனால் இந்நோய் குறித்து அறிந்து கொள்வதும் அதற்கேற்ப செயற்பாடுகளை அமைத்துக் கொள்வதும் பெரிதும் பயன்மிக்கதாக இருக்கும்.

மெனின்ஹோகொக்கல் மூளைக் காய்ச்சல் அல்லது மெனின்ஹோகொக்கல் மெனின்ஜி என அழைக்கப்படும் இந்நோய் சாதாரணமான ஒன்றல்ல. உரிய நேர காலத்தில் இந்நோயை அடையாளம் கண்டு துரிதமாகச் சிகிச்சை அளிக்கத் தவறினால் கடும் சிக்கல்களையும் நெருக்கடிகளையும் ஏற்படுத்தக்கூடியதே இந்நோய்.

1805 இல் சுவிட்சர்லாந்து நாட்டின் ஜெனீவாவை அண்மித்த பிரதேசங்களில் இந்நோய் பெரிதும் பரவியது. அதன் விளைவாகப் பலரது உயிரிழப்புக்கும் மேலும் பலரது கடும் உடற் பாதிப்புகளுக்கும் காரணமானது இந்நோய்க்காரணி. இப்பின்புலத்தில் இந்நோய்க்கான காரணி குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் பயனாக 1887 இல் நெய்ஸ்செரியா மெனின்ஹிடிடிஸ் (Neisseria meningitidis) என்ற பக்றீரியாவே இந்நோய்க்கு மூலகாரணி என்பது உறுதிப்படுத்தப்பட்டது. இதில் ஏ,பி,சி மற்றும் டப்ளியூ 135 என நான்கு முக்கிய வகைகள் காணப்படுவது மருத்துவ உலகினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேநேரம் இந்நோயானது எந்த வயது மட்டத்தினருக்கும் தொற்றலாம். அதனால் தான் தொற்றுநோயியல் தடுப்பு பிரிவு, 'இந்நோய்க்கு உள்ளானவர்களை பரவலாக அடையாளம் காண முடியாவிட்டாலும் இந்நோய்க்காரணி நாம் வாழும் சூழலில் பரவிக் காணப்படக்கூடியது. மக்களில் குறிப்பிடத்தக்க அளவிலானோர் இந்த பக்றீரியாவுடன் நோய் அறிகுறிகள் இன்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என்று குறிப்பிட்டுள்ளதோடு தற்போதைய அதி நவீன அறிவியல் தகவல்களின் படி, வேறு விலங்குகளிலோ அல்லது வெளிச்சூற்றாடலிலோ உயிருடன் காணப்படக்கூடிய ஆற்றல் இந்நோய்க்காரணிக்கு இல்லை' எனவும் தெரிவித்திருக்கிறது.

இந்நோய்க் காரணியானது இந்நோய்த் தொற்றுக்கு உள்ளான நோயாளர் தும்மும் போதும் இருமும் போதும் சளித்துளிகளில் பெருமளவில் வெளிப்படும். அது சுகதேகியின் சுவாசத்தொகுதி ஊடாகத் தொற்றக்கூடியதாகும். குறிப்பாக இந்நோய்த் தொற்று ஏற்பட நோய்க்கு உள்ளானவருடன் நீண்ட நேரம் நெருக்கமான தொடர்பாடலை மேற்கொள்ள வேண்டும்.

ஆனாலும் இத்தொற்றுக்கு உள்ளான எல்லோருக்கும் அதற்கான அறிகுறிகள் வெளிப்படுவதில்லை. நோய்க்கு உள்ளானவருடன் நெருக்கமாக வாழ்பவர்கள் மத்தியில் இந்நோய் பரவுவது வேகமாக இருக்கலாம்.

இதேவேளை புகைப்பிடித்தல் பழக்கம் கொண்டுள்ளவர்கள் மத்தியிலும் சுவாசத்தொகுதி நோய்களுக்கு உள்ளாகியுள்ளவர்கள் மத்தியிலும் இந்நோய் வேகமாகப் பரவுவது அவதானிக்கப்பட்டுள்ளது.

இருந்த போதிலும் இந்நோயின் நோயரும்புக் காலம் 2 முதல் 10 நாட்களாகும்.

பொதுவாக இந்நோய்க்கு உள்ளாகின்ற ஒருவருக்கு கழுத்தில் பிடிப்பு, கடும் காய்ச்சல், வெளிச்சத்தைப் பார்ப்பதில் (கூச்சம்) சிரமம், தலைவலி, வாந்தி, குளிர், சோர்வு, கை மற்றும் கால் பாதங்கள் குளிர்ந்த நிலையில் காணப்படல் போன்றவாறான அறிகுறிகள் வெளிப்படலாம். சிலருக்கு உடல் தோலில் சிகப்பு நிறப்புள்ளிகளும் ஏற்படலாம். இவ்வறிகுறிகள் வெளிப்பட்டு இரண்டொரு நாட்களிலேயே அசாதாரண நிலையை அடையக்கூடிய அச்சுறுத்தல்களும் உள்ளன.



அதனால் இந்நோய்க்கு உரிய சிகிச்சையை தாமதமின்றி விரைவாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் இந்நோய்க்குரிய சிகிச்சை பெற்றுக்கொள்பவர்கள் கூட உயிராபத்து அச்சுறுத்தலை மாத்திரமல்லாமல் மூளைப் பாதிப்பு, செவிப்புலன் இழப்பு, கற்றல் திறன் பாதிப்பு போன்றவாறான தாக்கங்களுக்கு உள்ளாகக்கூடிய அபாயமும் காணப்படவே செய்கின்றன.

ஆனால் இந்நோய்க் காரணியை அழித்துக் கட்டுப்படுத்துவதற்கு தேவையான பல நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகள் புழக்கத்தில் காணப்படுகின்றன. அதனால் நோயை ஆரம்ப கட்டத்திலேயே அடையாளம் கண்டு துரிதமாக சிகிச்சை அளிப்பதன் ஊடாக உயிராபத்து அச்சுறுத்தலையும் நெருக்கடிகளையும் தவிர்த்துக்கொள்வது மிகவும் முக்கியமானது.

அத்தோடு இந்நோய்க்கு உள்ளானவருடன் நெருங்கிப் பழகியுள்ளவர்களை விரைவாக அடையாளம் கண்டு இந்நோய்த்தொற்று அச்சுறுத்தலைக் குறைப்பதற்கான மாத்திரைகளை அவர்களுக்கும் பெற்றுக்கொடுக்க வேண்டும். மேலும் இந்நோய்த்தொற்றுக்கான அதிக அச்சுறுத்தலைக் கொண்டுள்ளவர்களுக்கு நோய்த் தவிர்ப்புக்கான தடுப்பு மருந்து பெற்றுக்கொடுக்கப்படுவதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

இந்நோயையும் சுவாசத்தொகுதியில் ஏற்படும் வைரஸ் தொற்றுக்களையும் ஆரம்ப கட்டத்தில் பிரித்தறிய முடியாதிருக்கலாம். ஆனால் இந்நோய்க்குரிய ஒரிரு அறிகுறி தென்பட்டாலும் தாமதமின்றி துரிதமாக மருத்துவ ஆலோசனையுடன் சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு சுகாதார மேம்பாட்டு பணியகம் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இதேவேளை, மெனின்ஹோகொக்கல் நோய்க்காரணி பரவுவதனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் அவசியத்தை விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்சீவ வலியுறுத்தியுள்ளார். ஆகவே இந்நோய்த் தொற்றைத் தவிர்த்துக்கொள்வதிலும் அதன் தாக்கங்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதிலும் ஒவ்வொருவரும் கவனம் செலுத்த வேண்டும். அதன் ஊடாக இந்நோயின் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்திக்கொள்ளலாம்.

இதைவிடுத்து நோய் குறித்த கவனயீனங்களும் தாமதங்களும் கடும் நெருக்கடிகளைக்கூட ஏற்படுத்திவிடலாம் என்பதை மறந்து விடலாகாது.



மர்லின் மரிக்கார்

---

# மத நல்லிணக்கம் மற்றும் இன ஒற்றுமை; 7வது சர்வதேச மாநாடு நுவரெலியாவில்









இலங்கையின் இன்றைய பொருளாதார நிலைமைக்கு முக்கிய காரணம் கடந்த காலத்தில் இலங்கையை ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் இந்த நாட்டு மக்களை மத ரீதியாகவும் இன ரீதியாகவும் பிரித்து ஆட்சி செய்தமையே என நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் சர்வதேச புகழ் பெற்ற சீதையம்மன் ஆலயத்தின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். நுவரெலியாவில் நடைபெற்ற சர்வதேச மத நல்லினக்க 7வது மாநாட்டில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட பொழுதே இவ்வாறு தெரிவித்துள்ளார். இந்த மாநாட்டின் இலங்கை பிரதிநிதியாக இலங்கை சர்வோதய அமைப்பு செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மத நல்லிணக்கம், இன ஒற்றுமை என்பனவற்றை முதன்மைப்படுத்தி 7வது சர்வதேச மாநாடு நுவரெலியாவில் 01.09.2023 ஆரம்பமானது. இந்த மாநாட்டில் இந்தியா பங்களாதேஷ் மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளை சேர்ந்த 39 பேர் கலந்து கொண்டுள்ளதுடன் இலங்கையின் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் உறுப்பினர்கள் கலந்து கொண்டுள்ளனர். இந்து, பௌத்த, முஸ்லிம் கிறிஸ்தவ மதங்களை பிரதிநிதித்துவப்படுத்திய மதத்தலைவர்களும் அழைப்பாளர்களும் கலந்து கொண்டனர். இந்த மாநாடானது தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறுகின்றது.

**எஸ்.தியாகு**

---

## தமிழ் ஒலி, ஒளி மற்றும் பத்திரிகைத் துறையில் 50 வருடங்கள்;

# சொற்கோ வி.என்.மதிஅழகனின் பொன் விழா கொழும்பில்

### பொற்காலப் பதிவு பொன் விழா மலரும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது




சொற்கோ வி.என்.மதிஅழகன் தமிழ் ஒலிபரப்பில் ஒரு பொற்காலப் பதிவு நூல் வெளியீட்டு விழா எதிர் வரும் 06 ஆம் திகதி புதன்கிழமை கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப் பிள்ளை மண்டபத்தில் மாலை 4.30 மணிக்கு நடைபெறும்.

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இடம்பெறும் விழாவுக்கு மூத்த ஊடகவியலாளர் அனந் பாலகிட்ணர் தலைமை தாங்குவார். புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகிப்பார். 'ஞானம்' சஞ்சிகை ஆசிரியர் சாஹித்ய ரத்னா தி.ஞானசேகரன் ஆய்வுரை நிகழ்த்துவார். இலங்கை இந்து மாமன்றத் தலைவர் மா. தவயோகராஜா பிரதம விருந்தினராகவும், பேராதனை பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத் தலைவர் துரை மனோகரன், ஒலி, ஒளிபரப்பாளர் அருண் டயஸ் பண்டாரநாயக்கா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் சமூகமளிப்பர்.கௌரவ விருந்தினர்களாக தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன், தினக்குரல் பிரதம ஆசிரியர் கே.பி. ஆர். ஹரன் ஆகியோர் பங்கேற்பர். இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் எஸ்.விஸ்வநாதன். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவை முன்னாள் பணிப்பாளர் எம்.இஸட். அஹம்மத் முனவ்வர், கொழும்பு சைவ மங்கையர் வித்தியாலய அதிபர் திருமதி. அருந்ததி இராஜ விஜயன், கொழும்பு றோயல் கல்லூரி தமிழ் பிரிவு அதிபர் திருமதி. தங்கேஸ்வரி நந்தகுமார், கொழும்பு இந்துக் கல்லூரி பம்பலப்பிட்டி ஆசிரியரும் ஒலிபரப்பாளருமான திருமதி. சுதர்ஷினி சிவரதன் ஆகியோரும் விழாவில் பங்குபற்றி உரையாற்றுவார். நூலாசிரியரின் விசேட அழைப்பின் பேரில் கொழும்பு றோயல் கல்லூரி தமிழ் விவாத குழு தலைவர் செல்வன்.விகாஷ் சிதம்பரம் விசேட உரை நிகழ்த்துவார்.



மதிஅழகனின் ஒலிபரப்பு மாணவர்களில் ஒருவரான அக்கரைப்பற்று பிறை எஃப்.எம். கவிஞர் ரபீக் கவி மழை பொழியவிருப்பது விழாவின் சிறப்பம்சமாகும். எழுத்து, மின்னியல் ஊடகர் வி.என்.மதிஅழகனின் பொன் விழா ஆண்டினை முன்னிட்டு சென்னை காந்தளகம்பதிப்பகம் நூலை வடிவமைத்துள்ளது. ஒரு நூற்றாண்டை எட்டும் இலங்கை ஒலிபரப்புத்துறையில் இத்தகைய பொன்விழா மலர் நூல் ஒன்று வெளியிடப்படுவது இதுவே முதற் தடவையாகும்.




லோரன்ஸ் செல்வநாயகம்

# நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற வாய்ப்பளிக்கும் இரவு நேர வர்த்தகம்

## சுற்றுலாத்துறை மேம்பாட்டில் சர்வதேச நாடுகளை நாம் பின்பற்றுவது சிறந்த பலனைத் தரும்





நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஒரு துறையாக தற்போது நாட்டின் சுற்றுலாத்துறை விளங்குகிறது. கொரோனா வைரஸ் தொற்று, அதனையடுத்து நாட்டில் நிலவிய கடும் பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களால் எமது நாட்டின் சுற்றுலாத்துறை மிக மோசமாக வீழ்ச்சியடைந்தமை அனைவரும் அறிந்ததே.

குறிப்பாக இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் சூழ்நிலை காணப்பட்ட போது வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை எண்ணிக்கை அடிப்படையில் மிக மோசமான வீழ்ச்சியைக் கண்டது.

அதனையடுத்து நாடு தற்போது பொருளாதார நிலையில் சற்று தலை தூக்கி இயல்பு நிலையை அடைந்து வரும் நிலையில் அரசாங்கத்தின் காத்திரமான நடவடிக்கைகள் காரணமாக இலங்கைக்கு வருகை தரும் சர்வதேச நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றமை மகிழ்ச்சியான விடயம்.

அவ்வாறு பல நாடுகளிலுமிருந்தும் இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர். எமது நாட்டுக்கு பெரும் அந்நிய செலாவணியை ஈட்டித் தரும் துறை இதுவென்பதால் அவ்வாறு இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை முறையாக வழிநடத்துவது மிக அவசியமாகிறது.

அந்த வகையில் நமது நாட்டில் அவர்கள் சுதந்திரமாக நாட்டின் எப்பகுதிக்கும் தமது பயணங்களை முன்னெடுப்பதற்கான வசதிகளை செய்து கொடுப்பது, சர்வதேச சுற்றுலாப் பயணிகள் தொடர்பில் நடைமுறையில் உள்ள சில கடுமையான சட்டங்களை தளர்த்துவது போன்றவை இதில் முக்கியத்துவம் பெறுகின்றன.

அத்துடன் எமது நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் அவர்கள் கொண்டு வரும் பணத்தை இங்கு செலவழிக்காமல் அதனை மீளவும் அவர்களது நாட்டுக்கு எடுத்துச் செல்வதை தவிர்க்கும் வகையில் இங்கு அதற்கான வசதி வாய்ப்புகளை அவர்களுக்கு செய்து கொடுப்பது மிகவும் முக்கியமானது.

எமது நாட்டில் வாழ்கின்ற மக்களைப் போன்று வெளிநாட்டிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகள் இரவு 9 மணிக்கோ அல்லது பத்து மணிக்கோ நித்திரைக்குச் செல்வதில்லை.

ஏனைய நாடுகளில் அவர்கள் அனுபவிக்கும் இரவுப் பொழுது போக்குகள் எமது நாட்டிலும் ஏற்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு தற்போது நடைமுறையில் இல்லாமை பெரும் குறைபாடு என்பதுடன் சுற்றுலாப் பயணிகள் மூலமாக எமது நாட்டுக்கு கிடைக்கும் பெருமளவு வருமானமும் அதனால் இழக்கப்படுகிறது என்பது உணரப்பட வேண்டும்.

நாட்டுக்கு கிடைக்கும் அந்நிய செலாவணி மற்றும் சுற்றுலாப் பயணிகள் மூலம் எம்மால் ஈட்டிக் கொள்ளக்கூடிய வருமானம், அது தொடர்பில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள், குறிப்பாக சுற்றுலாப் பயணிகளுக்காக அவர்கள் எதிர்பார்க்கின்ற இரவு வர்த்தகம் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்கள் தொடர்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

அது தொடர்பில் பாராளுமன்றத்தில் தொடர்ச்சியாக சுற்றுலாத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே வலியுறுத்தி வருகின்றார்.

கடந்த வாரமும் பாராளுமன்ற அமர்வில் நாட்டின் பொருளாதாரம் மற்றும் அதனை முன்னேற்றுவது தொடர்பில் சிறந்த கருத்துக்களை அவர் முன் வைத்தார். அதற்கான வழிவகைகளை எடுத்துக் கூறும் அவர், குறிப்பாக சுற்றுலாப் பயணிகளுக்கான இரவு வர்த்தகம், எமது நாட்டில் கஞ்சா பயிர்ச் செய்கையை ஊக்குவித்து அதனை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து அதன் மூலமாக அதிக வருமானத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்ற அவரது கருத்துக்கள் சிந்திக்கத் தக்கவை.

அதேபோன்று, அரசாங்கமானது காலத்துக்குக் காலம் மதுபானங்களின் விலையை அதிகரிக்கும் போது சட்டவிரோத மதுபான உற்பத்தி அதிகமாகி சட்டபூர்வமான மதுபானத்தை கொள்வனவு செய்வதில் மதுபான பிரியர்கள் காட்டும் ஆர்வம் குறைந்து வருகின்றது.

அந்த வகையில் அரசாங்கத்துக்கு மதுபான விற்பனை மூலம் கிடைக்கின்ற வரி வருமானம் குறைந்து செல்வதையும் அவதானிக்க முடிகிறது என்பதையும் அவர் சுட்டிக்காட்டி பாராளுமன்றத்தில் உரையாற்றினார்.

பாராளுமன்றத்தில் இராஜாங்க அமைச்சர் டயானா கமகே உரையாற்ற எழும்போதே சபையில் பாரிய மாற்றம் ஏற்படும். அவரது வாயைக் கிளறும் வகையில் பலர் அடிக்கடி எழுந்து அவரைக் குழப்புவதும் அவரது கருத்துகளுக்கு எதிர்மறையான கருத்துக்களை முன்வைப்பதும் சர்ச்சைகள் உருவாவதும் சபையின் வழமையாக இடம்பெறும் ஒன்று.

குறிப்பாக அவரது உரையில் கஞ்சா வளர்ப்பு, இரவு வர்த்தகம் போன்ற விடயங்கள் வரும் போதெல்லாம் இத்தகைய நிலை சபையில் உருவாகும். அது சர்ச்சையாக அமைந்தாலும் சபையை குதூகலப்படுத்துவதாக அவை அமைந்து விடுவதைக் குறிப்பிட முடியும்.இறுதியாக நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பில் அவர் ஆற்றிய உரை இது,

"சுற்றுலாப் பயணிகள் இரவு 10 மணிக்குப் பின்னர் உறங்குவதற்காக எமது நாட்டுக்கு வருவதில்லை. இரவில் அவர்களுக்கான, அவர்களது தேவைக்காக பெற்றுக் கொள்ளப்படுகின்ற பொருட்கள் விற்பனை செய்யப்படும் வர்த்தக நிலையங்கள் திறக்கப்படாதிருப்பதாலேயே எமது நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் 10 மணிக்குப் பின்னர் உறங்கிவிடுகின்றார்கள்.

உண்மையில் சுற்றுலாத்துறை முன்னேறிய நாடுகளில் இவ்வாறு இடம் பெறுவதில்லை

மாலைதீவு போன்ற நாடுகளில் சுற்றுலாப் பயணிகளுக்காக விசேட திட்டங்கள், நடைமுறையில் காணப்படுகின்றன. இப்போதுள்ள நிலைமையிலேயே தொடர்ந்தும் எமது நாடு முன்னோக்கி செல்லுமானால் இதுவரை காலம் எமக்கு கிடைத்த மோசமான பெறுபேறே இனியும் கிடைக்கும்.

சுற்றுலாத்துறை வருமானத்தை பொறுத்தவரை இரவு நேர பொருளாதாரம் மிக முக்கியமானதாகும்.

இலங்கையும் உலக நாடுகளுடன் தொடர்புபடும் செயற்திட்டங்கள் அவசியமாகும்.

எழில் நிறைந்த அழகான எமது நாட்டை இப்படி இரவில் பூட்டி வைப்பதால் எவருக்கும் எந்தவித பலனும் கிடையாது. உலக நாடுகளில் சுற்றுலாத்துறை மூலமாக 70 வீத இரவு நேர பொருளாதாரம் ஈட்டப்படுகின்றது.

அது தொடர்பில் நாம் பல்வேறு திட்டங்களை ஆலோசித்து வந்துள்ள நிலையில் பலயோசனைகளை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளோம்.

இரவு 10 மணிக்குப் பின்னர் சுற்றுலா ஹோட்டல்களில் மதுபான விற்பனை பகுதிகள் மூடப்படுகின்றன. ஏன் அவற்றை மேலதிக நேரமாகத் திறந்து வைக்க முடியாது?. இந்த நிலை மாற்றம் பெற வேண்டும்.

அதேவேளை மதுபானங்களின் விலையைக் குறைக்க அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். பொதுவாக அன்றாடம் எமது நாட்டவர்கள் உபயோகப் படுத்தும்

சாராயத்தின் விலை மிக அதிகமாக உள்ளதன் காரணத்தால் மக்கள் சட்டவிரோதமான வகையில் கசிப்பு காய்ச்சி அதனை அருந்துவதுடன் சட்டவிரோதமாக மதுபானம் உற்பத்தி செய்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகிறது. இந்த நிலை நீடித்தால் போதை மாத்திரையை பயன்படுத்தும் நிலைமையும் ஏற்படும். இதனால் கலால் திணைக்களத்திற்கு வருமானமே இல்லாத நிலை ஏற்படலாம்.

அதனைக் கருத்திற் கொண்டு அரசாங்கமானது சட்டபூர்வமான மதுபானத்தின் விலையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதேபோன்று இரவுப் பொருளாதாரத்தை அமுல்படுத்தாவிட்டால் சுற்றுலாத் துறையில் ஒருபோதும் முன்னேற்றமடைய முடியாது." என்பதாக அவரது உரை அமைந்தது. உண்மையில் அவரது யோசனைகள் நடைமுறைக்கு வருமானால் எமது நாட்டின் பொருளாதாரத்துக்கு அதன் மூலம் பெரும் பங்களிப்பு வந்து சேர்வதுடன் சுற்றுலாத் துறை மூலமான வருமானமும் அதிகரிக்கும் என்பது தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் சிந்தித்தால் நல்லது என்பதே எமது தாழ்மையான கருத்து.

# வித்யோதய இலக்கிய விருது விழா



ஆண்டின் சிறந்த பத்திகள் தொகுப்பு : திருவாளர் தொம்சன் 1, 2 பந்துல பி. தயாரத்ன (வெளியீட்டாளர் எஸ். கொடகே & பிரதர்ஸ்)



ஆண்டின் சிறந்த கவிதைத் தொகுப்பு: 'ஹெகும் கஹேகி ஹெங்கிலா' லக்ஷாந்த அத்து கோரல (வெளியீட்டாளர் விதர்ஷன் வெளியீடுகள்)



ஆண்டின் சிறந்த கல்விப் பணி: (மானுடவியல் மற்றும் சமூகவியல் துறைகள் தொடர்பானது) நிறங்கள்: தொடர்பாடல் மற்றும் அடையாளம் டபிள்யூ. ரஞ்சித் தர்மதிலக (வெளியீட்டாளர் எஸ். கொடகே & பிரதர்ஸ்)



ஆண்டின் சிறந்த சிறுகதைத் தொகுப்பு: 'அந்தயா சஹ சுருட்டு நயாய' விராஜினி தென்னகோன் (வெளியீட்டாளர் சரசவி வெளியீடுகள்)

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தினால் 14வது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்ட வித்யோதய இலக்கிய விருது வழங்கும் நிகழ்வு செப்டம்பர் 1ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகலில் பல்கலைக்கழக சுமங்களா மண்டபத்தில் மிகச் சிறப்பாக இடம் பெற்றது.

இந்த நிகழ்வின் அச்சு ஊடக அனுசரணையினை அசோசியேட்டட் நியூஸ்பேப்பர் ஒப் சிலோன் லிமிடெட் நிறுவனம் (லேக்ஹவுஸ்) வழங்கியிருந்தது. பல்கலைக்கழகம் ஒன்றினால் நடத்தப்படும் ஒரே இலக்கிய விருது விழா இதுவாகும்.

பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் பத்மலால் மானகேயின் தலைமையில், மனித நேய மற்றும் சமூகவியல் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஷிரந்த ஹீங்கெந்த மற்றும் லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் உள்ளிட்ட பல பிரமுகர்களின் பங்குபற்றலுடன் இடம்பெற்ற இந்த வித்யோதய இலக்கிய விருது வழங்கும் நிகழ்வில் ஐந்து போட்டி நிகழ்வுகளில் படைப்புக்களைச் சமர்ப்பித்த போட்டியாளர்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டது.

இதனடிப்படையில் கடந்த வருடத்தில் பிரசுரமான சிறந்த பத்திகளின் தொகுப்பு, சிறந்த கவிதைத் தொகுப்பு, சிறந்த சிறுகதைத் தொகுப்பு, சிறந்த நாவல் மற்றும் மனித நேய, சமூகவியல் ஆகிய துறைகளில் வெளியான சிறந்த கல்விப் படைப்பு ஆகிய பிரிவுகளின் கீழ் இறுதிச் சுற்றுக்கு பரிந்துரைக்கப்பட்ட பின்வரும் படைப்புகள் கௌரவிக்கப்பட்டன.

வித்யோதய பல்கலைக்கழகமும் லேக்ஹவுஸ் நிறுவனமும் இலக்கியத்திற்காக பெரும் பணியை ஆற்றியுள்ளன என்றும், இந்த நிலையில் இவ்விரு நிறுவனங்களும் இணைந்து செயல்படுவது பெருமைக்குரியது என்றும் வித்யோதய 2023 இலக்கிய விருது வழங்கும் நிகழ்வின் உத்தியோகபூர்வ அச்சு ஊடக அனுசரணையினை வழங்கிய அசோசியேட்டட் நியூஸ் பேப்பர் ஒப் சிலோன் லிமிடெட் நிறுவனத்தின் (லேக்ஹவுஸ்) தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கும் போது கூறினார்.

இந்நிகழ்வில் வித்யோதய இலக்கிய விருது வழங்கும் விழாவின் ஸ்தாபகர் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன, பேராசிரியர் பிரனீத் அபேசுந்தர உள்ளிட்ட பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், கலைஞர்கள் உள்ளிட்ட பெருமளவிலானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

ரசிக கொட்டுதுரகே
தமிழில் எம். எஸ். முஸப்பிர்





அகில இலங்கை தனியார் மருந்தக உரிமையாளர் சங்க கொழும்பு மாவட்ட கிளையால் நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாம், மற்றும் மூக்கு கண்ணாடி வழங்குதல், மருத்துவ பரிசோதனைகள் மற்றும் ஆலோசனைகள் என்பன 10 க்கும் மேற்பட்ட வைத்தியர்கள், தாதிமார்களின் பங்கேற்புடன் அவிசாவளை, வகரத்தனசார மகாவித்யாலயத்தில் கடந்த ஆகஸ்ட் மாதம் 27ம் திகதி நடைபெற்றது. இதில் சங்க தலைவர், செயலாளர், பொருளாளர், உப தலைவர் மற்றும் நிர்வாக குழு முக்கிய உறுப்பினர்கள் பங்கு கொண்டனர்.




**அனுராதபுரம் நீதவான் நீதிமன்றில் விசாரனை செய்யப்பட்ட இல.57931 எனும் வழக்கின் 2009/09/11 ஆம் திகதி தீர்ப்பிற்கமைவாக வெளியான விளம்பரம்**

**குற்றத்தின் தன்மை**

1980 ஆம் இலக்க 26 இன் ஆகாரச் சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழான 2005 சனவரி 19 ஆம் திகதி மற்றும் இல. 1376/19 இன் வர்த்தமானியில் வெளியான 2005 ஆகார (லேபல் மற்றும் விளம்பரம் செய்தல்) கட்டளையின் 4 (2) (உ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு காலாவதியாகும் திகதி குறிப்பிடாத ரய்கம் சிவப்பு அரிசி இடியாப்ப மாவு 700 கிராம் பெக்கட் விற்பனைக்காக விநியோகித்தல்.

**குற்றவாளி**

ரய்கம் மார்கடிங் சர்விசஸ் தனியார் நிருவனம், 277,கொஸ்வத்த வீதி, கிறிவத்துடுவ, ஹோமாகம

**விதிக்கப்பட்ட தண்டனை**

1. 5000/- ரூபா தண்டப்பணம், அதனை செலுத்தாதுவிடின் 01 மாத சிறைத்தண்டனை
2. குற்றமிழைத்த நிறுவனத்தின் பெயர், விலாசம் மற்றும் விதிக்கப்பட்ட தண்டனை சிங்களம்/ஆங்கிலம், தமிழ் மொழிகளில் ஒரே நாளில் வாரப்பத்திரிகைகளில் பிரசுரித்தல்
3. இந்த வழக்கில் குற்றத்தினை ஒப்புக்கொண்ட நிருவனத்திற்கு சிவப்பு அரிசி இடியாப்பமாவு உற்பத்தி சம்பந்தமான வழங்கப்பட்டிருந்த அனுமதியினை ரத்துச்செய்தல்.

**நீதிமன்றின் உத்தரவுப்படி**
**பதிவாளர்**
**நீதவான் நீதிமன்றம் - அனுராதபுரம்**

# பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பொதுஜன பெரமுனவுக்கே

## நிர்மாணத்துறை மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க



**தற்போது பாராளுமன்றத்தில் பொதுஜன பெரமுனவுக்கே பெரும்பான்மை பலம் உள்ளது. நீங்கள் ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர். இப்போது ஆளுங்கட்சிக்குள் குழப்பங்கள் அதிகரித்துள்ளதல்லவா?**

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஆறில் ஐந்து பெரும்பான்மையுடன் பொதுஜன பெரமுன வெற்றி பெற்றது. அதில் சிறியளவிலானோர் தற்போது சுயாதீனமாகச் செயற்படுகின்றார்கள்தான். எனினும் அதிகப்படியான பெரும்பான்மையினர் அரசாங்கத்துடன் உள்ளனர். எங்களுக்குள் கருத்து வேறுபாடுகள் இருக்க முடியும். எனினும் அரசாங்கத்தை பலத்துடன் முன்னோக்கிக் கொண்டு செய்வதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றோம்.

**அப்படியானால், தற்போதைய ஜனாதிபதியைப் பற்றி வெளியில் ஏன் இவ்வளவு விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன?**

யார் எங்கு என்ன கூறினாலும் நாம் ஒன்றுபட வேண்டிய இடத்தில் ஒன்றுபட்டு அவரை நாட்டின் ஜனாதிபதியாக ஆக்கினோம். அவர் மீது முதலில் நம்பிக்கை வைத்தது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய என்பதை மறந்து விட வேண்டாம். அந்த தீர்மானம் அவர் தனியாக மேற்கொண்ட தீர்மானமல்ல. நானும் முன்னைய அமைச்சரவையில் பேசி ஒற்றுமையாக மேற்கொண்ட தீர்மானமாகும். எங்களின் அந்த தீர்மானத்தில் எங்கு முரண்பாடு அல்லது தவறு ஏற்பட்டது?

**என்றாலும் நேரடியான மக்கள் ஆணை இல்லாததால் அவரால் குறிப்பிட்டளவுக்கு மாத்திரமே பணியாற்ற முடிகிறது என மக்கள் குற்றம் சாட்டுகின்றனரே?**

நான் ஏற்கனவே கூறியதைப் போன்று இந்த மக்கள் ஆணை நேரடியாகக் கிடைத்தது முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவுக்காகும். அந்தப் பதவிக்காலத்தின் பணிகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதே பதில் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்புக்களாகும். அதற்குச் சட்டத்தில் கட்டுப்பாடுகள் எதுவுமில்லை. நாடு ஸ்திரமற்ற நிலைக்கு செல்வதற்கு இடமளிக்காமல் அடுத்த தேர்தல் வரைக்கும் நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான விரிவான அதிகாரம் பதில் ஜனாதிபதிக்கு கிடைக்கின்றது. அதேவேளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பின் மூலம் நாமே தெரிவு செய்தோம். அவர் ஐ.தே.கட்சியின் தலைவராக இருந்தாலும் தற்போது அவர் பொதுஜன பெரமுன அரசாங்கத்தின் ஜனாதிபதியாகும்.

**எனினும் உங்கள் கட்சியின் கொள்கை விளக்கத்தில் இல்லாத விடயங்களில் தலையிட அவருக்கு உரிமை உள்ளதா?**

நல்லதொரு கேள்வி. 13வது அரசியலமைப்புத் திருத்தத்தை அமுல்படுத்துவது தொடர்பில் அவர் ஆற்றிய உரையே அந்தக் குற்றச்சாட்டிற்கு பிரதான காரணமாகும். கொள்கைப் பிரகடனத்தில் நாம் செய்வதற்கு எதிர்பார்க்கும் எல்லா விடயங்களும் ஒவ்வொரு எழுத்தாக குறிப்பிடப்படுவதில்லை. அதில் குறிப்பிடப்படுவது ஐந்து வருட வேலைத் திட்டத்தின் தோராயமான வரைவு மட்டுமேயாகும். எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துள்ள விடயத்திற்கு முரணான விடயங்கள் குறிப்பிடப்படவில்லை.

நாட்டில் இனப்பிரச்சினை உள்ளிட்ட ஏனைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக புதிய அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்படும் என நாம் கூறியிருக்கின்றோம். தற்போதைய ஜனாதிபதி அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் அவரது கருத்துக்களை முன்வைத்துள்ளார். எமது கருத்துக்களையும் முன்வைக்க முடியும். அவற்றை மறுபரிசீலனை செய்த பிறகு, நாட்டுக்கு மிகவும் பொருத்தமான மற்றும் பயனுள்ள தீர்வுக்கு வர முடியும். அதன் இறுதி முடிவு புதிய அரசியலமைப்பாக இருக்கவும் முடியும்.

**நீங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சார்பானவர் என்பது இதிலிருந்து விளங்குகிறதே?**

ஆம். பிரசன்ன ரணதுங்க என்பவர் எப்போதும் மனச்சாட்சிக்கு அமைவாக பேசும், சொல்வதைச் செய்யும் ஒரு அரசியல்வாதியாகும். நான் இந்நாட்டின் குடிமகன் என்ற வகையிலும், ஒரு அரசியல்வாதி என்ற வகையிலும் அவருக்கு கடன் பட்டிருக்கின்றேன். காரணம் மே 09ம் திகதி சம்பவத்தின் பின்னர் இந்நாடே தீப்பற்றி எரிந்தது. நாட்டின் நிர்வாகம், பாதுகாப்பு அனைத்தும் குழப்பமடைந்தது. நாட்டினுள் அராஜகம் உருவானது. அப்போதிருந்த அந்த நிலையை மாற்றியது இந்த ஜனாதிபதியாகும். அந்நேரம் எனது தாய் வீடு தீப்பற்றி எரிந்து சாம்பலாகியிருந்தது. எனினும் அதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அதனைத் தடுக்கக் கூடியதாக இருந்தது. கலவரங்களை அடக்க முடிந்தது. நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க முடிந்தது.

**வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை குறுகிய காலத்தில் மீட்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தனித்துவமான திறமை உள்ளதா?**

நிச்சயமாக ஆம். அவரது அரசியல் பாத்திரம் அங்கு செல்வாக்கு செலுத்தியது. அதேபோன்று நீண்ட காலமாக அரசியலில் ஈடுபட்டு அவர் பெற்றுக் கொண்டிருந்த நற்பெயரும் செல்வாக்குச் செலுத்தியது. அன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டில் முப்பது வருடகால யுத்தத்தை வெற்றிகொள்வதற்கு அந்த தனித்துவமான அரசியல் ஆளுமையைத்தான் பயன்படுத்தினார் என்றே நான் நம்புகிறேன்.

**என்றாலும், சமீபத்தில், ராஜபக்ஷ முகாமில் பலமான ஒருவராக இருந்த உதயங்க வீரதுங்க, சமூக வலைதளங்களில் உங்களை தவறாகக் கூறியிருந்தாரே?**

அது அவரது தனிப்பட்ட கருத்தா அல்லது எவரோ ஒருவருடைய நிகழ்ச்சி நிரலுக்கு அமைவானதா என்பது எனக்குத் தெரியாது. அவர் என்னைப் பற்றி கூறிய அனைத்து கருத்துக்களையும் நான் மறுக்கிறேன் என்பதை சுருக்கமாகச் சொல்லிக் கொள்கிறேன். அவை உண்மைக்குப் புறம்பானவை.

**நீங்கள் பிரதமர் மற்றும் ஜனாதிபதி பதவிக்கு ஆசைப்படவில்லை என்றா கூறுகின்றீர்கள்?**

சில காலம் இலங்கையில் வாழாமல் பிரான்ஸில் வாழ்ந்த திருமதி சந்திரிகா இந்த நாட்டின் ஜனாதிபதியாக வருவார் என்று யார் நினைத்தது? மைத்திரிபால சிறிசேன இந்த நாட்டின் ஜனாதிபதியாக வருவார் என்று யார் நினைத்தது? அமெரிக்க குடியுரிமையினைப் பெற்றிருந்த கோட்டாபய இந்த நாட்டின் ஜனாதிபதியாக வருவார் என்று யார் நினைத்தது?

**உதயங்க வீரதுங்க ஊடாக வெளியில் வருவது உங்களுக்கும் ராஜபக்ஷகளுக்கும் இடையில் உள்ள பனிப்போர் இல்லையா?**

அப்படி ஒன்று நடப்பதற்கு உள்ள காரணம் என்ன? நான் இன்றும் பொதுஜன பெரமுனவின் கம்பஹா மாவட்டத் தலைவர். மினுவாங்கொடை தொகுதி அமைப்பாளர். ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர். நகர அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர். இவை அனைத்தும் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர் என்ற வகையில் எனக்கு வழங்கப்பட்டுள்ளன. நான் பொதுஜன பெரமுனவின் அரசியல் முகாமை பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன். அப்படியானால் ராஜபக்ஷமார்களுக்கு என்னுடன் உள்ள முரண்பாடு என்ன? மற்றது நான் அதிகாலையில் வந்து விண்ணப்பத்தை எடுத்துச் சென்றதாக அவர் கூறியிருந்தார். அது உண்மை. நான் விண்ணப்பத்தை கொண்டு சென்று ஐ.தே. கட்சிக்கு அங்கத்தவர்களைச் சேர்க்கவில்லை. நான் அன்று மினுவாங்கொடையில் ஒன்று கூட்டியது ஐக்கிய தேசியக் கட்சி தொகுதி கூட்டத்தையல்ல.

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே நீங்கள் அவருக்கு நெருக்கமாக இருப்பதாக உதயங்க வீரதுங்க குற்றம் சுமத்துகிறாரே?**

நான் எல்லோருடனும் மிக நெருக்கமாகப் பணியாற்றுகின்றேன். நான் எப்போதும் அவர்களின் நம்பிக்கையை காப்பாற்றியதால் அவர்கள் என்னை மிகவும் அன்பாக நடத்தினார்கள்.

நான் சரியானதைச் சரியென்றும், பிழையானதை பிழை என்றும் சொல்பவன் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். நான் ஒரு அமைச்சரவை அமைச்சர், தற்போதைய ஜனாதிபதி அமைச்சரவையின் தலைவர். அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பை நிலைநிறுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். தலைவரின் அருகில் அமர்ந்து கொண்டு அவரின் நம்பிக்கையை காப்பாற்றாமல் எப்படி கூட்டுப் பொறுப்பைக் கடைப்பிடிக்க முடியும்? அதுமட்டுமின்றி பாராளுமன்றத்தினுள் ஜனாதிபதிக்கு முழுமையான பலத்தை வழங்குவது எமது கட்சியின் தீர்மானமாகும். அதற்காக தேவையான சந்தர்ப்பங்களில் ஆளும் கட்சியை ஒழுங்குபடுத்தும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது பொதுஜன பெரமுனவின் அரசாங்கம் என்பதை மறந்து விடாதீர்கள்.

எல்லாவற்றையும் ஒருபுறம் வையுங்கள். அவர் நாம் தெரிவு செய்த ஜனாதிபதி. என்ன காரணத்திற்காக நாம் அவருக்கு கால் விலங்குகளை போடுவோம்? நாம் தவறு செய்த விடயங்கள் உள்ளன. அவற்றைத் திருத்திக் கொள்ளும் நோக்கத்தில்தான் அவரைத் தலைவராக நியமிக்க முடிவு செய்தோம்.

மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைப் பற்றியும், எமது அரசாங்கத்தைப் பற்றியும் தற்போது நம்பிக்கையை வளர்த்துக் கொண்டிருக்கின்றார்கள். ரணில் விக்கிரமசிங்கவே அனைவருக்கும் புதிய நம்பிக்கையை ஏற்படுத்தினார். நாம் நாடு என்ற வகையில் அவருக்கு கடமைப்பட்டுள்ளோம். இதைச் சொல்ல நாம் ஏன் தயங்க வேண்டும்?

**ராஜபக்ஷக்கள் இன்னும் யதார்த்தத்தை புரிந்து கொள்ளவில்லை என்றா சொல்கிறீர்கள்?**

என்ன புரியவில்லை? நான் ஆரம்பத்திலேயே கூறினேனே, ஒரு ராஜபக்ஷதான் அவரை பிரதமராக நியமித்தது என்று. நாங்கள் வீதியில் இறங்கி அரசியல் செய்யக் கூடிய சூழலை தற்போதைய ஜனாதிபதி உருவாக்கியுள்ளார் என எமது கட்சியின் தேசிய அமைப்பாளர் பசில் பகிரங்கமாகவே தெரிவித்தார். அது தான் உண்மை.

**எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் நீங்கள் பிரதிநிதித்துவப்படுத்துவது ராஜபக்ஷ முகாமா? விக்கிரமசிங்க முகாமா?**

எதிர்காலம் நம்மை சரியான திசைக்கு கொண்டு செல்லும். குழப்பமடையாமல் இருப்போம். இறுதியாக, இவற்றையும் நான் கூற விரும்புகிறேன். தற்போதைய ஜனாதிபதி "ரணில் ராஜபக்ஷ" என்றுதானே அழைக்கப்படுகிறார். அடுத்த 05 வருடங்களில் நாம் இரு தரப்பும் மாத்திரமல்ல, அனைவரும் ஒன்றிணைந்து நாட்டை இவ்வாறாக முன்னோக்கி கொண்டு செல்ல வேண்டும் என்று எனது இதயபூர்வமாகவே விரும்புகிறேன். முற்போக்கு அரசியல் முகாமை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல்வாதி என்ற வகையில் இது எனது தனிப்பட்ட கருத்து.

தற்போதைய ஜனாதிபதியை அந்தப் பதவியில் நியமிப்பதற்கு பொதுஜன பெரமுன தீர்மானித்து நாட்டுக்காகச் செய்த விட்டுக் கொடுப்பு, தியாகத்தை ஏனைய அரசியல் கட்சிகள் முன்மாதிரியாகக் கொள்ளும் என நான் கருதுகின்றேன்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கு இதற்கு முன்னர் நாட்டிற்கு மிகச் சிறந்த சேவையை வழங்குவதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. அவர் தற்போது அவற்றைச் செய்கிறார். அதற்கு முழுமையான ஒத்துழைப்பை எமது கட்சியின் உறுப்பினர்கள் அவருக்கு வழங்குகிறார்கள்.

சிரில் லியனாராச்சி
தமிழில் எம்.எஸ். முஸப்பிர்

# இலங்கைக்கு மீளக் கிடைக்கும் 200 ஆண்டுகால மரபுரிமை

**இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் டச்சுக்காரர்களால் நெதர்லாந்துக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்படும் கண்டி இராச்சிய காலத்தைச் சேர்ந்த சில தொல்பொருட்களை மீண்டும் இந்நாட்டிற்கு கொண்டு வருவது தொடர்பில் இந்நாட்களில் ஊடகங்களில் அதிகமாகப் பேசப்பட்டு வருகிறது.**

நெதர்லாந்து அந்நாட்டிற்கு எடுத்துச் சென்ற தொல்பொருட்களை இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பிறகு மீண்டும் நம் நாட்டிற்கு திருப்பித் தருவது ஏன்? அதற்கு பின்னணியான விடயங்கள் தொடர்பில் நாம் தேசிய அருங்காட்சியகத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சனுஜா கஸ்தூரியாராச்சியிடம் கேட்டோம்.

2021ம் ஆண்டில், நெதர்லாந்தின் அம்ஸ்டர்டாமில் அமைந்துள்ள Rijks அருங்காட்சியகத்தின் பணிப்பாளர் நாயகம், தற்போது அந்த அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இலங்கைக்கு சொந்தமான ஆறு தொல் பொருட்கள் தொடர்பில் ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு தேசிய அருங்காட்சியகம் என்ற வகையில் ஒத்துழைப்பு வழங்குமாறு எனக்கு அழைப்பு விடுத்தார். அந்த சமயத்தில், காலனித்துவ நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட தொல்பொருட்களை மீண்டும் அந்நாடுகளிடம் ஒப்படைக்கவேண்டும் என நெதர்லாந்து அரசு கொள்கை ரீதியான தீர்மானம் ஒன்றை எடு த்திருந்தது. அந்தக் கொள்கைக்கு அமை வாகத்தான் நெதர்லாந்து அரசாங்கம் காலனித்துவ கால தொல் பொருட்களை மீளமைப்புச் செய்வதற்குரிய மாதிரி ஆராய்ச்சி திட்டமாக இந்த ஆராய்ச்சியை நடத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது. அதன் பிரகாரம் Rijks அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பல தொல் பொருட்கள் மற்றும் கண்டி யுகத்திற்குரிய தொல் பொருட்களுடன் தொடர்புடைய வரலாற்று முக்கியத்துவமிக்க ஆவணங்கள், டச்சு அறிக்கைகள் கைவினைத்திறன் ஆற்றல்கள் ஆய்வுக்குட்படுத்தி அவற்றின் கலை மதிப்பு, தொழில்நுட்பம் மற்றும் இரசாயன கலவை ஆகியவை தொடர்பில் ஆய்வு செய்வதற்காக நெதர்லாந்து அருங்காட்சியகம் மற்றும் இலங்கை தேசிய அருங்காட்சியகம் சார்பில் இரண்டு ஆராய்ச்சி குழுக்கள் நியமிக்கப்பட்டன. 2021ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட அந்த ஆராய்ச்சி 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் முடிவடைந்தது. இதன் போது நாம் எமது ஆராய்ச்சியின் ஊடாக பெற்றுக் கொள்ளப்பட்ட விடயங்களை அறிக்கையாக வெளியிட்டோம். அதன்பிரகாரம் அந்த தொல்பொருட்கள் 1765ம் ஆண்டு கண்டியில் உள்ள அரச அரண்மனையை டச்சுக்காரர்கள் சுற்றிவளைத்த போது, டச்சு கிழக்கிந்திய வர்த்தக நிறுவனத்தால் (VOC) அந்நாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டமை உறுதியானது.



அந்த அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நெதர்லாந்து அரசாங்கம் அவர்கள் காலனித்துவத்திலிருந்து கொண்டு வந்த தொல் பொருட்களை மீண்டும் அந்த நாடுகளிடம் திருப்பி ஒப்படைப்பது தொடர்பில் அரசுக்கு பரிந்துரை செய்வதற்காக ஒரு சுயாதீன குழுவை நியமித்தது. நெதர்லாந்தின் அந்த குழுவிடம் முதல் கோரிக்கையை முன்வைத்தது புத்தசாசன, மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க என்பது இங்கு முக்கியமாகக் குறிப்பிட வேண்டிய விடயமாகும். அந்தக் குழு இந்தக் கோரிக்கையை பரிசீலித்து, குறித்த தொல்பொருட்களை உத்தியோகபூர்வமாக இலங்கைக்கு திருப்பி அனுப்ப வேண்டும் என்ற பரிந்துரையை நெதர்லாந்து அரசுக்கு வழங்கியது. அதன்பிரகாரம் அந்த தொல் பொருட்களை மீண்டும் வழங்குவதாக நெதர்லாந்து அரசாங்கத்தினால் இந்த ஆண்டு ஜுலை 6ஆம் திகதி வர்த்தமானி அறிவித்தல் மூலமாக உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது. கடந்த ஆகஸ்ட் 28ம் திகதி, அந்த தொல்பொருட்களின் உரிமையை மாற்றுவது தொடர்பான சட்ட ஆவணங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. இந்நிகழ்வில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர், நெதர்லாந்து கலாசார மற்றும் ஊடகத்துறை இராஜாங்கச் செயலாளர் Gunay Uslu மற்றும் நெதர்லாந்து தூதுவர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நெதர்லாந்தைப் போன்று இலங்கைக்கும் வரலாற்று ரீதியாக இது மிகவும் சிறப்பான சந்தர்ப்பமாகும் என்றும், மிகுந்த முயற்சியுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆராய்ச்சியின் மூலம், பல நூற்றாண்டுகளாக இந்த தொல்பொருட்கள் பற்றிய தவறான எண்ணங்களை அகற்ற முடிந்தது என்றும் அவர் மேலும் கூறினார். நெதர்லாந்திலிருந்து கொண்டு வரப்படும் அந்த தொல் பொருட்களை மிகவும் பாதுகாப்பான வகையில் களஞ்சியப்படுத்துவதற்காக தேசிய அருங்காட்சியகம் தற்போது ஒழுங்குகளைச் செய்து வருவதோடு, அதன் பின்னர் இந்த தொல் பொருட்களை இந்த நாட்டுக்கு கொண்டு வரும் திகதி முடிவு செய்யப்படும். இருநூற்று ஐம்பது வருடங்கள் பழமையான இந்த தொல் பொருட்களை பொதுமக்கள் பார்வையிடும் வகையில் விசேட கண்காட்சியொன்று நடத்தப்படவுள்ளதாகவும் தேசிய அருங்காட்சியகத்தின் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.





இந்த ஆராய்ச்சி தொடர்பில் மேலதிக விவரங்களை நாம் அந்த ஆய்வுக் குழுவின் நிபுணத்துவ உறுப்பினரான ஆய்வாளர் சாமிகர பிலப்பிட்டியவிடம் கேட்டோம்.

"இந்த ஆறு தொல் பொருட்களினுள் தங்க மற்றும் வெள்ளி வாள்கள் மற்றும் இரண்டு, தங்கக் கத்திகள் தொடர்பில் ஆராய்ச்சியினை தேசிய அருங்காட்சியகங்கள் திணைக்கள மேலதிக பணிப்பாளர் நாயகம் (கலாசாரம்) செனரத் விக்கிரமசிங்க மேற்கொண்டார். லெவ்கே பீரங்கி தொடர்பான ஆய்ச்சி பேராசிரியர் அசோக த சொய்ஷா மற்றும் கலாநிதி கங்கா திசாநாயக்கா ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டதோடு, இங்கிலாந்தின் உலகின் தலைசிறந்த பீரங்கி நிபுணர்களான Ruth brown மற்றும் Kay Douglas smith ஆகிய இருவரும் இதில் ஒத்துழைப்புக்களை வழங்கினர். பெரிய துப்பாக்கிகளின் தொழில்நுட்ப பாகம் தொடர்பான ஆராய்ச்சியினை நான் மேற்கொண்டேன்".

ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளின் பிரகாரம் இந்த தொல் பொருட்களில் உள்ள இரண்டு வாள்கள் அரச பட்டறையில் உருவாக்கப்பட்டவை என்பதோடு, நேர்த்தியாக செதுக்கப்பட்ட கத்தி மேல்நாட்டு அரச ஆடைகளின் கூறுகளில் ஒன்றாக இருப்பதுடன், இது 18ம் நூற்றாண்டின் மலையக கைவினைஞர்களின் திறமையைக் காட்டுகிறது. தலா இருபத்தெட்டு கிலோகிராம் எடையுள்ள, கண்டி யுகத்துக்குரிய இரண்டு பெரிய துப்பாக்கிகளும் இலங்கை துப்பாக்கி தொழில்நுட்பத்தை பிரதிபலிக்கும் தனித்துவமான வடிவமைப்புகளாகும்.

பல ஆண்டுகளாக காலனியாக இருந்த நம் நாடு, டச்சுக்காரர்களின் கீழ் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இருந்தது. 1761ம் ஆண்டில், டச்சுக்காரர்கள் நியாயமற்ற வரி முறையை விதித்து, இலங்கையின் கரையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் மீது மிகுந்த அழுத்தத்தைக் கொடுத்தனர். மக்கள் தங்கள் சார்பாக மன்னரை தலையிடுமாறு கேட்டுக் கொண்டதன் விளைவாக நாடு முழுவதும் டச்சு எதிர்ப்புக் கலவரங்கள் வெடித்தன. இது தொடர்பில் வரலாற்று துப்பாக்கிகள் தொடர்பான நிபுணரான ஆய்வாளர் சமிகர பிலப்பிட்டிய கூறியதாவது:



"கண்டி இராணுவம் இலங்கையின் தென் பகுதி மக்களுடன் இணைந்து டச்சுக்காரர்கள் மீது உடனடித் தாக்குதலைத் தொடுத்தது. அவிசாவளை, சீதாவக்கா, ஹன்வெல்ல, மாத்தறை மற்றும் தங்கல்ல கோட்டைகள் டச்சுக்காரர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டன. நீர்கொழும்பு கோட்டையும் சுற்றிவளைக்கப்பட்டது. பீரங்கி, ரொக்கட், கைத்துப்பாக்கி மற்றும் வேறு ஆயுதங்களைப் பயன்படுத்தி கண்டி சிங்கள இராணுவம் டச்சுக்காரர்கள் மீது தாக்குதல்களுக்கு மேல் தாக்குதல்களை மேற்கொண்ட போது டச்சுக்காரர்கள் பின்வாங்கினார்கள். 1764ம் ஆண்டு ஆளுநர் வேன் ஈக் (Van Eck) இந்தோனேசியா மற்றும் வேறு நாடுகளிலிருந்து இராணுவ உதவியைப் பெற்று கண்டிய இராச்சியத்தை ஆக்கிரமிப்பதற்கு முயன்ற போதும் அந்த எந்த இராணுவ குழுவினராலும் கண்டியை நெருங்க முடியாமல் போனது. இதனால் அவர்கள் பின்வாங்கினார்கள். மீண்டும் 1765ம் ஆண்டில் பெரும் இராணுவ படையைக் கொண்டு வந்து கண்டியைக் கைப்பற்றுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அப்போது அவர்கள் கலகெதரவைக் கைப்பற்றி அதன் ஊடாக கண்டிக்கு வந்தார்கள்.

1756ம் ஆண்டில் டச்சு இராணுவம் கண்டியை சூறையாடியது தொடர்பில் The Loot என்ற பெயரில் ஆவணத் திரைப்படம் ஒன்று 2019ம் ஆண்டில் நெதர்லாந்து அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டது. அந்த நிகழ்வில் சிரேஷ்ட கட்டடக் கலைஞர் ஏஸ்லி டி வொஷ் உடன் நானும், ஓய்வுபெற்ற அட்மிரல் லக்ஷ்மன் இளங்கோன், கலாநிதி நிமல் தேவ்சிறி மற்றும் ரோஹன தசநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டோம். இதன் போது ஏஸ்லி டி வொஷ் உள்ளிட்ட இங்கு கலந்து கொண்ட அனைவரும் நெதர்லாந்திற்குக் கொண்டு செல்லப்பட்ட எமது தொல் பொருட்களை மீண்டும் இலங்கைக்கு கொண்டு வர வேண்டும் எனத் தெரிவித்தோம். அந்த ஆவணப்படம் காட்சிப்படுத்தப்பட்டதன் பின்னர் வெளிநாடுகளுக்குச் சொந்தமான தொல்பொருட்கள் அந்தந்த நாடுகளிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு நெதர்லாந்து மக்களிடம் ஏற்பட்டது.

(20ஆம் பக்கம் பார்க்க)

சுரேகா நில்மினி இலங்கோன்
தமிழில் எம். எஸ். முஸப்பிர்



யாழ். கீரிமலை, மாவிட்டபுரம் வீதியில் வசிக்கும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பமொன்றுக்கு வாழ்வாதாரமாக கால்நடை வளர்ப்புக்காக ஆடுகள் வழங்கப்பட்டன. கனடா மெட்ரோலான் மீடியா ஊழியர்கள் வழங்கிய நிதியுதவியில் யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் லயன் கலாநிதி நா.தனேந்திரன், இக் குடும்பத்துக்கு ஆடுகளை வழங்கியபோது பிடிக்கப்பட்ட படம். ( படம் வேலணை குறூப் நிருபர்)

# அரசியல் அரங்கம்

அர்ஜூன்



**'ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவின் இராணுவத் தளமாக மாற்றப் போவதாக கூறப்படுகின்ற தகவல்கள் வெறும் புனைகதை என்கிறார் துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமானத்துறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா. 'நாட்டின் பொருளாதாரத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிவரும் விமான மற்றும் துறைமுக சேவையில் பாரிய முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இந்தத் துறைகளில் ஏற்படுத்தப்பட்டுவரும் முன்னேற்றங்கள் மற்றும் காணப்படும் சவால்கள் குறித்து எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

# ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை சீனாவின் இராணுவத்தளமாக மாற்றுவதென்பது புனைகதை!

## முற்றாக மறுக்கின்றார் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா

**கே: பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விரிவாக்கத் திட்டத்தின் முன்னேற்றம் எந்த நிலையில் காணப்படுகிறது?**

பதில்: பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் விரிவாக்கத் திட்டம் நமது நாட்டின் விமானப் போக்குவரத்துத் துறைக்கு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தும் ஒன்றாகும். இருப்பினும் அதன் முன்னேற்றம் தெளிவுபடுத்த வேண்டிய சில தடைகளை எதிர்கொண்டது. தற்போது, இந்த முயற்சியில் ஒரு முக்கிய பங்காளியான ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவரமைப்பின் (JICA) ஒப்புதலுக்காக நாங்கள் காத்திருக்கிறோம்.

இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்துள்ளது என அறிவித்த பின்னர் இத்திட்டம் பின்னடைவைச் சந்தித்தது. இந்த அறிவிப்பினால் கடன் ஒப்பந்தமானது இடைநிறுத்தும் முடிவுக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அவர்களின் விதிமுறைகளின்படி, வங்குரோத்து நிலையை அடைந்த நாடுகளுக்கு கடன் வழங்க முடியாது. ஜப்பானிய தூதரகம் மற்றும் ஜய்க்கா ஆகிய இரு நிறுவனங்களுடனான கலந்துரையாடல்கள் இந்தத் திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கான நிபந்தனைகள் பற்றிய விடயங்களை வழங்கியுள்ளன.

கடன் மறுசீரமைப்பு செயல்முறை முடிந்ததும், சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்புதல் கிடைத்ததும், கடன் ஒப்பந்தத்தின் மீதான இடைநிறுத்தம் நீக்கப்படும் என்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் எமக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடர்வதற்கு அனுமதிக்கும். திட்டப்பணியின் கணிசமான பகுதி ஏற்கனவே முடிவடைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இந்த முன்னேற்றத்தைப் பாதுகாப்பதற்கே நாம் முக்கியத்துவம் அளித்துள்ளோம்.

கட்டப்பட்ட பிரிவுகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, விமான நிலையம் மற்றும் ஏவியேஷன் சேர்வீசஸ் லிமிடெட் (ஏஏஎஸ்எல்) நிறுவனத்தின் ஒதுக்கீட்டில் இருந்து 500 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளோம். ஏறத்தாழ இன்னும் மூன்று மாதங்கள் ஆகுமென மதிப்பிடப்பட்டுள்ள தற்போதைய பணியை முடிக்க இந்த ஒதுக்கீடு உதவும்.

இதன் மூலம், ஏற்கனவே ஏற்படுத்தப்பட்டுள்ள உள்கட்டமைப்பைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளோம்.

இந்தச் செயல்முறை முழுவதற்கும் ஜய்க்கா மற்றும் ஜப்பானிய அரசாங்கத்தின் ஆதரவு முக்கியமானது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் ஜப்பானுக்கு விஜயம் செய்திருந்த போது, இத்திட்டத்தை தொடர்வதில் தமது தீவிர ஆர்வத்தை அவர்கள் சுட்டிக்காட்டினர். எவ்வாறாயினும், கடன் மறுசீரமைப்பு செயல்முறை மற்றும் அதைத் தொடர்ந்து சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்புதலுக்காக காத்திருக்க வேண்டியது முக்கிய தடையாகக் காணப்படுகிறது.

இந்த முன்னிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னரும் ஜய்க்காவின் உதவி கிடைப்பதில் தடைகளை எதிர்கொண்டால், நாங்கள் மாற்றுத் திட்டங்களுடன் தயாராக இருக்கிறோம். பல முதலீட்டாளர்கள் முனையத்தின் விரிவாக்கத்தில் முதலீடு செய்ய வலுவான விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர். அனைத்து விருப்பங்களையும் நாங்கள் கருத்தில் கொள்ளும்போது, இந்தத் திட்டத்தின் தோற்றம் ஜப்பானுடன் இணைந்து வேரூன்றியது என்பதை அங்கீகரிப்பது அவசியம். எனவே, இந்தக் கூட்டாண்மையை கௌரவிப்பதில் எங்களின் அர்ப்பணிப்பு அசையாதது.

## தேசத்தை வழிநடத்துவதில் தனது திறமையை நிரூபித்துள்ளார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க; அவரை விடப் பொருத்தமான வேட்பாளர் ஒருவர் எம்மிடம் இல்லை!

**கே: யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு விமான நிலையத் திட்டங்களின் முன்னேற்றம் எவ்வாறு உள்ளது?**

பதில்: யாழ் விமானநிலையத் திட்டத்தில் சாதகமான முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. இது நட்டத்திலிருந்து இலாபமீட்டும் நிலைக்கு முன்னேறி வருகிறது. பலாலி விமான நிலையம் வாரமொன்றுக்கு நான்கு விமான சேவைகளை மாத்திரம் கொண்டிருந்தது. தற்பொழுது இது தினசரி விமான சேவையாக அதிகரித்துள்ளது. சென்னையில் இருந்து பலாலிக்கு விமான சேவையை அறிமுகப்படுத்த இண்டிகோ எயார்லைன்ஸ் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது.

விமான நிலையத்தின் நிதிநம்பகத்தன்மையை உறுதிசெய்து, தினமும் இரண்டு கூடுதல் விமானங்களை சேவையில் ஈடுபடுத்துவதே இதன் நோக்கம். எயார்பஸ் ஏ 320 போன்ற பெரிய விமானங்களுக்கு இடமளிக்க, ஓடுபாதையை நீடிக்கும் திட்டம் உள்ளது.

இருப்பினும், தற்போதைய விமான நிலைய அளவு 75 பயணிகளை ஏற்றிச் செல்லும் சிறிய விமானங்களை மட்டுமே அனுமதிப்பதால் சவால்கள் எழுகின்றன. இந்தத் தடைகளை நிவர்த்தி செய்து பயணிகளின் சரக்குப் போக்குவரத்துப் பிரச்சினை உட்பட பல விடயங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியுள்ளது.

விமான நிலையத்தை விரிவுபடுத்துவது இரட்டை சவாலாக உள்ளது. இது யாழ்ப்பாணத்தில் வசிப்பவர்களுக்கு சொந்தமான நிலத்தை கையகப்படுத்துதல் மற்றும் ஒத்துழைப்பு, புரிதல் ஆகியன சம்பந்தப்பட்டதாகும். அரசியல் தலைவர்கள் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் பயனளிக்கும் வகையில் தீர்மானமொன்றை எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

மட்டக்களப்பு விமான நிலையத்தைப் பொறுத்தவரையில், விமானிப் பயிற்சி நிலையங்களுக்கு இது சேவையாற்றுகிறது.

இரத்மலானை, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மற்றும் பலாலி போன்ற முக்கிய இடங்களை இணைக்கும் உள்நாட்டு விமான சேவைகள் இல்லாத நிலையில் சென்னை, பலாலி மற்றும் மட்டக்களப்புக்கு இடையிலான விமானங்களுக்கு இந்தியாவின் அலையன்ஸ் எயார்லைன்ஸை ஈர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அதேபோன்று மத்தள, இரத்மலானை, மட்டக்களப்பு மற்றும் பலாலியை இணைக்கும் உள்நாட்டு விமானங்களுக்கான ஃபிட்ஸ்எயார் போன்ற உள்நாட்டு விமான நிறுவனங்களுக்கும் முன்மொழிவுகள் நீடிக்கப்பட்டுள்ளன. இந்த முயற்சிகள் அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையை அதிகரிக்க உதவும்.

**கே: பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், இரத்மலானை மற்றும் யாழ்ப்பாணத்திற்கு மேலும் சர்வதேச விமான சேவைகளை நடத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளனவா?**

பதில்: நிச்சயமாக சர்வதேச விமான நிறுவனங்களை ஈர்ப்பதற்கான எங்கள் முயற்சிகள் நம்பிக்கை அளித்துள்ளன. ஈரானில் இருந்து மஹான் எயார், இஸ்ரேலின் ஆர்க்கியா எயார்லைன்ஸ் மற்றும் துருக்கிய எயார்லைன்ஸ் உள்ளிட்ட பல்வேறு விமான நிறுவனங்களுடன் ஒத்துழைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. உஸ்பெகிஸ்தான் மற்றும் பல நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் நடந்து வருகின்றன. இந்த முயற்சிகள் விமான இணைப்பை மேம்படுத்த உதவும்.

**கே: மத்தள விமான நிலையம் அடிக்கடி விமர்சனத்துக்கு உள்ளாகி வருகிறது. ஆனால் அதனை ஒரு விமானப் பயிற்சி மையமாக அபிவிருத்தி செய்வதற்கான வாய்ப்பு உள்ளதா?**

பதில்: மத்தள விமான நிலையத்தின் அபிவிருத்தித் திட்டங்களில் முன்னேற்றம் காணப்படுகின்றது. பராமரிப்பு, பழுதுபார்ப்பு மற்றும் மாற்றியமைத்தல் சேவைகளுக்கான ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பைத் தொடங்கியுள்ளோம். மேலும் இது விடயத்தில் ஆர்வமுள்ள ஐந்து தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளோம்.

அதேசமயம், மத்தள விமான நிலையத்தை நோக்கி அதிக விமானங்களை இயக்குவது எங்கள் உத்தி. ரஷ்ய மற்றும் வாடகைக்கு அமர்த்தப்பட்ட விமானங்கள் இந்த வசதியைப் பயன்படுத்துகின்றன. நிதி ரீதியான சவால்களை எதிர்கொண்ட போதிலும், மத்தள விமான நிலையத்தின் முக்கியத்துவம் கணிசமானதாகவே உள்ளது. இது அவசரநிலைகளின் போது மாற்று தரையிறங்கும் இடமாக செயல்படுகிறது. மேலும் போயிங் 777 போன்ற பெரிய விமானங்களுக்கு இடமளிக்கும் இடமாகவும் உள்ளது. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் சிக்கல்கள் ஏற்பட்டால் விரைவாக திசைதிருப்பவும், இடையூறுகளைக் குறைக்கவும் உதவுகிறது. அத்துடன் இலங்கையின் விமான போக்குவரத்து தரத்தை உயர்த்துகிறது.

**கே: சுற்றுலாத்துறை அமைச்சுடன் எவ்வளவு நெருக்கமாகப் பணியாற்றுகிறீர்கள்?**

பதில்: நாங்கள் சுற்றுலா அமைச்சுடன் மட்டுமன்றி வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுடனும் நெருக்கமான ஒத்துழைப்பை பேணுகிறோம்.

(17ஆம் பக்கம் பார்க்க)



**யாழ் விமானநிலையத் திட்டத்தில் சாதகமான முன்னேற்றங்கள் காணப்படுகின்றன. இது நட்டத்திலிருந்து இலாபமீட்டும் நிலைக்கு முன்னேறி வருகிறது. பலாலி விமான நிலையம் வாரமொன்றுக்கு நான்கு விமான சேவைகளை மாத்திரம் கொண்டிருந்தது. தற்பொழுது இது தினசரி விமான சேவையாக அதிகரித்துள்ளது**



மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொறகொட

# நீர்மாசடைவதை தடுப்பதில் கூடுதல் கவனம் செலுத்தப்படுவது அவசியம்!

தண்ணீர் நம் உயிர். உலகில் தண்ணீரின் தேவை நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. மனிதகுலம் பயன்படுத்தக் கூடிய தண்ணீரின் அளவு மிகவும் குறைவாகவே உள்ளது. உலகில் உயிரினங்கள் பயன்படுத்தக் கூடிய நீர்நிலைகள் பெரும் அழிவைச் சந்தித்து வருவதும் பெரும் பிரச்சினையாக உள்ளது.

இந்தியாவில் ஏராளமான ஆறுகள் பாய்ந்தோடுகின்றன. பிரம்ம புத்ரா அதில் மிகப்பெரிய நதியாகும். அதன் நீளம் 3,848 கிலோ மீட்டர் எனக் குறிப்பிடப்படுகிறது. சிந்து, கங்கை, காக்வார்ஸ், மஹநந்தி உள்ளிட்ட நதிகளில் விசேட கவனத்துக்குரியவை இரண்டாகும். இவற்றை கங்கை, யமுனை எனக் குறிப்பிடப்படலாம்.

இந்நதிகள் ஒரு பெரிய நிலப்பரப்பை உள்ளடக்கி, பாய்ந்து விவசாயம் மற்றும் தொழில் துறையில் ஒரு ஏற்றத்தை உருவாக்கி கடலில் கலக்கின்றன. கங்கைநதி இந்துக்களின் புனித நதியாகும். கங்கைநதியில் குளிப்பதும், சிறிதளவு நீராவது குடிப்பதும் பெரும் புண்ணியத்தைத் தரும். உடலை தகனம் செய்து சாம்பலை கங்கைநதியில் கரைப்பது ஆன்மாவுக்கு முத்தி அளிக்கும் என்பது நம்பிக்கை.

கங்கை நதியில் பல இலட்சக்கணக்கான மக்கள் தாகத்தை தீர்த்துக் கொள்கிறார்கள். பல இடங்களில் மனித உறுப்புகள், பூக்கள், பால் உணவுகள் மற்றும் பலியிடப்பட்ட பொருட்கள் எண்ணிலடங்காது மிதப்பது சாதாரண காட்சியாகும்.

கங்கைநதி பதினொரு மாநிலங்களின் ஊடாகப் பாய்கிறது. மனித பயன்பாடு மற்றும் தொழிற்சாலைக் கழிவுகள் காரணமாக இது பெரிதும் மாசுபடுகிறது. வாரணாசியை ஒட்டி கங்கைநதியில் பெரும் யாகங்கள் நடத்தப்படுகின்றன. அரை பில்லியனுக்கும் அதிகமான மக்கள் கங்கைநதியை நம்பியுள்ளனர், இது உலகின் மிகப்பெரிய நீர் பாவனைக்கான நதியில் ஒன்றாகும். இந்தியாவின் வடபகுதியில் உள்ள வாரணாசி நகருக்கு அண்மையில் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட இந்துக் கோயில்கள் உள்ளன. அங்கு ஆலயங்களை தரிசிக்கும் பக்தர்களின் எண்ணிக்கை கணக்கிட முடியாதது. இந்தியாவில் நதி மாசுபடல் மற்றும் அதன் விளைவுகளால் ஒவ்வொரு ஆண்டும் 1.5 மில்லியன் குழந்தைகள் இறக்கின்றன.

பக்தர்கள் கங்கைநதியை புனிதமான இடம் என்று அழைக்கிறார்கள், ஆனால் அதன் தூய்மை பற்றி கேள்விகள் எழுந்துள்ளன. இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பல ஆண்டுகளுக்கு முன்பு 'ஷநமாமி கங்காஷ' என்ற திட்டத்தை தொடக்கி வைத்தார். நதியை தூய்மையானதாக மாற்ற மக்களின் பங்களிப்பு மட்டுமின்றி, சிறப்புக் குழுக்களின் கண்காணிப்பும் அதன் நோக்கமாக இருந்தது.

இந்தியாவின் நதிகளை சுத்தப்படுத்தும் பணி 1985 இல் தொடங்கியது. பிரதமராக இருந்த ராஜீவ் காந்தி இதற்கான முயற்சியை முன்னெடுத்தார். இருபத்தைந்து நதிகளை உள்ளடக்கிய திட்டமொன்று காணப்பட்டது. பின்னர், பிரதமர் மன்மோகன் சிங் பிரதான நதிகளை உள்ளடக்கிய திட்டத்தை மேலும் 43 நகரங்களுக்கு விரிவுபடுத்தினார். நரேந்திர மோடி 2015 இல் மேலும் ஒரு அடி முன்னோக்கி எடுத்து வைத்தார். இது நாற்பத்தாறு ஆறுகள் கொண்ட 195 நகரங்களை உள்ளடக்கிய திட்டம் என்று கூறப்படுகிறது.

நதிகள் மாசடைந்து, அவற்றை மீட்க இந்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கும் அப்பால் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம் ஆற்றில் இருந்து பூக்களை சேகரித்து நதியை சுத்தப்படுத்தும் கூட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. இதில் நூற்றுஇருபத்து ஆறு பெண்கள் ஈடுபடுகிறார்கள் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் தினமும் 8.4 தொன் மலர்களை கங்கையின் வடக்குப் பகுதியிலிருந்து அகற்றி சுத்தம் செய்கிறார்கள். இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் இருந்து பூஜைக்காக வாரணாசிக்கு கொண்டு வரப்பட்ட இந்தப் பூக்கள் இந்து சடங்குகளுக்குப் பிறகு ஆற்றில் வீசப்பட்டவையாகும். அதனால் ஆற்றுக்கு ஏற்பட்டுள்ள மாசு கணிசமானதெனக் கூறப்படுகிறது.

பூச்செடிகளை வளர்ப்பவர்கள் அவற்றை வளர்க்க பயன்படுத்தும் செறிவான இரசாயனங்கள் கூட அவற்றில் உள்ளன. மேலும் கலக்கப்படும் நச்சு இரசாயனங்கள் வேறு விளைவுகளையும் ஏற்படுத்துகின்றன. ஐக்கிய நாடுகள் சபை, பேரிடர் தடுப்புக்கான உலக உச்சி மாநாட்டின் போது, கங்கையிலிருந்து மலர்களை சேகரித்து நீர்மாசடைதலை தடுக்கும் நடவடிக்கையை பாராட்டியுள்ளதோடு அது உலகின் கட்டமைப்பை எப்போதும் மாற்றும் முதல் பத்து திட்டங்களில் ஒன்றாக அறிந்து கொண்டுள்ளது.

இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து 11,060 மெட்ரிக் டொன் பூக்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. அது நம்பமுடியாத அளவாகும். இன்னுமொரு முக்கியமான விடயமும் உள்ளது. இந்த மலர்களின் தொகையில் 110 மெட்ரிக் டொன் உரம் மற்றும் நச்சு இரசாயனங்கள் இருப்பதாகக் கணிக்கப்படுகிறது.

மலர்களை சேகரிக்கும் பெண்கள், அவற்றைச் சுத்தம் செய்து அரைத்து கூழ் ஆக்குகின்றார்கள். சிலர் வண்ணப் பொடியாக்கி திருவிழாக் காலங்களில் வீசி மகிழ்வார்கள், மற்றொரு பகுதி ஊதுபத்தி தயாரிக்கப் பயன்படுகிறது. அவர்கள் உற்பத்தி செய்யும் இலட்சக்கணக்கான ஊதுபத்திகள் வழிபாட்டுத் தலங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

இந்தப் பெண்கள் இதற்கு முன்னர் மிகவும் கடினமான மற்றும் பாதுகாப்பற்ற வேலைகளில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் குழந்தைகள் கூட மிகவும் துன்பகரமான வாழ்க்கையை வாழ்ந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. அங்கீகரிக்கப்பட்ட நல்ல தொழிலில் இருக்கும் இவர்கள், இன்று சமூக திட்டங்களின் பயனாளிகள். மேலும் அனைவரும் வங்கிக் கணக்குகளைத் தொடங்கி பொருளாதார வளர்ச்சியிலும் பங்கு கொள்கிறார்கள்.

உயிர்களை வாழவைக்க தண்ணீர் தன் ஆற்றலை தாராளமாக வழங்குகிறது. பல்வேறு இடங்களில் சேகரிக்கப்படும் குப்பைகள் குறித்து புகார் இல்லை. பாறைகள் பெரிய தடைகள் போல் எழுகின்றன. ஆனால் நுரைகளை எழுப்பி அதிலிருந்து தப்பித்து நதி பின்னர் அமைதியாகப் பாய்கிறது. வயல்களுக்கும் தோட்டங்களுக்கும் நீர்ப்பாசனம் செய்கிறது மற்றும் தொழிற்சாலைகளுக்கு தண்ணீரை வழங்குகிறது.

அத்துடன் உயிரின வாழ்க்கை சூழலை பராமரிக்கிறது. இறுதியாக, அது கடலுக்குச் சென்று அதன் உப்புநீரில் கலக்கிறது.

இலங்கையின் நீர்த்தேக்கங்கள், ஏரிகள், அணைகள் மற்றும் ஆறுகள் தொடர்பில் அதிக அக்கறையுடன் செயற்பட வேண்டிய தருணம் இதுவாகும். இந்தியாவைப் போல் இந்த நாட்டில் உள்ள நதிகள் குப்பைகளால் மாசுபடுவதில்லை. ஆனால் தொழிற்சாலைகள் கழிவுகளைக் குவிக்கின்றன. இவற்றுக்கு எதிராக சட்டங்கள், விதிமுறைகள் இருந்தாலும், சரியான கவனம் இல்லை. இவ்விடயம் தொடர்பாக புதிய கவனம் செலுத்தப்பட வேண்டும்.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

# கல்லூரி நட்சத்திரங்கள் (02) நிகழ்ச்சி

கல்லூரி நட்சத்திரங்கள் (02) எனும் நிகழ்ச்சி எதிர்வரும் வியாழக்கிழமை (07) நண்பகல் 12.00 மணிக்கு கொட்டாஞ்சேனை கலைமகள் தமிழ் வித்தியாலயத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்கவின் பணிப்புக்கமைய புரவலர் ஹாசிம் உமரின் ஏற்பாட்டில் இந்நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்ட மாணவிகள், இக்பால் ஜெகன் தலைமையிலான சித்தாரா இசைக் குழுவினரின் இசையில் பாடல்களை பாடவுள்ளனர்.

இந்த நிகழ்ச்சியை 104.7. , 104.9. ஆகிய தென்றல் அலைவரிசைகளில் நேரடியாக கேட்டு மகிழலாம்.

நிகழ்ச்சி தயாரிப்பாளராக நிஷாந்தி ரணதுங்கா உள்ளதுடன், நிகழ்ச்சியை நாகபூஷணி கருப்பையா தொகுத்து வழங்கவுள்ளார்.

# 'லய சமர்ப்பணம்' மிருதங்க அரங்கேற்றம்



'மிருதங்க வித்துவான்', 'சங்கீத ரத்தினம்', 'வாழ்நாள் சாதனையாளர்' ஸ்ரீ அம்பலவாணர் ரகுநாதனின் மாணவனும் வைத்திய கலாநிதி நிரோஷ் சுப்பிரமணியம் மற்றும் திருமதி நளினி நிரோஷ் ஆகியோரின் புதல்வனுமான செல்வன் ஜொஹான் பிரவீன் சுப்ரமணியனின் மிருதங்க அரகேற்றம் 'லய சமர்ப்பணம்' எதிர்வரும் 10ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6,30 க்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுற்கு கல்கிசை பரி தோமாவின் கல்லூரி அதிபர் அருட்திரு மார்க் பிலிமோரியா பிரதம விருந்தினராக கலந்துக் கொள்ளவுள்ளதுடன் பேராதனை பல்கலைக்கழகத்தின் தமிழ்துறைத் தலைவர் பேராசிரியர் சி,பிரசாந்தன், கல்கிசை பரி தோமாவின் கல்லூரி பிரதி அதிபர் அசங்க எஸ், பெரேரா ஆகியோர் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வுக்கான சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு, மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதி நீதியரசர் பா.சசி மகேந்திரன், அம்பாறை கிழக்கு மாகாண குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி நீதி அரசர் தி.யோ.பிரபாகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

# உழவு இயந்திரத்தில் சிக்கி சிறுவன் பலி!

## வவுனியாவில் சோக சம்பவம்

வவுனியா விசேட நிருபர்

வவுனியா, பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடுக்குளம் பிரதேசத்தில் உழவு இயந்திரமொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 15 வயதுச் சிறுவனொருவன் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் நேற்று முன்தினம் (01) மாலை இடம்பெற்றது.

இப்பிரதேசத்திலுள்ள குளத்தின் அணைக்கட்டில் மணல் ஏற்றியவாறு பயணித்த இந்த உழவு இயந்திரமானது, திடீரென்று கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது.

இந்நிலையில், உழவு இயந்திரத்தின் பின்பகுதியில் அமர்ந்திருந்த இந்தச் சிறுவன் படுகாயமடைந்து, பூவரசங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக வவுனியா பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டான். இருப்பினும், சிகிச்சை பலனின்றி சிறுவன் உயிரிழந்துள்ளதாக, வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.



இந்தச் சம்பவத்தில் மற்றுமொரு சிறுவன் காயமடைந்து, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாகவும், வைத்தியசாலைத் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இந்தச் சம்பவம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர்.

## இலங்கை விஜயம்...

ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக, இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் நேற்று அறிவித்துள்ளது.

இலங்கைக்கான அவரது உத்தியோகபூர்வ விஜயத்துக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும், இந்திய உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஸ்ரீ ராஜ்நாத் நேற்று 2ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்வதாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. அவர் இரண்டு நாட்கள் இலங்கையில் தங்கியிருப்பாரெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடல் நடத்தவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜப்பான் பிரதமர்...

தெரிவித்துள்ளன. புதுடில்லியில் நடைபெறவுள்ள ஜி20 அரச தலைவர் மாநாட்டில் பங்கேற்பதற்காக இந்தியா செல்லும் ஜப்பானிய பிரதமர், இலங்கைக்கும் விஜயம் செய்யவுள்ளதாகவும், அவ்வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் முக்கிய அபிவிருத்தி உதவிப் பங்காளிகளில் ஒருவரான ஜப்பானிய தலைவர், நாட்டின் கடன் மறுசீரமைப்பு மற்றும் எதிர்கால முதலீட்டு வாய்ப்புகள் தொடர்பாக ஜனாதிபதி தலைமையிலான அரசாங்க அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

## கோழி இறைச்சியி...

அங்காடிகளில் கொள்வனவு செய்ய முடியுமென, அகில இலங்கை கோழிப்பண்ணை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்தது.

முட்டை மற்றும் கோழி இறைச்சி உற்பத்தி பிரச்சினைகள் தொடர்பாக விவசாய அமைச்சருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே, அச்சங்கத்தின் தலைவர் அஜித் வீரசிங்க இதனைத் தெரிவித்தார். இதேவேளை, பண்டிகைக்காலம் ஆரம்பமாகும் போது, உள்ளூர் முட்டையை 30 ரூபாவுக்கு நுகர்வோர் பெறலாமென , அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் சரத் ரத்நாயக்க தெரிவித்தார்.

## இந்தியா, மித்ரா குழும தலைவர்...

ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடியுள்ளார். ஜனாதிபதியுடனான சந்திப்பில் பா.ஜ.க. தமிழ் நாட்டு துணைத் தலைவரும் தொழிலதிபருமான எம்.சக்கரவர்த்தி, தொழிலதிபரான கோவரதன் ஆகியோரும் கலந்துகொண்ட போது பிடிக்கப்பட்ட படம்.

## வித்யோதய சாகித்திய விருது...

இந்த நிகழ்வுக்கான அச்சு ஊடக அனுசரணையை லேக்ஹவுஸ் நிறுவனம் வழங்கியிருந்தது.

'கிரிஜா' நாவலுக்கான விருதை அதன் ஆசிரியர் மனோஹரி ஜெயலத்துக்கு 'சரசவி' புத்தக நிறுவனத்தின் தலைவர் எச்.டி.பிரேமசிறி வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரான சிரேஷ்ட பேராசிரியர் பத்மலால் மானகே பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

மனிதநேயம் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி, பேராசிரியர் ஷிராந்த ஹீன்கெந்த, லேக்ஹவுஸ் நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இ.போ.சவுடன் இணைந்ததாக...

தெரிவித்தார். ஆனால், இது போன்ற சாத்தியக்கூற்று ஆய்வுகளிலிருந்து தெரிய வருவதால், அத்தகைய திட்டம் முதலீட்டு செலவு, முதலீட்டு முறைக்கு பொருந்தாது. எனவே, முதல் அமைச்சரவை ஒப்புதலுக்கு பதிலாக 200 மின்சார பஸ்கள் திட்டத்துக்கு அமைச்சரவை ஒப்புதல் பின்னர் கிடைத்தது.

உலகின் பெரும்பாலான நாடுகள் எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள் புதைபடிம எரிபொருள் பாவனையிலிருந்து விலகி, மின்சக்தியால் இயக்கப்படும் போக்குவரத்து மூலம் நிலையான வளர்ச்சிக்கு பங்களிக்க வேண்டியதன் அவசியத்தின் உலகளாவிய ஏற்றுக்கொள்ளலின் படி, உலகளாவிய அங்கீகாரத்துடன் இணைந்த இலங்கையின் பயணத்தின் ஆரம்பமாக இது அமையுமெனவும், அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

## லிற்றோ Gas...

உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களின் மாதாந்த விலையையே இவ்வாறு மாற்றியமைக்கவுள்ளதாக, லிற்றோ நிறுவனம் தெரிவித்தது. எரிவாயு சிலிண்டர்களின் விலையானது, அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விலைச்சூத்திரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் 5ஆம் திகதியன்று மாற்றியமைக்கப்படுகின்றது. கடந்த இரண்டு மாதங்களில் உலக சந்தையில் சமையல் எரிவாயுவின் விலை அதிகரித்த போதிலும், லிற்றோ நிறுவனம் கடந்த மாதம் விலையை மாற்றியமைக்கவில்லை. அண்மைய திருத்தத்தில் எரிவாயு சிலிண்டர்களின் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்தனர்.

## புதிய ஸ்டிக்கர் இல்லாது...

ருவான்வெல்ல பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே, அவர் இதனைத் தெரிவித்தார். புதிய ஸ்டிக்கர் முறையை திட்டமிட்டு மாற்றியமைத்து, மதுபானத்தை விற்பனை செய்பவர்கள் தொடர்பாக ஆராய்வதற்காக தொடர்ந்தும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கமைய கடந்த வெள்ளிக்கிழமைவரை அவ்வாறான ஒரு இலட்சத்துக்கும் அதிகமான மதுபானப் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. இந்தக் குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு 5 இலட்சம் ரூபாவரை அபராதம் அறவிடப்படுமென்பதுடன், தண்டனையை மீறிச் செயற்படுபவர்களின் மதுபானசாலைக்கான அனுமதிப்பத்திரமும் இரத்துச் செய்யப்படுமெனவும், அவர் தெரிவித்தார்.

## ரயில்வே காணிகளில்...

வழங்க முடியுமெனவும், அமைச்சர் வலியுறுத்தினார்.

ரயில்வே காணியில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றுவதற்கு ரயில்வே திணைக்களத்துக்கு முழு அதிகாரம் உண்டெனவும் எனினும், சம்பந்தப்பட்ட அமைச்சர் என்ற ரீதியில் இவ்வாறு கட்டப்பட்டுள்ள கட்டடங்களை இடித்து அகற்றுவதற்கு தான் விரும்பவில்லையெனத் தெரிவித்த அமைச்சர், பொலன்னறுவை வரையான ரயில்வே காணிகள் துரிதமாக அபகரிக்கப்படுவதை தடுக்கும் வகையில் மாகாண ஆளுநர் தலைமையிலான அரச அதிகாரிகள் மற்றும் பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படையினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத் தெரிவித்தார்.

ரயில்வே காணிகளை சட்டரீதியாக குத்தகைக்கு வழங்குவது தொடர்பான புதிய அமைச்சரவைப்பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படுமெனவும் அதுவரை ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான காணிகள் எதனையும் குத்தகைக்கு வழங்க வேண்டாமெனவும் ரயில்வே பொது முகாமையாளருக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும், அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை, நட்டத்தில் இயங்கும் ரயில்வே துறையை இலாபகரமான நிறுவனமாக மாற்றுவதற்கு ரயில்வேயின் பயன்படுத்தப்படாத காணிகள் மற்றும் பிற சொத்துகளை புதிய முறைகளில் நிர்வகிக்க வேண்டுமெனவும், அமைச்சர் தெரிவித்தார்.

கொழும்பு, மட்டக்களப்பு, அநுராதபுரம், பதுளை, எல்ல போன்ற எந்தப் பிரதேசத்திலும் தனியார் துறையுடன் இணைந்து பயனுள்ள செயற்றிட்டங்களை ஆரம்பிப்பதற்கான பிரேரணையை சமர்ப்பிக்க வாய்ப்புள்ளதாகவும், அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

அமைச்சரவையின் அங்கீகாரத்தின் பின்னர், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பயனுள்ள முன்மொழிவுகளை முன்வைத்தால், முறையான மதிப்பீட்டு முறையில் கூட்டுத் திட்டங்களை ஆரம்பிக்க முடியுமெனவும் இது தொடர்பாக கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தீவிரமாக தலையிட வேண்டுமெனவும், அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன், இராஜாங்க அமைச்சர்களான எஸ். வியாழேந்திரன், சிறிபால கம்லத், பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் மற்றும் பொதுமக்கள் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டனர்.

## சபையில் 6,7,8...

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நேற்று முன்தினம் (01) நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக, பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

பாராளுமன்றம் நாளை மறுதினம் 5ஆம் திகதி முதல் 8ஆம் திகதிவரை கூடவுள்ளதுடன், ஒவ்வொரு நாளும் காலை 9.30 மணி முதல் முற்பகல் 10.30 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை10.30 மணி முதல் பிற்பகல் 5.00 மணிவரை ஆயுள்வேதம் (திருத்தச்) சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டு விவாதம் நடைபெறவுள்ளது. அதன் பின்னர், தனிநபர் சட்டமூலங்களான ஸ்ரீ பாலபிவூர்தி வர்தன சமிதிய (கூட்டிணைத்தல்) சட்டமூலம், சமாதி சமூக அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் என்பன தொடர்பான இரண்டாவது மதிப்பீடு இடம்பெறும். இதனைத் தொடர்ந்து பி.ப 5.00 மணி முதல் பி.ப 5.30 மணிவரை அரசாங்கத்தினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை விவாதிக்கப்படவுள்ளது.

6ஆம் திகதி புதன்கிழமை மு.ப 10.30 மணிக்கு அந்நியச் செலாவணிச் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2338/40 ஆம் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2341/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதி என்பன விவாதமின்றி அங்கீகரிக்கப்படவுள்ளன. அதனைத் தொடர்ந்து பி.ப 5.30 மணி வரை சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணைக்கமைய விவாதம் நடைபெறவுள்ளது.

செப்டெம்பர் 7ஆம் திகதி வியாழக்கிழமை மற்றும் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை ஆகிய இரண்டு தினங்களும் மு.ப 10.30 மணி முதல் பி.ப 5.30 மணிவரை இந்த விவாதத்தைத் தொடர்வதற்கும் தீர்மானிக்கப்பட்டதுடன், 8ஆம் திகதி 5.30 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

# எங்கள் கருத்து

## வானத்தை வசப்படுத்தும் இந்திய சாதனைப் பெண்கள்!

ஈர்ப்பு விசை, கதிர்வீச்சு போன்றன குறித்து ஆய்வு செய்ய உள்ளது ஆதித்யா L1 . இந்தியாவின் முதல் சூரிய ஆய்வு விண்கலம் இதுவென்பதால் அத்தனை உலகநாடுகளின் பார்வையும் இந்தியா மீதே இப்போது குவிந்துள்ளது.

சந்திரயான் 3 விண்கலம் உட்பட இஸ்ரோவின் அத்தனை ஆய்வு அணியிலும் இயக்குநர் போன்ற முக்கிய பொறுப்பில் உள்ளவர்கள் தமிழர்கள் என்பது பெருமைக்குரிய விடயம். இஸ்ரோவின் தலைவர்களாக விருந்த கஸ்தூரிரங்கன், சிவன், அண்ணாதுரை மற்றும் முக்கிய பொறுப்பிலிருந்த வனிதா முத்தையா, வீரமுத்துவேல் ஆகியோர் தமிழர்கள் என்பது ஒருபுறமிருக்க, இந்திய விண்வெளி ஆய்வுத் திட்டங்களின் பிரதான பொறுப்பில் உள்ளவர்களும் தமிழர்களாவர்.

சந்திராயன்3 திட்டத்தின் இயக்குநர் ஒரு தமிழர். அதே போன்று தற்போது நிகர்ஷாஜி என்ற பெண்ணும் இப்பட்டியலில் இணைந்திருக்கின்றார். ஆதித்யா எல்1 திட்டத்தின் இயக்குநரான இவர் இஸ்லாமிய தமிழ்ப்பெண் என்பது எமக்கெல்லாம் பெருமை தரக்கூடிய விடயம்.

இவர்களது பதவிகளெல்லாம் தனிநபர் செல்வாக்கினால் வழங்கப்பட்டவை அல்ல. விண்வெளி அறிவியல்துறையில் இவர்கள் கொண்டுள்ள ஆற்றல் மற்றும் தகைமையின் அடிப்படையில் வழங்கப்பட்டதே இப்பதவிகளாகும்.

இவை ஒருபுறமிருக்க, சந்திராயன்3 மற்றும் ஆதித்யா எல்1 திட்டங்களை எடுத்துநோக்கினால் அங்குள்ள விஞ்ஞானிகள் குழுவில் அரைப்பங்கினர் பெண்களாவர். பெண்களுக்கு சமஉரிமை வழங்கும் வகையில் பால்நிலை சமத்துவத்தை இந்தியா நடுநிலையுடன் கடைப்பிடிக்கின்றதென்பதில் இந்தியப் பெண்கள் உண்மையிலேயே பெருமைப்பட வேண்டியவர்களாவர்.

உலகெங்கும் பெண்களில் ஒருதரப்பினர் சினிமாவென்றும், நாகரிகமென்றும் மற்றொரு பாதையில் சென்று கொண்டிருக்கையில், இந்தியப் பெண்களில் ஒரு தரப்பினர் அறிவியல்துறையில் சாதனைகளைக் குவித்து வருவது பரவசத்துடன் மெய்சிலிர்க்க வைக்கின்றது.

## தர்மன் சண்முகரத்தினம்...

இருவரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டனர். அவர்களை பின்னுக்கு தள்ளி 70.4 சதவீத வாக்குகளை பெற்று தர்மன் சண்முகரத்னம் வெற்றி பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றுள்ள தர்மன் சண்முகரத்தினத்துக்கு பிரதமர் லீ சியென் லூங் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கடந்த 1959ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூரை ஆண்டுவரும் மக்கள் செயல் கட்சியின் பெயர், ஊழல் புகார்களால் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாக பிரதமர் லீ சியென் லூங் அண்மையில் கவலை தெரிவித்திருந்தார்.

சிங்கப்பூரின் தற்போதைய ஜனாதிபதி ஹலிமாவின் 6 ஆண்டு பதவிக்காலம் செப்டெம்பர் 13ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இதையடுத்து, புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது.

ஜனாதிபதியாக தற்போது தெரிவாகியுள்ள தர்மன் சண்முகரத்தினம், தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த, மிகச் சிறந்த பொருளாதார வல்லுனராவாரென்பதுடன், சிங்கப்பூர் துணை பிரதமர், நிதி அமைச்சர் உட்பட பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார்.

தர்மன் சண்முகரத்தினம், தேர்தல்களில் மக்களின் பெருவாரியான வாக்குகளால் தொடர்ந்து வெற்றி பெற்றவர். கடந்த 2016ஆம் ஆண்டு யாகூ நியூஸ் நடத்திய கருத்துக்கணிப்பில், சிங்கப்பூரில் அதிகாரம் மிக்க பிரதமர் பதவிக்கு தர்மன் சண்முகரத்தினம் வரவேண்டுமென்று மக்கள் விருப்பம் தெரிவித்திருந்தனர்.

1959ஆம் ஆண்டு சுதந்திரத்துக்கு பின்னர், சிங்கப்பூர் இதுவரை 3 பிரதமர்களை மட்டுமே கண்டுள்ளது. அவர்கள் மூவருமே பெரும்பான்மை சீன இனக் குழுவைச் சேர்ந்தவர்கள். முதல் பிரதமரான லீ குவான் யூவின் மகனான லீ சியென் லூங் தற்போது அந்நாட்டின் பிரதமராக இருக்கிறார். எதிர்வரும் 2025ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்பாக அடுத்த பிரதமராக தர்மன் சண்முகரத்தினத்தை அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது.

ஆனால், அது பெரும்பான்மை சீனர்களை தர்ம சங்கடப்படுத்துமென்ற கருத்து கட்சிக்குள் எழுந்ததால், அது தொடர்பாக தயக்கம் இருந்து வந்தது. தர்மன் சண்முகரத்தினமும் தாம் பிரதமர் பதவிக்கு ஆசைப்படவில்லையென்று வெளிப்படையாக அறிவித்தார். மக்களிடையே பெரும் செல்வாக்குடன் திகழ்ந்த தர்மன் சண்முகரத்தினத்தை ஜனாதிபதியாக்குவதன் மூலம் அடுத்த பிரதமரை தெரிவு செய்வதில் தற்போதைய பிரதமர் லீ சியென் லூங் தனக்கான நெருக்கடியை சற்று குறைத்துக்கொண்டுள்ளதாக, அந்நாட்டு அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

பாராளுமன்றம் செய்த சட்ட திருத்தங்களால், கடந்த 2017ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது, ஹலிமா யாகூப் மட்டுமே போட்டியிடத் தகுதியானவராக இருந்தார். அந்த திருத்தத்தின்படி, குறிப்பிட்ட இனக்குழுவிலிருந்து தொடர்ந்து 5 தடவைகள் யாரும் அதிபராகவில்லை என்றால் மட்டுமே போட்டியிட அனுமதிக்கப்படுவார். 2017ஆம் ஆண்டு 4 வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதால், அங்கே அரிதான நிகழ்வாக போராட்டங்கள் எழுந்தன.

சிங்கப்பூர் மக்கள் தொகையில் நான்கில் மூன்று பகுதியினர் சீனர்கள். எஞ்சியவர்கள் மலாய், இந்தியா அல்லது யுராஷியன் வம்சாவளியினராவர்.

இந்த ஆண்டு அனைத்து இனக் குழுவினரும் போட்டியிடலாமென்று அறிவிக்கப்பட்டது. இதற்கமைய, தர்மன் சண்முகரத்னம் தவிர, காக் சோங் (வயது75), டான் கின் லியான் (வயது75) ஆகிய இருவரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டனர். 27 இலட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் தங்களின் வாக்குகளை செலுத்தினர்.

இதில் 70.4 சதவீத வாக்குகளைப் பெற்று தர்மன் சண்முகரத்னம் வெற்றி வெற்றி பெற்றுள்ளார். அவரை எதிர்த்து போட்டியிட்ட காக் சோங் 15.7 சதவீத வாக்குகளையும் டான் கின் லியான் 13.88 சதவீத வாக்குகளையும் பெற்றுள்ளனர்.

## இலங்கை இந்திய சமுதாய...

நகர்வுகளுக்கான உறவுப் பாலமாக திகழும் முக்கிய அமைப்பே இலங்கை இந்திய சமுதாயப் பேரவையாகும்.

இலங்கை இந்திய சமுதாயப் பேரவையின் முன்னாள் தலைவர் சிவராமன் மற்றும் அப்பேரவையின் உயர்மட்ட உறுப்பினர்களால் விடுக்கப்பட்ட அழைப்பின் பிரகாரமே தலைமைப் பதவியை அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையிலான கலாசார, வர்த்தக தொடர்புகளை மேலும் விரிவாக்குவது, இளம் தொழில் அதிபர்களை உருவாக்குவது மற்றும் இளம் தொழில் முனைவோரை அடையாளம் காணும் போது மலையகத்திலுள்ள தொழில் முனைவோருக்கு முக்கியத்துவம் அளித்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பாக இலங்கை, இந்திய சமுதாயப் பேரவையின் கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளன.

## அவசரகால கொள்முதலின் கீழ்...

சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர், வைத்தியர் சமன் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதேவேளை, மருத்துவமனைகளில் 77 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும், அவர் மேலும் தெரிவித்தார்.

## அரச அனுசணையுடன்...

எனும் உண்மையை ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள உயர்ஸ்தானிகரின் எழுத்துமூல அறிக்கையினூடாக வெளிக்கொணரப்பட வேண்டுமென, தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54ஆவது கூட்டத்தொடர், ஜெனிவாவில் எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகி, ஒக்டோபர் 13ஆம் திகதிவரை ஒருமாத காலம் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரின் முதல்நாள் அமர்வில், இலங்கை தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் எழுத்துமூல அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இருப்பினும், கடந்தகால மனித உரிமை மீறல்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான மிக மோசமான குற்றங்கள் தொடர்பாக பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும் அவசியமான நியாயபூர்வமான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் முன்னெடுக்கவில்லையென்ற விமர்சனம் பல்வேறு தரப்பினராலும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறானதொரு பின்னணியில் எதிர்வரும் ஜெனிவா கூட்டத்தொடரின் போது, இலங்கை தொடர்பாக வலியுறுத்தப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக கருத்துரைத்த போதே, சி.வி.விக்கினேஸ்வரன் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்த போது,

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடரில் முன்னைய அமர்வுகளின் போது, இலங்கையிடம் எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் அவை உரியவாறு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா? என்பது தொடர்பாக ஆராயப்படும்.

குறிப்பாக, மனித உரிமைகள் பேரவையின் முன்னைய அறிக்கையில் பாதுகாப்புத் துறைசார் செலவினங்களை கட்டுப்படுத்தல், ஊழலை இல்லாதொழித்தல், கடந்தகால மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நியாயமான விசாரணையை மேற்கொள்ளல், உயிர்த்த ஞாயிறு பயங்கரவாத தாக்குதல்கள் தொடர்பாக நியாயமான விசாரணையை மேற்கொள்ளல், வடக்கு, கிழக்கில் படையினரின் எண்ணிக்கையை குறைத்தல், படையினர் வசமுள்ள காணிகளை விடுவித்தல், பயங்கரவாத தடைச்சட்டத்தை சர்வதேச நியமங்களுக்கமைவாக திருத்துதல், ஊடக சுதந்திரத்தைபாதுகாத்தல் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் வலியுறுத்தப்பட்டன" எனத் தெரிவித்தார்.



AGS. சுவாமிநாதன் சர்மா
நிர்வாக இயக்குனர் @
A.G. Sarma & Co., (CA)
பட்டயக்கணக்காளர், வரி &
முகாமைத்துவ ஆலோசகர்
+94–777–802–900
Email: swaminathan@
agsarma.com




# இலங்கையால் மீண்டு வர முடியும்!

**இலங்கை தற்போது தனது வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. நெருக்கடி பல காரணிகளால் ஏற்பட்டுள்ளது. அவற்றுள் சில:**

**அதிகளவு கடன்:** இலங்கையின் கடன் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் 100%க்கும் அதிகமாக உள்ளது. இந்தக் கடன் சுமையால் இறக்குமதி மற்றும் பிற அத்தியாவசிய செலவுகளுக்கு நிதியளிப்பதில் அரசுக்கு சிரமம் ஏற்பட்டுள்ளது.

அந்நிய செலாவணி கையிருப்பு வீழ்ச்சி: இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு பல தசாப்தங்களில் மிகக் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்துள்ளது. இதனால் எரிபொருள், உணவு போன்ற அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதில் அரசுக்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.

**பணவீக்கம்:** இலங்கையில் பணவீக்கம் 54.6%ஐ எட்டியுள்ளது. இதனால் மக்கள் அத்தியாவசியப் பொருட்களை வாங்க முடியாமல் சிரமப்படுகின்றனர்.

**அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடு:** இலங்கையில் எரிபொருள், உணவு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. இதனால் மக்களுக்கு தேவையான பொருட்கள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இவையெல்லாம் இலங்கையின் பொருளாதார நெருக்கடியின் தீவிரத்தை எடுத்துக்காட்டும் சில காரணிகளாகும். இந்த நெருக்கடி நாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு பங்களித்த சில கூடுதல் காரணிகளாக பின்வருவனவற்றினைக் குறிப்பிடலாம்:

**2019 ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள்:** 2019ஆம் ஆண்டு ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியது. அந்நிய செலாவணியை ஈட்டித் தரும் சுற்றுலாத் துறை குண்டுவெடிப்பால் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

**கொவிட்19 தொற்றுநோய்:** COVID19 தொற்றுநோய் இலங்கையின் பொருளாதாரத்திலும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது. தொற்றுநோய் சுற்றுலா மற்றும் பிற பொருளாதார நடவடிக்கைகளில் சரிவுக்கு வழிவகுத்தது.

**அரசாங்கக் கொள்கைகள்:** அரசாங்கத்தின் சில கொள்கைகளும் பொருளாதார நெருக்கடிக்கு பங்களித்துள்ளன. உதாரணமாக, 2021ஆம் ஆண்டில் இரசாயன உரங்களின் இறக்குமதியை தடை செய்வதற்கான அரசாங்கத்தின் முடிவு விவசாயத் துறையில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது இலகுவான தீர்வுகள் இல்லாத ஒரு சிக்கலான பிரச்சினையாகும். எவ்வாறாயினும், நெருக்கடியை சமாளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இலங்கை தனது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியும். ஆனால் அதற்கு நேரமும் முயற்சியும் தேவைப்படும். நாடு பல சீர்திருத்தங்களை செயற்படுத்த வேண்டும். குறிப்பாக,

**கடன் மறுசீரமைப்பு:** இலங்கை தனது கடனை இன்னும் நிர்வகிக்கக்கூடியதாக மாற்றும் வகையில் மறுசீரமைக்க வேண்டும். நாடு செலுத்த வேண்டிய கடனின் அளவைக் குறைக்கவும், திருப்பிச் செலுத்தும் விதிமுறைகளை நீடிக்கவும் கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவது இதில் அடங்கும்.

**நிதி ஒருங்கிணைப்பு:** இலங்கை தனது நிதி நிலைமையை மேம்படுத்துவதற்காக அதன் வரவு செலவுத் திட்ட பற்றாக்குறையை குறைக்க வேண்டும். இதில் செலவினங்களைக் குறைப்பது மற்றும் வரிகளை உயர்த்துவது ஆகியவை அடங்கும்.

**பொருளாதார சீர்திருத்தங்கள்:** இலங்கை தனது நீண்ட கால வளர்ச்சி வாய்ப்புகளை மேம்படுத்தும் வகையில் பல பொருளாதார சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். இந்த சீர்திருத்தங்களில் வர்த்தகத் தடைகளைக் குறைத்தல், முதலீட்டு சூழலை மேம்படுத்துதல் மற்றும் நிதித்துறையை வலுப்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

இந்த சீர்திருத்தங்களை இலங்கை அமுல்படுத்தினால் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியும். இருப்பினும், இது எளிதானதல்ல என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். சீர்திருத்தங்கள் செயற்படுத்த கடினமாக இருக்கும். அதேசமயம் குறுகிய கால துன்பத்திற்கு வழிவகுக்கும். எவ்வாறாயினும், நீண்ட கால அடிப்படையில் இலங்கை நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு அவை அவசியமாகும்.

இலங்கை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள உதவும் வேறு சில காரணிகள் சில:

**சர்வதேச ஆதரவு:** பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு இலங்கைக்கு சர்வதேச ஆதரவு தேவைப்படும். இது நிதி உதவி, கடன் நிவாரணம் அல்லது தொழில்நுட்ப உதவி போன்ற வடிவங்களில் வரலாம்.

**அரசியல் ஸ்திரத்தன்மை:** மீட்சிக்குத் தேவையான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த இலங்கை அரசியல் ஸ்திரத்தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். அரசியல் ஸ்திரமின்மையால் தடையின்றி அரசாங்கம் சட்டத்தை இயற்றவும், கொள்கைகளை நடைமுறைப்படுத்தவும் முடியும்.

**பொது ஆதரவு:** இலங்கை மக்கள் மீட்சிக்குத் தேவையான சீர்திருத்தங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும். நீண்ட கால பொருளாதார வளர்ச்சியை அடைவதற்கு குறுகிய காலத்தில் தியாகம் செய்ய அவர்கள் தயாராக இருக்க வேண்டும்.

**ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டும்:** வெளிநாட்டு நாணயத்தை ஈட்டுவதற்கு இலங்கை அதிக பொருட்கள் மற்றும் சேவைகளை ஏற்றுமதி செய்ய வேண்டும். வணிகங்களுக்கு வரிச் சலுகைகள் மற்றும் பிற சலுகைகளை வழங்குவதன் மூலம் ஏற்றுமதியை அதிகரிக்க அரசாங்கம் உதவலாம்.

**வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கும் திட்டத்தினை அமுல்படுத்த வேண்டும்:** வெளிநாட்டு முதலீடுகள் இலங்கையின் பொருளாதாரத்தை உயர்த்தவும் வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் உதவும். நாட்டின் வர்த்தக சூழலை மேம்படுத்துவதன் மூலமும் முதலீட்டாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதன் மூலமும் அரசாங்கம் வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்க முடியும்.

சீர்திருத்தங்கள், சர்வதேச ஆதரவு, அரசியல் ஸ்திரத்தன்மை, மக்கள் ஆதரவு ஆகியவற்றின் சரியான கலவையை இலங்கை பெற முடிந்தால் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள முடியும்.

இருப்பினும், இது எளிதானதல்ல என்பதை நினைவில் கொள்வது அவசியம். அதற்கு நேரம், முயற்சி மற்றும் தியாகம் தேவைப்படும்.

## இந்த சூழ்நிலையில் இலங்கை ரூபாவின் பெறுமதியின் நிலை?

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குத் தேவையான சீர்திருத்தங்களை அமுல்படுத்த முடிந்தால் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வடைய வாய்ப்புள்ளது. ஏனெனில் இந்தச் சீர்திருத்தங்கள் நாட்டின் பொருளாதார அடிப்படைகளை மேம்படுத்த உதவும். இது முதலீட்டாளர்களுக்கு ரூபாயை மிகவும் கவர்ச்சிகரமான நாணயமாக மாற்றும். எனினும், சீர்திருத்தங்கள் வெற்றியடைந்தாலும் குறுகிய காலத்தில் ரூபாயின் மதிப்பு பலவீனமாகவே இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில், நாட்டின் கடன் சுமை இன்னும் அதிகமாக இருப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பில் இருந்து பொருளாதாரம் மீள்வதற்கு காலம் எடுக்கும். நீண்ட கால அடிப்படையில் இலங்கை சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்தி நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைய முடிந்தால் ரூபாயின் மதிப்பு நெருக்கடிக்கு முந்திய நிலைக்கு உயர வாய்ப்புள்ளது. இருப்பினும் இதற்கு நேரமும் முயற்சியும் அவசியம்.

## எதிர்காலத்தில் இலங்கை ரூபாவின் பெறுமதியைப் பாதிக்கக்கூடிய காரணிகள் சில:

**பொருளாதார சீர்திருத்தத்தின் வேகம்:** இலங்கை தனது பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்குத் தேவையான சீர்திருத்தங்களை எவ்வளவு விரைவாக நடைமுறைப்படுத்த முடியுமோ, அவ்வளவு வேகமாக ரூபாயின் பெறுமதியும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**சர்வதேச ஆதரவின் நிலை:** இலங்கைக்கு எந்தளவிற்கு சர்வதேச ஆதரவு கிடைக்கிறதோ, அந்த அளவுக்கு சீர்திருத்தங்களை அமுல்படுத்துவதும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதும் இலகுவாக இருக்கும்.

**அரசியல் ஸ்திரத்தன்மை:** கடந்த காலத்தினைவிட தற்போது இலங்கையில் அதிக அரசியல் ஸ்திரத்தன்மை இருப்பதால் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவது மற்றும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது அரசாங்கத்திற்கு ஒப்பீட்டளவில் எளிதாக இருக்கும்.

**தியாகங்களைச் செய்யக் கூடிய பொதுமக்களின் விருப்பம் மற்றும் மனோபாவம்:** இலங்கை மக்கள் குறுகிய காலத்தில் தியாகங்களைச் செய்ய எவ்வளவு விருப்பம் காட்டுகிறார்களோ அந்தளவுக்கு நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வது இலகுவாக இருக்கும்.

(17ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் இரண்டாவது தெங்கு முக்கோண வலயம்



## புலம்பெயர்ந்தோர் முதலீடு செய்யும் சாத்தியக்கூறு

எமது நாட்டின் பெருந்தோட்டப் பயிர்களில் ஒன்றான தெங்குச் செய்கையானது, எமது மக்களின் உணவுப் பழக்கத்துடனும் வாழ்வியலுடனும் இரண்டறக் கலந்து விட்டதென்பதே உண்மையாகும்.

எமது நாட்டில் தேங்காய் உற்பத்தியில் மாத்திரமின்றி, தெங்குக் கைத்தொழிலினாலும் வருமானம் ஈட்டப்படுகின்றமை கண்கூடாகும். ஆகையினால், எமது தெங்குக் கைத்தொழிலானது எமது நாட்டில் சிறிய, நடுத்தர, பாரிய மற்றும் மனை ஆகிய நான்கு வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில், எமது நாட்டில் முதலாவது தெங்கு முக்கோண வலயமானது புத்தளம், குருநாகல், கம்பஹா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக அமைந்திருப்பதுடன், எமது நாட்டு மக்களுக்கு தேவையான தேங்காய் மற்றும் தெங்குசார் ஏனைய உற்பத்திகளை இந்த முக்கோண வலயமே இதுவரைகாலமும் வழங்கி வருகின்றது.

இதற்கு அடுத்தபடியாக, செப்டெம்பர் இரண்டாம் திகதி உலக தெங்கு தினத்தையிட்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய இரண்டாவது தெங்கு முக்கோண வலயத்தை வடமாகாணத்தில் யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக உருவாக்கவுள்ளதாக, பெருந்தோட்ட கைத்தொழிற்சாலைகள் அமைச்சர் ரமேஷ் பத்திரன அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் தெரிவித்திருந்தார்.

எமது நாட்டின் தெங்கு உற்பத்தியில் காணப்படும் பல்வகைத்தன்மை காரணமாக அதற்கான கேள்வி அதிகரித்துள்ளதாகவும் தேங்காய்ப் பால், சிரட்டை, கார்பன் உற்பத்தி ஆகியவற்றுக்கான கேள்வி அதிகரித்து வருவதாகவும் தெரிவித்த அமைச்சர், அடுத்த தசாப்தத்துக்குள் தெங்குசார் உற்பத்திகளின் மூலம் இரண்டு பில்லியன் டொலர் ஏற்றுமதி வருமானத்தை ஈட்டுவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்நிலையில், தென்னைவள உற்பத்திகளின் அளவை மூன்று மடங்குகளாக அதிகரிப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது. இரண்டாவது தெங்கு முக்கோண வலயத்தில் 300 ஆயிரம் புதிய தென்னம்பிள்ளைகளை நடுவதற்கும் இந்த திட்டத்துக்காக 800 மில்லியன் ரூபாவை அரசாங்கம் ஒதுக்கியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எமது நாட்டில் இரண்டாவது தெங்கு முக்கோண வலயத்தை வடமாகாணத்தில் உருவாக்குவதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் தொடர்பாக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக கற்கைகள் துறையின் பொருளியல் பிரிவுக்கான சிரேஷ்ட விரிவுரையாளர் நவரட்ணம் பாலமுரளி தெரிவித்த போது,

இலங்கையை பொறுத்தவரையில் பெருந்தோட்ட உற்பத்திகளுக்கு காலநிலை அமைப்பு சாதகமாக காணப்படுவதுடன், எமது நாட்டின் விவசாய உற்பத்திப் பங்களிப்பில் பெருந்தோட்டத்துறையில் பிரதான பயிர்களாக தேயிலை, இறப்பர், தென்னை ஆகியன முக்கியத்துவம் பெறுகின்றன. இந்நிலையில், எமது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையில் அந்நிய செலாவணியை பெற்றுத்தரும் பாரிய பங்களிப்பை இம்மூன்று பயிர்களும் வழங்குகின்றமை அனைவரும் அறிந்ததேயாகும்.

அந்த வகையில், தென்னைவள அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு, இரண்டாவது தெங்கு முக்கோண வலயத்தை வடமாகாணத்தில் உருவாக்குவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள முயற்சியானது, வடமாகாணத்தை அடிப்படையாகக் கொண்ட எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு நன்மை பயப்பதாக அமையுமெனத் தெரிவித்தார்.

தென்னைவள உற்பத்திக்கு ஏனைய மாவட்டங்களை விட, வடமாகாணத்தில் சூழல்வளம், மண்வளம் இயற்கையாக அமைந்துள்ளதால், வடமாகாணம் உகந்த இடமாக உள்ளதாகவும், அவர் சுட்டிக்காட்டினார்.

1977ஆம் ஆண்டுக்குப் பின்னர், யாழ்ப்பாணத்தில் பளையிலும் இயக்கச்சியிலும் தென்னை உற்பத்தி பாரியளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதை அடிப்படையாகக் கொண்டு தற்போது முல்லைத்தீவில் உடையார்கட்டு, விஸ்வமடு, தேவிபுரம் உள்ளிட்ட இடங்களில் பாரியளவில் தென்னை உற்பத்தி முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும், மன்னார் கரையோர பிரதேசமாக காணப்படுவதினால், தென்னை உற்பத்திக்கு மன்னார் உகந்த இடமாகக் கருதி தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

தெங்கு உற்பத்தியில் இலங்கை பாரிய சவால்களை எதிர்நோக்கும் நிலையில், வடமாகாணத்தில் உருவாக்கப்படும் தெங்கு முக்கோண வலயத்தின் மூலம் எதிர்காலத்தில் இந்தச் சவால்களை முறியடிக்கும் சாத்தியக்கூறு உள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தற்போது உலகளாவிய ரீதியில் தெங்குசார் உற்பத்திகளுக்கு கேள்வி அதிகரித்துக் காணப்படும் அதேவேளை, தெற்காசியாவிலும் இலங்கையின் தென்னைவள உற்பத்திக்கும் அதனுடன் சார்ந்த ஏனைய உற்பத்திகளுக்கும் கிராக்கி அதிகளவில் உள்ளது. தென்னைவள உற்பத்தியின் போது, மூன்றில் இரண்டு பங்கினை உள்நாட்டு தேவைகளுக்கும் மூன்றில் ஒரு பங்கை ஏற்றுமதி செய்வதற்கும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

யுத்தத்தின் பின்னரான இந்த நடவடிக்கையின் மூலம் இலங்கையில் தென்னைவள உற்பத்தியை அதிகரிப்பதற்கும் பொருளாதாரத்தின் கீழ்கட்டுமானத் திட்டங்கள் அபிவிருத்தியடைவதற்கும் இந்த திட்டம் ஓர் ஊக்குவிப்பாக அமையுமெனவும் தென்னைவள அபிவிருத்தி மூலம் பெருமளவான அந்நிய செலாவணி வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கான சாதகமான நிலைமை அரசாங்கத்துக்கு கிடைக்குமெனவும், சிரேஷ்ட விரிவுரையாளர் நவரட்ணம் பாலமுரளி தெரிவித்தார்.

**சிரேஷ்ட விரிவுரையாளர் நவரட்ணம் பாலமுரளி சுட்டிக்காட்டிய விடயங்கள் பின்வருமாறு:**

நீண்டகாலமாக நிலவிய உள்நாட்டு யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டிருந்த வடமாகாணமானது, பொருளாதார நெருக்கடி உட்பட பல்வேறுபட்ட பாதிப்புகளை எதிர்நோக்கி வருகிறது. இவ்வாறான சூழ்நிலையில் வடமாகாணத்தில் இரண்டாவது தெங்கு முக்கோண வலயம் உருவாக்கப்படுவதன் மூலம் முக்கியமாக பொருளாதாரத்தில் மீண்டெழக்கூடிய சாத்தியக்கூறு ஏற்படுமென்பதுடன், அம்மாவட்டங்களிலுள்ள மக்களின் வாழ்வாதாரத்துக்கும் பக்கபலமாக அமையும்.

வடமாகாணத்தில் இதுவரைகாலமும் பயன்படுத்தப்படாமலிருந்த நிலங்களை, இரண்டாவது தெங்கு முக்கோண வலயத்துக்கு பயன்படுத்தும் போது மண்வளம் சிறந்த நிலைமையை அடையும்.

அத்துடன், வடமாகாணத்தில் கீழ்கட்டுமான அபிவிருத்திகளான பல்வேறு துறைசார் போக்குவரத்துகள், மின்சாரம், குடிநீர் வசதி, தொலைத்தொடர்பு வசதி, துறைமுக அபிவிருத்தி உள்ளிட்டவை மேலும் விருத்தியடையும்.

துறைமுக அபிவிருத்தியினால் மன்னார் இராமேஸ்வரம் மற்றும் காங்கேசன்துறை தூத்துக்குடிக்கிடையிலான கப்பல் போக்குவரத்து சேவைகள் விரிவடைந்து, தெங்கு உற்பத்தி வர்த்தகம் விரிவடைய சாத்தியக்கூறு உள்ளது.

மேலும், வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்ட குடியேற்றங்களும் அதனால் பாடசாலைகள், மத ஸ்தலங்கள், கடைகள், சந்தைகள், வைத்தியசாலைகள் உள்ளிட்ட அபிவிருத்திகள் பெருகுவதற்கும் சாத்தியக்கூறுகள் உண்டு.

விவசாய உற்பத்தியில்...

தென்னைவள உற்பத்திக்குரிய அடுத்தடுத்த உள்ளீடுகள் மற்றும் புதிய தென்னங்கன்றுகளுக்கான தேவைப்பாடு அதிகரிக்குமென்பதுடன், இவற்றுக்கான கேள்வியும் அதிகரிக்கும். அத்துடன் மாட்டெரு, ஆட்டெரு, சருகுகள், சமையலறைக் கழிவுகள் ஆகியவை வீணாகிப்போகாத வகையில் இயற்கை பசளை உற்பத்தி மேன்மேலும் விருத்தியடையும். இவற்றினால் விவசாயிகள் நன்மையடையக்கூடிய சாத்தியக்கூறு ஏற்படும்.

கைத்தொழில் அபிவிருத்தி...

தென்னை அபிவிருத்தியை கொண்டு சிறு கைத்தொழில்களும் பாரிய கைத்தொழில்களும் வளர்ச்சியடையும். கயிறு திரித்தல், தும்புக் கைத்தொழில், அலங்காரப் பொருட்கள் மற்றும் அகப்பைகள் தயாரித்தல் உள்ளிட்ட சிறு கைத்தொழில்கள் மூலம் புதிய, புதிய கைத்தொழில் நிலையங்கள் தோற்றம் பெறுவதற்கும் சாத்தியக்கூறு உண்டு.

ஏற்றுமதியில்...

தேங்காய், தேங்காய்ப்பால், தேங்காய் எண்ணெய், அகப்பைகள், சிரட்டைகளில் தயாரிக்கப்பட்ட அலங்காரப் பொருட்கள் உள்ளிட்டவற்றுக்கு உலகளாவிய ரீதியில் தற்போது கேள்வி அதிகமாக இருப்பதனால், இவற்றின் ஏற்றுமதி அதிகரிப்பதற்கான சாத்தியக்கூறு உண்டு.

வேலைவாய்ப்பு....

தெங்குச் செய்கை மற்றும் இயற்கை பசளை உற்பத்தியினால் விவசாயிகள் நன்மையடையும் அதேவேளை, தெங்குசார் கைத்தொழில் நிலையங்களினால் இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்கும். நேரடி வேலைவாய்ப்புகளும் மறைமுக வேலைவாய்ப்புகளும் கிடைக்கும். அத்துடன், தெங்கு ஆராய்ச்சி நிலையத்தின் கிளைகளை இம்மாவட்டங்களில் நிறுவி, அவற்றினால் வேலைகளில் உள்வாங்குவதற்கான கேள்வி அதிகரிக்கும் சாத்தியக்கூறு உள்ளது. வேலைவாய்ப்புகள் மூலமாக கிடைக்கும் வருமானத்தினூடாக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வடையும்.

மேற்கூறிய காரணிகளுடன் உல்லாச பயணக் கைத்தொழில் அபிவிருத்தி ஏற்படுமென்பதுடன், சுற்றுலாப் பயணிகளின் வருகையிலும் பாரிய பங்களிப்பை வழங்கும்.

உள்நாட்டு வருமானம்...

இரண்டாவது தெங்கு முக்கோண வலயத்தின் மூலம் நீண்டகால வருமான அதிகரிப்பு ஏற்பட்டு, நாட்டின் அந்நிய செலாவணி வருமானம் மென்மேலும் அதிகரிக்கும். இதனால் வடமாகாணம் மாத்திரமின்றி, எமது நாடும் அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றம் பெறுவதற்கான சாத்தியக்கூறு உள்ளது.

காலநிலை...

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்கள் உலர் வலயமென்பதுடன், மன்னார் மாவட்டம் வரண்ட வலயமாகும். இந்த மாவட்டங்களில் தரைத்தோற்ற அமைப்பு, மண்வளம் ஆகியன தென்னைவள அபிவிருத்திக்கு உகந்ததாக உள்ளன. வெப்பமான காலநிலையை கொண்டமைந்துள்ள வடமாகாணத்தில் தென்னைவள அபிவிருத்தியின் மூலம் வெப்பத்தின் தாக்கம் குறைவடைந்து மிதமான குளிர்மையான இயற்கை காலநிலை நிலவக்கூடிய சாத்தியக்கூறு உண்டு.

இன ஒற்றுமை...

வேலைவாய்ப்புகள் மூலம் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை மேலும் வலுவடையுமென்பதுடன், சுமூகமான உறவும் நீடிக்கும்.

புலம்பெயர்ந்தோரின் முதலீடு...

எமது நாட்டைச் சேர்ந்த, விசேடமாக வடமாகாணத்தைச் சேர்ந்த புலம்பெயர்ந்தவர்களின் முதலீடுகள் கிடைப்பதற்கு சாத்தியக்கூறு உள்ளது.

இரண்டாவது தெங்கு முக்கோண வலயத் திட்டம் பெரிதும் வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும்.

ஏனெனில், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு தென்னைவள உற்பத்தி பாரிய பங்களிப்பை வழங்குமென்பது உறுதியாகும். இரண்டாவது தெங்கு வலய முக்கோண திட்டத்தை சரியான முறையில் செயற்படுத்தி, வெற்றியளித்தால் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பாரிய மறுமலர்ச்சி ஏற்படுமென்பது தெட்டத்தெளிவானதாம்.



ஆர்.சுகந்தினி...✍

**பொருளாதார ரீதியில் இலங்கை எதிர்கொண்டுள்ள பின்னடைவுகளிலிருந்து படிப்படியாக மீண்டெழுவதற்கான பிரயத்தனங்களை அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் நிலையில், தற்போதைய சூழ்நிலையை மேலும் சிக்கலாக்கும் வகையில் மத அடிப்படையிலான சிலருடைய செயற்பாடுகள் அமைந்துள்ளன.**



# வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் மதரீதியான சர்ச்சைகளுக்கு முடிவு காணப்பட வேண்டும்!

இனம் மற்றும் மதம் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட ஒருசிலருடைய செயற்பாடுகளின் காரணமாகவே கடந்த காலங்களில் நாடு பல்வேறு சவால்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. இதுபோன்ற நிலைமைகளில் கிடைத்த அனுபவங்களைப் பாடமாக எடுத்துக் கொண்டு நாடு தற்பொழுதுள்ள சூழ்நிலையிலிருந்து மீள்வதற்கான முயற்சிகளையே முன்னெடுக்க வேண்டும்.

இருந்தாலும் அரசியல் அதிகாரங்களைத் தங்கவைப்பதற்கும், தமக்கான வாக்குவங்கிகளைத் தக்கவைப்பதற்கும் தென்பகுதியிலும் சரி, வடபகுதியிலும் சரி ஒரு சில தரப்பினர் மதஅடிப்படையிலான விடயங்களைக் கையில் எடுத்துள்ளனர்.

மதத்தை அடிப்படையாகக் கொண்ட அரசியல் சில தரப்பினரால் மிகத்தீவிரமாக முன்னெடுக்கப்படுவதைக் காண முடிகிறது. இந்த வரிசையில் குருந்தூர் மலையில் பௌத்த மதத்தவர்களுக்கும், இந்து மதத்தவர்களுக்கும் இடையில் முறுகல் நிலைமையை ஏற்படுத்துவதற்கு ஒரு சில தரப்புக்கள் முயற்சிகளை மேற்கொள்கின்றன.

இருந்தபோதும் இதுபோன்ற விடயங்களை வைத்துக் கொண்டு முரண்பாடுகளைத் தோற்றுவிக்க இடமளிக்கப் போவதில்லையென்பதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியான நிலைப்பாட்டில் இருக்கின்றார்.

கண்டிக்கு விஜயம் செய்திருந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு அஸ்கிரிய மற்றும் மல்வத்துபீட மகாநாயக்கர்களைச் சந்தித்து இந்த விடயம் குறித்துக் கலந்துரையாடியுள்ளார். பௌத்தத்துக்கு முன்னுரிமை வழங்கும் வகையில் தான் அனைத்துவிதமான செயற்பாடுகளை முன்னெடுத்திருந்தாலும், எந்தவொரு மதப்பிரிவினருக்கும் அநீதி இழைக்கும் வகையில் செயற்படுவதற்கு இடமளிக்கப்படாது என்ற உறுதிமொழியை வழங்கியுள்ளார் ஜனாதிபதி.

'வடக்கில் முரண்பாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். வெளிப்பிரதேசங்களிலிருந்து எவரையும் அழைத்துவர வேண்டாம் என, அப்பகுதி சிங்கள, முஸ்லிம், தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் அப்பகுதி மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்துள்ள நிலையில், வெளியிலிருந்து வந்த குழுவினரே முரண்பாடுகளை தோற்றுவித்துள்ளனர். அது தொடர்பில் வவுனியா மகாநாயக்க தேரரையும் தெளிவுபடுத்தியுள்ளோம்.

அதனால் நாம் வெளியிலிருந்து அந்தப் பிரதேசத்திற்கு செல்வதற்கு எவரையும் அனுமதிப்பதில்லை. அது தொடர்பிலான விடயங்களைக் கண்டறியுமாறு தொல்பொருளியல் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தொல்பொருள் சட்டத்திற்கு அமைய செயற்படுமாறும் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோல் மகாவிகாரையில் அகழ்வுகளை மேற்கொள்ளவும் எதிர்பார்த்துள்ளோம். வடக்கில் இடம்பெறும் அகழ்வுகளின் அறிக்கைகளை பெற்றுக் கொண்டு அந்தப் பணிகளை முன்னெடுப்போம்' என ஜனாதிபதி அங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

பௌத்த தலங்களை பாதுகாக்கும் அதேநேரம் முதலில் தொல்பொருளியல் ஆய்வுகளை மேற்கொண்டு அப்பகுதிகளில் மற்றைய மதம் சார்ந்த பிரச்சினைகள் இருக்குமாயின் அதுபற்றி ஆராயவும் தயாராகவுள்ளோம். இருப்பினும் வெளியிலிருந்து வருவோர் அப்பகுதிகளுக்குள் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கத் தாம் இடமளிக்கப் போவதில்லையென்பதை ஜனாதிபதி திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

## ஆக்கபூர்வமான அவசர நடவடிக்கையில் இறங்கிய ஜனாதிபதி ரணில்!

அத்துடன், இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படாதிருப்பதற்கு மாகாண மதத் தலைவர்கள் குழுவொன்றை நியமிக்கவிருப்பதாவும் ஜனாதிபதி முன்மொழிந்துள்ளார். அவ்வாறானதொரு குழுவொன்று நியமிக்கப்படும் பட்சத்தில் விடயங்கள் அந்தக் குழுவின் முன்னிலையில் பேசித் தீர்க்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

ஜனாதிபதி கூறியதைப் போன்று வெளிப்பகுதிகளிலிருந்து சென்றவர்களே நிலைமைகளை குழப்பி விடுகின்றனர். கடந்த காலத்தில் இதுபோன்ற விடயங்களில் தீவிரமாக செயற்பட்ட தென்பகுதி அரசியல்வாதிகள் சிலர் மக்களைத் தூண்டிவிடப் பார்க்கின்றனர். அதேபோல வடபகுதியில் உள்ள அடிப்படைவாத சிந்தனையுள்ள ஒருசில அரசியல்வாதிகளும் இவ்விடயத்தில் தீவிரமாகவிருக்கின்றனர்.

## சிக்கல்களுக்கு தீர்வு காண மதத்தலைவர்கள் அடங்கிய குழு!

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் நாட்டில் காணப்பட்ட பல்வேறு பிரச்சினைகள் படிப்படியாக தீர்க்கப்பட்டுவரும் நிலையில், தமக்கான அரசியல் பிடியை இழந்த அரசியல் தரப்புக்கள் இதுபோன்ற சிறு சிறு விடயங்களைக் கையில் எடுத்துக் கொண்டு மேலேறி வந்துவிடலாம் என்று பார்க்கின்றன.

இவ்வாறான தரப்பினர் முன்னெடுக்கும் மதவாத அரசியல் இனியும் மக்கள் மத்தியில் எந்தளவுக்குச் சென்றடையும் என்பது கேள்விக்குறியே. இதுவரை காலமும் மதம், இனம் என வேறுபட்டு ஒவ்வொரு விடயங்களையும் மதவாத, இனவாத கண்ணாடிகளால் பார்த்து நாட்டுக்கு ஏற்பட்ட பின்னடைவிலிருந்து இன்னமும் பாடம் கற்காவிட்டால் நாட்டின் எதிர்காலம் நிச்சயமாகக் கேள்விக்குறியாகவே மாறிவிடும்.

குருந்தூர் மலை விவகாரத்தில் தென்பகுதியிலும், வடபகுதியிலும் உள்ள ஒரு சில தரப்பினரே பிரச்சினையைப் பெரிதுபடுத்துவதாகப் பாதுகாப்பு அமைச்சுக்குத் தகவல்கள் கிடைத்திருப்பதாகவும், இது விடயத்தில் கவனம் செலுத்தப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் பாராளுமன்றத்தில் கூறியிருந்தார். தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தும் ஒருசில நபர்கள் அடையாளம் காணப்பட்டு அவர்கள் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனவே, மதம் மற்றும் இனத்தை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் குழப்பங்கள் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் ஜனாதிபதி மாத்திரமன்றி அவர் தலைமையிலான அரசாங்கம் மிக மிக உறுதியாக இருப்பது இதன்மூலம் தெளிவாகிறது. இருந்தபோதும் கடந்த காலங்களில் இருந்த ஒரு சில அரசாங்கங்கள் தமது இருப்புக்காக மதவாத செயற்பாடுகளைத் தூண்டிவிட்டிருந்ததும் நமக்கு நினைவிருக்கின்றது. எனினும், இந்த அரசாங்கம் அவ்வாறான அரசியல் உத்திகளைப் பின்பற்றாது பிரச்சினைகளைத் தீர்ப்பதன் ஊடாக நாட்டில் நிரந்தர சமாதானத்தை உறுதிப்படுத்தவும், அதன் ஊடாக நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பின்னடைவைச் சீர் செய்வதிலும் அதிக நாட்டம் காட்டி வருகிறது.

பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து மீட்சி பெறுவதற்கு சர்வதேச நாணய நிதியம் போன்ற சர்வதேச அமைப்புக்களின் உதவிகளை நாடியிருக்கும் பின்னணியில் மத, இன அடிப்படையிலான குழப்பங்களைத் தூண்டி நாட்டின் அமைதியைக் குலைப்பதற்கு இடமளிக்கப்படக் கூடாது. அவ்வாறு ஏற்படக்கூடிய குழப்பங்கள் நாட்டுக்குக் கிடைக்கக் கூடிய உதவிகளைத் தடுப்பதாவே அமைந்துவிடும். எனவே, குறுகிய அரசியல் சிந்தனையுடன் செயற்படும் தரப்பினர் நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்து செயற்படுவதே சாலச் சிறந்ததாகும்.

**பி.ஹர்ஷன்...**

---

# நிலவில் இனிமேல் ஆரம்பமாக போகிறது வல்லரசுகளின் போர்!

**நிலவில் சந்திரயான்_3 ஐத் தரையிறக்கியதுடன் மாத்திரம் இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ ஓய்ந்து விடவில்லை. நிலவில் தரையிறங்கிய வெற்றிப் பெருமையில் வெறுமனே மூழ்கிவிடவுமில்லை. விண்வெளிக் கிரகங்களின் ஆய்வில் அடுத்த கட்டத்துக்கு தாவப் போகின்றது இஸ்ரோ.**



## செய்மதி ஏவும் தொழில்நுட்பத்தில் பொருளாதாரத்தை அதிகம் ஈட்டும் நாடாக மாறுகிறது இந்தியா!



நிலவின் மேற்பரப்பில் மெதுவாக தரையிறங்குவது மிகவும் கடினமானது. அதுவும் நிலவின் தென்துருவத்தில் தரையிறங்குவது மிகக்கடினம். ரஷ்யாவின் லூனா 25 சமீபத்தில் தரையிறங்கிய போது விபத்தில் சிக்கியது. ஆனால் அத்தனை நாடுகளையும் தாண்டி இந்தியா இந்த சாதனையை எட்டியுள்ளது.

எதிர்கால விண்வெளிப் பயணங்களுக்கு முக்கிய திறவுகோல் என நம்பப்படும், ஆராயப்படாத நிலவின் தென்துருவப் பகுதியில் தரையிறங்கிய முதல் நாடு இந்தியாவாகும்.

"இந்தத் திட்டம் வெற்றியடைந்ததைக் கண்டு நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். இது எளிதான காரியம் அல்ல" என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) தலைவர் எஸ். சோம்நாத் கூறியிருந்தார்.

அநேகமாக, எதிர்காலத்தில் இஸ்ரோவின் இலக்கு மனித விண்வெளி பயணங்களை மேற்கொள்வதாக இருக்கும் என்று நம்பப்படுகின்றது. இது இஸ்ரோவின் திறன்களில் தீவிரமான முன்னேற்றத்தைக் குறிக்கும்.

சந்திரயான் 3 ஐ வெற்றிகரமாக நிலவில் இறக்கியதன் மூலம் உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறது இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம். ஆனால், இந்தப் பயணத்தின் தொடக்கப்புள்ளி 60 ஆண்டுகளுக்கு முன்பு வைக்கப்பட்டது. அதற்குப் பிறகு பல சவால்களை எதிர்கொண்டு நிலவைத் தொட்டிருக்கிறது இஸ்ரோ. இது ஒரு மகத்தான சாகசத்தின் சுருக்கமான வரலாறு.

சந்திரயான்_ 3 இற்குப் பிறகு சூரியனை ஆராய்வதற்கான திட்டம், விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும் திட்டம் எனத் தீவிரமாக செயல்பட்டு வருகிறது இஸ்ரோ. இதற்கிடையில் இந்தியா சிறிய செயற்கைக் கோள் ஏவு வாகனங்களையும் தயாரித்து வருகிறது. இவற்றை ஏவுவதற்கு தமிழ்நாட்டில் உள்ள குலசேகரப்பட்டினத்தில் ஒரு ஏவுதளம் உருவாக்கப்பட்டு வருகிறது. இடைப்பட்ட காலத்தில் ஆய்வு, கண்காணிப்பு, தொலைத்தொடர்பு உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களுக்காக நூற்றுக்கணக்கான செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவிவிட்டது இஸ்ரோ.

தற்போது உலகின் மிக முக்கியமான விண்வெளி ஏஜென்சிகளில் இஸ்ரோவும் ஒன்று.

இவ்விடயம் இவ்வாறிருக்க, விக்ரம் லேண்டரிலிருந்து இறங்கிய ரோவர் பிரக்யான் நிலவின் நிலப்பரப்பில் தனது பணியைத் தொடங்கியுள்ளது. ரோவர் பிரக்யான் ஒரு செக்கனில் ஒரு செ.மீ மட்டுமே நகரும். எனினும், நிலவில் இந்த சிறு அடி, உலக அரசியலிலும் நிலவு பொருளாதாரத்திலும் எவ்வளவு முக்கியம் என்பது விஞ்ஞானிகளுக்குத் தெரியும்.

"இந்தியா சந்திரயான் 3 ஐ வெற்றிகரமாக நிலாவில் தரையிறக்கியதால், உலக அரசியலில் மிகப்பெரிய அடியை முன்னெடுத்து வைத்துள்ளது" என்று இண்டர்நேஷனல் கரண்ட் எஃபயர்ஸ் ஃபாரின் ஃபாலிசி கூறுகிறது.

இந்தியா, ரஷ்யா, சீனா, அமெரிக்கா மட்டுமல்ல... எல்லா நாடுகளுமே நிலவின் தென்துருவத்தில் கவனம் செலுத்தி வருகின்றன.

இந்த வெற்றியால், இந்திய இளைஞர்கள் விண்வெளித்துறைக்கு அதிகம் ஈர்க்கப்படுவர். தக்ஷஷீலா நிறுவனத்தில் விண்வெளி மற்றும் உலக அரசியலில் ஆய்வு செய்து வரும் ஆதித்ய ராமநாதன், இதை ஒரு பணியாக இளைஞர்கள் எடுத்துக் கொள்ள முடியும் என்று நம்புகிறார்.

நிலவில் மதிப்புமிக்க கனிமங்கள் மற்றும் அதிக அளவிலான எரிபொருள் வளங்கள் இருக்கலாம் எனக் கருதப்படும் பின்னணியில், பல நாடுகள் நிலவில் ஆய்வு செய்ய தயாராகக் கூடும். இந்நிலையில், இந்தியாவின் சந்திரயான்_ 3 நிலவை நோக்கிய சர்வதேசப் போட்டியில் முன்னோடியாகியுள்ளது.

நிலைமை இவ்வாறிருக்கையில் சீனா நிலவுக்குச் சென்றால், அந்தப் பகுதி தனக்குச் சொந்தம் என்று அந்நாடு உரிமை கொண்டாடும் என அமெரிக்கா கவலைப்படுகிறது. நிலவைச் சென்றடைவதில், அறுபது ஆண்டுகளாக அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் போட்டி நிலவி வருகிறது, தற்போது புதிய போட்டி தொடங்கியுள்ளது.

நிலவில் தண்ணீர் மற்றும் ஐஸ் படிவம் இருப்பதற்கான தடயங்கள் இருப்பதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளதால், அனைவரது கவனமும் தற்போது தென்துருவத்தின் மீதே திரும்பியுள்ளது.

எதிர்காலத்தில் நிலவில் இடம்பிடித்துக் கொள்வதற்காக வல்லரசு நாடுகள் முட்டிமோதிக் கொண்டு யுத்தத்தில் ஈடுபட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ரஷ்யா தனது நிலவுக்கான பயணத்தை 47 ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் தொடங்கியது. எனினும், தென்துருவத்தை நோக்கிய 'லூனா25' என்ற திட்டம் ஓகஸ்ட் 20 ஆம் திகதி தோல்வியடைந்து விட்டது. சரியாக மூன்று நாட்கள் கழித்து, சந்திரயான் 3 நிலவில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

இந்தியா எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் நிலவின் தென்துருவத்துக்கு விண்வெளி வீரர்களை அனுப்பத் திட்டமிட்டுள்ளது. அதற்கான பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டு விட்டன.

2030 இற்குள் சீனா ஆளில்லா விண்கலத்தையும், பின்பு மனிதர்களையும் நிலவின் தென்துருவத்துக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளது. இவர்களைத் தவிர இஸ்ரேல், ஜப்பான், ஐக்கிய அரபு அமீரகம் போன்ற நாடுகளும் நிலவுக்குச் செல்ல விரும்புகின்றன. ஆனால் அவர்களது முயற்சிகள் இதுவரை வெற்றியடையவில்லை.

நிலவின் தென்துருவத்தில் உண்மையிலேயே நீர் இருந்தால், அது ரொக்கெட்டுகளுக்கு எரிபொருளாகப் பயன்படக் கூடும். அதனால்தான் தென்துருவத்தின் மீது உலக நாடுகளின் கவனம் திரும்பியுள்ளது.

நிலவில் நீர் இருப்பதற்கான தடயங்கள் கண்டறியப்பட்டால், அங்கு நிரந்த நிலையம் அமைக்க முடியும் என்று விஞ்ஞானிகள் நம்புகின்றனர். அல்லது, செவ்வாய்க் கிரகத்தில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள நிலவில் விண்வெளி நிலையம் அமைக்க முடியும். ஆனால் சீனா முந்திக் கொண்டால் அந்நாடு நிலவுக்கு சொந்தம் கொண்டாடும் என்பது உலகின் கவலையாக இருந்தது.

2020 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் அமெரிக்கா கையெழுத்திட்டுள்ளது. பல நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. இதன் படி, விண்வெளி வளங்களை சமமாக பகிர்ந்து கொள்வது, விண்வெளி ஆய்வின் போது கடைப்பிடிக்க வேண்டிய சில நடைமுறைகள் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்கா சென்றிருந்த போது, இந்தியாவும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. ஆனால், விண்வெளி ஆய்வில் பெரும் சக்திகளான சீனாவும் ரஷ்யாவும் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை.

## பூமியில் தொடரும் எல்லை யுத்தத்தைப் போன்று, எதிர்காலத்தில் நிலவிலும் இடத்தைக் கைப்பற்றும் போட்டாபோட்டிகள்!



சந்திரயான் 3 இன் வெற்றியானது நிலவை நோக்கிய திட்டங்களுக்கான போட்டியை அதிகரித்துள்ளது என நிபுணர்கள் கருதுகின்றனர். இந்தப் போட்டியில் இந்தியா முன்னிலையில் இருப்பது இந்தியாவுக்குச் சாதகமானது என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

நிலவு பொருளாதாரம் என்றால் என்னவென்று பலருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

'நிலவில் உள்ள வளங்களை நிலவிலும் பூமியிலும் பயன்படுத்துவது, மேலும் நிலவின் சுற்றுவட்டப்பாதையிலும் பயன்படுத்துவது' நிலவு பொருளாதாரம் எனப்படும்.

உதாரணமாக நிலவில் ஹீலியம் அதிகம் இருந்தால், அதுதான் நிலவில் கிடைக்கும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் ஆதாரமாகும். நிலவு பொருளாதாரத்தில் ஹீலியம் முக்கியமானதாகும்.

எதிர்காலத்தில் நிலவில் எந்தப் பகுதி எந்த நாட்டுக்குச் சொந்தம் என்ற சண்டைகளும் நாடுகளுக்கு இடையே உருவாகலாம் என்று கூறுகிறார்கள் விஞ்ஞானிகள்.

அப்படி என்றால், இந்தியா பெருமையுடன் தாம்தான் முதலில் தென்துருவத்துக்கு சென்றது என தனது இடத்தை உரிமை கோருவதற்கு இடமுண்டு என நிபுணர்கள் கருதுகின்றனர்.

இன்று உலக நாடுகள் வியக்கும் விதத்தில் சந்திரன், செவ்வாய் என்று வேற்றுக் கிரகங்களுக்கு சந்திரயான், மங்கள்யான் போன்ற விண்கலங்களை அனுப்பும் அளவுக்கு விண்வெளித்துறையில் இந்தியா அபாரமாக வளர்ச்சி அடைந்துள்ளது.

விண்வெளி ஆய்வு என்பது அதிக பணம் செலவழிக்க வேண்டிய துறையாக இருந்து வருகிறது. அத்துடன் பிறதுறைகளைப் போல, தேவையான பணத்தை முதலீடு செய்து இலாபம் ஈட்டுவதைப் போன்று விண்வெளி ஆய்வில் வெற்றி பெறுவது அவ்வளவு எளிதான விஷயம் அல்ல.

விண்வெளித்துறையில் வெற்றி பெற பெருமளவு நிதி மற்றும் நிபுணத்துவம் வாய்ந்த மனிதவளமும் தேவை. எல்லாவற்றையும் மீறி வெற்றி பெற முடியும் என்றும் சொல்ல முடியாது.

ஏனெனில் விண்வெளிப் பயணங்களின் ஆரம்பக் கட்டத்தில் வெற்றி வீதம் மிகக் குறைவு. ஆரம்பக் கட்டத்தில் இந்த ஆய்வில் ஒரு நாடு வெற்றி பெறுவது அவ்வளவு எளிதான விஷயமல்ல.

சோதனைகள் தோல்வியடைந்தால் முதலீடு செய்த பணம் அத்தனையும் வீணாகிவிடும். இதன் காரணமாகத்தான் ஏழை மற்றும் வளரும் நாடுகளால் ஆயிரக்கணக்கான கோடிகளை செலவழித்து விண்வெளி ஆய்வுகளை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது.

பல்வேறு கடினமான முயற்சிகளுக்குப் பிறகு விண்வெளி சோதனைகள் மேற்கொள்ளப்பட்டாலும், அதன் பலன்களை அறுவடை செய்ய நீண்ட காலம் காத்திருக்க வேண்டி வரும். இதன் காரணமாகவும் பல நாடுகள் இந்தத் துறையில் பல கோடி ரூபா செலவு செய்யத் தயாராக இல்லை.

இவற்றைத் தவிர, புவிசார் அரசியலும் விண்வெளி சோதனைகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

உள்நாட்டுப் போர் மற்றும் அரசியல் ஸ்திரமற்ற தன்மை நிலவும் நாடுகளால் விண்வெளி சோதனைகளுக்கு நிதி ஒதுக்க முடியாது. இத்தகைய நாடுகள் செயற்கைக்கோள் சேவையைப் பெற பிறநாடுகளைச் சார்ந்திருக்க வேண்டும்.

செயற்கைக் கோள்களை ஏவுவதற்கான நிதி, நிபுணர்கள் மற்றும் தொழில்நுட்பம் இருந்தாலும் சில நாடுகளால் இவற்றை விண்ணில் செலுத்த இயலாத நிலையும் உள்ளது.

நான்குபுறமும் நிலத்தால் சூழப்பட்ட நாடுகள் அதாவது கடற்கரை இல்லாத நாடுகள் மற்றும் பிற நாடுகளின் எல்லையில் அமைந்துள்ள நாடுகளால் ரொக்கெட்டுகளை ஏவ முடியாது. எனவே கடல் மற்றும் நீண்ட கடற்கரை கொண்ட நாடுகளில் இருந்து மட்டுமே செயற்கைக்கோளை சுமந்து செல்லும் ரொக்கெட்டுகளை விண்ணில் செலுத்த முடியும்.

விண்வெளி ஆய்வுகளை குறைந்த செலவு மற்றும் அதிக வெற்றி வீதத்துடன் மேற்கொள்ளும் நாடுகளையே, தங்களது செயற்கைக்கோள்களை அனுப்ப பிற நாடுகள் அணுகும். இந்த வகையில், பிறநாடுகளின் விண்வெளி ஆய்வு நிறுவனங்களுடன் ஒப்பிடும்போது, குறைந்த செலவில் அதிக வெற்றிகளை இஸ்ரோ பதிவு செய்துள்ளது.

இஸ்ரோவின் அதிகாரபூர்வ தகவல்களின்படி இதுவரை 34 நாடுகளைச் சேர்ந்த 431 வெளிநாட்டு செயற்கைக்கோள்களை, 124 விண்கலங்களில் இந்தியா விண்ணில் செலுத்தியுள்ளது.

அல்ஜீரியா ஸ்லோவாக்கியா, லிதுவேனியா போன்ற சிறிய நாடுகளும், அமெரிக்கா, ஜெர்மனி, கனடா, பிரான்ஸ், ஜப்பான், பிரிட்டன் போன்ற பெரிய நாடுகளும் இஸ்ரோவின் சேவையைப் பயன்படுத்தி வருகின்றன.

இதுபோன்ற வணிகரீதியான நோக்கங்களைத் தாண்டி, செயற்கைக் கோள்களை செலுத்த, சில நேரங்களில் ஏழை நாடுகளுக்கு இஸ்ரோ இலவச சேவையும் அளித்து வருகிறது.

நேபாளம் மற்றும் பூட்டான் நாடுகளுக்கு விண்வெளித் துறையில் ஏற்கெனவே இலவச சேவைகளை இந்தியா வழங்கியுள்ளது.

LVM போன்ற பெரிய ரொக்கெட்டுகளை மிகக்குறைந்த அளவில் தயாரித்து வருவதாகவும், இவற்றின் உற்பத்தியை தொழில்ரீதியாக பெரிய அளவில் கொண்டு செல்வதற்கான அவசியம் இருக்கிறது என்றும் இஸ்ரோ தலைவர் சோம்நாத் கூறியுள்ளார்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் இந்தத் திசை நோக்கி இஸ்ரோ முன்னேறும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். எனவே உலகிலேயே இன்று குறைந்த செலவில் விண்வெளி ஆய்வுகளை மேற்கொள்ளும் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

இவை அனைத்தும், இந்திய விண்வெளித்துறைக்கு பெரும் முதலீட்டையும், வருவாயையும் எதிர்காலத்தில் பெற்றுத் தரும். இதன் பயனாக இந்தத்துறையில் அமெரிக்கா, ரஷ்யா, சீனா மற்றும் ஜப்பான் நாடுகளுக்குப் போட்டியாக இந்தியா மாறுவதற்கான வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

**எஸ்.சாரங்கன்...**

## வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

# முதலில் நடைபெற போவது பாராளுமன்றத் தேர்தலா, ஜனாதிபதித் தேர்தலா?

## உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளிவராத போதிலும், அரசியல் கட்சிகள் அத்தனையும் பரபரப்புடன் தேர்தலுக்கு ஆயத்தமாகின்றன!

**பொருளாதார நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கான பிரயத்தனங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த ஆண்டாக 2023 ஆம் ஆண்டு காணப்படும் நிலையில், இந்த வருடம் எந்தவொரு தேர்தலும் நடத்தப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் தென்படவில்லை.**

இருந்தபோதும், நாடு அடுத்த வருடம் இரண்டு பிரதான தேர்தல்களுக்கு முகங்கொடுக்க இருப்பதால், திரைமறைவில் அரசியல் கட்சிகள் அதற்கான தயார்படுத்தல்களில் இறங்கியிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத்துக்கான பொதுத்தேர்தல் ஆகியவற்றைப் பொறுத்தவரை, எந்தத் தேர்தல் முதலில் வரும் என்பதை உறுதிபடக் கூறமுடியாதிருப்பதால் இதனை அடிப்படையாகக் கொண்டுள்ள அரசியல் கட்சிகளுக்குள் சலசலப்பு ஏற்படத் தொடங்கியுள்ளது.

ஜனாதிபதி பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் உள்ளகப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கத் தொடங்கியுள்ளன.

அடுத்த வருடம் நடைபெறக் கூடிய தேர்தலை அடிப்படையாகக் கொண்டு கூட்டணி அமைப்பதற்கான ஆரம்பகட்டப் பேச்சுக்கள் அனைத்துக் கட்சி மட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காகத் தமது கட்சிகளைப் பலப்படுத்தும் பணிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போகும் வேட்பாளர்கள் குறித்தும் அவ்வப்போது செய்திகள் வெளியாகி வருகின்றன.

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என ஐக்கிய தேசியக் கட்சி உறுதிபடக் கூறியுள்ள நிலையில், தேசிய மக்கள் கட்சியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவும் போட்டியிடுவார் என அக்கட்சி திட்டவட்டமாக அறிவித்துள்ளது. இருந்தபோதும் ஏனைய வேட்பாளர்கள் குறித்த எந்தத் தகவல்களும் உத்தியோகபூர்வமாகவோ அல்லது உறுதிபடவோ அறிவிக்கப்படவில்லை.

**வருடாந்த மாநாட்டுக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தயாராகின்ற போதும், கட்சி உறுப்பினர்கள் மத்தியில் முரண்பாடுகள்! தமது கட்சி எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும், எதிர்காலத்தில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான உத்திகள் கையாளப்படும் என்றும் கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவிப்பு**



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என அவருடைய கட்சியைச் சேர்ந்த ஒருசிலர் கூறிவருகின்ற போதும், அது தொடர்பில் எந்த உத்தியோகபூர்வ அறிவிப்பும் இன்னும் வெளியிடப்படவில்லை.

இவ்வாறான பின்னணியில், மக்கள் மத்தியில் தம்மைக் கொண்டு செல்வதற்கான பிரயத்தனங்களில் சில அரசியல் சக்திகள் முயற்சிக்கின்றன. குறிப்பாக விமல் வீரவன்ச, உதய கம்மன்பில போன்றவர்கள் அடிப்படைவாதமான ஏதாவது ஒரு விடயத்தைக் கையில் எடுத்து அதனை வைத்துக் கொண்டு மக்கள் மத்தியில் செல்வதற்கான முனைப்புக்களில் ஈடுபட்டிருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.



இவர்கள் மாத்திரமன்றி வேறுசில தரப்பினரும் மத அடிப்படையிலான விடயத்தைப் பெரிதுபடுத்தி மக்கள் மத்தியில் அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பதாகத் தெரியவருகிறது. குறிப்பாக குருந்தூர்மலை விவகாரம் போன்ற சம்பவங்களை தமக்கான அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவதற்கு முயற்சிப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. இருந்தாலும் கடந்தகாலங்களைப் போன்று மக்கள் இவ்வாறான அரசியல் பிரசாரங்களுக்கு எந்தளவு முக்கியத்துவம் கொடுப்பார்கள் என்பதும் கேள்விக்குறியே.

அதேநேரம், இரண்டு பிரதான கட்சிகளின் வருடாந்த மாநாடுகள் நடைபெறவுள்ளன. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாடு செப்டெம்பர் 03 ஆம் திகதி கொழும்பில் நடைபெறுகிறது. கட்சிக்குள் ஒற்றுமையை நிலைநாட்டும் வகையில் இந்த மாநாடு வெற்றிகரமாக நடத்தப்படும் என அக்கட்சியின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊடகங்களுக்குக் கூறியிருந்தார்.

தமது கட்சி எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாகவும், எதிர்காலத்தில் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான உத்திகள் கையாளப்படும் என்றும் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டிருந்தார்.





இருந்தபோதும் கட்சிக்குள் முரண்பாடு இருப்பது தற்பொழுது தெரியவந்துள்ளது. குறிப்பாக சுதந்திரக் கட்சியின் தற்போதைய பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, தன்னை அந்தப் பொறுப்பிலிருந்து நீக்குவதற்கு மேலிடத்தில் உள்ள ஒருசிலர் முயற்சிக்கின்றனர் என்ற குற்றச்சாட்டைப் பகிரங்கமாக முன்வைத்திருந்தார். வருடாந்த மாநாட்டுக்கு சுதந்திரக் கட்சி தயாராகின்ற போதும், கட்சி உறுப்பினர்கள் மத்தியில் முரண்பாடு காணப்படுவது இதன் மூலம் தெளிவாகிறது.

சுதந்திரக் கட்சியிலிருந்த பெரும்பாலான உறுப்பினர்கள் பிரிந்து சென்றே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியை உருவாக்கியிருந்தனர். இந்தப் பிரிவால் முற்றுமுழுதாக வீழ்ச்சியடையும் நிலைக்கு சுதந்திரக் கட்சி சென்றது. கடந்த தேர்தலில் பொதுஜன பெரமுனவுடன் கூட்டணி அமைத்திருந்தாலும், தேர்தலின் பின்னர் அவர்களுக்கிடையில் சுமுகமான உறவு காணப்படவில்லை.

சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவம் தற்போதைய அரசாங்கத்தில் அங்கம் வகிக்காது எதிர்க்கட்சியில் அமர்வதற்குத் தீர்மானித்தபோதும், சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் சிலர் அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சுப் பதவிகளை ஏற்றனர். இதனால் சுதந்திரக் கட்சிக்குள் மேலும் பிளவு ஏற்பட்டது.

இவ்வாறான பின்னணியில் எதிர்வரும் தேர்தலில் பொதுஜன பெரமுனவுடன் இணையும் எண்ணம் இல்லையென்றும், ஏனைய கட்சிகளுடன் இணைந்து பலமான கூட்டணியை அமைக்கப் போவதாகவும் அக்கட்சி கூறியுள்ளது.

இதுஇவ்வாறிருக்க, பொதுஜன பெரமுன கட்சியும் பல்வேறு பிளவுகளுக்கு முகங்கொடுத்துள்ளது. கடந்த பொதுத்தேர்தலில் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை ஆதரித்து தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த கட்சியாக இருந்தபோதும், அக்கட்சியில் தற்போது பாரிய பிளவுகள் ஏற்பட்டுள்ளன.

குறிப்பாக கடந்த வருடம் இடம்பெற்ற போராட்டங்களின் பின்னர் அக்கட்சி மீது மக்கள் வைத்திருந்த பாரியதொரு நம்பிக்கை இழக்கப்பட்டமையால், கட்சியின் உறுப்பினர்களும் தமது நிலைப்பாடுகளை மாற்றியுள்ளனர். பொதுஜன பெரமுன தனியான கட்சி என்பதைவிட சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களாக இருந்தவர்கள் மற்றும் விமல் வீரவன்ச, கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண போன்றவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளை உள்ளடக்கிய பாரியதொரு கூட்டணியாகவே காணப்பட்டது.

கூட்டணியாகக் காண்பிக்கப்பட்டபோதும் எடுக்கப்படும் தீர்மானம் ராஜபக்ஷக்களின் விருப்பத்துக்கு அமைய எடுக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இதனாலேயே, அந்தக் கட்சியிலிருந்து 40 இற்கும் மேற்பட்டவர்கள் பிரிந்து சென்று சுயாதீனமாகச் செயற்படப் போவதாக அறிவித்து தற்பொழுது செயற்பட்டு வருகின்றனர். குறிப்பாக கடந்த பொதுத்தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாகச் செயற்பட்ட வியத்மக குழுவினர் அதிலிருந்து பிரிந்து சென்றவர்களில் முக்கியமானவர்களாகக் காணப்படுகின்றனர்.

பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து சென்றவர்கள் பிரதானமாக இரண்டு அணியாக இயங்கி வருகின்றனர். விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார உள்ளிட்டவர்களைக் கொண்ட அணியொன்றும் தனியாக இயங்கி வருகிறது. மறுபக்கத்தில் டலஸ் அழகப்பெருமவைத் தலைமையாகக் கொண்ட மற்றுமொரு அணியும் இயங்கி வருகிறது.

அது மாத்திரமன்றி, ஆளும் கட்சியில் உள்ள பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் மத்தியிலும் மாற்றுக்கருத்துக்களைக் கொண்டவர்கள் இருக்கின்றனர். இவர்களில் சிலர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழுமையான ஆதரவைத் தெரிவித்து அவருடன் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். பிறிதொரு தரப்பினர் கட்சியின் தலைமைத்துவத்தின் கட்டளைகளுக்கு இணங்கவும் செயற்பட்டு வருகின்றனர்.

இதனால் எதிர்வரும் தேர்தலில் வொறொரு கட்சியுடன் கூட்டணி அமைத்தாலே அரசியல் இருப்பை உறுதிப்படுத்த முடியும் என்ற நிலை அக்கட்சிக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில், கடந்த பொதுத்தேர்தலில் பாரிய பின்னடைவைச் சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சி தன்னை மீண்டும் பலப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர் என்பதால் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவரை முன்னிலைப்படுத்தி பாரியதொரு கூட்டணியை அமைக்க முடியும் என்ற வியூகத்தை அக்கட்சி வகுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி இம்மாதம் 10 ஆம் திகதி தனது வருடாந்த மாநாட்டை வெற்றிகரமாக நடத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. கொழும்பு 10 இல் பாரியதொரு மாநாட்டை நடத்தவும், இதில் கட்சியின் புதிய யாப்பை நிறைவேற்றுவதற்கும் அக்கட்சி எதிர்பார்த்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அதிகாரத்தை பலப்படுத்தும் அதேவேளையில், அக்கட்சியின் புதிய யாப்பு இரண்டாம் நிலை தலைமைத்துவத்திற்கு வழிவகுக்கும்.

தலைமைத்துவத்திற்கான வாரிசுத் திட்டங்கள் நடைமுறையில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். இது ஒரு தலைமைத்துவ சபை வடிவில் இருக்கும். இவ்வாறு புதிய யாப்பு கொண்டுவரப்பட்டு கட்சி பலப்படுத்தப்படுமாயின் அது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்கே பாதகமானதாக அமையும்.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்திக்குள்ளும் மாற்றுக் கருத்துக்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. அக்கட்சியின் உறுப்பினர்கள் பலர் அதிலிருந்து வெளியேறியுள்ளனர். குறிப்பாக ஹரீன் பெர்னாண்டோ, மனுஷ நாணயக்கார, டயானா கமகே போன்றவர்கள் வெளியேறி அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்களைப் பெற்றுள்ளனர்.

அத்துடன், சம்பிக்க ரணவக்க, குமார வெல்கம போன்ற அதன் பங்காளிக் கட்சிளின் தலைவர்களும் ஏற்கனவே அதிலிருந்து விலகி சுயாதீனமாகச் செயற்படுவதாக அறிவித்து விட்டனர்.

இது போன்ற பின்னணியில், ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் ஏற்பட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த அதாவது ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் உறுப்பினர்கள் பலர் மீண்டும் தமது தாய்க்கட்சியுடன் இணைவதற்கு விருப்பம் தெரிவித்திருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர். இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ரோஹினி கவிரத்ன எம்பியும் கூறியிருந்தார்.

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளுக்குள் பிளவுகள், முரண்பாடுகள் ஏராளம்! எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஐ.தே.கவின் வருடாந்த மாநாட்டில், கட்சியின் யாப்பை புதுப்பித்துக் கொண்டு வெற்றி இலக்கை நோக்கிப் பயணிக்கத் திட்டம்!**

எனவே, எதிர்வரும் ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் புதிய யாப்புக் கொண்டுவரப்பட்டு அக்கட்சி பலமான நிலைக்கு வருமாயின் எதிர்காலத்தில் ஐ.தே.கவும், ஐக்கிய மக்கள் சக்தியும் இணைந்து கூட்டணி அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் உள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் பலர் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அவ்வாறு கூட்டணியொன்று அமையும் பட்சத்தில், தேசிய மக்கள் சக்தியின் எதிர்பார்ப்புக்கள் எந்தளவுக்கு சாத்தியமாகும் என்பது கேள்விக்குறியே. அடுத்த தேர்தல் தமக்கு கணிசமான வாக்குகளை வழங்கும் என கணிப்பீடு செய்திருக்கும் தேசிய மக்கள் சக்தியினர் எந்தளவுக்கு மக்கள் மத்தியில் சென்றுள்ளார்கள் என்பது தெரியவரும். இது போன்ற ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தேர்தலுக்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தாலும், எந்தத் தேர்தலை நாடு முதலில் எதிர்கொள்ளப் போகின்றது என்பது இன்னமும் உறுதியாகத் தெரியவில்லை.



**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவார் என்று அவருடைய கட்சியைச் சேர்ந்த ஒருசிலர் கூறிவருகின்ற போதும், அது தொடர்பில் எந்த உத்தியோகபூர்வ அறிவிப்பும் இன்னும் வெளியிடப்படவில்லை!**

# பலப்படுத்தப்பட வேண்டிய மாகாணசபை ஆட்சி முறை

## இலங்கை என்ற ஒற்றை ஆட்சிக்குள் ஒன்றுபட்ட மக்களின் உச்சபட்ச அதிகாரத் தீர்வும் அதுவே

கடந்த ஆகஸ்ட் மாதம் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 வது திருத்தச் சட்டத்தின் முழுமையான ஏற்பாடுகளையும் அதிகாரரீதியாக மாகாண ஆட்சிமுறைக்கு வழங்க வேண்டும் என்ற அரிசியல் தீர்வு போன்ற ஒரு முன்மொழிவினை முன்வைத்திருந்தார்.

வடக்கு கிழக்கு இணைப்புக்கு அப்பால் 13வது திருத்தத்தில் முன்மொழியப்பட்டுள்ள சகல அதிகாரங்களையும் அதாவது, இதுவரை வழங்கப்படாதுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாண ஆட்சிமுறைக்கு வழங்குவது குறித்து ஜனாதிபதி குறிப்பிட்டதோடு, அதற்காக பாராளுமன்றத்தின் ஒத்துழைப்பினையும் வேண்டி இருந்தார்.



ஜனாதிபதியின் இத்தீர்வு குறித்து அண்மையில் பாராளுமன்றத்தில் தனது கருத்தினைப் பதிவுசெய்துள்ள கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தனின் உரை அவரது அரசியல் முதுர்ச்சியையும் தூரநோக்கான அரசியல் பார்வையையும் கோடிட்டுக் காட்டியது. சந்திரக்காந்தனின் அரசியல் ஆரம்பத்துக்கும் பாராளுமன்றத்தில் அவர் உரையாற்றியதற்குமிடையில் அவரது அரசியல் அடையாளம் அறிவுபூர்வமான முதிர்வினை எட்டி இருப்பதை வியப்புடன் பார்க்க வைத்தது.



கிழக்குத் தமிழர் அரசியலில் ஒரு தலைமுறை மாற்றமாக சமூக விடுதலைக்கும் விடியலுக்குமான புதிய அரசியல் தீர்வாக சந்திரகாந்தனின் தலைமைத்துவம் கருத்தியல்ரீதியான ஓர் அரசியல் அடையாளத்தைப் பெற்றிருக்கிறது.

இயக்க ரீதியான போராட்ட வழிமுறையில் உருவான ஓர் அரசியல் தலைவராக இல்லாமல் வரலாற்று ரீதியான அரசியல் தொடர்ச்சியின் கருத்துநிலையைக் கொண்ட ஒரு தலைவராக சந்திரகாந்தன் தனது அரசியல் கருத்துநிலை பெறுமதியும் பெருமையும் உள்ளதாக தமிழர் அரசியலைத் தலைநிமரச் செய்திருக்கிறது.

இவ்வாறு 13ஆவது அரசியல் சரத்தினை முழுமையாக அரசியல் சீர்திருத்தத்தில் இருப்பது போன்று வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு வழங்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் கருத்தினை முன்வைத்து சந்திரகாந்தன் பாராளுமன்றில் தனது கட்சிசார்ந்தும், தனது சமூகம் சார்ந்தும் எடுக்க வேண்டிய இன்றைய யதார்த்தமான அரசியல் நிலைப்பாட்டை. மிகத் தெளிவாக வெளிச்சமிட்டுக் காட்டினார்.

அவர் குறிப்பிடும் போது,.....

'அரசியல் அதிகாரப் பகிர்வு விடயத்தில் ஜனாதிபதி 13 வது சரத்தினை அரசியல் அமைப்பில் உள்ளது போன்று முழுமையாக அமுலாக்கி கொடுப்போம் என்று உறுதியாகக் கூறியிருந்தார். அதிலே பல முற்போக்கான விடயங்களை அவர் குறிப்பிட்டிருந்தார். தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிரதிநிதி என்றவகையில் இக்கருத்தினை வரவேற்கின்றேன். மிகவிரைவில் இதனை அமுலாக்க வேண்டும் நாங்கள் அதற்கு முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்.

ஏனெனில், எல்லோரும் ஏற்றுக்கொண்டது போன்று 13வது திருத்தத்தை அகற்ற முடியாது என்றால் அதனை நாம் ஆக்கபூர்வமான ஓர் அதிகார மையமாக, மக்களுக்கு சேவை செய்யக் கூடிய ஊழலற்ற மக்களுக்கு தேவையான அபிவிருத்திப் பணிகளைச் செய்யக்கூடிய நிறுவனமாக மாற்ற வேண்டும். பொறுப்பில் இருக்கின்ற நாங்கள் அதனைத் தவிர்த்துவிட முடியாது.

முக்கியமாக உங்களுக்குத் தெரியும் சிங்கள மக்கள் மத்தியிலே ஏதோ வடக்கு கிழக்கு மக்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டால் அவர்கள் பிரிந்துசென்றுவிடுவார்கள் என்ற தோரணையை உருவாக்கி அவர்களை அச்சம் கொள்ளச்செய்கின்ற பேச்சுக்களைப் பேசுகின்றார்கள். உண்மையில் இதனைத் தவிர்த்து சிங்கள மக்களுக்கு நம்பிக்கை கொடுக்கக்கூடிய பேச்சுக்களைப் பேச வேண்டும். இது வடக்கு கிழக்கு மகாணங்களுக்கு மாத்திரமானதல்ல இது இலங்கையில் இருக்கின்ற 9 மாகாணங்களுக்குமான அதிகாரப் பகிர்வு.

முக்கியமாக சிங்களத் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டிய விடயம் ஒன்று இருக்கின்றது. அவர்கள் இந்தப் 13ஆம் அரசியல் திருத்த வரலாற்றை நன்கு பின்நோக்கிப் பார்க்க வேண்டும். பல பேச்சுவார்த்தைகளும் ஒப்பந்தங்களும் தோல்வி அடைந்த நிலையில், 1957ஆம் ஆண்டின் பண்டா – செல்வா ஒப்பந்தம், 1965 இல் டட்லி – செல்வா ஒப்பந்தம் யாவும் கிழித்தெறியப்பட்ட சூழலில் 1976 களில் இளைஞர்கள் தனிநாட்டுக்கான கோரிக்கையுடன் போராட்ட வடிவத்தினை முன்னெடுத்தனர். தனிநாட்டைத் தவிர வேறு வழி இல்லை என்ற மையப்புள்ளியில்தான் அது இருந்தது.

அதில் தமிழ் ஈழத்தைக் கேட்டுப் போராடிய பல போராட்டக் குழுக்களின் தலைவர்கள் இங்கு இருக்கின்றனர். நானும் ஒரு விடுதலைப் போராளியாக இருந்து பின் அதிலிருந்து விடுபட்டு நம்பிக்கை இழந்து தமிழீழக் கனவைக் கைவிட்டு இனி சாத்தியமான விடயங்களை, மாகாணசபைகளைத்தான் நாங்கள் பாதுகாக்க வேண்டும் இலங்கையில் ஒற்றுமையாக வாழக் கூடிய சூழலை உருவாக்க வேண்டும் என்பதற்காக, 2004 இல் விடுதலைப் புலிகள் இயக்கத்திலிருந்து வெளியாகி 2008 ஆம் ஆண்டு கிழக்கு மாகாண சபையைப் பொறுப்பேற்று 20 வருடங்களாக இயங்காத மாகாணசபையை நாங்கள் இயக்குவதற்கு மிகப் பெரிய பாடுபட்டோம்.

மாகாண சபைகள் ஆரம்பிக்கப்பட்டு 36 வருடங்கள் கடந்து விட்டன. யுத்தம் முடிவுக்கு வந்து 14 வருடங்கள் முடிந்த நிலையிலும் குறிப்பாக 2017ற்கு பின்னர் படிப்படியாக மாகாண சபை ஆட்சி முறை இயங்காமல் இருக்கின்றது. எனவே இந்தச் சூழலை சிங்கள மக்களின் தலைவர்கள் வடகிழக்கிலுள்ள தலைவர்கள் நியாயமாக விளங்கிக்கொண்டு, இந்த மாகாண சபை முறைமையினுடைய திருத்தங்களை உடனடியாகச் செய்து, மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்குரிய ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

(17ஆம் பக்கதொடர்)



**நவாஸ் சௌபி**

## தர்மபுர ஆதீனத்துடன் சிவாச்சாரியார்கள் சந்திப்பு



திருக்கைலாய பரம்பரை தருமையா தினம் 27ஆவது குரு மகா சன்னிதானம் திருமுறைகண்ட குருமணிகள் ஸ்ரீலஸ்ரீ கயிலை மாசிலா மணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரியார் சுவாமிகளுடனான சந்திப்பினை இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியின் இந்து மத விவகார இணைப்பாளர் கலாநிதி சிவ ஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா மற்றும் கொழும்பு அம்பிகா ஜோதிட நிலைய இயக்குனர் எஸ்.சிவனேசன் குருக்கள் ஆகியோர் ஏற்படுத்தியிருந்தனர்.

இந்த சந்திப்பின் போது ஆதீனங்களின் செயல்பாடுகள் இலங்கையில் மேலும் வலுப்பெற நல்ல நடவடிக்கைகளை தர்மபுர ஆதீனம் மேற்கொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்து உரையாடினர். இது தர்மபுரம் கலை கல்லூரியில் எடுக்கப்பட்ட படம்.

## ஜனாஸா தொழுகையும் விசேட பிரார்த்தனையும்



(ஏறாவூர் நிருபர் நாஸர்)

காலஞ்சென்ற முன்னாள் உயர்கல்விப் பிரதியமைச்சர் மயோன் முஸ்தபாவுக்காக (மறைவான) ஜனாஸா தொழுகை மற்றும் விசேட பிரார்த்தனையும் சாய்ந்தமருது மற்றும் கல்முனைக்குடி ஆகிய பிரதேசங்களிலுள்ள பெரிய பள்ளிவாசல்களில் நடைபெற்றன.

நூற்றுக்கணக்கான பொதுமக்கள், கல்விமான்கள், உள்ளூர் அரசியல் பிரமுகர்கள் மற்றும் பிரதேச முக்கியஸ்தர்களும் இந்நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

மயோன் முஸ்தபாவின் புதல்வர் றிஸ்லி முஸ்தபா மற்றும் குடும்ப உறவினர்களும் இந்நிகழ்வுகளில் கலந்துகொண்டனர். சாய்ந்தமருது பள்ளிவாசல் நிருவாகத்துடன் வர்த்தக சங்கம் இணைந்து இந்த ஏற்பாட்டினைச் செய்திருந்தது.

சாய்ந்தமருது பள்ளிவாயலில் நடைபெற்ற பிரார்த்தனையின் போது பொதுமக்கள் மனமுருகி கண்ணீர்விட்டு அழுதனர். குறிப்பாக மயோன் முஸ்தபா அரசியல்வாதியாகவும் தனிப்பட்ட ரீதியிலும் பொதுமக்களுக்கு ஆற்றியுள்ள பணிகள் தொடர்பாக பிரசங்கம் செய்யப்பட்டது.

இதையடுத்து பொதுமக்கள் மயோன் முஸ்தபாவின் குடும்ப உறவினர்களிடம் கைலாகுகொடுத்து அனுதாபம் தெரிவித்தனர்.

இதேவேளை கல்முனைக்குடி பெரிய பள்ளிவாசலிலும் ஜனாஸா தொழுகையும் பிரார்த்தனையும் நடாத்தப்பட்டன.

# நம்மை அறியாமலே நமக்குள் இனவாதம்

## இலங்கையின் இனப்பிரச்சினை தீராததற்கு அதுவே காரணம்

“இலங்கை அரசியல் இனவாதத்திலிருந்தும் இன அடையாளத்திலிருந்தும் மீளாதா? இனப்பிரச்சினைக்கு முடிவு வராதா? தீர்வு கிடைக்காதா? இனவெறிக் கூச்சல்கள் அடங்காதா” என்று புலம்பெயர் நாடொன்றிலிருந்து வந்த ஒரு இளைஞர் சில நாட்களுக்கு முன்பு கேட்டார்.

அவருடைய கண்களில் பெரிய ஏக்கம் நிறைந்திருந்தது. அவர் காண விரும்புவது வேறொரு இலங்கையை. வேறொரு அரசியற் களத்தையும் அரசியல் பண்பாட்டையும். இன சமத்துவமும் பல்லினத்தன்மைக்குரிய இடமும் ஐக்கியமும் அமைதியும் தேசத்தின் மீதான அக்கறையும் கொண்ட சூழலை அவர் விரும்புகிறார் என்பதை அவருடன் தொடர்ந்த உரையாடலின்போது உணர்ந்தேன்.

“உலகம் எப்படி மாறிக் கொண்டுள்ளது. யாரென்றே தெரியாத மனிதர்களுடன் நெருக்கமாகி உறவாகிறோம். நமக்கு முற்றிலும் புதிய தேசங்களில் யாரென்றே தெரியாத நிலையில் போய் வேரூன்றி வாழ்கின்றோம். எந்த உத்தரவாதத்தில் அங்கெல்லாம் போகிறோம்! அங்கே சக மனிதருக்கான இடமும் வாழ்வதற்கான உத்தரவாதமும் கிடைக்கும் என்பதால்தானே! அது ஏன் எங்களுடைய நாட்டில் (நாம் பிறந்த மண்ணில்) மட்டும் இல்லாமல் போகிறது? இந்த அரசியல்வாதிகள் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்கிறார்களே. அங்கே போய் எதைப் பார்க்கிறார்கள்? எதைப்படிக்கிறார்கள்? அங்கெல்லாம் இன, மத, சாதி(?) நிற, மொழி வேறுபாடுகளைக் கடந்து மக்கள் மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள். இதைப் பார்க்கும்போது தங்களை நினைத்து இவர்கள் வெட்கப்படுவதில்லையா? ஏன் நம்முடைய தலைவர்கள் நாடு நாடாகச் சுற்றுப் பயணம் போய் வருகிறார்களே! அந்த நாடுகளைப் பார்த்து கொஞ்சமாவது கற்றுக்கொள்ள வேண்டாமா? அங்கே பேதங்களுக்கும் வேறுபாடுகளுக்கும் இடமிருப்பதில்லை. சட்டமும் அரசாட்சியும் ஒன்றாகவே இருக்கின்றன என்பதையாவது புரிந்து கொள்ளமுடியாமல் ஏனிருக்கிறார்கள்? என்று சற்று உரத்த தொனியில் ஆக்ரோஷமாகக் கேட்டார்.

அவருடைய கேள்வி நியாயமானது. இதே கேள்விகள் என்னிடத்திலும் எழுந்திருக்கின்றன. இன்னும் பலரிடத்திலும் இவைபோலப் பல கேள்விகள் இருக்கலாம். ஆனால் இந்தக் கேள்விகளை நாம், நம் நம்முடைய அரசியல்வாதிகளிடமும் தலைவர்களிடமும் கேட்க வேண்டும். நம்முடைய ஊடகங்களிடமும் ஊடகவியலாளர்களிடத்திலும் கேட்க வேண்டும். மாற்றாளர்கள் விலக்கு.

மாற்றாளர்கள் விலக்கு என்பது ஏனென்றால் அவர்கள் இனவாதத்துக்கும் இங்கே நிலவுகின்ற அரசியற் போக்குக்கும் எதிராக – மாறாகச் சிந்திப்பவர்கள். அவர்கள் யதார்த்தத்தை உணர்ந்து, அதன்படியே அரசியலை மேற்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டைக் கொண்டவர்கள். ஆனால், அவர்களுடைய கருத்தையும் நிலைப்பாட்டையும் பெருந்திரள் சமூகமும் அதைப் பிரதிநிதித்துவம் செய்யும் அரசியல் தரப்புகளும் ஏற்றுக் கொள்வதில்லை.

ஆகவே அவர்கள் இதில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள். ஆனால், ஏனைய பெருந்திரளாளர்கள் இதற்குப் பதில் அளிக்க வேண்டும். பொறுப்புச்சொல்லவும் பொறுப்பு ஏற்கவும் வேண்டும். அவர்கள் அனைவரும் ஆளையாள் குற்றம் சாட்டிக் கொண்டு ஏட்டிக்குப் போட்டியாக இனவாதத்தை வளர்த்துக்கொண்டிருப்பவர்கள். இனவாதம் அழியக் கூடாது என்று செயற்பட்டுக் கொண்டிருப்பவர்கள். தவறு, பிழை, குற்றம் என்றெல்லாம் தெரிந்து கொண்டே அதை எந்தக் குற்றவுணர்ச்சியும் இல்லாமற் செய்து கொண்டிருப்பவர்கள். மக்களிலும் பெரும்பாலானோர் அப்படித்தான் செயற்படுகிறார்கள். தவறான – பொருத்தமற்ற அரசியல் கட்சிகள், அரசியல்வாதிகள், அரசியற் தலைவர்கள் என்று நன்றாகத் தெரிந்து கொண்டே அதற்கு ஆதரவளிப்பவர்கள். கட்சி அபிமானம், தலைமை மீதான பிடிமானம், இனமானம் போன்ற காரணங்கள் இவர்களுடைய அறிவுக் கண்ணைக் குருடாக்கி விடுகின்றன.

ஆனால், அந்த இளைஞர் கேட்கும் கேள்விகளும் அவருடைய மனதிலே எழுகின்ற கோபமும் நியாயமானது. அந்த நியாயத்துக்கு இங்கே உரிய இடமில்லை. இந்தக் கேள்விகளுக்கும் பதில் கிடையாது. இதிலே துயரமான வேடிக்கை என்னவென்றால் இனவாதத்தையும் மதவாதத்தையும் வளர்த்துக் கொண்டு, மக்களுக்கு விரோதமாகச் செயற்படுகின்றவர்களையே மக்களும் தமது அரசியல் தலைவர்களாகவும் அரசியற் பிரதிநிதிகளாகவும் தெரிவு செய்வதுதான். இனவாதம், மதவாதம் மட்டுமல்ல, ஊழல் முறைகேட்டைச்செய்கின்றவர்களையும் மக்கள்தான் ஆதரித்து வெற்றியடையச் செய்கிறார்கள். இதையெல்லாம் கேள்விக்குட்படுத்தாமல், கேள்விக்குட்படுத்தத் தயாரில்லாமல் இருக்கின்ற ஊடகக்காரர்களும் ஊடகங்களும் இதில் சேர்த்தி.

இதுதான் இலங்கையின் துயரமும் அவலமும்.

இதற்கு அடிப்படையாகச் சில விடயங்கள் உண்டு. ஒன்று, சிங்கள அரசியற் தலைவர்கள் மதத்துக்குக்கும் மதவாதிகளுக்கும் கட்டுப்பட்டிருப்பதாகும். இலங்கையில் மொழியும் மதமும் இரண்டறக் கலந்தது என்பர். சைவமும் தமிழும். சிங்களமும் பௌத்தமும். ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்க முடியாத அளவுக்கு பிணைந்திருப்பவை. மன்னர் காலத்துப் பாரம்பரியத்தை இந்த ஜனநாயக யுகத்திலும் அப்படியே பின்பற்றுகிறார்கள். இதனால் மதபீடங்களையும் மதக் கட்டுமானங்களையும் இவர்களால் கடந்து செல்ல முடிவதில்லை. இதனால்தான் இலங்கையின் அரசியலமைப்பும் பௌத்தத்துக்கு முன்னுரிமை அளிக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது.

பௌத்தத்துக்கு முன்னுரிமை என்று சொன்னால் ஏனைய மதங்களைச் சேர்ந்தவர்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இலங்கையில் பௌத்தத்தை பின்பற்றுகின்றவர்கள் தனியே சிங்களர் மட்டுமே. ஆகவே சிங்கள பௌத்தவாதமாக இது திரட்சியடைந்துள்ளது. இதற்கு அரசு தலைமை தாங்குவதால் ஏனைய மதத்தையும் மொழியையும் பேசும் மக்களின் நிலை கேள்விக்குள்ளாகிறது. கட்சிகள் எல்லாமே இனக் கட்சிகளாகச் சுருங்கிக் கிடக்கின்றன. இதைப் பற்றி விவாதிக்கும்போது அரசும் சிங்களத் தரப்பும் இனவாதத்தைப் பிரயோகிப்பதனால் தாமும் தவிர்க்க முடியாமல் இனரீதியாகவே திரட்சியடைய வேண்டியுள்ளது. அவர்கள் (சிங்கள மக்கள்) சிங்களத் தேசியவாதத்தை மேலுயர்த்தும்போது தவிர்க்க முடியாமல் நாமும் தமிழ்த் தேசிய வாதத்தையே நிலை நிறுத்த வேண்டியுள்ளது. அப்படித்தான் முஸ்லிம் தேசியவாதமும் மலையகத் தேசியவாதமும் என்று சொல்லப்படுகிறது.

மேலோட்டமாகப் பார்த்தால் இது சரிபோலவே தோன்றும். அதற்கான பகுதி அளவு நியாயங்களும் உண்டு. ஆனால், இது தவறு. ஏனென்றால் இந்த எதிர்த்தேசியவாதம் என்பது தேசியத் தன்மையோடு உருவாகவும் இல்லை.

(20ஆம் பக்க தொடர்)

**கருணாகரன்**

## சிங்கப்பூரின் 9ஆவது ஜனாதிபதியாகும் தமிழர் தர்மன் சண்முகரத்னம்..!



சிங்கப்பூரின் 9ஆவது ஜனாதிபதியாக தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த தர்மன் சண்முகரத்னம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தர்மன் சண்முகரத்னம் தவிர, காக் சோங் (75), டான் கின் லியான் (75) ஆகிய இருவரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டனர். அவர்களை பின்னுக்கு தள்ளி 70.4 சதவீத வாக்குகளைப் பெற்று தர்மன் சண்முகரத்னம் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்ற தர்மன் சண்முகரத்தினத்திற்கு பிரதமர் லீ சியன் லூங் வாழ்த்து தெரிவித்துள்ளார். கடந்த 1959ஆம் ஆண்டு முதல் சிங்கப்பூரை ஆண்டு வரும் மக்கள் செயல் கட்சியின் இமேஜ், ஊழல் புகார்களால் கடுமையாக பாதிக்கப்பட்டிருப்பதாக பிரதமர் லீ சியென் லூங் அண்மையில் கவலை தெரிவித்திருந்தார்.

சிங்கப்பூரின் தற்போதைய ஜனாதிபதி ஹலிமாவின் 6 ஆண்டு பதவிக் காலம் செப்டெம்பர் 13ஆம் திகதியுடன் நிறைவடைகிறது. இந்த நிலையிலேயே புதிய ஜனாதிபதியை தேர்வு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது.

**சிங்கப்பூரில் ஜனாதிபதி தேர்தல் எப்படி?**

நாடாளுமன்ற சட்டத்திருத்தங்களால், 2017ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் போது ஹலிமா யாகூப் மட்டுமே போட்டியிடத் தகுதியானவராக இருந்தார்.

அந்த திருத்தத்தின்படி, குறிப்பிட்ட இனக் குழுவில் இருந்து தொடர்ந்து 5 தடவை யாரும் ஜனாதிபதியாகவில்லை என்றால் மட்டுமே போட்டியிட அனுமதிக்கப்படுவார்.

2017ஆம் ஆண்டு 4 வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டதால், அங்கே அரிதான நிகழ்வாக போராட்டங்கள் எழுந்தன. சிங்கப்பூர் மக்கள் தொகையில் நான்கில் 3 பகுதியினர் சீனர்கள். எஞ்சியவர்கள் மலாய், இந்தியா அல்லது யுராஷியன் வம்சாவளியினர் ஆவர். இந்த ஆண்டு அனைத்து இனக் குழுவினரும் போட்டியிடலாம் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி தர்மன் சண்முகரத்னம் தவிர, காக் சோங் (75), டான் கின் லியான் (75) ஆகிய இருவரும் ஜனாதிபதி தேர்தல் போட்டியிட்டனர். 27 இலட்சத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் தங்களின் வாக்குகளை செலுத்தினர்.

**இதில், 70.4 சதவீத வாக்குகளைப் பெற்று தர்மன் சண்முகரத்னம் வெற்றி பெற்றுள்ளார். யார் இந்த தர்மன் சண்முகரத்னம்?**

தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த, மிகச் சிறந்த பொருளாதார வல்லுநரான தர்மன் சண்முகரத்னம், சிங்கப்பூர் துணை பிரதமர், நிதி அமைச்சர் உட்பட பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ளார்.

தேர்தல்களில் மக்களின் பெருவாரியான வாக்குகளால் தொடர்ந்து வெற்றி பெற்றவர். 2016ம் ஆண்டு யாகூ நியூஸ் நடத்திய கருத்துக் கணிப்பில், சிங்கப்பூரில் அதிகார மிக்க பிரதமர் பதவிக்கு தர்மன் சண்முகரத்னம் வர வேண்டும் என்று மக்கள் விருப்பம் தெரிவித்திருந்தனர்.

1959ம் ஆண்டு சுதந்திரத்திற்குப் பின் சிங்கப்பூர் இதுவரை 3 பிரதமர்களை மட்டுமே கண்டுள்ளது. அவர்கள் மூவருமே பெரும்பான்மை சீன இனக் குழுவைச் சேர்ந்தவர்கள்.

முதல் பிரதமரான லீ குவான் யூவின் மகனான லீ சியென் லூங் தான் தற்போது அந்நாட்டின் பிரதமராக இருக்கிறார். 2025ம் ஆண்டு தேர்தலுக்கு முன்பாக அடுத்த பிரதமராக தர்மன் சண்முகரத்னத்தை அறிவிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது.

ஆனால், அது பெரும்பான்மை சீனர்களை தர்மசங்கடப்படுத்தும் என்ற கருத்து கட்சிக்குள் எழுந்ததால் அதுகுறித்த தயக்கம் இருந்து வந்தது. தர்மன் சண்முகரத்னமும் தாம் பிரதமர் பதவிக்கு ஆசைப்படவில்லை என்று வெளிப்படையாக அறிவித்தார். மக்களிடையே பெரும் செல்வாக்குடன் திகழ்ந்த தர்மன் சண்முகரத்னத்தை ஜனாதிபதியாக்குவதன் மூலம் அடுத்த பிரதமரை தேர்வு செய்வதில் தற்போதைய பிரதமர் லீ சியென் லூங் தனக்கான நெருக்கடியை சற்று குறைத்து கொண்டுள்ளதாக அந்நாட்டு அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

# தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

077 4 38169 கண்டியில் ஹோட்டல், தோட்டம், வீடு, வெற்றுக் காணி, வியாபாரஸ்தலம் கொள்வனவு செய்வதற்கும், விற்பதற்கும். 07 77282147. 052211

### 211 விதைகளும் செடிகளும் தேவை

ஏற்றுமதி வியாபாரத்திற்காக மிளகு, கறுவா, கராம்பு, ஏலம், கொறக்கா, சாதிக்காய், கொட்டைப்பாக்கு, பயறு, கவ்பீ, நிலக்கடலை ஆகியவற்றின் வழங்குநர்கள் தொடர்பு கொள்ளவும். 0 777427492, 076 0 400895. 054591

## வேலைவாய்ப்பு

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

எமது நிறுவனத்தில் வேலை செய்வதற்கு சாரதி ஒருவர் தேவை. மஹரகம. 0712200200/ 0714200200 055120

### 322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

வெள்ளவத்தையிலுள்ள கட்டிட நிறுவனத்திற்கு பெயின்டர், மேசன்பாஸ், லேபர்ஸ், சாரதி தேவை. 0777380558, 0777380622, 0773629518. Metro habitat, No-14, Rudra mawatha, wellawatte. 054940

### 325 தொழில்துறை பொது

ஓப்செட் அச்சடிக்கும் இயந்திர இயக்குநர் Kord (Offset Printitng machine operator Kord) தொழில்சார் மட்டத்தில் பயிற்சி கற்கைநெறி அச்சடிக்கும் இயந்திர இயக்குனராக பயிற்சி கற்கைநெறியை பயின்றிருத்தல் வேண்டும். 5 வருடத்திற்கு மேலான அனுபவம் வயது 40 இற்கு குறைவாகவிருத்தல் வேண்டும். சம்பளம் பேசித்தீர்க்கப்படும். இல.288, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. தொடர்பெண்கள் 0779578741, 0112 4 3 9443. 054302

கொழும்பு தொட்டலங்க சேதவத்த பாதையிலுள்ள பேக் தொழிற்சாலை நிறுவனத்திற்கு க.பொ.த. சா/த பரீட்சையில் சித்தியுடன் கணனியில் கணக்கிடல் செய்யும் கொழும்பு புறநகரிலுள்ள ஆண்/ பெண் ஆகியோருக்கு வேலையுண்டு. சம்பளம் நேர்முகப் பரீட்சையில் தீர்மானிக்கப்படும். 0777106502, 0740327786. 052301

தங்கொட்டுவ, போலவத்த வயோதிபர் பாதுகாப்பு நிலையத்தில் வயோதிபர்களை கவனித்துக் கொள்ள பயிற்சி பெற்ற பெண் பராமரிப்பாளர் தேவை. தங்குமிடம், உணவு இலவசம். சம்பளம் ரூ. 30,000/=. தொடர்பு 0312 265 17 7, 0773 268 91 5. 053107

பிளாஸ்டிக் இன்ஜக்ஷன் மோல்டிங் தொழிற்சாலைக்கு தொழில்நுட்ப வேலை மற்றும் IML புலமையுள்ளவர்கள் நிரந்தர சேவைக்கு தேவை. உயர்ந்த சம்பளம் 0777190907/ 0772298899 ; இல. 36B, எஸ்.டி.எஸ். ஜயசிங்ஹ மாவத்தை, களுபோவில. 054889




## காணி/தோட்டம்

### 615 வீடு சொத்து சேவைகள்

எமது நிறுவனத்தில் 15 வருடங்கள் நம்பகத்தன்மையுடன் வேலை செய்யும் ஊழியர்களினால் நாடு முழுவதுமுள்ள உங்களின் சொத்துக்களை தகைமையுள்ள அனுபவமுள்ள நேர்மையான மதிப்பீட்டாளர்களினால் மதிப்பீடு செய்யப்பட்டு அதியுயர் விலைக்கு விரைவாக விற்பதற்கு பொறுப்பேற்கப்படும். 0767951560, 0718184096. lankaproperty.lk@gmail.com 054983

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கம்பஹா நகர மத்தியில் குடியிருப்புக்கு மிகவும் பொருத்தமான சகல வசதிகளுடனான சிறந்த காணி விற்பனைக்கு. ஒரு பேர்ச் 11.50. 0706460360, 0717590601. 049800

கொள்ளுப்பிட்டியில் முஹந்திரம் வீதி 3 அறைகள், 2 குளியலறையுடன் முழுமையான வீடு விற்பனைக்கு. 0775262362. 050434

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

நாவலப்பிட்டி கண்டி வீதியில் 10 பேர்சில் மூன்று மாடி வீடு வாகன தரிப்பிட வசதியுடன் விற்பனைக்கு 0714133385 053696

### 623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

மனங்கவரும் இயற்கைக் காட்சிகள் நிறைந்த குளிரான மலை நாட்டின் சுகத்தினை அனுபவிக்க விரும்பும் உங்களுக்கு ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக, பெறுமதியுள்ள வியாபார மற்றும் குடியிருக்க உகந்த காணித்துண்டுகள் 100. ஒரு காணித்துண்டு 25 இலட்சம். விசேட விலைக் குறைப்புடன் வட்டியற்று இலகு பணக் கொடுப்பனவு முறைமை. அழைக்கவும். சிரிபால லாண்ட்ஸ், 0702484848 055138

ஹட்டன் நகருக்கு அண்மையில் 10 பேர்ச் காணித்துண்டுகள் 100 விற்பனைக்கு. குழாய் நீர் மற்றும் மூன்று முதன் நிலை மின்சாரம். ஒரு காணித்துண்டு 25 இலட்சம். இலகு பணக் கொடுப்பனவு முறைமை மற்றும் விசேட விலைக் குறைப்புடன் உங்களது காணித்துண்டை இன்றே ஒதுக்கிக் கொள்ளவும் அழைக்கவும். சிரிபால லாண்ட்ஸ். 0702484848 055141

* Trusted Marketplace of Classified Advertisers...

SUNDAY OBSERVER adz it's what you want Classified

Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk

Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

## தினகரன் வாரமஞ்சரி திருமண சேவைகள்

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

## தினகரன் வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா

* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

# தினகரன் வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

## APARTMENT BUILDING FOR SALE KALUBOWILA

HOSPITAL ROAD FACING
14.5 PERCH
FOR STOREY WITH SIX APARTMENTS BUILDING AND 9.5 PERCH BARE LAND
FOR SALE
CALL AND GET MORE DETAILS
0762 177 814

## ARIYARATHNE CONSTRUCTIONS

අත්තිවාරමේ සිට සියලුම නිවාස ඉදිකිරීම් දිවයිනේ ඕනෑම ප්‍රදේශයක

ලංකාවේ අඩුම මිල

අමානෝ වහල, කාප්ප වහල, වීදුරු වහල, විනිවිද වහල, සහ කැනපි

සියලුම ඇලුමිනියම් වැඩ

WAREHOUSE CONSTRUCTION

ගේට්ටු, අත්වැල් නවීන විලාසිතාවේ ග්‍රිල්, අමානෝ පීලි 0.47 (mm)

Polycarbonate

විශ්වාසයෙන් වගකීමෙන් හා උසස් නිමාවෙන්...

0777 24 23 19/ 0711 24 23 19
senakaariyarathne@yahoo.com
www.ariyarathneconstruction.com
www.facebook.com/Ariyarathne Constructions

## අමානෝ වැහිපීලි සහ සෙවිලි

Zinc Aluminium Sheet රු.175/- සිට

වැහිපීලි සහ සෙවිලි

0777 394 679 | 070 663 33 88

## NUGEGODA JUNCTION

BARE LAND FOR IMMEDIATE SALE
off stanly Thilakarathna Mawatha on Railway avenue
15 perches
Contact : 0777 551 712, 0777 281 157

## CHEFF SCHOOL

THE BEST TRAINING CENTER IN COLOMBO
DIPLOMA IN COOKERY
DIPLOMA IN BAKING PASTRY
International Diploma recognized all over the world
3 MONTHS & 6 MONTHS
WORK EXPERIENCE GIVEN
best opportunity to get foreign Jobs



CONTACT US ON WHATSAPP
+94 77 914 4219

## Advertise Here

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT
adzsuo@gmail.com

## OFFICE SPACE FOR RENT IN COLOMBO 10

PRESTIGIOUS OFFICE COMPLEX IN PIYADASA SIRISENA MAWATHA, COLOMBO 10.

FIFTEEN FLOOR BUILDING.
FLOOR AREA : 16,000 sq.ft. on a single floor.
3,000 sq.ft. - 5,000 sq.ft. spaces are also available at your convenience.

* 24/7 Security service
* CCTV surveillance
* Central A/c
* Backup Generator
* Fire detection systems
* Fibre optic line
* Ample Car parking
* 5 Elevators



JFI CONSOLIDATED (PRIVATE) LIMITED
75, PIYADASA SIRISENA MAWATHA, COLOMBO 10. anurak@jfi.lk, saliyaf@jfic.lk
CONTACTS :
Lalith - 0706 204 680, Thilak - 0712 204 681

## COMMERCIAL PROPERTY FOR SALE

IN THE HART OF MATHUGAMA TOWN



18.5 Perch for the HIGHEST OFFER
CONTACT - 0717 559 698

## Advertise Here

தினகரன் வாரமஞ்சரி BUDGET adz

5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT

Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

# பிறிக்ஸ் நாடுகளின் புதிய நகர்வு உலக ஒழுங்கை மாற்றுமா?



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

**உலக அரசியல் ரஷ்யாவை மையப்படுத்தியே சுழல்வதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. உக்ரைன் மீதான ரஷ்யாவின் போர் தொடங்கியதிலிருந்து உலகத்தின் இருதய நிலமான ரஷ்யா உலக அரசியலை தீர்மானிக்கும் சக்தியாக உள்ளது. 23.08.2023 அன்று ரஷ்யாவின் தனியார் இராணுவமான வோக்னர் குழுவின் தலைவர் எவ்ஜெனி பிரிகோஜியின் கொலை அதிக குழப்பத்தை தந்துள்ளது.**

கடந்த யூன் மாதம் ரஷ்யாவின் தலைநகர் நோக்கிய கிளர்ச்சியின் பின் அதிகம் மேற்கு ஊடகங்களால் முதன்மைப்படுத்தப்பட்ட பிரிகோஜி, விமான விபத்தில் கொல்லப்பட்டமை ரஷ்ய ஜனாதிபதி புடின் மீதான விமர்சனத்தை அதிகப்படுத்தியுள்ளது. அதே நேரம் கருங்கடலில் உக்ரைனின் கப்பல்கள் மீதான தாக்குதல் மற்றும் ஏவுகணைத் தாக்குதல் என ஒரு பக்கம் அமைய மறுபக்கத்தில் பிறிக்ஸ் அமைப்பினூடாக புதிய பொருளாதார கொள்கையை உலகளாவிய ரீதியில் மேற்கொள்ள ரஷ்யாவும் ஏனைய நாடுகளும் இணைந்து திட்டமிடுகின்றன. அதில் புடினின் பங்கு தனித்துவமானது. இக்கட்டுரையும் தென் ஆபிரிக்காவின் தலைநகரான ஜோஹான்னேர்ங்பேர்க்கில் நடைபெற்ற பதினைந்தாவது பிறிக்ஸ் நாடுகளின் மகாநாட்டில் (22,24.08.2023) எடுக்கப்பட்ட முடிவுகளின் விளைவுகளை தேடுவதாக அமையவுள்ளது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்ற பிறிக்ஸ் மகாநாட்டில் 64 நாடுகளும் பல அமைப்புக்களும் கலந்து கொண்டன. இதில் ரஷ்ய ஜனாதிபதி புடின் மட்டுமே நேரடியாக கலந்து கொள்ளவில்லை. ஏனைய அனைத்து நாடுகளின் தலைவர்களும் இம் மகாநாட்டில் கலந்து கொண்டனர். அண்மையில் அமெரிக்காவுக்கு எதிராக ஆபிரிக்க நாடுகளது நடவடிக்கைகள் பிறிக்ஸ் மகாநாட்டில் எதிரொலித்தன. பிறிக்ஸ் அமைப்பினை பலப்படுத்த வேண்டும் என்ற ஆவல் அனைத்து நாட்டுத் தலைமைகளுக்கும் இருந்ததை காணொளி வாயிலாக கணக்கூடியதாக இருந்தது. உலகளாவிய சனத்தொகையில் 47 சதவீதத்தை தற்போது கொண்டுள்ள பிறிக்ஸ் நாடுகள் உலகளாவிய ஜிடிபி இல் 37.17 சதவீதத்தை கொண்டுள்ளன. தனித்துவமான வளங்களை அங்கத்துவ நாடுகள் கொண்டிருந்தாலும் எரிவாயு, பெற்றோலியம் பிரதான சக்திவளமாக பிறிக்ஸ் நாடுகளிடையே காணப்படுகின்றது. மொத்தத்தில் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் இலத்தீன் அமெரிக்க நாடுகளை உள்ளடக்கிய வலுவான அமைப்பாக உள்ளது. தென்னாபிக்காவில் பிறிக்ஸ் உரையாடிய முக்கிய விடயங்களை நோக்குவது அவசியமானது.

முதலாவது, பிறிக்ஸ் அமைப்பினை விரிவாக்குவது என்பது மிக முக்கியத்துவம் கொண்ட விடயமாக உரையாடப்படுகிறது. அதாவது பிறிக்ஸ் அமைப்பில் புதிய அங்கத்துவ நாடுகளை சேர்த்துக் கொள்வதெனவும் அவற்றுக்கான முழுமையான உறுப்புரிமை 2024 ஜனவரி மாதத்தில் வழங்குவதெனவும் தென்னாபிரிக்க மகாநாட்டில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் புதிதாக ஆறு நாடுகள் இணைக்கப்படவுள்ளன. அதில் ஆர்ஜன்டீனா, எகிப்து, ஈரான், எத்தியோப்பியா, சவூதி அரேபியா, மற்றும் ஐக்கிய அரபு எமிரேற்ஸ் என்பன உள்ளடங்குகின்றன. இவை பிராந்திய அடிப்படையில் தனித்துவம் மிக்க நாடுகளாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. வளம் சார்ந்தும் புவிசார் அரசியல் சார்ந்தும் முக்கியத்துவம் கொண்ட நாடுகளாக காணப்படுகின்றன. இந்நாடுகள் ஏதோவொருவகையில் அமெரிக்க எதிர்ப்புவாதத்தை மட்டுமல்லாது மேற்குல அரசியல் பொருளாதார சுரண்டலால் பாரிய நெருக்கடியையும் அழிவுகளையும் எதிர்கொண்டுள்ள நாடுகளாக உள்ளன.



இரண்டாவது, புவிசார் அரசியல் சார்ந்தும் புவிசார் பொருளாதாரம் சார்ந்தும் இம்மாநாடு உரையாடியுள்ளது. குறிப்பாக புவிசார் பொருளாதாரத்தின் தனித்துவத்தோடு நகரும் உலகத்தில் பிறிக்ஸ்ன் விரிவாக்கம் அதிக மாற்றத்தை பொருளாதார ரீதியில் ஏற்படுத்தக் கூடியது. ஏனெனில் உலகப் பொருளாதாரம் அதிகம் புவிசார் பொருளாதாரமாகவே மாற்றமுறத் தொடங்கியுள்ளது. அது சீனா, இந்தியா, மற்றும் ரஷ்யாவுக்கு சாதகமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. மேற்குலகத்தின் பொருளாதார நிலையை முடிவுக்கு கொண்டுவரும் விதத்தில் கீழைத் தேசப் பொருளாதாரத்தை பிறிக்ஸ் நாடுகள் கட்டமைக்க முயலுகின்றன. இத்தகைய நகர்வு மேற்குலகப் பொருளாதாரத்துக்கு நெருக்கடியாக அமையப் போவதாகவும் பிறிக்ஸ் ஏறக்குறைய பொருளாதார இலக்கினை நோக்கிய அமைப்பு என்றும் ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. அதனால் வர்த்தகம், சந்தை என்பன மட்டுமன்றி நிதி மூலதனத்தின் திரட்சியும் இந்நாடுகளது கைகளில் குவியப் போகிறது என்ற உரையாடலையும் அத்தகைய தரப்புக்கள் விவாதிக்கின்றன. இது கீழைத்தேச அரசியல் பரிமாணத்தை தோற்றுவிக்கும் என பேராசிரியர் அனில் சூக்லால் குறிப்பிடுகின்றார்.

மூன்றாவது, புதிய அபிவிருத்தி வங்கி அல்லது பிறிக்ஸ் வங்கி பற்றிய உரையாடல் நிகழ்ந்துள்ளது. இது உள்ளூர் நாணத்தை திரட்டவும் கடன் வழங்கவும் வடிவமைப்பதோடு தனியான நாணயம் ஒன்றினை ஏற்படுத்துவது தொடர்பிலும் உரையாடியுள்ளது. இது நாணயப் பயன்பாட்டை ஏற்படுத்துவதுடன் நாணயங்களது ஏற்ற இறக்கத்தை கட்டுப்படுத்துவதுடன் அதனால் ஏற்படும் தாக்கங்களை குறைக்கும் என தென்னாபிரிக்க நிதி அமைச்சர் ஏனோக் கோடோங்வானா குறிப்பிட்டுள்ளார். வங்கிக் கட்டமைப்பு சார்ந்து எடுக்கப்படும் முடிவுக்கு ஏற்கனவே பிறிக்ஸ் நாடுகளிடம் ஒப்புதல் கிடைத்துள்ளதாகவே தெரிகிறது. இந்தியா, சீனா மற்றும் ரஷ்யா என்பன தமது நாணயத்தில் வர்த்தகத்தை மேற்கொள்ளும் செய்முறை ஒன்றினை ஆரம்பித்துள்ளன. அதனால் டொலருக்கு எதிரான அணுகுமுறையை இந்நாடுகள் ஆரம்பித்துள்ளன. அதனால் பிறிக்ஸ் அமைப்பின் புதிய நாணயத்துக்கான நகர்வு விரைவானதாக சாத்தியப்படும் என்ற நிலைப்பாட்டை ஆய்வுகள் முதன்மைப்படுத்தி வருகின்றன. இதனால் டொலர் மற்றும் யூரோவின் நாணயப் பரிமாற்றத்துக்கான வாய்ப்பு கீழைத் தேசங்களில் மட்டுப்படுத்தப்படும் நிலை சாத்தியமாகுமாக இருந்தால் பாரிய நெருக்கடிக்கு மேற்கு நாடுகள் அகப்படும் நிலை ஏற்படும். அதிலும் ஐரோப்பிய மற்றும் அமெரிக்கா நாட்டு நாணயத்தின் பெறுமானம் சார்ந்த பரிமாற்றம் நெருக்கடிக்கு உள்ளாக வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக பொது நாணயத்தின் முக்கியத்துவத்தை பிறேசில் அதிகம் முதன்மைப்படுத்தியிருந்தது.

நான்காவது, தென்னாபிரிக்க ஜனாதிபதி பிறிக்ஸ் நாடுகளுக்கிடையே ஒத்துழைப்பினை அதிகரிப்பதே முக்கிய நோக்கம் என்றும் இம்மகாநாட்டின் அடிப்படையும் அதுதானென்றும் குறிப்பிட்டார். குறிப்பாக சீனாவின் உத்தியும் மரபாகவும் விளங்குவது ஜனநாயக அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் மாறான உலகம் ஒன்றை உருவாக்குவதேயாகும். அதாவது அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் வெளியே அபிவிருத்தியையும் மாற்றத்தையும் அடைய முடியுமென்ற உணர்வை இம்மகாநாடு ஏற்படுத்த விளைவதாகவே தெரிகிறது. உலக சமாதானத்தையும் அமைதியையும் பொருளாதார வழிமுறைக்குள்ளால் எட்ட முடியுமென்ற கருத்தை இம் மகாநாடு அதிகம் கொண்டிருந்ததை கண்டு கொள்ள முடிகிறது. மேற்கு நாடுகளின் நிபந்தனைக்குள் இயங்க விரும்பாத சக்திகளின் எழுச்சியாகவே பிறிக்ஸ் மாநாட்டின் எதிரொலிப்பு அமைந்திருந்தது. அதில் புடினது உரையானது நவதாராளவாதத்தின் மீதான விமர்சனத்தை அதிகம் கொண்டிருந்தது. குறிப்பாக மேற்கு நாடுகள் கீழைத்தேச நாடுகளின் விழுமியங்களையும் வளர்ச்சியையும் நெருக்கடிக்குள்ளாக்குகிறது எனவும், தனி ஒரு நாடு உலகத்தை ஆளுகை செய்ய முடியாது எனவும் பலதுருவ உலகத்தின் இருப்பை நோக்கி உலகம் விளங்குகிறது எனவும் தெரிவித்தார்.

ஐந்தாவது, பிறிக்ஸ் நாடுகளுக்கிடையில் கடல்வழியாக கேபிள் தொடர்பினை ஏற்படுத்துவதற்கான தொலைத் தொடர்புச் சேவையை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளன. இது கடல்வழியான தொடர்பையும் அதன் மூலமான பாதுகாப்பினையும் கட்டமைக்க முயலுவதாக தெரிய வந்துள்ளது. இதனால் கடல் போக்குவரத்து வெற்றிகரமாக அமைவதுடன் கடல்வழியான வர்த்தக கட்டமைப்பையும் பாதுகாப்பினையும் இத்தகைய தொலைத் தொடர்புச் சேவை மூலம் விருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இது நவீன தொழில்நுட்பத்தை மட்டுமல்ல கடல்வழியான பாதுகாப்பினையும் சாத்தியப்படுத்த கூடியதாகவே வடிவமைக்கப்படுகிறது. உலகளாவிய வர்த்தகத்தில் கடலின் முக்கியத்துவமே மேலோங்கியுள்ளது. இது நாடுகளின் நீர்மூழ்கிகளையும் கடற்படையின் வளர்ச்சியையும் அதிகரிப்பதுடன் இந்தோ பசுபிக் கடல் போட்டியையும் அதிகரிக்க வாய்ப்பு ஏற்படும் என்ற நிலை காணப்படுகிறது.

எனவே பிறிக்ஸ் அமைப்பானது புதிய உலக ஒழுங்கினை கட்டமைக்க முனைகிறதாகவே தெரிகிறது. அதன் தீர்மானங்களும் முடிவுகளும் பிறிக்ஸ் அமைப்பினை மையப்படுத்தி பாதுகாப்பான கட்டமைப்பை கீழைத் தேசத்தில் உருவாக்குவதாகவே காணப்படுகிறது. மக்கள் தொகையில் தற்போதே உலக சனத்தொகையில் அரைப் பங்கினைக் கொண்ட புதிய ஆறு நாடுகளுடன் மக்கள் தொகையை அதிகம் கொண்ட அமைப்பாக மாற வாய்ப்புள்ளது. அதுவே உலகப் பொருளாதாரத்தின் சந்தையையும் வர்த்தகத்தையும் கொண்டதாக அமையும். அத்தகைய வாய்ப்பு நிதி மூலதனத்தையும் அதற்கான நிதிச் சந்தையை கொண்டதாக மாற்றமடைய அதிக சந்தர்ப்பத்தை வழங்கும். இதில் அதிக முக்கியத்துவம் வகிக்கப் போவது புதிய நாணயக் கொள்கையாகும். அதனால் பொருளாதார நிலை மட்டுமல்லாது அரசியல் நிலையும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக அமையும். மேற்குலகத்தின் உலகளாவிய ஆளுகைக்கு மாற்றீடான அதிகார வடிவத்தின் தோற்றமாகவே பிறிக்ஸ்ன் எழுச்சி நோக்கப்படுகிறது.

# 2025 இல் சந்திரனில் மீண்டும் நடமாடவுள்ள மனிதன்

## நாடுகள் ஏன் சந்திர ஆய்வில் ஈடுபட விரும்புகின்றன?

அருள் சத்தியநாதன்

**விண்வெளியில் முதலில் தடம் பதிப்பது யார் என்ற போட்டி, பனிப்போரில் தீவிரமாக ஈடுபட்டிருந்த அமெரிக்காவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே இரகசியமாக நடந்து கொண்டிருந்த தறுவாயில்தான், 1957ஆம் ஆண்டு அக்டோபர் நான்காம் திகதி ரஷ்யா ஸ்புட்னிக் என்ற பெயர் கொண்ட உலகின் முதலாவது செயற்கைக் கோளை விண்ணில் ஏவியது. ஒரு கூடைப்பந்து அளவும் 85 கிலோ எடையும் கொண்ட செயற்கைக் கோள், மணித்தியாலத்துக்கு 29 ஆயிரம் கி.மீ. வேகத்தில் உலகத்தை 940 கி.மீ உயரத்தில் சுற்றி வந்தது. அமெரிக்காவுக்கு அதிர்ச்சி அளித்த ரஷ்யாவின் இந்த சாதனையை, உலக மக்கள் வியப்புடன் பார்த்தனர். முதலாளித்துவத்தால் ஆகாத காரியத்தை கம்யூனிசம் சாதித்திருக்கிறது என்ற ரீதியாகவும் இது பார்க்கப்பட்டது.**

அமெரிக்கா, 1958ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதி எக்ஸ்புளோரர் 1 என்ற செயற்கைக் கோளை விண்ணில் ஏவி, ரஷ்யாவுடன் போட்டியில் இறங்கியது. இக்கலம் 1970 மார்ச் 31ஆம் திகதிவரை விண்ணில் பூமியை வலம் வந்தது. மொத்தம் 58 ஆயிரம் தடவைகள் இக்கலம் பூமியை சுற்றி வந்த பின்னர் புவியின் வளி மண்டலத்தில் சிக்கி எரிந்து போனது. பின்னர் 1961 ஏப்ரல் 12ஆம் திகதி ரஷ்யா வஸ்டொக் 1 என்ற விண்கலத்தை ஏவியது. அதில் பயணித்தவர் யூரிககாரின். விண்வெளி சென்ற முதல் மனிதர். மணிக்கு 27,400 கி.மீ. வேகத்தில் பூமியை அவர் சுற்றி வந்தார். அவரது பயண நேரம் 108 நிமிடங்கள். முதலாவது மனிதனை விண்ணுக்கு அனுப்பிய ரஷ்யாவை உலகமே கொண்டாடியது. அவர் வெற்றி வீரராக இலங்கை வந்தபோது கொழும்பில் பெரிய வரவேற்பு அளிக்கப்பட்டது.

இனி சும்மா இருக்குமா அமெரிக்கா?

1961 மே ஐந்தாம் திகதி அமெரிக்கா ஃபிரீடம் 7 என்ற விண்கலத்தை விண்ணில் ஏவியது. அதில் பயணித்த இரண்டாவது விண்வெளி வீரரின் பெயர் அலன் ஷெப்பர்ட். 15 நிமிடங்கள் எடையற்ற விண்வெளியில் அவர் பறந்தார்.

இவ்வாறு இரு நாடுகளுக்கும் இடையே ஆரம்பித்த விண்வெளிப் போட்டி, 1969ஆம் ஆண்டில் நீல் ஆர்ம்ஸ்ட்ரோங்கை சந்திரனில் நிறுத்தியது. சந்திரனில் அடியெடுத்து வைத்த ஆர்ம்ஸ்ட்ரோங் சொன்னபடியே, விண்ணியல்துறையில் அந்த முதல் அடி, பெரும் பாய்ச்சலாகவே அமைந்தது.

சந்திரனில் மனிதனை இறக்க வேண்டும் என்ற எண்ணம் அமெரிக்காவுக்கு ஏற்பட்டதற்கான பிரதான காரணம், கம்யூனிச ரஷ்யாவிடம் தோற்றுப்போய் விடக் கூடாது என்ற 'நீயா நானா'வே தவிர வேறொன்றும் கிடையாது. ரஷ்யாவுக்கு மனிதனை சந்திரனில் இறக்கும் எண்ணம் எதுவும் இல்லை என்பது புலனாகியதோடு, அபல்லோ 17 உடன் தன் நிலவுப் பயணத்தை அமெரிக்கா நிறுத்திக் கொண்டது. அபல்லோ திட்டத்தின் கீழ் 11 நிலவுப் பயணங்களில் மனிதர்கள் பயணித்திருந்தனர். இந்த 17ஆவது அபல்லோ 1972 டிசம்பர் ஏழாம் திகதி ஏவப்பட்டது. மொத்தம் 12 அமெரிக்க வீரர்கள் 1969 – 1972 காலப்பகுதியில் சந்திரனில் இறங்கினர், நடந்தனர், வாகனங்களை செலுத்தினர் மற்றும் சந்திர மாதிரிகளை பூமிக்கு கிலோ கணக்கில் அள்ளி வந்தனர். ரஷ்யா தனக்கு சவால் விடவில்லை, சந்திரனிலும் உருப்படியான தகவல் எதுவும் தரவில்லை, செலவும் மிகமிக அதிகமாகிக் கொண்டு செல்வதால் அமெரிக்க காங்கிரசும் நிதி ஒதுக்குவதில் கெடுபிடிகள் காட்டத் தொடங்கியது. அது வியட்நாம் யுத்தத்தில் அமெரிக்கா தீவிரமாக ஈடுபட்டிருந்த நேரம். யுத்த களத்தில் பல ஆயிரம் கோடி டொலர் இழப்பு ஏற்பட்டுக் கொண்டிருந்த நிலையில்தான் அந்நாடு பெரும் செலவில் மனிதர்களை நிலவுக்கு அனுப்பிக் கொண்டிருந்தது.



அதன்பின்னர் தன் நிலவுடனான தேன்நிலவை நிறுத்திக் கொண்ட அந்நாடு, பக்கத்து கிரகமான செவ்வாயை ஆராய முற்பட்டது. அங்கே மனிதனை இறக்கி மீண்டும் அழைத்துவர முடியுமா என்பதை விஞ்ஞான ரீதியாக அறிந்து கொள்வதற்கான முயற்சிகளில் இறங்கியது. 2040க்குள் 225 மில்லியன் கி.மீ. தொலைவில் உள்ள செவ்வாயை மனிதனால் அடைய முடியும் என நாசா நம்புகிறது. செவ்வாய் கோள் நோக்கிய ஒரு மனிதரைத் தாங்கிய கலத்தை மணிக்கு 39,600 கி.மி. வேகத்தில் அனுப்பி வைத்தால் 162 தினங்கள் பிடிக்கும் என்றும் அங்கே போய் திரும்பி வர ஒன்றரை முதல் இரண்டு ஆண்டுகள் செல்லும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

இவை உத்தேச கணக்குகள் தான். இதைவிட வேகமாகப் பயணிக்க முடியுமா? வழியில் தங்கிச் செல்ல ஒரு தங்கு விடுதியை அமைக்கக் கூடுமா? அண்ட வெளியில் பல மாதங்களாக பயணிக்கும் போது மனித உடலிலும் உள்ளத்திலும் ஏற்படக்கூடிய மாற்றங்களை சமாளிப்பது எவ்வாறு என ஏகப்பட்ட கேள்விகளுக்கு விடை கண்டுபிடிக்க வேண்டியிருக்கிறது. எனினும் 2050ஆம் ஆண்டுக்குள் அது நிகழலாம் என்று விண் விஞ்ஞானிகளும் விஞ்ஞான எழுத்தாளர்களும் நம்புகிறார்கள்.

செவ்வாய் விஷயம் இவ்வாறிருக்க, ஐம்பது ஆண்டுகளின் பின்னர் சந்திரன் மீது நாடுகளுக்கு காதல் பிறந்தது ஏன் என்பதைப் பார்ப்போம்.

சந்திரப் பயணத்தை எப்படி நடத்துவது என்பதை 50 ஆண்டுகளுக்கு முன்னரேயே அமெரிக்கா பாதை போட்டுக் கொடுத்துவிட்டது. இந்த ஐம்பது ஆண்டு காலத்தில் பல புதிய பணக்கார நாடுகள் தோன்றிவிட்டன. அவை பொருளாதார ரீதியாக மட்டுமின்றி, தொழில்நுட்ப ரீதியாகவும், புதிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்துவதாகவும் முன்னேற்றம் கண்டுள்ளன. எனவே தமது பொருளாதார பலத்தை உலக அளவில் வெளிப்படுத்துவதானால் ஒன்றில் செலவு மிக்க போரில், அமெரிக்காவைப் போல, ஈடுபடவேண்டும் அல்லது செலவு பிடித்த விண்வெளி ஆய்வில் ஈடுபட வேண்டும்.

சந்திர ஆய்வுகளை ஏன் மேற்கொள்கிறோம் என்பதற்கு, அங்கே தண்ணீர் உள்ளதா? பிராண வாயுவை தண்ணீர் மூலம் உருவாக்க முடியுமா? மனிதர் வாழக் கூடிய தளம் அமைப்பது சாத்தியமா என்றெல்லாம் அறிவியல் காரணங்களை இந்நாடுகள் வெளியிட்டு வந்தாலும், உண்மைக் காரணம் தமது பொருளாதார பலத்தை உலகுக்கு வெளிப்படுத்துவதுதான். இதற்கு ஒரு எளிமையான உதாரணமும் சொல்லலாம்.

கொழுத்த பணக்காரர்களில் சிலர் பெயரும் புகழும் கூடவே அரசியல் அதிகாரங்களும் கைவர வேண்டும் என்பதற்காக கையிலுள்ள பணத்தை செலவு செய்து அரசியலுக்கு வருவார்கள். வேறு சிலர் தமது பணத்தையும் செல்வாக்கையும் பயன்படுத்தி மேடையேறி பட்டங்களையும், பொன்னாடைகளையும் பெற விரும்புவார்கள். பலரும் தன்னைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டும், புகழ்பெற வேண்டும் என்பதே இதன் நோக்கம்.



சீனா, இந்தியா, ஜப்பான், இஸ்ரேல், தென்கொரியா, ஐக்கிய அமீரகம் ஆகிய நாடுகள் சந்திர ஆய்வில் அதிக அக்கறை காட்டுவதை இந்த உதாரணத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நோக்கங்கள் புரியும். அதேசமயம், மிகவும் சிக்கலான தொழில்நுட்பங்களை இப் பயணங்களின் பேரில் கையாளும் போது, நுட்பமான தொழில்நுட்பத்துறையில் அறிவு விருத்திக்கு அது வழி கோலுகிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். உலகெங்கும் வளர்ந்துவரும், எதிர்கால போட்டிச் சந்தையாக மாறவுள்ள 'ஏ ஐ' என அறியப்படும் செயற்கை நுண்ணறிவுத் துறை (Artificial Intelligiance) விண்வெளிப் பயணங்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்ட ஒரு துறையாகும்.

சந்திரயான் 3 கடந்த 23ஆம் திகதி சந்திரனில் இறங்கப் போகிறது என அனைவரும் எதிர்பார்த்திருந்த சமயத்தில், எதிர்பாராத விதமாக ரஷ்யா லூனர் 25 என்ற விண்கலத்தை சந்திரனுக்கு அனுப்பி வைத்ததோடு அது 21ஆம் திகதியே நிலவின் தென்துருவத்தில் இறங்கும் எனவும் ரஷ்யா அறிவித்தபோது, அது இந்தியாவுக்கு முகச்சுளிப்பை ஏற்படுத்தவே செய்தது.

ஆனால் இந்தியாவின் நல்ல காலமோ என்னவோ, சுற்றுப் பாதையின் உயரத்தைக் குறைக்கும் முயற்சியில் ஏற்பட்ட தவறுகள் காரணமாக ரஷ்ய கலம் சந்திரத் தரையில் மோதிச் சிதறியது. தென் துருவத்தில் கலமொன்றையும் ரோவர் வாகனத்தையும் இறக்கிய முதல்நாடு என்ற பெயரை இந்தியாவும் பெற்றுக் கொண்டது. விண்வெளியில் மனிதனை பறக்கவிட்ட முதல் நாடு என்ற பெயருடன் அமெரிக்காவுக்கு விண்வெளித் துறையில் போட்டியாக நின்ற ரஷ்யா, இந்தியாவின் கன்னி முயற்சியோடு போட்டிபோட முடியாமை அந்நாட்டுக்கு ஒரு பெருத்த பின்னடைவுதான். சந்திர ஆய்வுகளில் கிடைக்கக் கூடிய அறிவியல் தகவல்களுக்கு அப்பால், நாடுகளுக்கு முக்கியம் பெயரும் புகழும்தான் என்பதை, ரஷ்யா முந்திக் கொள்ள முனைந்ததை மற்றொரு உதாரணமாகக் குறிப்பிட முடியும்.

தற்போது நாடுகளின் சந்திர ஆய்வுகள் தென் துருவத்தில் நிலைத்திருப்பதற்கான காரணம், உறைபனி நிலையில் அங்கு காணப்படக்கூடிய தண்ணீர்தான். துருவத்தின் இருளான, குளிர்மிகுந்த பகுதிகளில் காணப்படும் ஆழமான சந்திர கிண்ணக் குழிகளில் உறைநிலையில் தண்ணீர் காணப்படுவதாக தெரிய வந்ததையடுத்தே இந் நாடுகளுக்கு தென் துருவத்தின் மீது கவனம் திரும்பியிருக்கிறது.

தற்போது, பொருளாதாரத் தடை, உக்ரேனில் நீண்ட யுத்தம் போன்ற சிக்கல்களினால் பின்னடைவுகளை சந்தித்துள்ள ரஷ்யாவுக்கு சந்திரனில் மனிதனை அனுப்பும் திட்டமொன்றில் அக்கறை இருக்குமோ தெரியவில்லை. ஆனால் தன்னை உலக அளவில் நிலை நிறுத்த வேண்டிய அவசியம் கொண்ட சீனாவுக்கு தென்துருவத்தில் தன் வீரர்களை இறக்கி திரும்பி அழைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. இந்தியாவுக்கும் அந்த இலக்கு உள்ளது. 2030க்குள் இரண்டு நாடுகளுமே அதைச் செய்யும் என எதிர்பார்க்கலாம்.

சந்திரனின் தென் துருவ பந்தயத்தில் அமெரிக்காவும் உள்ளது. அது 2025 இல் தென்துருவத்தில் இருவரை இறக்கி ஆய்வுகளை மேற்கொள்ளும் வகையில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஆர்டமிஸ் என இத்திட்டம் அழைக்கப்படுகிறது. இது கிரேக்க வேட்டைக் கடவுளின் பெயர். அபல்லோவின் இரட்டைச் சகோதரி.

அமெரிக்காவின் திட்டம், முதலில் 'கேட்வே' என்ற பெயர் கொண்ட சந்திர ஆய்வு கூடமொன்றை சந்திர வட்டப் பாதைக்கு அனுப்புவதாகும். இந்த ஆய்வு கூடம் நான்கு வீரர்கள் தங்கக் கூடியதாக இருக்கும். இங்கே சந்திரனில் இறங்கி திரும்பிவரக்கூடிய ஒரு சந்திரகலமும் அதனுள் ஒரு ரோவர் வாகனமும் இருக்கும். பூமியில் இருந்து பயணிக்கும் ஆர்டமிஸ் கலத்தையும், இந்த ஆய்வு கூடத்தில் நிறுத்தி வைத்துக் கொள்ளலாம்.

எனினும் இந்த 'கேட்வே' கூடத்தை சந்திரவட்டப் பாதையில் நிறுத்தி வைக்கும் திட்டம் மிகுந்த பணச்சுமை கொண்டதாக இருப்பதால் இது 2025 க்குள் சாத்தியமாகுமா என்பது தெரியவில்லை.

ஆர்டமிஸ் 1 கடந்த நவம்பரில் சந்திர வட்டப்பாதையை நோக்கி ஏவப்பட்டது. சந்திரனில் இருந்து 130 கி.மீ. உயரத்தில் அது நிலவை சுற்றி வந்ததோடு சந்திரனுக்கு அப்பால் 64,373 கி.மீ தூரத்துக்கு சென்று வரவும் செய்தது. இப் பயணம் 25 நாட்கள் நீடித்தது. இறுதியாக அத்திலாந்து சமுத்திரத்தில் இக்கலம் இறங்கியது. பயணம் முற்றிலும் வெற்றி.

இரண்டாவது பயணம் எதிர்வரும் வருடம் நவம்பரில் நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதில் நான்கு வீரர்கள் பயணிக்கவுள்ளனர். பயண நிபுணத்துவம் பெற்றவர் என்ற வகையில் கிறிஸ்டினா கொக் என்ற பெண்மணி, பயண கமாண்டர் ரீட், வைஸ்மன், கலத்தை செலுத்துபவரான விக்டர் குளோவர், கனடிய வீரரான ஜெரமி ஹான்சன் ஆகிய நால்வரே இதில் பயணிக்கவுள்ளனர். இது பத்து நாள் பயணமாக அமையும். பூமியில் இருந்து சந்திரவட்டப் பாதையை அடைய நான்கு நாட்கள் எடுத்துக் கொள்ளும். அதன் பயணப் பாதை சந்திரத் தரையில் இருந்து 8,889 கி.மீ உயரம் கொண்டதாக இருக்கும்.

1972 இல் அபல்லோ 17 உடன் நிறுத்தப்பட்ட அமெரிக்காவின் மனிதனை சந்திரனில் நடமாடச் செய்யும் திட்டத்தின் பின்னர் ஆர்டமிஸ் 3 தான் மீண்டும் மனிதர்களை சந்திரனில் இறக்கப்போகிறது. இப் பயணம் 2025 இறுதியில் நிகழலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. பத்து நாட்களைத் தாண்டும் பயணமாக அமையலாம் என எதிர்பார்க்கப்படும் இப் பயணத்தில் இரண்டு வீரர்கள் (அவர்களில் ஒருவர் பெண்ணாக இருக்கலாம்) ஐந்து முதல் ஏழு தினங்களை நிலவில் கழிக்கவுள்ளனர். தென் துருவ ஆய்வுகளை நேரடியாகவே மேற்கொள்ளவுள்ள இவர்கள் நிலவிலேயே தின்று, குடித்து, நடந்து திரியவுள்ளனர்.

இதன்மூலம், நிலவில் ஐம்பது ஆண்டுகளின் பின்னர் முதலில் கால் பதித்த நாடு என்ற பெருமையை அமெரிக்கா மீண்டும் பெறவுள்ளது. சந்திரனைத் தாண்டி செவ்வாய்க் கிரகத்தை சென்றடையும் மனித குலத்தின் கனவுக்கு இந்தப் பயணம் அடித்தளமிடும் என்று விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

# மலையக மக்களை மட்டும் இந்திய வம்சாவளியினர் என ஏன் அழைக்க வேண்டும்?

## சிங்கள மன்னர்கள் தமிழ்நாட்டிலிருந்து பெண்களை வரவழைத்து திருமணம் செய்திருக்கின்றார்கள்

**மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உப தலைவர், எழுத்தாளர், விரிவுரையாளர், இலங்கை – இந்திய வர்த்தக சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பு இயக்குநர், மனித உரிமைகள் ஆர்வலர் முனைவர் சதீஷ்குமார் சிவலிங்கம் MA., MPhil உடனான நேர்காணல்!!**

எஸ்.ஸ்ரீகாந்த்



**நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு வழங்கும் வகையில் அரசுடன் இணைந்து பெருந்தோட்ட மக்களுக்கு ஏதாவது செய்யும் நோக்கம் உண்டா? இல்லை என்றால் காரணம்?**

நாட்டின் நிலையான வளர்ச்சி மற்றும் இலக்குகள் கொண்ட வெற்றியை அடைய பொருளாதார மறுசீரமைப்புகளை துரிதமாக முன்னெடுக்க வேண்டும். நவீனமயமாக்கலை துரிதப்படுத்தி சந்தை வாய்ப்புகளை விரிவுபடுத்தவும் அபிவிருத்தி முயற்சிகளுக்கு சர்வதேச சமூகத்தின் பங்களிப்புகளை அதிகரிக்கவும் வேண்டும். இவற்றை விடுத்துவிட்டு கட்சி அரசியல் அல்லது உள்ளூர் அரசியலுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு தற்போது அவசியமில்லை. மலையக மக்கள் முன்னணி என்ற ரீதியிலும் தமிழ் முற்போக்கு கூட்டணியாகவும் எதிர்க்கட்சிகளின் கூட்டணியில் இருக்கின்றோம். இருப்பினும் மக்கள் நலன்கள் சார்ந்த விடயங்களில் இணக்கப்பாடுகளை கடைப்பிடிக்கிறோம்.

அரசாங்கத்தை எதிர்க்காமல் அரசாங்கத்தின் தலைமையை ஏற்றுக் கொள்வதுதான் அபிவிருத்திக்கு வழி வகுக்கும் என்று சிந்திக்கக்கூடாது. ம.ம.மு. நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக சமூக கொள்கைகள் அடிப்படையிலேயே ஆட்சியிலும் எதிரணியிலும் செயற்பட்டுள்ளது. எமது கட்சியின் தலைவர் இராதா கிருஷ்ணனுக்கு அமைச்சரவையில் இணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனாலும் மத்திய கமிட்டியின் தீர்மானங்கள் அடிப்படையில் கொள்கை அரசியலுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

தேர்தல் முறைமை மாற்றத்துக்கான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் அறிக்கை மீதான கலந்தாய்வின் அடிப்படையில் இரத்தினபுரி கேகாலை மாவட்டங்களில் தமிழர் பிரதிநிதித்துவம் பற்றிய தனித்துவமான அறிக்கை தேவைப்படுகிறது. எல்லை மீள் நிர்ணயம் (Delimitation) குறித்தும் தேர்தல் தொகுதி நிர்ணயத்திலும் விரிவான ஆராய்ச்சியுடனான ஏற்பாடுகள் தேவை.

**உழைப்புக்கேற்ற ஊதியம் இன்றும் பெருந்தோட்ட மக்களுக்கு கிடைப்பதில்லை. தொடரும் பிரச்சினைக்கு தீர்வு உண்டா?**

பெருந்தோட்ட சமூகத்தை பொறுத்தவரையில் தொழிலாளர்களின் பல பிரச்சினைகளில் சம்பள விவகாரம் என்பது ஒரு பகுதி மாத்திரமே. அதற்கு அப்பாற்பட்டு பல்வேறு அடிப்படை நெருக்கடிகளுக்கு இந்த மக்கள் முகம்கொடுத்து வருகின்றனர்.

தற்போது தொழிலாளர்களின் சம்பளத்துக்கான கூட்டு ஒப்பந்தம் நடைமுறையில் இல்லை. அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இருக்கும் சம்பள நிர்ணய சபை, தொழில் திணைக்களம் ஆகியன ஊடாகவே சம்பளம் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே தற்போதைய பொருளாதார நெருக்கடிகளுக்கு தீர்வாக தொழிலாளர்களின் வருமானம் அல்லது நிவாரணம் தொடர்பில் அரசாங்கம் விரைந்து தலையிட வேண்டும்.

உலக சந்தையில் தேயிலையின் விலை சடுதியாக அதிகரித்துள்ள நிலையில் சுமார் 75 வீத உற்பத்தியை தன்னகத்தே கொண்டுள்ள சிற்றுடைமையாளர்கள் இலாபம் ஈட்டுகின்றனர். ஆனால் கம்பனிகளின் கீழ் உள்ள பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் நாள் சம்பளத்தையேனும் முழுமையாக வழங்குவதற்கு சில தோட்ட நிர்வாகங்கள் பின்னடிப்பு செய்துவருவது வேதனைக்குரியதாகும்.

**நகர்ப் புறங்களை அண்டி வாழும் இந்திய வம்சாவளி மக்களின் பிரச்சினைகள் குறிப்பாக கொழும்பு தோட்டங்களில் வாழும் மக்களின் அவலங்களுக்கு நீங்கள் வைக்கும் தீர்வு?**

கொழும்பு தலைநகரின் நகர்ப்புறங்கள் மற்றும் ஏனைய நகர்களை மையப்படுத்திய தோட்டங்களில் வாழும் இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் நிலைமையைப் பொறுத்தவரையில் ஏனைய சமூகத்தவரோடு ஒப்பிடுகையில் வாழ்வியல் வசதிகள் திருப்திகரமாக இல்லை. தனிநபர் வருமானம், குடும்ப சுகாதாரம், சமூக வாழ்க்கை நிலைமைகள, கல்வி அடைவுகள், சிறுவர் மற்றும் பெண்ணுரிமை, சனத்தொகையில் ஏற்பட்டுள்ள கணிசமான வீழ்ச்சி போன்றவற்றை கணிப்பிட எந்த அளவுகோலும் இல்லை. சில இடங்களில் பலம் மிக்க சமூகங்களின் அடக்குமுறைகள் காரணமாக அடிப்படை மனித உரிமைகளும் மீறப்படுகின்றன. எனவே குறுகிய கால மற்றும் நீண்டகால அடிப்படையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். தேசிய மட்டத்திலும் சர்வதேச ரீதியிலும் ஐ.நா. அனுசரணை நிறுவனங்களின் அவதானத்தை ஈர்க்க வேண்டும்.

**கடந்ததை பேசும் 'மலையகம் 200' பற்றிய உங்களின் தனிப்பட்ட கருத்து, நோக்கு?**

200 வருடகாலம் என்பது மிகப் பெரிய வரலாற்றுத் தடம். தமிழ்நாட்டிலிருந்து இடம்பெயர்ந்து வந்த இந்திய வம்சாவளி மக்களின் வருகையென்பது 200 வருடங்கள் என்று பார்க்கும்போது, மிக நீண்ட காலம் தான். 1823 இலிருந்து 2023 வரை வரலாறு வளர்ந்திருக்கிறது. இந் நீண்ட காலத்தில் பாரிய மாற்றங்கள் நடந்திருக்க வேண்டும். இதே கால கட்டத்தில் மலேசியா, சிங்கப்பூர் மற்றும் ஏனைய காலனித்துவ நாடுகளுக்கு புலம்பெயர்ந்த மக்களோடு ஒப்பிடும்போது இங்கே சொற்பமான மாற்றங்களே இடம்பெற்றுள்ளன. நாற்பதுகள் தொடக்கம் தொழிற்சங்க அரசியலோடு கட்டுப்பட்டிருந்த மலைநாட்டு அரசியல் அதிலிருந்து விடுபட்டு தேசிய இன அரசியல் களத்திற்கு வந்துள்ளது.

மலையக மக்களின் அடையாளம் எது? மலையக மக்கள் ஒரு தேசிய இனமா? சிறுபான்மை இனமா? அல்லது உலகளாவிய ரீதியில் பலமான இந்திய வம்சாவளி மக்கள் என்ற பொது அடையாளமா? அல்லது இறைமை சார்ந்த பிரச்சினையா? உத்தேச அதிகார பரவலாக்கத்தில் உரிய இடம் கிடைக்குமா? நில ரீதியான அதிகாரப் பகிர்வா அல்லது நிலத் தொடர்பற்ற நிர்வாக அலகைகொண்ட தன்னாட்சி முறைமையா? உதாரணமாக இந்தியாவின் பாண்டிச்சேரி அல்லது பெல்ஜியத்தில் உள்ள கட்டமைப்பா என்றெல்லாம் இராஜதந்திர அணுகுமுறைகளை பற்றி யோசிப்பதே மலையகம் 200 என்பதை பலப்படுத்தும்.

200 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே இந்திய வம்சாவளித் தொடர்புகளை கொண்ட பல தரப்பினரும் இலங்கையில் வாழ்ந்த போதிலும் அவர்கள் இன்று பல்வேறு சமூக கலாசாரங்களோடு ஒன்றர கலந்து விட்டனர். அவ்வாறான மக்களின் சமய சமூக அடையாளங்களும் மாறிவிட்டன. எந்த அடையாளத்தை தம தாக்குவது என்பது அவரவர் விருப்பமாக இருக்கலாம். ஆனால் வரலாறு திரிபுபடுத்தப்படாமல் இருக்கவேண்டும்.

எவ்வாறெனினும் இந்த 200 ஆவது வருடத்தை நினைவுகூரும் முகமாக, அமைச்சரவைப் பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விசேட ஆணைக்குழு ஒன்றை நியமித்து முறையான காலவரையறைக்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். நவீன யுகத்துக்குப் பொருத்தமான அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து பெருந்தோட்டத்துறையில் எவ்வாறான மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்பது தொடர்பில் மலையக அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், புத்திஜீவிகள் என்று சொல்லப்படுவோர், சிவில் சமூகங்கள் இணைந்து சர்வதேச மட்டத்திலான மாநாடொன்றை நடத்த வேண்டும்.

**மலையக மக்களுக்கு புதிய அடையாளத்தை கொடுத்த உங்கள் நல்லாட்சியில் சட்டமாக்கப்பட்ட தோட்டங்களையும் உள்ளூராட்சிக்குள் உள்வாங்கும் செயற்பாட்டின் இயங்கு நிலை தொடர்பில் என்ன சொல்கிறீர்கள். எமது கருத்துப்படி அது சாத்தியப்படவில்லை என்கிறோம். நீங்கள் சொல்ல வருவது என்ன?**

**மலையக மக்களின் உரிமைகள் இன்று மறுக்கப்படுவதான கூற்றை ஏற்றுக்கொள்கிறீர்களா? அப்படியாயின் நீங்கள் முன்வைக்கும் நவீன தீர்வு?**

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பிரகடனத்தின் 25வது உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய நியமங்களுடனான தரமான வாழ்க்கை வாழ்வதற்கான உரிமைகளான சுகாதாரம், உணவு, உடுதுணிகள், வீடு, மருத்துவம், சமூக வசதிகள், பாதுகாப்பான வேலை, நீண்டகால சுனவீனம், அங்கவீனம், விதவை நிலை, மூப்படைதல் முதலான நிலைமைகளோடு ஒப்பிடும் போது மலையக மக்களின் நிலைமைகள் நன்றாக புலப்படும்.

காணி, வீடு, கல்வி, மருத்துவம், சுகாதாரம், ஏழ்மை, பெண்களின் நலன்கள் என பல்வேறு கோணங்களில் வறுமைநிலைகளை உரிமை மறுப்பாகவும் கருதலாம்.

எனவே தீர்வாக நோக்கும்போது சக சமூகங்களிடையே 'மலையகத் தமிழர்' குறித்த நியாயமான புரிதலை உருவாக்குதல் அவசியம். தனித்துவமான சமூகப் பண்பாட்டு அடையாளங்களை கொண்ட இனத்துவமாக பொருளாதார எழுச்சியை நோக்கி வேகமாக முன்னேற வேண்டும். நீண்டகால இலக்குகளை மையப்படுத்தி பொதுவேலைத்திட்டமொன்றை கொள்கை ரீதியாக முன்னெடுக்க வேண்டும்.

அரசியல் யாப்பு சீர்திருத்தத்தில் மலையக மக்களின் நலன்கள் முழுமையாக உள்ளடக்கப்பட வேண்டும். அரசியல் உரிமைகளை பாதுகாப்பதில் மலையக அரசியல், தொழிற்சங்க மற்றும் சிவில் அமைப்புகளின் தலைவர்கள் உடனடியாக காத்திரமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். புதிய அரசியல் யாப்பு ஊடான அதிகார பகிர்வின் போது மலையக மக்களின் அரசியல் நிலைப்பாட்டை அடிப்படையாக கொண்டு அதிகார பகிர்வு கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

புதிய தேர்தல் சீர்திருத்தம் ஊடாக 240க்கும் மேலாக தேர்தல் தொகுதிகள் அதிகரிக்கப்பட வாய்ப்புகள் உள்ளன. மலைநாட்டிலிருந்து இந்திய வம்சாவளி தமிழர்கள் தொகுதி வாரியாக 10 பேர் விகிதாசார அடிப்படையில் 07 பேர் ஆகக் குறைந்தது 17 பேருக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும். தேர்தல் தொகுதி மற்றும் விகிதாசாரத்தை மையமாகக் கொண்டு ஆகக் குறைந்தது மலையக மக்கள் செறிந்து வாழும் நுவரெலியா 05, பதுளை 02, கொழும்பு, கண்டி, இரத்தினபுரி மற்றும் கம்பஹா மாவட்டங்களில் தலா ஒரு பிரதிநிதித்துவம் கிடைக்கக்கூடியதாக பாராளுமன்ற தேர்தல் முறை அமைய வேண்டுமென்பதை வலியுறுத்த வேண்டும். போனஸ், தேசிய பட்டியல், சிறப்பு பிரதிநிதித்துவம் கேகாலை, களுத்துறை, மாத்தறை மற்றும் வன்னி மாவட்டங்களுக்கு கிடைக்க வேண்டும்.

**மலையக மக்கள் இந்திய வம்சாவளி தமிழர் என்ற பதம் தொடர்பான உங்களின் கட்சிசார்பான கருத்து என்ன?**

ம.ம.மு. என்பதை விட எனது தனிப்பட்ட கருத்தாக சொல்கின்றேன். மலையகத் தமிழர்களின் இன அடையாளம் என்பது வெறுமனே சொல்லாடல் மட்டுமல்ல ஒரு இன சமூகத்தின் அரசியல். பொருளாதாரம், ஜனநாயக உரிமைகளைப் பெறுவதற்கு அரசியலமைப்பு சட்டவிதிகளால் உள்வாங்கக் கோருவதாக அமைய வேண்டும். கடந்த 2015ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பு சட்டவிதிகளை உருவாக்கும் கருத்துக்கேற்ப மலையக இன அடையாளம் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை மலையகத்தை சேர்ந்த சில அமைப்புகளால் முன்வைக்கப்பட்டது.

மலையகத் தமிழர் எனும் பதத்துக்குள் தமிழரல்லாத தெலுங்கர், மலையாளிகள் உள்ளிட்டோரும் அடங்குவர். இலங்கையின் மத்திய மலைநாட்டுப் பகுதியில் குடியேற்றப்பட்ட தோட்டத் தொழிலாளர்களும், அப்பிரதேசங்கள் சார்ந்து ஏனைய தொழில் நிலைகளில் உள்ளோரும், அவர்தம் வம்சாவளியினரும் "மலையகத் தமிழர்" என்றே அழைக்கப்பட்ட போதும் இவர்கள் இந்தியாவிலிருந்து வந்து குடியேறிவர்கள் என்பதாலும் ஏனைய உறவு நிலைகள் கலாசாரத் தொடர்புகளால் "இந்திய தமிழர்" என்றும் "இந்திய வம்சாவளித் தமிழர்" என்ற பகுப்புக்குள்ளும் அடங்குவர். இலங்கையின் புள்ளிவிபர அறிக்கைகளில், அடையாள அட்டை வழங்கும் முறையில் மற்றும் ஏனைய பதிவுகளால் இந்தியத் தமிழர் எனக் குறிப்பிடப்படுவதும் நடைமுறையில் உள்ளது.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலும் அதன் பின்னரும் தொடர்ந்து அடிமைத்தனம், அடக்குமுறைகள் காரணமாகவும் பொருளாதார சூழ்நிலைகள் தொடர்புசாதன வசதிகள் இருந்ததன் காரணமாக ஒரு குறிப்பிட்ட சிலரை தவிர அதிகமானவர்கள் இந்தியாவிலுள்ள தமது உறவினர்களுடனான உறவு துண்டிக்கப்பட்டது. இந்தியாவில் தமக்கு சொந்தமாக இருந்த நிலம் மற்றும் சொத்துகளை இழந்தனர்.

இலங்கையில் வசிக்கும் மக்களில் வேடர்களைத் தவிர ஏனையவர்கள் சிங்களவர்கள் என்றாலும் சரி, இலங்கைத் தமிழர் என்றாலும் சரி முஸ்லிம்கள் என்றாலும் சரி, அனைவரும் இந்தியாவிலிருந்து வந்தவர்களே மலே இனத்தவர், ஆபிரிக்க இனத்தவர், முஸ்லிம்களின் சிறு பிரிவினர் மட்டும் இதற்கு விதிவிலக்காக இருக்கலாம். தமிழ் நாட்டிலிருந்து 18 மைல் தொலைவில் இலங்கை இருப்பதால் இந்தக் குடிப்பெயர்வுக்கு வரலாறு முழுவதும் சாத்தியங்கள் அதிகம். இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னர் பல நூற்றாண்டுகளாக இக்குடிப்பெயர்வு இடம்பெற்றிருக்கின்றது.

சிங்கள மன்னர்களுக்கும் தமிழ் நாட்டின் அரச குடும்பங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்திருக்கின்றது. அவர்கள் தமிழ்நாட்டிலிருந்து பெண்களை வரவழைத்து திருமணம் செய்திருக்கின்றார்கள். சிங்கள மன்னர்களின் படைத் தளபதிகளாக தமிழ் நாட்டுத் தமிழர்கள் இருந்திருக்கின்றனர். இவர்களில் மலையக மக்கள் மட்டும் சற்றுத் தாமதமாக இலங்கைக்கு வந்தவர்கள். அவர்களை மட்டும் ஏன் இந்திய வம்வாசளியினர் என அழைக்க வேண்டும்? இந்தியாவிலிருந்து வந்தவர்களை இந்திய வம்சாவளியினர் என்று அழைப்பதாயின் இந்திய வம்சாவளி சிங்களவர்கள், இந்திய வம்சாவளி இலங்கைத் தமிழர்கள், இந்திய வம்வாசளி முஸ்லிம்கள் எனப்பல இந்திய வம்சாவளியினர் இலங்கையில் அடையாளப்படுத்தலாம்.

**வட , கிழக்கு தமிழ் மக்களோடும் தமிழ் தேசிய உணர்வாளர்களோடும் உங்களுக்கு நீண்டகால தொடர்புகள் உண்டு. இப்போதும் அந்த மக்களோடு உங்களது செயற்பாடுகள் எவ்வாறு உள்ளது?**

தமிழினம் என்ற அடையாளத்தில் இலங்கையில் மட்டுமல்ல உலகெங்கிலும் நாம் அனைவரும் ஒரே இனத்தவர்களே. மொழி, பண்பாட்டு கலாசார விழுமியங்கள் ரீதியாக நாடு அல்லது பிரதேச பாகுபாடுகளை கடந்து ஒன்றர கலக்க வேண்டும்.

வட கிழக்கு தமிழ் தேசியம் தொடர்பான போராட்ட வரலாற்றில் எனது பங்களிப்பினை எவராலும் எளிதாக மறக்க முடியாதென கருதுகிறேன். 2001 முதல் 2004 ரணில் - பிரபா, சமாதான ஒப்பந்த காலத்தில் புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் அகதிகள் விவகார அமைச்சின் பணிப்பாளராகவும், பின்னர் 2009 முதல் 2015 வரை மீண்டும் அதே அமைச்சிலும் சிரேஷ்ட ஆலோசகராக (கெபினட் நியமனம்) கடமையாற்றிய காலம் சவால்மிக்க வரலாற்றுப் பதிவுகளை கொண்டது. யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டு அகதிகள் முகாம்களில் இருந்த மக்களின் துரிதமான மீள்குடியேற்றம், நஷ்டஈடுகளை வழங்கும் செயற்பாடுகள் முக்கியமானவை. சிறைச்சாலைகளிலும் அகதிகள் முகாம்களிலும் இருந்த சுமார் பதினைந்தாயிரம் தமிழ் இளைஞர்களின் விரைவான விடுதலை மற்றும் மனித உரிமைகள் அடிப்படையில் அவர்களின் நலனில் சதீஷ்குமார் என்ற பெயர் பிரிக்கமுடியாத அளவிற்கு வேரூண்டியுள்ளதென்பதை தமிழர் தேசிய வரலாறு தெரிந்தவர்கள் அறிவார்கள்.

**இரத்தினபுரி கேகாலை மாவட்டத்தில் வாழும் பெருந்தோட்ட மக்களின் வாக்குகளால் ஏன் ஒரு தமிழ் பிரதிநிதியை பாராளுமன்றத்துக்கு அனுப்பிவைக்க முடியாதுள்ளது?**

விகிதாசார பிரதிநிதித்துவம் என்ற ரீதியில் பார்க்கும் போது ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் போட்டியிடும் கட்சிகள் அல்லது சுயேச்சை குழுக்கள் விகிதாசார அடிப்படையிலேயே உறுப்பினர்களை பெறுகின்றன. அந்த அடிப்படையில் இரத்தினபுரி, கேகாலை மாவட்டங்களில் பாராளுமன்ற பிரதிநிதித்துவம், சப்ரகமுவ மாகாண சபைக்கும் உள்ளூராட்சி சபைகளுக்குமான தமிழர் தெரிவு மிகவும் பின்னடைவாகவே உள்ளது. இதற்கான பிரதான காரணங்களாக புவியியல் ரீதியான நிலப்பரப்பு, இனப்பரம்பல், தொகுதி எல்லைகள், அரசியல் ரீதியான தெளிவான சிந்தனை இல்லாமை, சமூக ரீதியான பல்வேறு பிரிவுகள் என பலவற்றை குறிப்பிடலாம். மலையக மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிகளின் சார்பாக பாராளுமன்றம், மாகாண சபை, மற்றும் உள்ளூராட்சி தேர்தல்களில் நான் போட்டியிட்டுள்ளேன். எனது தனிப்பட்ட அனுபவத்தில் சொல்கிறேன், ஒட்டுமொத்த சமூகமும் ஒன்றுபட்டால் நிச்சயமாக வெற்றிபெற முடியும். சரியான விழிப்புணர்வுடன் அறிவுத்திறனோடு செயற்படக்கூடியவர்களின் பங்களிப்பு இருக்க வேண்டும். ஏமாற்று வித்தைகள், கண்துடைப்புக்கு பதிலாக குறுகியகால, நீண்டகால வேலைத்திட்டங்கள் அவசியமாகிறது.

**அண்மையில் இடம்பெற்ற மாத்தளை சம்பவம் பற்றிய நிலைப்பாடு என்ன?**

மாத்தளை எல்கடுவ ரத்வத்த கீழ் பகுதியில் வசித்துவந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தோட்ட முகாமையாளர் மற்றும் அவரது உதவியாளர்களால் பலவந்தமாக வெ ளியேற்றப்பட்டமை மற்றும் வீடுகள் உடைக்கப்பட்டமை கண்டிக்கத்தக்கது.

அரசாங்கத்துக்கு சொந்தமான தேயிலைத் தோட்டங்களில் வீடமைப்பு மற்றும் காணியுரிமைகள் தொடர்பாக கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் த.மு.கூ. அமைச்சர்கள் அதிகமான ஆர்வம் காட்டியிருந்தார்கள்.

பெருந்தோட்ட பகுதிகளில் சுமார் இரண்டு இலட்சம் தனி வீடுகளுக்கான தேவை காணப்படுகிறது. பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு இந்தியா தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளது. எனவே சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் அதிகாரிகள் முனைப்புடன் செயற்பட வேண்டும்.

- கொள்கை அரசியலுக்கே முன்னுரிமை
- தொழிலாளர்களின் பல பிரச்சினைகளில் சம்பள விவகாரம் ஒரு பகுதி மாத்திரமே.
- மலேசியா, சிங்கப்பூர் மற்றும் ஏனைய காலனித்துவ நாடுகளுக்கு புலம்பெயர்ந்த மக்களோடு ஒப்பிடும்போது இங்கே சொற்பமான மாற்றங்களே இடம்பெற்றுள்ளன.
- ஆகக்குறைந்தது 17 பேருக்கு பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைப்பதை உறுதிசெய்ய வேண்டும்



# கவிதை மஞ்சரி

கிருஷா

kavithaimanjari@gmail.com

## உதிரம் உறிஞ்சும் அட்டைகள்

குகதா





அட்டை உறிஞ்சி மிச்சம் விட்ட
இரத்தமெல்லாம் தூளியில்
துயிலும்
குழந்தைக்கு என்று
பொத்திப் பொத்திக் காத்து வைக்கின்றாள்
மலையகத் தாய் ஒருத்தி
தன் வயிற்றை மறந்து
அரை வயிறு நிறைத்து
மூடு பனிக்கு முக்காடு இட்டு
பாடுபடுமிவளுக்கு பட்டினியும்
தோழன் தான்
உணவோ கஞ்சி
உடையோ கந்தல்
உறையுள் ஓட்டை
உறையது தரமற்றதால்
வானத்து மின்மினிகளும்
வந்து பார்க்கும் இவள்
வாழ்வை அங்கு முற்றுமுழுதாக
தவிப்புகளுடன் தான் நகர்கின்றன
அவள் நாட்கள்

ஒரு நாள் உழைப்பு
ஒரு வயிறு நிறைக்க மறுக்க
ஆறேழு பேருக்கு அவள்
எவ்வாறு அன்னமிடுவாள்?
பவுண் விலை மீன் என்று
அதை மறந்து நாளாச்சாம்
போற போக்கில கஞ்சியும்
கஷ்டம் எண்டு கண்ணீர்
உதிர்க்கின்றாள்

பச்சைப் பசேலென்று என்
இரத்தத்துளிகளால்
அர்ச்சனையும் கண்டு நான்
கிள்ளிய துளிர்களெல்லாம்
என்னவாகும் என்று
யோசித்துப் பார்க்கின்றாள்
ஆனால்
பாவம் அவள் மனமறியாது
பறக்கும் பிளேனில் அவை
பதமான தேனீருக்காய்
பல கோடிக்கு வெளிநாடு போகுதெண்டு...



## சாதித்தது சந்திரயான் 3

காத்தான்குடி எம்.ஐ.அப்துல் நஸார்

மெதுவாக முன்னேறிய இந்திய வானவியல்
மெச்சத்தக்க உயரத்திற்கு தாவிய அறிவியல்
சாதுவாக உழைத்தது இடையறாது இஸ்ரோ
சாதனையில் முடிந்தது முயற்சியின் சான்றோ

இந்திய மண்ணின் வரலாற்று வெற்றி
இறங்கியது விண்கலம் நிலவைத் சுற்றி
சிந்திய வியர்வையால் கிடைத்த விசித்திரம்
சிலிர்ப்பூட்டும் தென்புற தரையிறக்க சரித்திரம்

பாரத தேசத்து விஞ்ஞானிகள் சூழ்ந்தனர்
பார்பேற்ற மிகப்பெரும் சாதனை படைத்தனர்
பார்த்திருக்கும் மேற்குலகு அசந்தே போனது
பாதுகாப்பாய் பயணம் சாத்தியம் ஆனது

ஆரவாரிக்கும் மக்கள் மனங்களில் மகிழ்ச்சி
ஆகாயத்தில் சாதித்த இஸ்ரேவுக்கு புகழ்ச்சி
பாரமான பணியினால் வரலாற்றில் இடம்
புயங்கரத் துணிவினால் பதித்தது தடம்

நீள்பயணத்தில் சந்திரத் தரை தொட்டு
நீலவானம் எங்கும் அக்கினிச் சுடர்விட்டு
களமாடி வாகைசூடிய வீரன் போன்று
கற்சிதமாய் சாதித்த சந்திரயான் மூன்று

## என் காதலனே

வன்னிக்கவி லக்சன்...

என் காதலனே
என் காதலனே
என் கவிதையின்
நாயகனே

உன் கண்களில்
எனை வரைந்த ஓவியனே

உன் இதழ்களினால்
எனை இனித்த
இனியவனே

உன் கரங்களினால்
எனை கடைந்த
கார்மேகனே

உன் மீசையினால்
என்னுள் ஆசைகள்
வைத்தவனே

உன் தாடியினால்
தடயங்கள்
தந்தவனே

உன் உரோம கால்களால்
என் உணர்வை
உறிஞ்சியவனே

உன் நேரிய
தலைமுடியால்
என் குழலை
கோதியவன

உன்னை
மணந்தால்தான்
என்னுயிர் இனி
மண்ணில்



## அதிசயம்

மூதூர் றிஸ்வின்



அதிசயம்
இரு விளக்கில்
உலகம் இயங்குவது

நன்னீரும்
உவர்நீரும்
கூடிக் குறைவது

ஆக்கப்பட்டது எல்லாம்
அழிக்கப்படுவது

அழிக்கப்படுவது எல்லாம்
ஆக்கப்படுவது

ஆகாயத்தில்
வானவில் தீட்டப்படுவது

வரட்சியை
மழை அழிப்பது

மண்
பெரிய விரிப்பானது

தேவைக்கு அதிகம்
சுவாசிக்க முடியாதது

அதிசயம்
ஆயிரம் கடலை விட
ஒரு குடிநீர் கிணறு
அதிசயம்

## வாருங்கள் தோழர்களே நல் வரலாறு படைத்திடுவோம்

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி

ஒழுக்கம் விழுப்பத்தினை
வழங்கிடும் தோழர்களே
இழுக்கின்றி வாழ்ந்திடவே
இணக்கமுடன் இணைந்திடுவோம்
வழுக்கும் வயதினிலும்
வரையறை பேணிடுவோம்
உலுக்கும் தவறுகளில்
விலகியே நின்றிடுவோம்

காலமெல்லாம் கைகொடுக்கும்
கல்வியினைக் கற்றிடுவோம்
கலைகள் பலபயின்று
குவலயத்தில் உயர்ந்திடுவோம்
கடமைகள் பொறுப்புக்களை
கண்ணியமாய் நிறைவேற்றி
மடமைகள் தனைமறந்து
மாண்பினை நாம் காண்போம்

பட்டங்கள் பதவிகளை
எட்டியே பிடித்திடுவோம்
சட்டதிட்டம் பேணிநாளும்
சத்தியத்தை ஏந்திடுவோம்
சாலும் நற்குணங்களின்
சான்றாக இருந்திடுவோம்



சரித்திரத்தின் நாயகராய்
சகலதையும் வென்றிடுவோம்

போதைப் பழக்கத்தை
பாதையில் விரட்டிடுவோம்
வாதை சேர்க்குமந்த
வரதட்சணையை ஒழித்திடுவோம்
மூடப் பழக்கங்களை
மூலைக்குள் ஒதுக்கிடுவோம்
மூத்தோரை மதித்து நாமும்
மகத்துவம் காத்திடுவோம்

தலைமைப் பொறுப்புக்களைத்
தலைமேல் ஏற்றிடுவோம்
தலைமைத்துவப் பண்புகளை
தரணிக்கே உணர்த்திடுவோம்
சீர்மையுறும் வழிதனிலே
நேர்மையுற நடந்திடுவோம்
வாருங்கள் தோழர்களே நல்
வரலாறு படைத்திடுவோம்

## அந்த இரவுகளுக்கு எத்தனை வண்ணங்கள்



வேலணையூர் ரஜிந்தன்

இதேபோலொரு பின்னிரவுக்குப்
பொன்முலாம் பூசிய
நிலவொளி வனப்பினில் தான்

அண்டத்தின் பேரன்பையும்
பேரன்பின் ஆகாயத்தையும்
ஆகாயத்தின் அரவணைப்பையும்
அரவணைப்பின் முழுமையையும்
முழுமையின் நிறைவையும்
நிறைவின் நீள்தலையும்
நீளும் முடிவிலியாய்
ஒற்றைக் குளையல் உணர்த்திவிடும்

உண்மை வார்த்தைகளும்
உதிராப் புன்னகையும்
பரிவுப் பார்வைகளும்
உணர்வின் கரிசனையாய்த்
தெய்வத்தின் காப்பரண் கண்முன்

முற்றத்தில் அமர்ந்து
அன்னத்தை அமிர்தமாக்கி
ஆறுதலாய் உருளையாக்கி
உள்ளங்கையில் தரும்
அம்மாவின் அந்த
முதற் குளையலோடே
தகித்தெரியும் நிலவுக்கும்
பெரும்பசி தீர்ந்து போகும்

ஆம், உண்மைதான்
அன்று அந்த இரவுகளுக்கெல்லாம்
எத்தனை எத்தனை வண்ணங்கள்...

## சதியோடு... விளையாடி...



ஈழகணேஷ்

வீடும் காடும்
தமிழுக்கு
மிக நெருக்கமாய் இருக்கிறது

புதைக்கப்பட்ட பின்
மனிதர்களை தவிர
மற்றவைகள்
முளைத்து விடுகின்றன

மண்ணை தோன்றாத வரை
மண்புழுவின் வாழ்வு நீள்கிறது

எந்த அச்சில்
சுழல்கிறது
வாழ்வின் தரிசனம்
தடுமாற்றங்களோடு

நிற்காத நதிப்போல்
மாறாத அலைப்போல்
மயங்கி விழும்
கற்பனைகளோடு நாம்.!

வாழ்க்கை
எல்லா சதிகளோடும்
சம்பந்தப்பட்டு விடுகிறது
வாழ்வதற்காய்
விழித்து விடும்
உலகத்தோடு ஒட்டி கொள்ள...

## கண்ணீர்ப் புள்ளி

அகமது பைசால், பொத்துவில்

மேகம் உடைத்து
உன் விழிகளை அலையவிட்டு
ஒருகோப்பைக்குள் போட்டு நிரப்பி
நான்பேனாவை மண்டைக்குள்
ஓட்டி கொள்வேன்

என் தேசத்திற்குள்
நீ திரி
அங்கு சன்னலுமில்லை
கதவுமில்லை
ஆனால் காற்று வரும்
உன் முகவரி சுமந்து

எங்கிருந்தாவது அழு
நனைந்திடுவேன்
உனது கண்ணீரில்

ஒரு பானை மௌனம் குடித்து
பிறந்தவளே
என் நெஞ்சில்
தலைபோட்டு அழு

கண்ணீரில் சுவையும்
அழுவதில் சுகமும் இருக்கலாம்

இனி
ஒரு சுமைக்கு ஆறுதல் கூற
தவித்தும்
ஒரு சுகத்திற்கு நன்றி கூற
துடித்தும் பார்
வாழ்க்கையில் ஈரம் ஊறும்

அங்கு சன்னலுமில்லை
கதவுமில்லை
ஆனால் காற்று வரும்
உன் முகவரி சுமந்து

சிரி அழுகிறவரை
அழு சிரிக்கிறவரை

மௌனி
நான் காத்திருக்கும் வரை
பேசு நான் சாகும் வரை

## அப்பா

விவேகவெளி தமிழேந்திரன்
(சரவணமுத்து நவேந்திரன்),
கிழக்கு மாகாணம்



வாடிய கன்னியை
வாழ்வின்துணை ஆக்கியவர்
வாடாமல் உழைத்து
வறுமையைப் போக்கியவர்
தேடிய செல்வத்தைத்
தாலியாய்க் கட்டியவர்
தாரத்தைத் தாயாக்கி
எம்மிடம் தந்தவர்!
★★★
தூரத்தைக் கடந்து
பாரத்தைச் சுமந்தவர்
தாகத்தைத் தீர்க்க
இரத்தத்தை ஈந்தவர்
நேரத்தைக் காத்து
நல்லறம் வளர்த்தவர்
நீதியால், நேர்மையால்
நல்லிடம் வகித்தவர்!
★★★
சீர்கல்வி பெற்றிட
ஏர்தொட்டும் வாழ்ந்தவர்
சோராமல் கற்றிட
அதிகாலை எழுந்தவர்
பேர்பெறச் செய்திட
படிகளை நட்டவர்
படியுயர்ந்து சென்றிட
பலத்தினை இட்டவர்!
★★★
புத்தகம் பத்திரிகையில்
முத்திரை பதித்தவர்
பலதையும் வாசித்து
பாடமாய்ப் போதித்தவர்
நித்த(மு)ம் வாழ்வில்
சுத்தத்தைக் காட்டியவர்
நற்றமிழ் வளர்த்து
நால்வருக்கும் ஊட்டியவர்!
★★★
பொய்யும் புரட்டும்
பூண்டோடு வெறுத்தவர்
பண்பையும் அன்பையும்
பணிவோடு விரும்பியவர்
மெய்யும் கண்டிப்பும்
மேலாகப் பூண்டவர்
மேதினியில் எமக்கு
அப்பாவும் ஆண்டவர்!

## கவிதையாய் நீ வாழ்..!

ஏரூர் கவிமாமணி
எம்.ரி.எம்.அன்ஸார்

சிந்தனை செய்திடு
சித்தம் குளிர்ந்திடும்
கற்பனை பெருகியே
கவிதையும் துளிர்த்திடும்

பார்க்கும் காட்சியெல்லாம்
பாவாய் இனிக்கும்
சேர்க்கும் இடமெல்லாம்
பசுமையைத் திணிக்கும்

விண்ணைத் தொடவே
சிறகும் முளைக்கும்

மண்ணில் சிறக்கவே
மனமும் திளைக்கும்

நிலவும் மலரும்
உயிர்ப் பெற்றெழும்
உலவும் மகிழ்ச்சியும்
உன்னதம் கற்றுத்தரும்

இறந்தும் வாழ்ந்திட
கவிதை உயிராகும்
பிறந்தே வளர்ந்திடும்
கவிதைக்குள் நீவாழ்..!

## உலகளாவிய வர்த்தகத்தை துரிதப்படுத்துவதற்காக

# ITC, GIZB இன் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட அமைப்புகளின் வரிசையை ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி ரணில்



சர்வதேச வர்த்தக மையம் (ITC), Deutsche Gesellschaft f□r Internationale Zusammenarbeit (GIZ Sri Lanka) உடன் இணைந்து, சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள இலங்கை SME களில் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் டிஜிட்டல் தளங்களின் நிலைமாறு தொகுப்பை பெருமையுடன் வெளியிட்டது. கொழும்பில் ஆகஸ்ட் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் ITC மற்றும் GIZ இணைந்து ஏற்பாடு செய்த நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் இது உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

உலகச் சந்தையில் வெற்றி மற்றும் போட்டித்தன்மையுடன் புதிய உயரங்களுக்குச் செல்ல SME களுக்கு அதிகாரம் அளிக்கும் வகையில் நான்கு அதிநவீன அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளன.

வணிகத் துறையின் (DoC) மின் சான்றிதழ் (eCoO) அமைப்பு, விவசாய அமைச்சகத்தின் தேசிய தாவர தனிமைப்படுத்தப்பட்ட சேவையில் (NPQS) மின்னணு கட்டண நுழைவாயில், பதிவு மற்றும் கண்காணிப்பு டிஜிட்டல் மயமாக்கல் தேசிய கரிமக் கட்டுப்பாட்டுப் பிரிவில் (NOCU) வேளாண்மை தொடர்பான பங்குதாரர்கள் மற்றும் தேசிய வர்த்தக வசதிக் குழுவிற்கான (NTFC) முன்னேற்றக் கண்காணிப்புக் கருவியின் உருவாக்கம் ஆகியவை அடங்கும்.

முழுமையாக டிஜிட்டல் மயமாக்கப்பட்ட eCoO அமைப்பு, பொருட்களின் மூலம் மற்றும் வர்த்தக ஒப்பந்தப் பலன்களுக்கான தகுதியை நிறுவுவதற்கு முக்கியமான, தோற்றத்திற்கான முன்னுரிமைச் சான்றிதழ்களை வழங்குவதை ஒழுங்குபடுத்துகிறது.

இந்த அமைப்பு குறிப்பிடத்தக்க வகையில் CoO வழங்கும் நேரத்தை 93% குறைக்கிறது, செயலாக்க நேரம் வெறும் 30 நிமிடங்களாகக் குறைக்கப்படுகிறது, இது கணிசமான செலவுகளைச் சேமிக்கிறது மற்றும் கார்பன் தடத்தைக் குறைக்கிறது, பல பயணங்கள் மற்றும் காகித ஆவணங்களைத் தவிர்ப்பதன் மூலம் சுற்றுச்சூழல் நட்பு வர்த்தகத்தை ஊக்குவிக்கிறது.

NPQS இல் உள்ள இபேமென்ட் கேட்வே வர்த்தகர்களுக்கு வசதியான மற்றும் பாதுகாப்பான கட்டண தேர்வுகளை வழங்குகிறது, எந்த இடத்திலிருந்தும் விரைவான பரிவர்த்தனைகளை செயல்படுத்துகிறது.

## தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்துடன் செலான் வங்கி பங்காண்மை



செலான் வங்கியானது, தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்துடன் மூலோபாய பங்காண்மை ஒன்றை ஏற்படுத்தியதன் மூலம் இலங்கையின் ஏற்றுமதித் துறையை ஊக்குவிப்பதற்கான முக்கிய அடியொன்றை எடுத்து வைத்தது.

இந்த இணைந்த முயற்சியானது நாட்டின் உள்நாட்டு உற்பத்திகளை சர்வதேச சந்தையில் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள அதேவேளை அனுபவமிக்க ஏற்றுமதியாளர்கள் மற்றும் ஆர்வமிக்க தொழில் முயற்சியாளர்கள் என இரு தரப்பினருக்கும் விரிவான நிதித்தீர்வுகளையும் ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு எதிர்பார்க்கிறது.

செலான் வங்கியின் பணிப்பாளர் பிரதம நிறைவேற்று அதிகாரி ரமேஷ் ஜயசேகர மற்றும் தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனத்தின் செயலாளர் நாயகம் பிரதம நிறைவேற்று அதிகாரி ஷிஹாம் மரிக்கார் ஆகியோர் இரு அமைப்புகளையும் சேர்ந்த ஏனைய பிரதிநிதிகளின் முன்னிலையில் இந்த உறுதிப்பாட்டை வலியுறுத்தும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இந்த மூலோபாய இணைப்பின் துணையோடு, செலான் வங்கி மற்றும் தேசிய ஏற்றுமதியாளர் சம்மேளனம் என்பன இலங்கையின் ஏற்றுமதி சந்தையின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருந்திட, பொருளாதார சுபீட்சத்தை மேம்படுத்திட மற்றும் சிறப்பான நிதியறிவினை நோக்கி தேசத்தை முன்கொண்டு சென்றிட உறுதி பூண்டுள்ளனர்.

இந்த இணைவாக்கமானது நாட்டின் ஏற்றுமதி வலையமைப்புக்கு பக்கபலமாக இருப்பதோடு, பெறுமதிமிக்க ஆலோசனைகளையும் வழிகாட்டலையும் வழங்கி, அத்துடன் வெவ்வேறு துறைகளைச் சார்ந்த ஏற்றுமதியாளர்களுக்கான ஒரு முக்கியமான நிதிசார் இடையீட்டாளராக தொழிற்படும்.

# நிதியாண்டின் முதலாவது காலாண்டில் 14.1% ஆண்டு வளர்ச்சியை பதிவு செய்த சன்ஷைன் ஹோல்டிங்ஸ்



பன்முகப்படுத்தப்பட்ட இலங்கையிலுள்ள நிறுவனமான சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி (CSE: SUN) நிலவும் மேக்ரோ பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில் 14% ஆண்டுக்கான (YoY) உயர்மட்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது. நடப்பு நிதியாண்டின் (1QFY24) முதல் காலாண்டில் குழுமம் 13.4 பில்லியன் ரூபாவாக ஒருங்கிணைக்கப்பட்ட வருவாயைப் பதிவுசெய்துள்ளது. நிர்வாகம் மற்றும் S&D செலவுகள் மற்றும் நிதிச் செலவுகளில் ஆண்டுக்கு 93.5% அதிகரிப்பைக் கொண்டிருந்தது. குழுமத்தின் முக்கிய துறைகளான சுகாதாரம், நுகர்வோர் மற்றும் வேளாண் வணிகம் ஆகியவற்றின் வலுவான வளர்ச்சியின் காரணமாக வருவாய் அதிகரிப்பு முக்கிய பங்கை வகித்தது.

குழுமத்தின் ஹெல்த்கேர் துறையானது சன்ஷைனின் Toplineல் மிகப்பெரிய பங்களிப்பாளராக உருவெடுத்தது, மொத்த வருவாயில் 47.2%, நுகர்வோர் 35.1% மற்றும் மொத்த வருவாயில் விவசாய வணிகம் 17.6% ஆகும்.

செயல்திறன் குறித்து கருத்து தெரிவித்த சன்ஷைன் ஹோல்டிங்ஸ் பி.எல்.சி.இன் தலைவர் அமல் கப்ரால், “சவால்களுக்கு மத்தியில், சன்ஷைன் ஹோல்டிங்ஸ் FY24 இன் முதல் காலாண்டில் பாராட்டத்தக்க உயர்மட்ட வளர்ச்சியை எட்டியுள்ளது.

சன்ஷைனின் வெற்றியானது, அதன் குழுவின் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும், மேலும் அதன் முக்கியத் துறைகளான ஹெல்த்கேர், நுகர்வோர் மற்றும் விவசாய வணிகம் ஆகியவற்றில் சிறப்பாக செயல்படுவதில் கவனம் செலுத்துகிறது.

நிலவும் பொருளாதார நிச்சயமற்ற நிலைகள் இருந்தபோதிலும், மாற்றமடைந்து வரும் திறன் நிறுவனத்திற்குள் பொதிந்துள்ள சுறுசுறுப்பு மற்றும் பின்னடைவைக் காட்டுகிறது.

## RIIO சர்வதேச மாநாட்டில்' பங்கேற்றது பாத்ஃபைண்டர் அறக்கட்டளை




இந்து சமுத்திரத்திற்கான எட்டாவது ஆராய்ச்சி நிறுவன (RIIO) சர்வதேச மாநாடு, இந்தியப் பெருங்கடலில் நீலப் பொருளாதார ஒத்துழைப்புக்கான சவால்கள் மற்றும் சாததியக்கூறுகளை மையமாகக் கொண்டது, இது சீனாவின் குன்மிங்கில் நடைபெற்றது.

பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக் கண்ணோட்டத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டில், பங்களாதேஷ், இந்தியா, இந்தோனேசியா, மாலைதீவு, மலேசியா, மியான்மர், பாகிஸ்தான், சிங்கப்பூர், இலங்கை, தாய்லாந்து உள்ளிட்ட தெற்காசியா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் உள்ளகொள்கை வகுப்பாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் கலந்து கொண்டனர்.

இங்கு விவாதங்கள் நான்கு முக்கிய கருப்பொருள்களின் கீழ் நடைபெற்றன, அதாவது இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் உள்ள பெரும் சக்திகளுக்கு இடையேயான மூலோபாய போட்டி மற்றும் ஒத்துழைப்பு, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்புக்கான புவிசார் அரசியல் மாற்றங்கள் மற்றும் சவால்கள், கூட்டுறவு பொறிமுறை மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் நீல பொருளாதார கூட்டாண்மையை உருவாக்குதல், மற்றும் சிக்கல்கள், சவால்கள் மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள்.

மேற்கூறிய கருப்பொருட்கள் மீதான விவாதங்கள் இலங்கைக்கு நீல பொருளாதார அபிவிருத்தி வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள உதவும். குறிப்பாக, இந்த ஆண்டின் பிற்பகுதியில் இலங்கை இந்தியப் பெருங்கடல் சங்கத்தின் (IORA) தலைமைப் பொறுப்பை ஏற்று, அபிவிருத்தியில் புவிசார் அரசியல் உணர்திறன் பற்றிய ஆழமான புரிதலை வளர்த்துக்கொள்வதால், பிராந்தியத்திற்குள் நீல பொருளாதார பங்காளித்துவத்தை கட்டியெழுப்புவது விவாதத்தின் முக்கிய விஷயமாக இருந்தது.

## Marina Square இன் ‘Tower Cove’ மேல்தட்டு நிர்மாணப் பணிகள் பூர்த்தி



இலங்கையின் முதல் மற்றும் மிகப்பெரிய துறைமுக முகப்பு கலப்பு நிர்மாணச் செயற்திட்டமான Marina Square கொழும்பு துறைமுக நகரத்தின் ஐந்து கோபுரங்களில் நான்காவதான Tower Cove இன் மேல்தட்டு கட்டமைப்பு நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு, மற்றுமொரு சாதனை இலக்கினை அது கொண்டாடியுள்ளது. இது ஒரு நிலையான அட்டவணையின் 6 வது சாதனை இலக்கு எட்டப்பட்டுள்ளமையைக் குறித்து நிற்பதுடன், ஒட்டுமொத்தமான 147 தளங்களில் 125 அடுக்குமனை கோபுரத் தளங்களின் கட்டமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ளமையையும் குறிக்கிறது.

இரண்டு நிர்மாணிப்பாளர்களின் இரு பிரதிநிதிகள், செயல்திட்ட ஆலோசகர்கள், ஒழுங்குமுறை அதிகாரிகள் மற்றும் ஏனைய பிரமுகர்கள் முன்னிலையில், அந்த இடத்தில் விசேட மேல்தட்டு நிர்மாண வைபவம் நடைபெற்றது. 2022 ஆம் ஆண்டின் பொருளாதார இடர்பாட்டிலிருந்து வெளிவருகின்ற சவால்களுடன் கூடிய ஒரு ஆண்டில் இந்தத் திட்டமானது சீரான முன்னேற்றம் கண்டு வருவதை இது காண்பிக்கிறது. அதன் இரண்டு நிர்மாணிப்பாளர்களாக செயல்படுகின்ற, தொழில்துறையின் இரு பெரும் செயல்பாட்டாளர்களான Access Engineering PLC (AEL) மற்றும் China Harbor Engineering Company ஆகியவற்றின் கூட்டுப் பலத்தால் வலுவூட்டப்பட்டுள்ள சவாலான காலகட்டங்களில் நிலைபேறான கட்டுமான செயல்பாடுகள் மூலம் தன்னுடன் தொடர்புபட்ட அனைத்து தரப்பினருக்கும் தனது அர்ப்பணிப்பை தொடர்ந்து நிரூபித்துள்ளது.

# வளர்ந்து வரும் இஸ்லாமிய நிதி நிறுவனமாக தங்க விருதினை வென்ற ஓரியன்ட் பைனான்ஸ்

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான ஓரியன்ட் பைனான்ஸ், மதிப்பிற்குரிய “இலங்கை இஸ்லாமிய வங்கி மற்றும் நிதித் தொழில் விருதுகளில்” தனது சாதனைகளை பெருமையுடன் அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது.

இந் நிகழ்வில் ஓரியன்ட் மாற்று நிதி வணிகப் பிரிவு (AFBU) இரண்டு மதிப்புமிக்க விருதுகளுடன் கௌரவிக்கப்பட்டுள்ளது. “ஆண்டின் வளர்ந்து வரும் இஸ்லாமிய நிதி நிறுவனத்திற்கான தங்க விருது, மற்றும் ஆண்டின் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரச்சாரத்திற்கான மெரிட் விருது”.

இந்த பாராட்டுக்கள் இஸ்லாமிய நிதித்துறையில் சிறந்து விளங்குவதற்கும் புத்தாக்கத்திற்கும் AFBU காண்பிக்கும் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றன.

ஓரியன்ட் பைனான்ஸ் மாற்று நிதி வணிகப் பிரிவு, இந்த ஆண்டின் வளர்ந்து வரும் இஸ்லாமிய நிதி நிறுவனமாக அங்கீகாரம் பெற்றது, அதன் பயணத்தில் ஒரு மைல்க்கல்லாக கருதப்படுகிறது.

இஸ்லாமிய நிதிக் கொள்கைகளை நிலைநிறுத்துவதில் அதன் அர்ப்பணிப்பு, வெற்றிகரமான வணிக விரிவாக்கம், அதன் மக்கள் மற்றும் குழுவில் மூலோபாய முதலீடுகள், சிறந்த வாடிக்கையாளர் சேவைக்கான அர்ப்பணிப்பு, நெறிமுறை மற்றும் ஷரியாஇணக்க நடைமுறைகளை உறுதி செய்தல், அதன் வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்ட தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் விரிவான வரிசை என்பன இவ் வெற்றிக்கான முக்கிய காரணிகளாகும்.

இம்முயற்சிகள் ஓரியன்ட் மாற்று நிதி வணிகப் பிரிவின் வெற்றிக்கு கை கொடுத்தது என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது. AFBU இஜாரா லீசிங் வணிகம் LKR 600 மில்லியனுக்கு அதிக தொகையையும், Wakalah தவணை முதலீடுகள் LKR 500 மில்லியனுக்கு அதிகமான தொகையையும் இரண்டாண்டுகளுக்குள் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# தேயிலை தோட்ட சுற்றுலா திட்டத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்து



இலங்கையின் பாரிய மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட ஹெய்லிஸ் குழுமத்தின் முக்கிய நிறுவனங்களில் ஒன்றான ஹெய்லிஸ் பெருந்தோட்ட நிறுவனமானது நாட்டின் சுற்றுலா துறையை மேம்படுத்தும் நோக்கில் அதன் தொலைநோக்கு திட்டத்தை முன்னெடுக்க “The Pekoe Trail” உடன் கைகோர்த்துள்ளது.

ஹெய்லிஸ் பெருந்தோட்ட நிறுவனத்தின் பிரதான பிரதேச பெருந்தோட்ட நிறுவனங்கள் (RPCs) மூன்றான களனிவெலி பெருந்தோட்ட நிறுவனம் (KVPL), தலவாக்கலை பெருந்தோட்ட நிறுவனம் (TTEL) மற்றும் ஹொரனை பெருந்தோட்ட நிறுவனம் (HPL) ஆகியன இலங்கையின் மொத்த தேயிலை உற்பத்திக்கு 4.6% பங்களிப்பை வழங்குகின்றது. 44 தேயிலை தோட்டங்களினூடாக தொடரும் The Pekoe பாதை, எழில் கொஞ்சும் மலை நாட்டிலுள்ள ஹெய்லிஸ் தோட்டத்தின் 6 சிறந்த தேயிலை தோட்டங்களின் வழியாக செல்கிறது.

“அனைவருக்கும் நிலையான மதிப்பை உருவாக்கும் அதேவேளையில், இத்திட்டத்தின் மூலம் எமது தேசத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்காக பங்களிப்பதே எமது கூட்டு நோக்கமாகும். சிலோன் தேயிலையின் எதிர்காலம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் அனைத்து பங்குதாரர்களின் நல்வாழ்வுக்கும் முன்னுரிமை அளிக்கும் புதுமையான மற்றும் ஆக்கபூர்வமான நிலையான வளர்ச்சிக் கருத்துக்கள் மற்றும் செயல்களில் உள்ளது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை கலாசார அனுபவத்தை வழங்குவதுடன் நிலையான தேயிலைத் தோட்ட சுற்றுலா திட்டத்தின் மூலம் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் பகிரப்பட்ட நன்மைகளை வளர்ப்பதே எமது நோக்கமாகும்” என ஹெய்லிஸ் தோட்டங்களின் முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி ரொஷான் ராஜதுறை குறிப்பிட்டார்.

இலங்கைத் தேயிலையானது உலகின் சிறந்த தேயிலை என்ற நன்மதிப்பையும், பெருமைமிகு வரலாறையும் தன்வசம் கொண்டுள்ளது.

## பொலிஎதிலீன் குழாய் உற்பத்தி தொழிற்சாலையை திறந்து வைத்துள்ள Hayleys Agriculture நிறுவனம்

புத்தாக்க தொழில்நுட்பத்திலான (Inotec) பொலிஎதிலீன் (PE) குழாய் உற்பத்தி தொழிற்சாலையை Hayleys Agriculture Holdings Limited திறந்து வைத்துள்ளதன் மூலம் விவசாய நீர்ப்பாசனத்தில் ஒரு புதிய சகாப்தம் உதயமாகியுள்ளது. Lindel கைத்தொழில் வலயமான சபுகஸ்கந்தவிற்குள் அமைந்துள்ள இந்த தொழிற்சாலையானது, மேம்பட்ட நீர்ப்பாசன தீர்வுகளை வழங்குவதன் மூலம், இலங்கையின் விவசாய நடைமுறைகளில் புரட்சியை ஏற்படுத்தவுள்ளது.

இவ்விழாவின் பிரதம அதிதிகளாக விவசாய அமைச்சின் செயலாளர் குணதாச சமரசிங்க, Hayleys PLC இன் தலைவரும் அதன் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான மொஹான் பண்டிதகே உள்ளிட்டோர் கலந்து கொண்டதோடு, விவசாயத் துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டத்தின் பணிப்பாளர் கலாநிதி ரொஹான் விஜேகோன் மற்றும் விவசாயத் திணைக்களத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

Hayleys Agriculture Holdings Limited மற்றும் புகழ்பெற்ற PE குழாய்கள் மற்றும் பொருத்துதல்கள் உற்பத்தியாளரான தாய்லாந்தின் Kanok Products ஆகியவற்றிற்கு இடையேயான ஒரு மிகப் பாரிய கூட்டாண்மையின் ஆரம்பத்தைக் குறிக்கும் வகையிலான இந்த நிகழ்வானது, மேம்பட்ட நுண்நீர்ப்பாசன தொழில்நுட்பத்தில் Kanok இன் நிபுணத்துவத்தை Hayleys Agriculture இன் நோக்குடன் இணைந்து செயற்படுத்துகிறது.

# பார்வையாளர்களை பரவசப்படுத்திய 'ஹிஜ்ரத்' சிறப்புக் கவியரங்கம்

மிக நீண்ட இடைவேளைக்குப் பிறகு ஒரு வித்தியாசமான கவியரங்கினைப் பார்க்கவும் கேட்டு ரசிக்கவும் வாய்ப்பு கிடைத்தது. கொழும்பு பிராந்திய இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமி, தாருல் ஈமான் இலக்கிய வட்டத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட 'ஹிஜ்ரத்' சிறப்புக் கவியரங்கமே அது. அண்மையில் (15.08.2023) கொழும்பு.10, தெமட்டகொட வீதி, தாருல் ஈமான் கேட்போர் கூடத்தில், 'ஹஸ்ஸான் பின் ஸாபித்' அரங்கில் இக்கவியரங்கம் நடைபெற்றது

இஸ்லாமிய வரலாற்றில் திருப்புமுனையினை ஏற்படுத்திய "ஹிஜ்ரத்" நிகழ்வை கருப் பொருளாகக் கொண்டு, இஸ்லாமிய புத்தாண்டை முன்னிட்டு இக்கவியரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இளையவர் அஸ்ஹர் சாதாத் (நளீமி) அழகு தமிழில் நிகழ்ச்சியினைத் தொகுத்தளித்தார்.

கொழும்பு ஜமாஅத்தே இஸ்லாமியின் செயலாளர் சட்டத்தரணி பாரிஸ் சாலி தனது வரவேற்புரையை வரவேற்புக் கவிதையாகவே பாடி, ஹிஜ்ரத் பற்றிய தனது ஆழமான கருத்தினை கவித்துவமாக வைத்து கவியரங்கின் ஆரம்பத்திலேயே உற்சாகத்தை ஏற்படுத்தினார்.

மண்டபம் பார்வையாளர்களால் நிரம்பி வழிந்தது. தாமதமாக வந்தவர்களுக்காக மேலதிக இருக்கைகள் வழங்கப்பட்டன. மேடையின், பின்னணியில் பிரமாண்டமான, அழகிய 'பானர்', கவர்ச்சிகரமாக காட்சியளித்தது. வருகை தந்தோருக்கு, கௌரவமான, அன்பான வரவேற்புடன், சுவையான சிற்றுண்டியும், தேநீரும் வழங்கப்பட்டன. தேநீர் இடைவேளையின்








போது அஷ்ஷெய்க் நளீர் நஸீம் (நளீமி) இஸ்லாமிய கீதமொன்றை இசைத்து பார்வையாளர்களை பரவசப்படுத்தினார். இவற்றோடு இடையூறில்லாத தெளிவான ஒலிபரப்பு என எல்லா ஏற்பாடுகளும் மிகச்சிறப்பாக, கச்சிதமாக செய்யப்பட்டிருந்தன.



நாடறிந்த இலக்கியவாதியும், கவிஞருமான தேசிய சூரா சபையின் பொதுச் செயலாளர், சிரேஷ்ட சட்டத்தரணி, இலக்கியச் செம்மல், கலாபூஷணம், ரஷீத் எம் இம்தியாஸ் கவியரங்கிற்குத் தலைமை தாங்கினார். கவிஞர்கள் ரவூப் ஹஸீர், புத்தளம் மரைக்கார், கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ், நாச்சியாதீவு பர்வீன் ஆகியோர் அவர் தலைமையில் கவிதை பாடினர்.

தலைமைக் கவிஞர் ரஷீத் எம். இம்தியாஸ், சிறப்பான ஆரம்பக் கவிதை, தொகுப்பான நிறைவுக் கவிதை என நற்கவி வரிகளால் கவியரங்கை சிறப்பித்தார். கவிதைகள் பாடிய கவிஞர்களை அழைத்த விதம், அவரவரது கவிதை முடிவில் அவர்களை வாழ்த்திய விதம் என்பன கவிஞர்களையும், சபையோரையும் ஒருசேர உற்சாகத்தில் வைத்தது.



பாடிய அனைத்துக் கவிஞர்களும் உணர்வு பொங்கும் கவிதைகளால் அரங்கை அதிரவைத்தனர். அவர்களது கவிதைகள் பார்வையாளர்கள் எழுந்து செல்லாமல் உற்சாகத்தோடு அமர்ந்திருக்கச் செய்தமை அண்மைக்கால கவியரங்குகளைவிட இதன் வித்தியாசத்தை எடுத்துக் காட்டியது. முழு அரங்கமும் விழிகளை அகல விரித்து செவிகளைக் கூர்மையாக்கி கவிதைகளை இரசித்தமை விசேடமாகும்.

'ஹிஜ்ரத்' என்ற சொல் ஒவ்வொரு கவிஞரின் பார்வையிலும் ஒவ்வொரு விதமாக தோற்றமளித்தது. சரித்திர நிகழ்வுகளை இன்றைய காலத்து நிகழ்வுகளுடன் சம்பந்தப்படுத்திய அவர்களது கவிதைகள் பார்வையாளர்களின் அறிவுப் பசிக்கு விருந்தளித்தமை குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டிய ஒன்றாகும்.

தாருல் ஈமான் இலக்கிய வட்டத் தலைவர் எம்.எச்.எம். ஹசன் நன்றியுரையை, முடிவுரையாக சிறப்பாக வழங்கினார். கவியரங்க தலைவர் சட்டத்தரணி ரஷீத் எம் இம்தியாஸ், கவிதைகள் பாடிய கவிஞர்கள் உட்பட நிகழ்ச்சிகள் அரங்கேற்றிய அனைவருக்கும் நினைவுப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில், இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் தலைவர் உஸ்தாத் ஹுஸைர் இஸ்லாஹி, முன்னாள் தலைவர் உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர், ஆகியோரோடு வலம்புரி கவிதா வட்டத்தின் தலைவர் என். நஜ்முல் ஹுசைன், செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன், வகவக் கவிஞர்களான அலி அக்பர், எம். எஸ். எம். ஜின்னா, யாழ் அஸீம், வாழைத்தோட்ட வஸீர், நியாஸ் ஏசமத், சமூக ஜோதி ரபீக், மலாய்க்கவி டிவான்சோ, நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் மற்றும் ரமீஸா இம்தியாஸ், நூருல் ஷிபா ஸாஹிர் உட்பட கவிஞர்கள், கலைஞர்கள், துறைசார் நிபுணர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் சபையை அலங்கரித்தனர்.

மாதம்பை இஸ்லாஹியா அரபுக் கல்லூரியின் மாணவர்கள், அங்கிருந்து இந்நிகழ்ச்சிக்காகவே வருகை தந்து இதில் கலந்து கொண்டமை விசேடமாகக் குறிப்பிடத்தக்கதாகும். தாருல் ஈமான் இலக்கிய வட்டத் தலைவர் எம். எச். எம். ஹஸன், செயலாளர் எம். எல். எம் தவ்பீக் உட்பட்ட குழுவினர் வெற்றிகரமான இந்நிகழ்ச்சி ஏற்பாட்டின் பாராட்டுக்குரியவர்கள்.

இக்கவியரங்கத்தை முழுமையாக நேரலை ஒளிப்பதிவாக 'யூடியுபில்' பார்வையிட முடியும்.

இத்தகைய சிறப்பான நிகழ்ச்சிகளை தொடர்ந்தும் நடாத்த வேண்டுமென தாருல் ஈமான் இலக்கிய வட்டத்தைக் கேட்டுக்கொள்கிறோம். பார்வையாளர்களை பரவசப்படுத்திய 'ஹிஜ்ரத்' சிறப்புக் கவியரங்கம்

**அபூ ஷப்னா**

# வெள்ளை உள்ளம்



விலை மதிக்க முடியாத வித்தியாசமான வடிவங்களில், வர்ணங்களில் வேகமாக வாகனங்கள் ஓடிக்கொண்டே இருக்கும் அந்த பேஸ் லைன் பிரதான வீதியிலிருந்து பிரியும் சிறிய ஒழுங்கை, இதை இங்கு வாழும் மக்கள் தோட்டம் என்று சொல்வார்கள்.

இது போன்ற தோட்டங்கள் விசாலமான வீதிகளுடன் மாடி வீடுகளுடன் கொழும்பு ஏழு பகுதிகளிலும் உள்ளன. ஆனால் அவை அதிகமாக ஆங்கிலத்தில் காடன் என்றே அழைக்கப்படுகின்றன. அந்த கார்டன்களில் நிறையவே வசதியானவர்களே வாழ்வது போல் இந்த தோட்டங்களில் வறிய மக்கள்தான் கூடுதலாக வாழுகிறார்கள்.

இன்று இந்த தோட்டம் சற்று ஓய்ந்து போனதாய் மௌனித்து கிடக்கிறது... எப்பவுமே மனிதர்கள் வீட்டில் இருப்பதை விட வெளியில் நிற்பதும் நடப்பதுமாக இயங்கிக்கொண்டே இருந்த இந்த தோட்டம் ஏதோ ஊரடங்கு சட்டம் போட்டது போல் இருக்கிறது இன்று.

இரு மருங்கிலும் காணப்படும் வீடுகள் கூடுதலாகவே ஒற்றை அறை கொண்டவை. அவற்றுக்காக ஒரு ஒதுக்குபுறத்தில் கட்டப்பட்ட மலசலகூடங்கள், குளிப்பதற்கும், குடிப்பதற்கு நீர் எடுக்க பொது தண்ணீர்க் குழாய்கள் என இவ்வாறான அமைப்புகளால் எப்போதுமே மக்கள் வெளியில் சகஜமாக நடமாடுவர்.

மலசலகூடம் செல்வோர் குளிப்பவர்கள், குடிநீர் எடுக்க வருபவர்கள் இதைவிட ஒற்றை அறைகளில் உஷ்ணம் தாங்க முடியாமல் வெளியில் நிற்பவர்கள் என்று அந்த தோட்டத்து சனங்கள் வெளியிலேயே தங்கள் பகல் பொழுதை கழிப்பது வழக்கம்.

இவர்களுக்கான கலாசாரம் மிகவும் வித்தியாசமானது ஆராய்ந்து பார்த்தால், நமக்கு ஆச்சரியமாகவும் சிலரின் வாழ்க்கை முறை அதிர்ச்சியானதாகவும் இருக்கும்.

மொழிகள், மதங்கள் பெரிய பிரச்சினை இல்லை. இவர்களுக்கு இது பற்றி இங்கு பேசவும் முடியாது. பெரும்பான்மையாக யார் இங்கு இருக்கிறார்களோ அவர்களின் வழியிலே தாமும் போய் விடுவதும் கூட சில தோட்ட அமைப்புகளில் காண முடியும்.

மதம், மொழியைப்போல் நிரந்தர தொழில் செய்பவர்களும் இங்கு குறைவு. அன்றாட தேவைக்காக தொழில் புரிபவர்கள்தான் அதிகம்.

இந்த வீட்டமைப்பு முறைகளால் இங்கு ஒரு வீட்டில் விஷேசம் என்றால் எல்லா வீடுகளிலும் விஷேசம் போலவும் துக்கமென்றால் அனைத்து வீடுகளும் துக்கமாகவே இருக்கும்.

இந்த தோட்டத்துக்குள் இன்றுவரை தன் ஆதிக்கத்தை செலுத்தி மற்ற தோட்டங்களில் இருக்கக் கூடிய போதைப் பாவனை, விற்பனை அண்டை வீடுகளுடனான சண்டைகள் எவையும் ஏற்படாமல் அமைதி காத்து வந்தவர் களு அக்கா. மூத்தவர் இளையவர் யாராலுமே இப்படி அழைக்கப்பட்ட களு அக்காவின் மரணம் தான் இந்த மௌனத்துக்கும் சோகத்துக்கும் காரணமானது.

இத்தனை காலமும் களு அக்கா என்று அழைக்கப்பட்ட இவரின் உண்மையான பெயரை பலர் இன்று அவரின் மரண அறிவித்தலில்தான் அறிகிறார்கள் களு மெனிக்கே என்று.

நன்றாகவே கொழுத்த உடம்பு கறுப்பு நிறம், வெற்றிலை மென்று கறுத்துப்போன பற்கள். ரவிக்கையும் லுங்கியும் கட்டிக்கொண்டு தன்னால் கட்டுப்படுத்த முடியாத சரீரத்தை தாங்கி ஆடி ஆடி நடப்பாள்.

கணவன் சாதாரண ஒரு நகரசபை ஊழியனாக இருந்து இறந்துபோன பின் அவனின் ஓய்வூதியத்தில் தான் தன் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருந்தாள். களு அக்கா அந்த வருமானத்திலும் ஒரு சிறு தொகையை அவசர பணத் தேவைக்காக வருபவர்களுக்கு நியாயமான வட்டிக்கு கொடுப்பது வழக்கம். எப்பவுமே அவளது ரவிக்கைக்குள் ஒரு மணிபர்ஸ் ஒன்று மறைந்து இருக்கும். அதில் காசும் இருந்துகொண்டேதான் இருக்கும்.

வட்டி விஷயத்தில் யாரும் இவளுடன் விளையாட முடியாது. தருவதாய் கூறிய திகதி பிந்தினால் குறித்தவரைக் கண்டு பேச வேண்டியவைகளை பேசிவிட்டு, என்னை இப்படியெல்லாம் உன்னை பேசும்படி வைத்துக் கொள்ளாமல் பணத்தை நேரத்துடன் திருப்பி தந்துவிடு என்பாள்.

இது அவர்களுக்கு ஒரு வித்தியாசமான அனுபவமாக பட, குறித்த நபரும் பணத்தை, வட்டியை நேரத்துக்கு கொடுத்து விடுவார்.

பிறவியில் பௌத்த மதத்தை சேர்ந்த இவளிடம் ஜாதி, மத பேதங்கள் இருக்கவில்லை. இதே தோட்டத்தில் இருந்த குமார என்ற சிங்கள இளைஞன், தான் ஒரு தமிழ்ப் பெண்ணை விரும்பி பெண் வீட்டாரின் எதிர்ப்பால் அந்த பெண்ணை அழைத்து வந்த சமயம் தோட்ட மக்கள் அனைவரும் குமார குடும்பத்தவரும் எதிர்த்தபோதும் களு அக்கா அவர்களுக்கு தன் வீட்டில் இருப்பிடம் கொடுத்து சேர்ந்து வாழ வழி செய்தாள்.

காலம் கடந்த திருமண பந்தத்தில் இணைந்த இவர்களுக்கு ஒரு வாரிசு இருக்கவில்லை. இதனால் இவளும் இவளது கணவன் இருவருமே இந்த தோட்ட மக்களையே குடும்பமாக எண்ணி வாழ்ந்தார்கள்.

எப்படியும் இவளின் தலைமையில் இருந்த இந்த தோட்ட மக்கள் தங்கள் கடமைகளை மறக்கவில்லை. களு அக்கா நோயுற்ற நாள் முதல் கவனித்துக்கொண்டதுடன், அவளுக்காய் கவலைப்படவும் ஆரம்பித்து விட்டனர். ஏனெனில், இவள் குடும்பங்களுக்குள் சண்டை, சச்சரவுகள் வர இடம் தர மாட்டாள். இவளால் சமாதானமாக வாழ்ந்த குடும்பங்கள் ஏராளம் இங்குண்டு. குமாரவின் குடும்பமே இன்று இவளின் இறுதிக்கடமைகளை செய்ய முன் நிற்கின்றனர்.

களு அக்கா இதே தோட்டத்தில் பிறந்து வளர்ந்தவள். அதிகம் படிக்கவில்லை உயர்வர்க்க மக்களுடன் பழகியதும் இல்லை, ஆனாலும் அவளிடம் சில நல்ல பண்புகள் இருந்ததை யாரும் மறுக்க முடியாது.

ஏதோ ஒரு வகையில் அரச அனுசரணையில் தனக்கு கிடைத்த இந்த இருப்பிடம் என்பதால் தேர்தல் காலங்களில் மட்டும் இவள் குறிப்பிட்ட வர்ண சேலை கட்டி ஊர்வலங்களில் கலந்து கொள்வதை அவதானிக்க முடியும். எந்த தேர்தல் காலங்களிலும் இது அவளது வழமையான செயற்பாடாகும்.

வெள்ளைநிறத்தில் களு அக்காவின் சடலம் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது. வழமையை விட உருவம் வித்தியாசமாக இருந்தது. எப்போதும் ரவிக்கைக்குள் இருக்கும் மணிபர்ஸ் அங்கு இல்லை. அதை தான் சுகவீனம் முற்றதும் குமாரவின் மனைவியிடம் கொடுத்து வைத்து செலவுகளை செய்ய சொல்லியிருந்தாள்.

யாராலும் வடிக்கப்படாத தானாக வார்க்கப்பட்ட ஒரு கதாபாத்திரம்தான், இந்த களு அக்கா. அநேகமாக, இது போன்ற உருவங்கள் மட்டுமல்ல உள்ளம் கொண்ட களு அக்காமார்களை இனிமேல் இதுபோல் கதைகளில் மட்டுமே காணலாம்...

**சி. முத்துசங்கரன்**
**பண்டாரவளை**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 85

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 03 | 04 | | 05 | 06 |
| 07 | | | | 08 | 09 | | |
| | | | 10 | | | | |
| 11 | 12 | 13 | | | 14 | | |
| | 15 | | 16 | | | | |
| | 17 | | | | 18 | | 19 |
| 20 | | | 21 | 22 | | | |
| | | 23 | | | | 24 | |

திரு/திருமதி.செல்வி ..............................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..............................
..............................
..............................

.................... ....................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 85
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 85

### இடமிருந்து வலம்

1. மகிழ்ச்சி வெளிப்பாடு
5. கொதிநீரிலிருந்து வெளிப்படுவது
7. போர்
8. கட்டுப்பாட்டிலிருந்து வெளியேறும் சுதந்திரமான நிலை
10. எரித்தல் (குழம்பியுள்ளது)
11. உறைப்புத் தன்மை (திரும்பியுள்ளது)
14. இதுவும் ஒருவகை நடனம்
15. ஒரு நிறம்
17. படித்துப் பெறும் அறிவு
18. ஒன்றை அடைந்துவிட வேண்டும் என்ற தீவிர மனநிலை
20. கடல்வாழ் உயிரினம்
21. பாதிப்புதொடர்பான முறையீடு
23. வேகம் மிகுந்த காற்று
24. எழுச்சி

### மேலிருந்து கீழ்

1. நலன்
2. கட்டடத்தின் மேற்பகுதியைத் தாங்கி நிற்கும் செங்குத்தான அமைப்பு
3. பொருட்கள் விற்பனை நிலையம்
4. வகை (குழம்பியுள்ளது)
5. சொத்து
6. பொருளின் பெறுமதிக் கூறியீடு
9. இதுவும் ஒரு கறிச்சரக்கு
12. ஒரு விடயத்தின் மீதான தீவிர ஆர்வலன் அல்லது சுவைஞன்
13. பாதுகாப்பு
16. ஆச்சரியம்(குழம்பியுள்ளது)
18. மண்ணுக்குள் புதைந்திருக்கும் தாவரத்தின் அடிப்பாகம்
19. பிரதியுபகாரம்
20. பெரும்பாலான ஆண்களின் முகத்தில் இதைக் காணலாம்
22. நான்கில் ஒரு பகுதி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 84

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. கவரிமான்
5. தாடி
7. சய
8. தாள்
9. கண்
10. வனம்
12. வராகம்
13. கன்னடம்
15. பாண்
16. குவளை
19. மும்முரம்
21. சதா
23. சங்கதி
25. திரி
26. குடும்பம்

**மேலிருந்து கீழ்**

1. கயவன்
2. வசனம்
3. மாதா
4. கள்வன்
5. கண்டி
6. தாகம்
11. முண்டம்
14. பானம்
16. குரங்கு
17. வம்சம்
18. கேசரி
20. முகம்
22. தாதி
24. பதி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 84

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ. 500.00 | இரண்டாம் பரிசு ரூ. 350.00 | மூன்றாம் பரிசு ரூ. 150.00 |
|---|---|---|
| **பி. பாலேந்திரா**<br>15/2 பி, தயா வீதி,<br>வெள்ளவத்தை<br>கொழும்பு 06 | **ஷபித் ஷாஜஹான்**<br>463/ஏ பிரதான வீதி,<br>சாய்ந்தமருது | **உ.வய்ஸ்னவ்,**<br>127 கே, புதிய சோமநாதர் வீதி,<br>பாண்டிருப்பு 1பி<br>கல்முனை |

### பாராட்டு பெறுவோர்

1. **அனுராதா பாக்கியராஜா,** கொழும்பு 06
2. **கே. புண்ணியநேசன்,** காரைதீவு 05
3. **ஏ.சீ. ஸ்ரீதரன்** யாழ்ப்பாணம்
4. **எம்.எம் தாஸிம்** தர்கா நகர்
5. **கே.எம்.எம் பாரூக்** மாத்தளை
6. **ஏ. சந்தியாகோ** கண்டி
7. **எம்.எஸ். எம் பாரூக்** கொச்சிக்கடை
8. **செ. ஞானராசா** திருகோணமலை
9. **பி. நடேசன்** மட்டக்களப்பு
10. **என்.கே. வேணி** பலாங்கொடை

## பலப்படுத்தப்பட வேண்டிய... (10ஆம் பக்க தொடர்)

முக்கியமாக சிங்கள மக்களுக்கிடையிலே உருவாக்கப்படுகின்ற இந்த பிரிவினை தவிர்க்கப்பட்டு ஒன்றுபட்ட நாட்டுக்குள்ளே அதிகாரப் பகிர்வைப் பலப்படுத்துவதன் ஊடாகத்தான் உறுதியான சமூக கட்டமைப்புக்களையும் பொருளாதாரக் கட்டமைப்புக்களையும் சமூக நம்பிக்கைகளையும் பரஸ்பரம் ஏற்படுத்த முடியும்.

ஆனால் இதற்கு மாற்றமாக, இங்கு பேசுகின்ற பல சிங்கள அரசியல் தரப்பினர் இன்னமும் கடந்த காலங்களை நினைவூட்டி, அச்சமூட்டி இவையெல்லாம் இடம்பெறக்கூடாது இதற்கு ஒத்துழைப்பு வழங்ககூடாது என்ற அடிப்படையில் பேசுகின்றார்கள்.

இச்சந்தர்ப்பத்தில் நான் முன்பு கூறியதுபோன்று ஒன்றைக் கூறுகின்றேன். போராட்ட அரசியலை முடிவுறுத்திய மஹிந்த ராஜபக்ஷவும் அவரது தலைமையிலான கட்சியும் மிக முக்கிய பணியைச் செய்ய வேண்டும். அவர் என்னிடம் சொன்னார் 13 ற்கு மேலதிகமாக அதிகாரங்களை வழங்குவோம் என்று, அந்தவகையில் அவர்களுக்கு ஒரு பாரிய பொறுப்பு இருக்கிறது. நாங்கள் போராட்ட அரசியலை முடிவுறுத்துகின்ற போது கொடுத்த வாக்குறுதிகள் என்ன? அதனை நாங்கள் எந்தளவிற்கு முற்போக்காக தலைமைத்துவம் தாங்கி முடித்துக்கொடுத்திருக்கின்றோம் என்று அத் தரப்பினர் இதுபற்றி நன்கு சிந்தித்துப் பேச வேண்டும்.

இதனடிப்படையில் இங்குள்ள பொதுவான பிரச்சினைகளைத் தீர்த்துக்கொண்டு இப்போதுள்ள ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு செயல்வடிவம் கொடுப்பதுதான் இன்றுள்ள சாத்தியமான முடிவு என்று நாங்கள் நம்புகின்றோம். அந்த அடிப்படையில் இந்த மாகாணசபையின் முழு அதிகாரங்களையும் பெறுவதற்குள்ள சட்டரீதியான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நாங்கள் பாடுபட வேண்டும்.

இந்த விடயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் முற்போக்காகச் சிந்திக்கின்ற தமிழ் தலைவர்களை இணைத்துக்கொண்டு மாகாணங்களுக்கு முழுமையான அதிகாரங்களை வழங்கும் நம்பிக்கைதரக்கூடிய ஓர் அரசியல் தீர்வினைப் பெற்றுத் தருவாராயின் அவர் வரலாற்றில் முக்கிய இடம்பெறுகின்ற ஒரு தலைவராகப் போற்றப்படுவார்.

குறிப்பாக பலமான ஓர் அரசியல் பின்னணியைக் கொண்டுள்ள ஜனாதிபதி 2002 மற்றும் 2004 இல் செய்துகொண்ட போர் நிறுத்த ஒப்பந்தங்களில் நேரடியாக ஈடுபட்டவர் என்றவகையில் அவர் சர்வதேசத்திற்கு வழங்கிய வாக்குறுதிகள் என்ன? அதே போன்று தமிழ் தரப்புக்கு அளித்த வாக்குறுதிகள் என்ன? என எல்லாவற்றையும் கருத்தில் கொண்டு ஒரு பொதுவான வெளிப்படையான பேச்சுவார்த்தைகள் ஊடாகவும் பரஸ்பர நம்பிக்கைகளோடும் இத்தீர்வினை அவர் பெற்றுத்தர முன்வரவேண்டும்.

கடந்தகால கசப்பான வரலாறுகளை மறந்து இரண்டு மூன்று தலைமுறைகள் அடைந்த துன்ப வேதனைகளில் இருந்து விடுபட்டு எதிர்கால சந்ததியினருக்கு நம்பிக்கையான நல்ல சுபீட்சமான ஓர் அரசியல் எதிர்காலத்தை நாம் உருவாக்க வேண்டும். இது இன்றைய காலத்தின் தேவை ஆகும். இதற்கு இந்தப் பாராளுமன்றமும் இப்பாராளுமன்றத்திலுள்ள அதிகாரமிக்க அரசியல் தலைவர்களும் இதற்காக கரம்கோர்த்துச் செயற்பட வேண்டும் அப்போதுதான் இது வெற்றிபெறும். இது வெற்றி பெற்றால்தான் இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லது நடக்கும் என்று நான் நம்புகின்றேன்.

இவ்வாறே இது வெற்றி பெற வேண்டும் என்ற நேர்மையான நோக்கத்துடன் தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களும் விடுதலைப் போராட்டத்தில் இணைந்த தலைவர்களும் தமது கட்சி பேதங்களுக்கு அப்பால் அல்லது பிராந்திய பேதங்களுக்கு அப்பால் தங்களது கருத்துக்களை உறுதியாகவும் பொதுவாகவும் முன்வைத்து ஜனாதிபதியின் கரங்களைப் பலப்படுத்தி இந்த சந்தர்ப்பத்தினை பயன்படுத்தி உரிய தீர்வினைப் பெற்றுக்கொள்வதற்கு துணிவுடன் முன்வரவேண்டும்.' இவ்வாறு 13வது திருத்தத்தின் அரசியல் அதிகாரங்கள் தொடர்பான தனது கருத்துக்களை முன்வைத்துப் பேசிய சி.சந்திரகாந்தனின் பாராளுமன்ற உரை ஒரு முன் உதாரணமான முற்போக்கான அரசியல் சிந்தனையை அவர் கொண்டுள்ளார் என்பதை நன்கு வெளிப்படுத்தி அவரது அரசியல் ஆளுமையை அடையாளப்படுத்தி இருக்கிறது.

இன்றுள்ள இலங்கையின் அரசியல் நிலைப்பாட்டில் மாகாணசபை முறைதான் மீதமிருக்கின்ற இறுதியான ஓர் அரசியல் தீர்வாகவும் அதிகாரப் பகிர்வாகவும் காணப்படுகின்றது. இதனை இலங்கை என்ற ஒற்றை ஆட்சிக்குள் ஒன்றுபட்ட மக்களின் அதிகாரத் தீர்வாக உச்சபட்சம் பெற்றுக்கொள்ளப் போராடுவதை சிறந்த அரசியல் சிந்தனையாகும் என நாம் உறுதியாக நம்பினால். அந்த நம்பிக்கைக்கு பிரகாசமூட்டுகின்ற கருத்தியலாக சி.சந்திரகாந்தனின் பாராளுமன்ற உரை அமைந்திருக்கிறது.

## ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை... (05ஆம் பக்கத் தொடர்)

வழக்கமான தகவல் பரிமாற்றங்கள், வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் உத்திகள் எங்களுக்கு இடையே உள்ளன. இருப்பினும், விமான நிலையத்தில் நாம் எதிர்கொள்ளும் தற்போதைய சவால் நெரிசலாகும். கொவிட் காலத்தில் உள்வரும் விமானங்கள் குறைக்கப்பட்ட போதிலும், எங்கள் எண்ணிக்கை இப்போது தொற்றுநோய்க்கு முந்திய நிலைக்கு உயர்ந்துள்ளது. இந்த போக்கு தொடரும் என எதிர்பார்க்கப்படுகிறது, டிசம்பரில் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இரண்டாவது முனையம் இன்னும் செயல்படாததால், நெரிசல் சிக்கல்களை எதிர்கொள்கிறோம். இந்த சூழ்நிலையைக் கையாள நாங்கள் ஒரு தற்காலிக முன்னிணைவு முனையத்தை நிறுவுகிறோம். இந்தத் தற்காலிக தீர்வு நெரிசலைக் குறைக்கும். அத்துடன் எதிர்காலத்தில் உள்நாட்டு மற்றும் பட்ஜெட் விமான நிறுவனங்களுக்கு மையமாகச் செயல்படும்.

**கே: கொழும்புத் துறைமுகம் உலகிலேயே மிகவும் பரபரப்பான ஒன்றாகும். கொழும்பு மற்றும் காங்கேசன்துறை துறைமுகங்களின் எதிர்காலத் திட்டங்கள் எவை?**

பதில்: கொழும்புத் துறைமுகம் ஒரு மரபுவழி துறைமுகத்தில் இருந்து ட்ரான்ஸ்ஷிப்மென்ட் கேந்திரமாக மாறியது குறிப்பிடத்தக்கது. 1985 இல் அறிமுகப்படுத்தப்பட்ட ட்ரான்ஸ்ஷிப்மென்ட், உலகளாவிய விநியோகத்திற்காக சிறிய கப்பல்களில் இருந்து பெரிய கப்பல்களுக்கு கொள்கலன்களை மாற்றுவதை உள்ளடக்கியது.

தற்போது ஆண்டுதோறும் 6.9 மில்லியன் கொள்கலன்களைக் கையாள்வதால், 7.9 மில்லியனை எட்டுவதற்கு இலக்கு வைத்துள்ளோம். கிழக்கு கென்டெய்னர் டேர்மினல் மற்றும் அதானியின் மேற்கு முனையம் போன்ற தனியார் முனையங்கள் உட்பட விரிவாக்கத்துடன், ஆண்டுக்கு 2 முதல் 3 மில்லியன்கள் வரை திறனை மேம்படுத்துகிறோம்.

எதிர்கால இலட்சியங்களில் நான்கு முதல் ஐந்து டேர்மினல்கள் திட்டமிடப்பட்ட வடக்கு துறைமுக மேம்பாட்டுத் திட்டத்தினுள் அடங்கும். தலைமன்னாருக்கும் தனுஷ்கோடிக்கும் இடையே ஒரு பயணிகள் படகு சேவை திட்டத்தில் உள்ளது. இது எங்கள் முன்னோக்கு உத்தியின் ஒரு பகுதியாகும்.

**கே: துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் பிரேமலால் ஜயசேகர, தாம் கடமையாற்றுவதற்கு நீங்கள் இடையூறு விளைவிப்பதாக குற்றம் சுமத்தியுள்ளதோடு, அமைச்சில் இடம்பெற்ற ஊழல்களை ஆவணங்களுடன் அம்பலப்படுத்துவேன் எனவும் தெரிவித்துள்ளார். இதில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

பதில்: இந்த விவகாரம் தற்போது விசாரணையில் உள்ளதால் நான் கருத்துத் தெரிவிக்கும் நிலையில் இல்லை. நான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் நேரடியாக கலந்துரையாடியுள்ளதோடு, எனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில் முழுமையான விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தியுள்ளேன். குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்படும் வரை, என்னால் விரிவான பதிலை அளிக்க முடியாது.

**கே: சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள ஹம்பாந்தோட்டை துறைமுகம் குறித்து பல விமர்சனங்கள் உள்ளன. சில ஆய்வாளர்கள் இது சீன இராணுவ தளமாக மாற்றப்படலாம் என்று கூறியுள்ளனர். அப்படி ஏதாவது சாத்தியம் உள்ளதா?**

பதில்: இத்தகைய கூற்றுக்கள் ஆதாரமற்றவை மற்றும் தவறான பிரசாரம் என்பதை நான் திட்டவட்டமாக கூறுகிறேன். சீனாவுடனான எங்கள் ஒப்பந்தம் வணிக துறைமுகத்தை நிறுவுதல் மற்றும் செயல்படுத்துவது தொடர்பானது.

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை இராணுவத் தளமாக மாற்ற முடியும் என்ற கருத்து முற்றிலும் ஆதாரமற்றது.

புனைகதைகளிலிருந்து உண்மையைப் பிரிப்பது மிகவும் முக்கியமானது மற்றும் கணிசமான ஆதாரங்கள் இல்லாத தவறான கதைகளால் திசைதிருப்பப்படக் கூடாது.

**கே: அரசியல் பற்றிப் பேசுவோமாயின், அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்று தீர்மானித்துள்ளீர்களா? தற்போதைய ஜனாதிபதியா அல்லது வேறு யாராவது ஒருவரா?**

பதில்: தற்போது, நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்துள்ளேன், கட்சிக்குள் எங்களுடைய நிலைப்பாட்டை மீண்டும் நிலைநிறுத்திய சட்ட விவகாரங்களை வெற்றிகரமாக தீர்த்து வைத்துள்ளேன். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அங்கம் என்ற வகையில் எமது கூட்டு நிலைப்பாடு அப்படியே உள்ளது.

நாங்கள் சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்கும்போது, எமது தேர்தல் வியூகம் தொடர்பான முடிவுகள் தாக்கத்தை ஏற்படுத்தும். சூழ்நிலைகள் வெளிவரும்போது கவனமாக மதிப்பீடு செய்ய வேண்டிய விஷயம் அது. தனிப்பட்ட முறையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சாதுரியமான தலைமைத்துவத்தையும், 2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து எமது நாட்டின் முக்கிய சவால்களை எதிர்கொள்வதில் அவர் ஆற்றிய பங்கையும் நான் அங்கீகரிக்கிறேன்.

தற்போதைய சவால்களின் மூலம் நமது தேசத்தை வழிநடத்துவதில் அவர் தனது திறமையையும் தலைமைத்துவத்தையும் நிரூபித்துள்ளார். எனது கணிப்பின்படி, அவரை விடப் பொருத்தமான வேட்பாளர் ஒருவர் எம்மிடம் இல்லை. எவ்வாறாயினும், இந்த விவகாரத்தில் இறுதி முடிவு மக்களிடம் உள்ளது. நாங்கள் விருப்பங்களை எடைபோட்டு, அவர்களின் முடிவை மதிக்கும்போது அவர்களின் விருப்பத்தேர்வுகள் நமது நடவடிக்கையை வடிவமைக்கும்.

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
2023.08.31 www.nlb.lk
மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5223 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,776,056.00
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 8 8 7 8 5 3

Lucky 7 — 31.08.2023 — 0049 — வெற்றி இலக்கங்கள் 6 3 3 9 2 9 — L7 3 8 — ரூ 10,308,486.96

ராசி சுப பலன் — 2023-08-31 — 532 — ரூ. 2,670,033.20 — வெற்றி இலக்கங்கள் 09 22 38 56 — மீனம்

தன நிதானய — தேதி 2023.08.31 — 1253 — ரூ. 107,265,069.60 — ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 06 09 13 42 — P — 40195

Mega Power — 1571 — 31/08/2023 — 15678 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ-406,024,480.00 — B 23 — 02 19 36 65 — ரூ. 10,000,000.00 — ரூ. 10,000,000.00

கொவிசெத Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3465 — சீட்டிழுப்பு திகதி 2023.08.31 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 60,927,326.00
ஆங்கில எழுத்து T — வெற்றி இலக்கங்கள் 02 03 42 53 — விசேட எழுத்து T — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 10389

## இலங்கையால் மீண்டு வர முடியும்!... (07ஆம் பக்கத் தொடர்)

மொத்தத்தில் இலங்கை ரூபாவின் எதிர்காலம் நிச்சயமற்றதாகவே உள்ளது. எனினும், நாட்டின் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தேவையான சீர்திருத்தங்களை செயற்படுத்த முடிந்தால் நீண்ட கால அடிப்படையில் ரூபாவின் மதிப்பு உயர வாய்ப்புள்ளது.

### இந்தச் சூழலில் பொதுமக்கள் மற்றும் வணிக சமூகம் என்ன செய்ய வேண்டும்?

இலங்கையின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள உதவுவதில் பொது மக்களும் வர்த்தக சமூகமும் முக்கிய பங்கு வகிக்க முடியும். அவர்கள் செய்யக்கூடிய சில விடயங்கள் சில:

**அரசாங்கத்தின் சீர்திருத்த முயற்சிகளுக்கு ஆதரவு:** இலங்கை அரசாங்கம் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு அவசியம் என நம்புகின்ற பல சீர்திருத்தங்களை கோடிட்டுக் காட்டியுள்ளது. பொது மக்களும் வணிக சமூகமும் தங்களுக்கு ஆதரவாகப் பேசுவதன் மூலமும் சீர்திருத்தங்கள் வெற்றிபெற தியாகம் செய்யத் தயாராக இருப்பதை அரசாங்கத்திற்குத் தெளிவுபடுத்துவதன் மூலமும் இந்த சீர்திருத்தங்களை ஆதரிக்க முடியும்.

**பொறுமையும் புரிதலும் இருக்க வேண்டும்:** இலங்கையின் பொருளாதார நெருக்கடி ஒரு சிக்கலான பிரச்சினையாகும். மேலும் நாடு மீண்டு வருவதற்கு காலம் எடுக்கும். அரசாங்கம் சீர்திருத்தங்களைச் செயற்படுத்தும்போதும் பொருளாதாரம் மெதுவாக மீண்டு வரும்போதும் பொதுமக்களும் வணிக சமூகமும் பொறுமையுடனும் புரிதலுடனும் இருக்க வேண்டும்.

**தேவைப்படுபவர்களுக்கு உதவி பெற்றுக்கொடுத்தல்:** இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது பலருக்கு பெருமளவான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. பொது மக்கள் மற்றும் வணிக சமூகம் தொண்டு நிறுவனங்களுக்கு நன்கொடை வழங்குவதன் மூலமும் நெருக்கடியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ, தங்கள் நேரத்தை தன்னார்வமாக வழங்குவதன் மூலமும் தேவைப்படுபவர்களுக்கு உதவலாம்.

**இலங்கையில் முதலீடு:** இலங்கையின் நீண்டகால மீட்சியானது முதலீட்டைச் சார்ந்தது. பொது மக்களும் வர்த்தக சமூகமும் நாட்டிற்கு ஆதரவாக பேசுவதன் மூலமும் இலங்கையில் உள்ள வர்த்தகங்களில் முதலீடு செய்வதன் மூலமும் இலங்கைக்கு முதலீட்டை ஈர்க்க உதவ முடியும்.

இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பொது மக்களும் வர்த்தக சமூகமும் இலங்கையின் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு, நாட்டிற்கு மிகவும் வளமான எதிர்காலத்தை கட்டியெழுப்ப உதவ முடியும்.

### பொதுமக்கள் செய்யக்கூடிய குறிப்பிட்ட விடயங்கள் சில:

**பொதுமக்கள் நுகர்வினைக் குறைக்க வேண்டும்:** இது பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான தேவையை குறைக்க உதவும். இது நாட்டின் பொருளாதார அழுத்தத்தைக் குறைக்க உதவும்.

**பணத்தினை சேமிப்பதற்கு ஊக்குவித்தல்:** இது நிதி இருப்புக்களை உருவாக்க உதவுதலுடன், எதிர்காலத்தில் பொருளாதார சவால்களினை இலகுவாக கையாள்வதற்கு சாதகமாக இருக்கும்.

**உள்ளூர் வணிகங்களுக்கு ஆதரவு:** இது பொருளாதாரத்தை உயர்த்தவும் வேலைகளை உருவாக்கவும் உதவும்.

**பொறுமையாக இருங்கள் மற்றும் புரிந்து கொள்ளுங்கள்:** பொருளாதார நெருக்கடி ஒரே இரவில் தீர்க்கப்படாது. எனவே நாடு மீண்டு வருவதற்கு பொறுமையும் புரிந்துகொள்ளுதலும் அவசியம்.

### வணிக சமூகம் செய்யக்கூடிய சில குறிப்பிட்ட விடயங்கள்:

**இலங்கையில் முதலீடு செய்தல்:** இது வேலை வாய்ப்புகளை உருவாக்கவும் பொருளாதாரத்தை உயர்த்தவும் உதவும்.

**நிலையான வணிக நடைமுறைகளை ஏற்றுக்கொள்ளுதல்:** இது நாட்டின் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைப்பதற்கும் முதலீட்டாளர்களை கவர்ந்திழுப்பதற்கும் உதவும்.

**அரசாங்கத்தின் சீர்திருத்த முயற்சிகளுக்கு ஆதரவு கொடுத்தல்:** சீர்திருத்தங்கள் திறம்பட செயற்படுத்தப்படுவதை உறுதிசெய்ய இது உதவும்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை சமாளிப்பது கடினமான பணியாக இருந்தாலும் அது சாத்தியமே.

அரசாங்கம் உறுதியான நடவடிக்கை எடுத்து விரிவான பொருளாதார சீர்திருத்தத் திட்டத்தை செயற்படுத்தும் போது இலங்கையானது நெருக்கடியிலிருந்து வெளிவர முடியும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

சுற்றாடல் அமைச்சு
GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்

**GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்தின் கீழ் செயற்படும் பரேபஞ்ஞுங் மணல் அகழ்தல் செயற்றிட்டத்தில் ஒவ்வொரு தடத்திற்கும் பொருத்தமான சேவை வழங்குநரை தெரிவு செய்வதற்காக விலைமனுகோரல்**

**விற்பனை இலக்கம்: GSMBTS/MKT/2023/44/02**

சுற்றாடல் அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அரச வியாபார நிறுவனமான GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்தின் தலைவர் பரேபஞ்ஞுங் மணல் அகழ்தல் செயற்றிட்டத்தில் ஒவ்வொரு தடத்திலும் மணலை அகழ்ந்து கொள்வனவு செய்வதற்காக பொருத்தமான சேவை வழங்குநரைத் தெரிவு செய்வதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைக்கோரல்கள் பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்தல் மூலம் செயற்படுத்தப்படும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் திட்டமிடல் பிரிவிலிருந்து (தொ.பே. 011 2515029) பெற்றுக்கொள்ளலாம்.

சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் ஆவணங்களை 2023 ஆகஸ்ட் 14ஆம் திகதி முதல் 2023 செப்டெம்பர் 15ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை அலுவலக நேரங்களில் பின்வரும் முகவரியில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

| | |
|---|---|
| சந்தைப்படுத்தல் மற்றும் திட்டமிடல் பிரிவு,<br>GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்,<br>தலைமை அலுவலகம்,<br>190/A, ரத்னவீர கட்டிடம்,<br>ஸ்டென்லி திலகரத்ன மாவத்தை,<br>நுகேகொட. | மணல் அகழ்தல் செயற்றிட்டம்,<br>GSMB தொழில்நுட்ப சேவைகள்<br>(தனியார்) நிறுவனம்,<br>யக்குரே சந்தி,<br>மன்னம்பிட்டிய. |

இந்த விலைக்கோரல் ஆவணங்களை வட்ஸ்அப் மற்றும் மின்னஞ்சலுக்கு வேண்டுகோள் கடிதமொன்றை அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். இந்த வேண்டுகோள் கடிதத்தை பின்வரும் எமது மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வட்ஸ்அப் இலக்கத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

gsmbtsmarketing@gmail.com / 071 2714824

முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2023 செப்டெம்பர் 18ஆம் திகதி 2.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் ஒப்படைத்தல் வேண்டும் அல்லது தலைமை அலுவலகத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் திட்டமிடல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களுடன் ஒவ்வொரு தடத்திற்கும் 10,000.00 ரூபா வீதம் ரொக்கப் பண பிணையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். ஏதாவதொரு பிணை முறி இணைக்கப்பட்டிராத விலைமனு நிராகரிக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைக்கோரல் ஆவணங்கள் 2023 செப்டெம்பர் 18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின் உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகள் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர் (பெறுகைக் குழு),
பெறுகைப் பிரிவு,
GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்,
190/A, ரட்னவீர கட்டிடம், ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தை,
நுகேகொட.
2023-07-17.**

**முன்மொழிவுகளுக்கான கோரிக்கை (RFP)**

**பொறியியல் பீடம் - ருஹுண பல்கலைக்கழகம் ருஹுண பல்கலைக்கழக**

**கடல்சார் பொறியியல் மற்றும் கடற்படை கட்டிடக்கலைக்கான (DMENA) ISO 9001:2015 தர மேலாண்மை தரநிலைக்கான தர முகாமைத்துவ முறைமையொன்றையும் சான்றழிப்பொன்றையும் அபிவிருத்தி செய்வதற்கான உசாத்துணையொன்று**

**RUH/FOE/DMENA/2023**

1. முன்மொழிவுகளுக்கான கோரிக்கையில் நிருணயிக்கப்பட்டவாறு குறிப்பு விதிமுறைகளில் (TOR) வழங்கப்பட்டுள்ள விபரங்களின் பிரகாரம் மேலேயுள்ள உசாத்துணை சேவைகளை வழங்குவதற்காக ருஹுண பல்கலைக்கழகத்தின் சார்பாக திணைக்கள உசாத்துணை பெறுகைக் குழுத் தலைவர் முன்மொழிவுகளை அழைக்கின்றார்.
2. துறைமுகங்கள் மற்றும் கப்பற் சேவைகள் அமைச்சின் வர்த்தக கப்பற் சேவைகளின் பணிப்பாளர் நாயகத்தினால் (DGMS) அங்கீகரிக்கப்பட்ட கடல்சார் நிறுவகங்களுக்காக ISO 9001 தர முகாமைத்துவ முறைமைகளை அபிவிருத்தி செய்வதில் நிகரான பணிஒதுக்கீடுகளை பூர்த்தி செய்த உசாத்துணையாளர்கள் அல்லது உசாத்துணை அமைப்புக்கள் விண்ணப்பிப்பதற்கான தகுதியை பெற்றுக் கொள்வர்.
3. தேசிய பெறுகை முகவராண்மையினால் பிரசுரிக்கப்பட்ட ''வழிகாட்டிகள் - உசாத்துணையாளர்களின் தெரிவு செய்தல் மற்றும் வேலைவாய்ப்பு'' என்பதன் 2007 ஓகஸ்ட் இன் பதிப்பில் விபரிக்கப்பட்டவாறான கொள்கைகளுக்கிணங்க முன்மொழிவுகளுக்கான கோரிக்கையில் விபரிக்கப்பட்டவாறான தரம் மற்றும் ஆகுசெலவு அடிப்படையிலான தெரிவு செய்தல் முறைமை மற்றும் நடைமுறைகளின் கீழ் உசாத்துணையாளரொருவர் அல்லது உசாத்துணை அமைப்புக்கள் தெரிவு செய்யப்படுவர்/ தெரிவு செய்யப்படும்.
4. முன்மொழிவுகளுக்கான கோரிக்கையானது பின்வரும் ஆவணங்களை அடக்குகின்றது.
   பிரிவு 1 - அழைப்புக் கடிதம்
   பிரிவு 2 - உசாத்துணையாளர்களுக்கான பணிப்புரைகள் (தரவுத் தாள் அடங்கலானது)
   பிரிவு 3 - தொழில்நுட்ப முன்மொழிவு – சரிதிட்டமான படிவங்கள்
   பிரிவு 4 - நிதியிடல் முன்மொழிவு – சரிதிட்டமான படிவங்கள்
   பிரிவு 5 - குறிப்பு விதிமுறைகள்
   பிரிவு 6 - ஒப்பந்தத்திற்காக சரிதிட்டமான படிவம்
5. 2023 செப்டெம்பர் 15 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரம் ரூபாவை (2,000 ரூபா) பொறியியல் பீட சிறாப்பரின் கருமபீடத்தில் அல்லது எந்தவொரு மக்கள் வங்கி கிளையினூடாகவும் காலி, பிரதான வீதியிலுள்ள மக்கள் வங்கியின் 169100121871753 என்ற கணக்கிலக்கத்திற்கு செலுத்திய பின்னர் காலி, ஹப்புகல, ருஹுண பல்கலைக்கழக பொறியியல் பீட பீடத் தலைவரின் அலுவலகத்திலிருந்து முன்மொழிவுகளுக்கான கோரிக்கையை பெற்றுக் கொள்ளலாம். www.ruh.ac.lk என்ற இணையதளத்திலும் முன்மொழிவை பார்வையிடலாம்.
6. முன்மொழிவின் மூடும் நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே மேலேயுள்ள முகவரியிலுள்ள ருஹுண பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் பீடத் தலைவரின் அலுவலகத்தில் 2023 செப்டெம்பர் 18 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு முன்மொழிவிற்கான கோரிக்கையானது மூடப்படும். உசாத்துணையாளர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்மொழிவுகளை திறக்கும் வேளையில் சமுகமளிக்கலாம்.
7. முன்மொழிவிற்கான கோரிக்கையானது பீடத் தலைவர், பொறியியல் பீடம், ருஹுண பல்கலைக்கழகம், ஹப்புகள, காலி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படலாம் அல்லது அதே முகவரியின் பீடத் தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படலாம்.
8. தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின், ருஹுண பல்கலைக்கழக பொறியியல் பீட, பீடத் தலைவரிடமிருந்து அல்லது கடல்சார் பொறியியல் மற்றும் கடற்படை கட்டிடக்கலை திணைக்கள/ தலைவரிடமிருந்து 091 2245761 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக, 091 2245762 என்ற தொலைநகலூடாக அல்லது dean@eng.ruh.ac.lk and sumithb@mme.ruh.ac.lk என்ற மின்னஞ்சலூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,
திணைக்கள உசாத்துணை பெறுகைக் குழு,
ருஹுண பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை.**

சுகாதார அமைச்சு

# இந்திய அரசாங்கத்தின் அனுசரணையில் ஹோமியோபதி மருத்துவ பட்டதாரி புலமைப்பரிசில் – 2023/2024

இந்திய அரசாங்க அனுசரணையின் கீழ் இலங்கை மாணவர்கள் 10 பேருக்கு மேற்கு வங்காள பல்கலைக்கழகத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கல்கட்டாவில் அமையப்பெற்ற தேசிய ஹோமியோபதி நிறுவனத்தில் (NIH) 2023-2024 கல்வியாண்டிற்காக ஹோமியோபதி மருத்துவபட்ட கற்கைநெறியை மேற்கொள்வதற்கு புலமைப்பரிசில்களை வழங்குவது தொடர்பாக தகைமையானவர்களை தேர்ந்தெடுக்கும் முகமாக சுகாதார அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கற்கை நெறிக்காலம் 5 ½ வருடங்களாகும். கற்கை நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்ததன் பின்னர் தகைமையான ஹோமியோபதி மருத்துவராக செயற்படுவதற்கு வாய்ப்புகள் கிடைக்கப்பெறும்.

**தகைமைகள்**

க.பொ.த.(உ/த) பரீட்சையில் விஞ்ஞான பிரிவில் தோற்றி பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆகிய மூன்று பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்து அப்பரீட்சையில் பொது ஆங்கிலப் பாடத்திலும் சித்திபெற்றுள்ள மற்றும் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியுடனான தகைமையைக் கொண்டுள்ள 2023.12.31 திகதியன்று 18 - 25 வயதிற்கிடைப்பட்ட விண்ணப்பதாரிகள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பிக்கும் முறை**

அனைத்து விண்ணப்பதாரிகளும் பெயர், முகவரி, பிறந்த திகதி, வயது, நிரந்தர மற்றும் கையடக்கத் தொலைபேசி இலக்கங்கள் (02) (விண்ணப்பதாரியை தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கங்களை குறிப்பிடுதல் கட்டாயம் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்),கல்வித் தகைமைகள் மற்றும் க.பொ.த. (உ/த மற்றும் சா/த) பரீட்சைகளில் சித்தியடைந்த வருடம் போன்றவற்றை, தெளிவாகக் குறிப்பிட்டு தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் அனைத்து சான்றிதழ்களினதும் அத்தாட்சிப்படுத்திய பிரதிகள் சகிதம் 2023.09.25 அன்று அல்லது அதற்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றை ''ministryofindigenousmedicine@gmail.com'' எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்பப்படும் மூலப் பிரதிக்கு மேலதிகமாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தை (சுய தரவுகளை மட்டும்) தொலைநகல் மூலம் 011 2112736 இற்கு அனுப்புதல் வேண்டும்.

**மேலதிக செயலாளர் (நிர்வாகம்)**
**சுதேச வைத்தியப் பிரிவு**
**சுகாதார அமைச்சு**
**இல.26, 3ம் மாடி. ஸ்ரீ சங்கராஜ மாவத்தை,**
**கொழும்பு 10.**

**தெரிவு செய்யும் முறை**

நேர்முகத் தேர்வுக் குழுவொன்றினால் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டதன் பின் அதியுயர் தகைமைகளை பூர்த்தி செய்தவர்களுக்கிடையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் பிரகாரம் திறமை அடிப்படையில் தகுதியானோர் தெரிவு செய்யப்படுவர்.

**குறிப்பு:**

விண்ணப்பதாரிகளுள் அதியுயர் தகைமைகளை பூரத்தி செய்தவர்கள் மட்டும் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள். இது தொடர்பில் சுகாதார அமைச்சு செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாவதுடன் கல்கட்டாவில் அமைந்துள்ள ஹோமியோபதி நிறுவனம் மற்றும் குறித்த பாடநெறி பற்றிய மேலதிக விபரங்களை www.nih.nic.in என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு ஒரு வழிப்பயணத்திற்காக (செல்வதற்கு) மாத்திரம் விமான பயணச்சீட்டொன்று (Air Ticket) அமைச்சினால் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பின்வரும் தொலைபேசி இலக்கத்தை தொடர்பு கொள்வதன் மூலம் மற்றும் மேற்குறிப்பிட்ட மின்னஞ்சல் முகவரிக்கு கடிதங்களை அனுப்புவதன் மூலமும் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 011 2112742.

**எஸ். ஜனக்க ஸ்ரீ சந்ரகுப்த**
**செயலாளர்,**
**சுகாதார அமைச்சு**

# நம்மை அறியாமலே... (10ஆம் பக்க தொடர்)

அப்படிக் கடைப்பிடிக்கப்படவும் இல்லை. சிங்கள இனவாதத்துக்குப் பதில் தமிழினவாதம். சிங்கள + தமிழ் இனவாதத்துக்குப் பதில் முஸ்லிம் இனவாதம். அவ்வளவுதான். இதில் சிங்கள இனவாதம் சற்றுக் கூர்மையாக உள்ளது. காரணம், அது அரசு, அதன் வளங்கள், படைத்துறை, பெரும்பான்மை என்ற அதிகார எல்லைகளை உச்சமாகக் கொண்டிருப்பதால் கூரானதாக உள்ளது. அடுத்தபடியாக தமிழினவாதம் இருந்தது. இப்பொழுது தமிழ்த் தரப்பின் பலம் குறைவடைந்துள்ளதால் அதனுடைய எல்லைகள் மட்டுப்பட்டுள்ளன. முஸ்லிம் இனவாதம் அதற்கும் கீழே உள்ளது.

இனவாதத்துக்கும் தேசியவாதத்துக்கும் இடையிலான வேறுபாட்டைப் பலரும் உணர்ந்து கொள்வதில்லை. இதனால் இரண்டையும் ஒன்றாகப் போட்டுத் தாமும் குழம்பி, மற்றவர்களையும் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். இனவாதத்தில் ஜனநாயகத்துக்கான இடமே இருக்காது. தேசியவாதத்தில் (அதுவும் ஒரு கற்பிதம்தான் என்றபோதும்) அதற்குள் ஒப்பீட்டளவில் ஒரு சுதந்திர வெளி உண்டு. ஜனநாயகம் அதற்கான வெளியை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இதனால் அது உள்ளும் புறத்தும் திறந்தே காணப்படும். அதனுடைய பலமே அதுதான். எந்தத் தயக்கமும் தடுமாற்றமும் அதற்குக் கிடையாது. அது மற்ற இனங்களைக் கண்டு அஞ்சாது. தன்னுடைய வெளிப்படைத்தன்மையிலும் ஜனநாயகவேரின் பலத்திலும் அது நிமிர்ந்து நிற்கும்.

ஆனால், இனவாதம் அப்படியானதல்ல. அது எப்போதும் பிறரைச் சந்தேகிக்கும். பிறரைக் குறித்து அச்சமடைந்து கொண்டேயிருக்கும். இதனால் பிறரை எப்போதும் எதிரியாகவும் எதிர்த்தரப்பாகவுமே கருதிச் செயற்படும். எதையும் முரண்நிலை நின்றே நோக்கும். அதனுடைய குணமே அதுதான். அதற்குச் சமாதானத்தின் மீது ஈடுபாடோ நம்பிக்கையோ திருப்தியோ ஏற்படாது. எப்பொழுதும் அது எதிர்த்தரப்பைக் குற்றம் சாட்டிக்கொண்டேயிருக்கும். அதில் திருப்தி காண்பதே அதன் முழுமையான ஈடுபாடு. அதுவே தன்னுடைய பலம் எனக் கருதிக் கொண்டிருக்கும். இதனால் எந்தப் பயனும் இல்லை என்பதைப் பற்றிய ஆய்வோ அறிதலோ அதற்குக்கிடையாது. அதை அது பொருட்படுத்திக் கொண்டிருப்பதும் இல்லை.

அதற்கு எதிர்த்தரப்பின் மீது குற்றம் சுமத்திக் கொண்டும் எதிர்த்தரப்பை எதிர்த்துக் கொண்டுமிருக்க வேண்டும். அதுவே தன்னுடைய பணி எனக் கருதிக் கொண்டிருக்கிறது. இனவாதம், நிறவாதம், மனவாதம் அனைத்தினதும் பொதுக்குணம் இதுவாகும்.

இதையெல்லாம் தெரிந்துகொண்டே பலரும் தெரியாததைப்போல தவறிழைக்கிறார்கள். எனவேதான் இவர்கள் வரலாற்றின் குற்றவாளிகள். குப்பைக் கூடைக்குள் தள்ளப்பட வேண்டியவர்கள் என்கிறோம்.

இலங்கையில் தொடரப்படுகின்ற இனவாதமே இலங்கையைச் சீரழித்தது என்று அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இதற்குக் காரணமானவர்களையும் தெரியும். ஊழல்வாதிகள், இனவாதிகள், சமாதானத்துக்கும் தீர்வுக்கும் எதிரானவர்கள் என்றும் தெரியும். இதற்கெல்லாம் காரணமான கட்சிகள் எவை என்றும் தெரியும்.

ஆனாலும் மக்கள் இன்னும் இனியும் அவர்களைச் சார்ந்தும் அந்தக் கட்சிகளை ஆதரித்துக் கொண்டுமே இருக்கிறார்கள். அடுத்து வரப்போகின்ற தேர்தல்களிலும் இப்படியான சக்திகள்தான் வெற்றியடையக் கூடிய நிலை உண்டு.

அப்படியென்றால் எங்கே தவறுண்டு? எதற்காக மக்கள் இப்படித் தவறிழைக்கிறார்கள்?

இலங்கை மக்களும் சரி, அரசியல் தலைவர்களும் சரி, ஊடகங்களும் சரி அனைத்துத் தரப்புமே தற்காலத்தில் – நவீன யுகத்தில் வாழவில்லை. அவர்கள் இந்த யுகத்தின் பிரதிநிதிகள் கிடையாது. தற்காலத்தில் உயிரோடிருந்தாலும் அவர்கள் வாழ்வது பல நூறாண்டுகளுக்கு முன்பான காலத்திலேயே. அந்தப் பழைய யுகத்தின் பிரதிநிதிகளாகவே அவர்கள் செயற்படுகிறார்கள். அந்த யுகத்தின் பிரதிநிதியாகவே சிந்திக்கிறார்கள். அதனால்தான் அவர்களால் இந்த யுகத்தின் மனிதர்களாக முடியவில்லை.

கோட்டும் சூட்டும் போட்டு (ரை) கழுத்துப்பட்டியும் கட்டிவிட்டால் அவர்கள் இந்த யுகத்தின் பிரதிநிதிகள் ஆகி விடுவார்கள் என்றில்லை.

என்பதால்தான் இலங்கையர்களாகிய நாங்கள் இந்த உலகத்தில் மிகப் பின்தங்கியவர்களாக உள்ளோம். இலங்கையை விட்டு எங்காவது தப்பியோடினால் நல்லது என்று எண்ணுகின்றவர்களாக இருக்கிறோம். ஆனால் அங்கே சென்றதும் இங்குள்ள அரசியற் கட்சிகளுக்கு முண்டு கொடுக்கும் ஆட்களாகவும் மாறி விடுகிறோம்.

அடிப்படையில் நாமும் இனவாதிகளாக இருப்பதே இதற்குக் காரணம். நம்மை அறியாமலே நமக்குள் இனவாதம் செயற்படுகிறது. என்பதால்தான் நம்மால் பிறரை நம்பவும் மதிக்கவும் அவர்களோடு இணைந்து செயற்படவும் முடியாதிருக்கிறது.

ஆகவே இன்னும் நூறு ஆண்டுகளுக்கு இதே கட்சிகள் இதே அரசியலை இதே வழிமுறையில் தயக்கமின்றித் தொடரப் போகின்றன.


# விலைமனுக்கோரல்

## பெறுகை அறிவித்தல்

**இலங்கை கடற்படைக்குச் சொந்தமான பாவனைக்குதவாத வாகன விற்பனை**

இலங்கை கடற்படைக்குச் சொந்தமான பாவனைக்குதவாத வாகனங்களை விற்பனை செய்வதற்காக முத்திரையிடப்பட்ட விலை **மனுக்கள் 2023 செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி 1400 மணி** வரை **இலங்கை கடற்படை தலைமையகம், தபால் பெட்டி இலக்கம் 593, கொழும்பு 01** என்ற முகவரியில் திணைக்கள பெறுகை குழுவின் தலைவரினால் ஏற்றுக் கொள்ளப்படும். அது பற்றிய விபரங்களும் நிபந்தனைகளும் பின்வருமாறு.

1. விற்பனைக்குரிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையிலான வாகனங்களுக்கு விலை மனு சமர்ப்பிக்கப்படலாம். ஒவ்வொரு வாகனத்துக்கும் வெவ்வேறாக விலை குறிக்கப்பட்ட விலை மனு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2. விலை மனுக் கட்டணமாக மீளச் செலுத்தப்படாத **ரூ.500/- ம்,** ஒவ்வொரு வாகனத்துக்குமாக மீளச் செலுத்தப்படும் பிணைப் பணம் பின்வரும் விதத்தில் செலுத்தப்பட வேண்டும். அந்தத் தொகை கடற்படை தலைமையக நிதி பணிப்பாளருக்கு பணமாக செலுத்தப்பட வேண்டும். அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டை ராகம, வெலிசர, இ.க.க கெமுனு, சிரேஷ்ட பணிக்குலாம் அதிகாரி (களஞ்சிய பரிபாலனம்) யிடம் கையளித்ததன் பின்னர், **2023 செப்டெம்பர் மாதம் 04** ஆம் திகதி தொடக்கம் **2023 செப்டெம்பர் மாதம் 26** ஆம் திகதி வரை வார வேலை நாட்களில் **0900 மணி முதல் 1600** மணி வரை விலை மனு ஆவணங்கள் விநியோகிக்கப்படுவதுடன், யாரும் கொள்வனவாளரினால் விலை மனு சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் கொள்வனவு செய்ய மறுத்தால் அல்லது குறிக்கப்பட்ட தினத்தில் அகற்றிக் கொள்ளத் தவறினால், அப்பணம் மீளச் செலுத்தப்படமாட்டாது.

**முழுமையான வாகனம் – மோட்டார் சைக்கிள் ரூ.5,000.00**

| வாகன இலக்கம் | வாகன வகை | உற்பத்தி ஆண்டு |
|---|---|---|
| கப 8947 | மோட்டார் சைக்கிள் | 2007 |
| கப 8950 | மோட்டார் சைக்கிள் | 2007 |

**வாகன சிதைவுகள் (மோட்டார் சைக்கிள்) ரூ.5,000.00**

| வாகன இலக்கம் | வாகன வகை |
|---|---|
| கப 3849 | மோட்டார் சைக்கிள் |
| கப 7912 | மோட்டார் சைக்கிள் |

**வாகன சிதைவுகள் (காணி வாகனங்களும் பார வாகனங்களும்) ரூ.7,500.00**

| வாகன இலக்கம் | வாகன வகை |
|---|---|
| கப 7330 | பொலெரோ கெப் |
| கப 7341 | பொலெரோ கெப் |
| கப 7313 | பொலெரோ கெப் |
| கப 6203 | பவுசர் வாகனம் |
| கப 8057 | பெக்கோ ஏற்று வாகனம் |

3. **விறபனைக்குள்ள பாவனைக்குதவாத வாகனங்களை 2023 செப்டெம்பர் மாதம் 04 ஆம் திகதி** முதல் **2023 செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி** வரை **0900 மணி முதல் 1600 மணி** வரை ராகம, வெலிசர, இ.க.க கெமுனு, இலங்கை கடற்படை விற்பனை தொகுதியில் வார வேலை நாட்களில் பார்வையிட்டு பரிசோதிக்கலாம். வருகை தருவோர் தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் அடையாள ஆவணமொன்றை எடுத்து வர வேண்டும்.
4. **2023 செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி 1400 மணி** வரை விலை மனு ஏற்றுக் கொள்ளப்படுவதோடு, சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்கள் நேரம் முடிவடைந்தவுடன் இலங்கை கடற்படை தலைமையகத்தில் வைத்து திறக்கப்பட்டும். மேலதிக விபரங்களுக்கு **தொ.பே. இலக்கம் 011 – 7193375** ஊடாக பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக குழு,**
**இலங்கை கடற்படை தலைமையகம்,**
**த.பெ. 593,**
**கொழும்பு 01.**

# கொள்வனவு அறிவித்தல்

## இலங்கை கடற்படை
## பாதுகாப்பு அமைச்சு

**2024 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2025 டிசம்பர் 31 திகதி வரை இலங்கை கடற்படைக்கு தேவையான கப்பல்கள், படகுகள் மற்றும் கடற்படை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் வர்ணங்களை கொள்வனவு செய்தல் தொடர்பாக உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், வழங்குனர்கள், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அலகு ஒப்பந்த விலைகளின் கீழ் கேள்வி கோருதல்**

1. இலங்கை கடற்படையின் திணைக்கள கொள்வனவு குழுத் தலைவரினால் இலங்கை கடற்படைக்கு 2024 **ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2025 டிசம்பர் 31 திகதி** வரைக்குமான காலப்பகுதிக்கு கப்பல்கள், படகுகள் மற்றும் கடற்படை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் வர்ணங்களை கொள்வனவு செய்தல் அலகு ஒப்பந்த விலைகளின் கீழ் விநியோகிப்பதை உறுதி செய்யக்கூடிய இலங்கையின் வர்த்தக நிறுவனங்கள், இறக்குமதியாளர்கள் உற்பத்தியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள் போன்ற வழங்குனர்களிடமிருந்து விலைகள் கோரப்படுகின்றன. சமர்ப்பிக்கும் விலைகளின் செல்லுபடியாகும் காலம் **2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2025 டிசம்பர் 31** வரையிலாகும்.
   - (அ) தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களினால் குறித்த பொருட்கள் றாகம, வெலிசரையிலுள்ள இலங்கை கடற்படை கப்பல் மஹசென் நிருவனத்தில் இடைநிலை களஞ்சியச் சாலைக்கு ஒப்படைக்கவும்.
   - (ஆ) இது தொடர்பாக கரிசனை காட்டுபவர்கள் ஒவ்வொரு வகையறாவுக்குமான மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமான **ரூபா 20,000.00 ஐ காசாக நிதிப் பணிப்பாளர். இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு 01.** என்பவரிடம் செலுத்தவும். விண்ணப்ப படிவங்கள் **2023 செப்டம்பர் மாதம் 04 திகதி முதல் 2023 செப்டம்பர் மாதம் 26** ஆம் திகதி வரை வாராந்த வேலை நாட்களில் காலை **10.00 மணி தொடக்கம் 14.00 மணிக்கும்** இடைப்பட்ட காலத்தில் பெற்றுக் கொள்ள முடியும். உறிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்க வேண்டும்.
2. 2024-2025 ஆம் ஆண்டுகளுக்கான கப்பல்கள், படகுகள் மற்றும் கடற்படை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் வர்ணங்களின் விவரங்கள் மற்றும் தோராயமான தேவை அளவுகள் விண்ணப்பத்துடன் வழங்கப்படுகின்றதுடன் மேற்கோள்களுக்கான அழைப்பின் **முடிவு / டெண்டர்கள் திறக்கப்பு 2023 செப்டம்பர் 27 ஆம் திகதி 1400 மணிக்கு** மேற்கொள்ளப்படும்.
3. ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் தகமைகளை பூர்த்தி செய்ய வேண்டும். (விலைகளை விமர்சிக்கும் போது இவ்விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.)
   - i. கப்பல்கள், படகுகள் மற்றும் கடற்படை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் வர்ணங்களை சமமான திறன் கொண்டு அரசு / தனியார் நிறுவனங்களுக்கு வழங்குதல் தொடர்பான 02 வருட அனுபவம்.
   - ii. நிலையான மூலதன வசதிகள்.
   - iii. ஒழுங்காக வரி செலுத்தியமைக்கான அறிக்கை
   - iv. போதுமான தொடர்பாடல் வசதிகள் (தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, தொலைநகல், மின் அஞ்சல்)
   - v. போதுமான களஞ்சிய சாலை வசதிகள்
   - vi. போதுமான தொழிலாளர் மற்றும் அலுவலக வசதிகள்
   - vii. போதுமான வகையில் போக்குவரத்து வாகன வசதிகள்
   - viii. வர்த்தக நிறுவனமாக பதிவு செய்த சான்றிதழ் அல்லது நிறுவன ரீதியாக ஒன்றிணைந்து செயற்பட்டமை தொடர்பான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 03 வருடத்துக்கு மேற்பட்ட காலப்பகுதியில் தொடர்ந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

4 விண்ணப்பதாரிகள் தனது விலைகளை சமர்ப்பிக்கப்படும் போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்துபவராக பதிவு செய்த இலக்கத்தை சமர்ப்பித்தல் கட்டாயமாகும். இவ்வாறு பதிவு செய்து கொள்ளாத விண்ணப்பதாரிகள் வரி விலக்களிக்கப்பட்டமை தொடர்பாக இறை வரித் திணைக்கள ஆணையாளரின் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் மேற்குறித்த தேவைகளை பூர்த்தி செய்யாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5 விண்ணப்பதாரிகள் விலைகளை சமர்ப்பிக்கப்படும் போது கடித அட்டையின் இடது பக்கம் மேல் மூலையில் **“இலங்கை கடற்படைக்கு 2023 ஆம் ஆண்டுக்கான களஞ்சியப் பொருட்களை விநியோகிப்பதற்கான ஒப்பந்த விலைகளை சமர்ப்பித்தல்” எஸ்எல்என்/எல்ஓஜி/31/ஆர்சீ/2024** கேள்விப்பத்திரப்பெட்டியில் (டென்டர்) விண்ணப்பங்கள் திறக்கும் திகதி/ நேரம் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் கீழ் காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். அல்லது குறித்த கேள்விப்பத்திரப்பெட்டியில் (டென்டர்) இட வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களக் கொள்வனவுக் குழு,**
**இலங்கை கடற்படை**
**இலங்கை கடற்படை தலைமையகம்,**
**த.பெ. எண் 593,**
**கொழும்பு 01.**

6 குறித்த நேரம் முடிவடைந்த உடனேயே கேள்விப்பத்திரம் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பிக் கொடுக்கப்படும். விண்ணப்பதாரிக்கோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கோ கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் இந்த சந்தர்ப்பத்திற்கு சமூகமளிக்க முடியும்.

7 உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விலைகோரல் ஆவணங்கள், உரிய எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை ஏற்றல் அல்லது நிராகரித்தல் கேள்விச் சபைச் தலைவரின் அதிகாரத்துக்குட்பட்டது.

8 தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடல் தொடர்பாக பதிவுத் தபாலில் அறிவிக்கப்படும்.

9 கேள்விப் பத்திர விண்ணப்பங்களை எதுவித கொடுப்பனவுகளும் இன்றி பணிப்பாளர் நாயகம் வழங்கல் மற்றும் சேவைகள் **இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு 01** என்னும் இடத்தில் பரிசீலிக்க முடியும்.

10. மேலதிக விபரங்களுக்கு பணிப்பாளர் நாயகம் வழங்கல் மற்றும் சேவைகள் இலங்கை கடற்படைத் தலைமையகம், **த.பெ. எண் 593, கொழும்பு 01. பணிப்பாளர் வழங்கல் மற்றும் சேவைகள், தொலைபேசி 011 7712326** மூலம் தொடர்பு கொள்ளவும்.

11. இக்குறிப்பிட்ட ஒவ்வொரு வகையறாவுக்குமான விலைக்கோரல் தொடர்பான விபரங்களை கடற்படையின் இணையத்தளமான **www.navy.lk** யிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**திணைக்களக் கொள்வனவுக் குழு,**
**இலங்கை கடற்படை,**
**கொழும்பு 01.**

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் முதுபெரும் கலைஞர் கே. ஏ. ஜவாஹர் நினைவுகள்






தலைநகர் தந்த தன்னிகரில்லா கலைஞர்கள் வரிசையில் கலையுலகில் தன் தனித்துவமான நடிப்பாற்றலால் வானொலி, மேடை, சினிமா, சின்னத்திரைகளில் தனக்கென சிம்மாசனம் அமைத்துக் கொண்ட பிரபல கலைஞரே கலாபூஷணம், நடிகமணி கே.ஏ.ஜவாஹர். சரித்திர நாடக மன்னர் பாத்திரமானாலும், குணச்சித்திர பாத்திரமானாலும், நகைச்சுவை பாத்திரமானாலும், அந்தந்தப் பாத்திரத்திற்கேற்ப தன் நடிப்பாற்றலை வானொலி நாடகங்களுக்கு குரல் வழியாகவும், மேடை நாடகங்களுக்கு உணர்வுபூர்வமாக உடல் மொழியைக் கொண்டும் மக்களை ஈர்க்கும் நடிப்புத் திறன் இவரிடம் நிறைந்து காணப்பட்டது. இவர் கல்வி கற்ற இன்றைய கொழும்பு ஹமீத் அல் ஹுசைனி தேசிய கல்லூரி அன்று கொழும்பு ஹமீத் அல் ஹுசைனி பாடசாலையாக இருந்த போது, பாடசாலை நிகழ்வொன்றில் மேடையேறிய "ஜூலியஸ் சீசர்" நாடகத்தில் மன்னராக நடித்து முழு பாடசாலையையுமே அதிர வைத்தார். இதுவே கலையுலகு பக்கம் இவரை கொண்டு சென்றது எனலாம். இலங்கை வானொலி முஸ்லிம் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட கலைஞராக 1966களில் தேர்வு செய்யப்பட்ட இவர், நூற்றுக்கணக்கான முஸ்லிம் நாடகங்களில் நடித்ததன் வாயிலாக நாடறிந்த கலைஞரானார். மதம், கடல் கடந்து வானொலி வரலாற்றில் தடம் பதித்துக் கொண்ட அன்றைய முஸ்லிம் சேவையின் நாடக பாரம்பரியம் குறித்துப் பேசுகையில், பேசப்பட வேண்டிய ஒரு கலைஞராக காலஞ்சென்ற கலாபூஷணம் கே.ஏ.ஜவாஹர் திகழ்கிறார்.

இன்னும் அன்று முஸ்லிம் சேவையில் தொடராக ஒலிபரப்பான பிரபல எழுத்தாளர் தீன்லா (மௌலவி சைபுதீன் லாஹிப்) எழுதிய, இவர் நடித்த "மனச்சுமை" ஓரங்க நாடகம் இன்னும் இவரது திறமையை நேயர்கள் மத்தியில் பேசவைத்தது. கலாபூஷணம் எஸ். ஐ.நாகூர்கனி தொடராக எழுதிய "ஊடுருவல்" தொடர் நிகழ்ச்சியிலும், காலஞ்சென்ற நகைச்சுவை கலைஞர் ஓ. நாகூரோடிணைந்து பங்களிப்பும் வழங்கியமையும் நினைவுகூரத்தக்கது. பிரபல கலைஞர்களான கலைச்செல்வனும், ஏ.ஸீ.எம்.பாரூக்கும் 1966ல் இணைந்து நெறிப்படுத்திய "எதற்கும் ஓர் எல்லை", பிரபல இயக்குனர் சுஹைர் ஹமீத் நெறிப்படுத்திய "அவளைக்கொன்றவள் நீ", "பொம்மலாட்டம்", "வாடகைக்கு அறை", "பிள்ளை பெற்ற ராஜா ஒரு நாயை வளர்த்தார்", "சாகிகள் இல்லையடி பாப்பா" போன்ற பல மேடை நாடகங்கள் மக்கள் மத்தியில் பெரும் பிரபலத்தை இவருக்குத் தேடிக்கொடுத்தன. இலங்கையின் திரைத்துறையிலும், இவரது பங்களிப்புகள் நிறைந்திருக்கின்றன. புதிய காற்று, கோமாளிகள், வாடைக்காற்று, ஏமாளிகள் போன்ற ஈழத்துத் திரைப்படங்கள் இவரது திறமைக்குச் சான்று. சிங்களத் திரைப்படங்களிலும் இவர் நடித்திருக்கிறார். கலைஞர் கலாபூஷணம் கே.எம். எம்.நஸீர் எழுதி நெறிப்படுத்திய, எம்.பீ.ஹுசைன் பாரூக் தயாரித்தளித்த ஐ.டீ.என்.தொலைகாட்சி நிகழ்ச்சி முத்துச்சரத்தில் தொடராக ஒளிபரப்பான "அபூநாநா" நகைச்சுவை நாடக கதாபாத்திரமான "அபூநாநா" எனும் பெயர் என்றும் இவருக்கு நிலைத்த பெயரானது. "பிள்ளை பெற்ற ராஜா ஒரு நாயை வளர்த்தார்" நாடகத்தில் ராஜாவாக நடித்து அகில இலங்கை அரசு நாடக விழாவில் சிறந்த நடிகராக தெரிவுசெய்யப்பட்டார். 1969ல் தினகரன் நாடக விழாவில் சிரேஷ்ட கலைஞர் கலைச்செல்வன் ரவூப் எழுதிய "மனித தருமம்" என்ற நாடகத்தில் நடித்ததற்காக, சிறந்த "துணை நடிகர்" என்ற பட்டம் தமிழக திரைப்பட நடிகை சௌகார் ஜானகியால் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். அசனார் அப்பாஸ், உம்மு சுல்தான் பீவி தம்பதியருக்கு மூத்த புதல்வராக, 1945 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி பிறந்தார். தனது தாய்மாமன் மகளான மொஹிதீன் பாத்தும்மாவை 1975ல் திருமணம் செய்து கொண்டார். இவரது தந்தை கலைத் துறையில் ஆர்வமிக்க ஒருவராக இருந்தமை கே.ஏ.ஜவாஹருக்கு, கலையுலகில் நுழைவதற்கு வாய்ப்பாகியது எனலாம். 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14ஆம் திகதி, தனது 57 வது வயதில் நம்மை விட்டும் பிரிந்தார். அனைத்து இன, கலைஞர்கள், பொது மக்களின் பேரன்பினை பெற்றுக்கொண்ட இவரது ஜனாஸா கொழும்பு மாளிகாவத்தை மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டபோது, மதத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், கலைஞர்கள், பொதுமக்கள் என அதிகமானோர் கலந்து கொண்டார்கள். எதிர்வரும் செவ்வாய் (05.09 2023) இரவு 8.15 மணியளவில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாக இருக்கும் பாரம்பரியம் நிகழ்ச்சி மறைந்த கலைஞர் கலாபூஷணம் கே.ஏ.ஜவாஹர் நினைவுகளை சுமந்து வருகிறது. இந்நிகழ்ச்சியில் இவரது நினைவுகளை முஸ்லிம் சேவையின் முன்னாள் நாடக தயாரிப்பாளரும், புகழ் பூத்த நாடக எழுத்தாளருமான கனடாவில் வசித்து வரும் எம்.அஷ்ரப்கான், சிரேஷ்ட கலைஞர்களான கலாபூஷணம் ஜெய் ரஹீம் ஸஹீத், கலாபூஷணம் நூர்ஜஹான் மர்சூக், கவிஞர் வாழைத்தோட்டம் வஸீர் ஆகியோர் பரிமாறிகொள்கிறார்கள்.

நம்மோடு வாழ்ந்து வரும் கலைஞர் ஜவாஹரின் துணைவியார் மொஹிதீன் பாத்தும்மாவும் நிகழ்ச்சியில் குரல் கொடுப்பது நிகழ்ச்சிக்கு சிறப்பாகிறது.

முதுபெரும் கலைஞர் கலாபூஷணம் கே.ஏ.ஜவாஹர் பற்றிய தகவல்களை எனக்கு தந்துவிய சிரேஷ்ட கலைஞர் கலாபூஷணம் ஜோபு நஸீருக்கு இவ்வேளை நன்றி சொல்லி மகிழ்கிறேன்.

**எம்.எஸ்.எம்.ஜின்னா**


## தேவை
## மொபைல் டெக்னிஷியன்

கொழும்பு கோட்டையில் புதிதாகத் திறக்கப்பட்ட மொபைல் தொலைபேசி பழுதுபார்க்கும் கடையில், மொபைல் ஹார்ட்வெயார் அனுபவமும், அறிவுமுள்ள நபர்கள் உடனடியாக தேவை. தகைமை: மொபைல் போன் திருத்துவதில் 2 வருட அனுபமுள்ள நபர்கள் விரும்பத்தக்கது.

உங்களிடம் தேவையான திறன்களும் அனுபவமும் இருந்தால், தொடர்பு கொள்ளவும்:

077 065 7908



## றுஹுணு பல்கலைக்கழகம் - மாத்தறை
## விலைமனுக்களுக்கான அழைப்பு

**றுஹுணு பல்கலைக்கழகத்திற்கு கணனி மென்பொருள் மற்றும் வன்பொருள், ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்படவைத்தல், பரீட்சித்தல் மற்றும் பராமரித்தல்**

1. றுஹுணு பல்கலைக்கழகத்திற்கு பின்வரும் பொருட்களை வழங்குதல், விநியோகித்தல், நிறுவுதல், செயற்படவைத்தல், பரீட்சித்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றுக்காக தகுதி மற்றும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை றுஹுணு பல்கலைக்கழக துணைவேந்தரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

**விலைக்கோரல் இலக்கம்: RUH/ENG/SUP/NCB/2023/01**

| உருப்படி இல. | பொருட்கள்/விளக்கங்கள் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (ரூ) | விலை மனுப் பிணை முறி (ரூ) |
|---|---|---|---|---|
| | **Package No 01-Laboratory Equipment** | | | |
| 1 .1 | Control System Design Trainer kit | 2 | 3,500.00 | 30,000.00 |
| 1 .2 | Analog AC Milliammeter (100 mA) | 2 | | 1,400.00 |
| 1 .3 | Analog DC Milliammeter (100 mA) | 2 | | 1,400.00 |
| 1 .4 | Analog DC Voltmeter (20V) | 2 | | 1,400.00 |
| 1 .5 | DC Voltmeter (100 V) | 2 | | 1,400.00 |
| 1 .6 | Inductor Decade Box (10 H) | 4 | | 3,600.00 |
| 1 .7 | Capacitor Decade Box(10 µF) | 2 | | 1,800.00 |
| 1 .8 | Resistor Decade Box (10 MΩ) | 8 | | 8,000.00 |
| 1 .9 | 70 MHz, 4-Channel Digital Storage Oscilloscope- Type I | 1 | | 7,000.00 |
| 1 .10 | 50 MHz, 2-Channel Digital Storage Oscilloscope – Type II | 15 | | 26,250.00 |
| 1 .11 | DC Power Supply (30V) | 15 | | 27,000.00 |
| 1 .12 | Function Generator | 15 | | 21,000.00 |
| 1 .13 | Modulation Board | 1 | | 5,000.00 |
| 1 .14 | Demodulation Board | 1 | | 5,000.00 |
| 1 .15 | Soldering Station | 1 | | 2,000.00 |
| | **Package No 02 – Computer & Network Equipment** | | | |
| 2.1 | 2U Rack Server (Type 01) | 1 | 5,100.00 | 35,000.00 |
| 2.2 | 2U Rack Server (Type 02) | 2 | | 50,000.00 |
| 2.3 | Server Rack | 1 | | 2,750.00 |
| 2.4 | 3kVA Online UPS | 6 | | 12,000.00 |
| 2.5 | 2kVA Online UPS | 6 | | 5,400.00 |
| 2.6 | GPU Workstation (Type 01) | 3 | | 21,000.00 |
| 2.7 | GPU Workstation (Type 02) | 1 | | 10,000.00 |
| 2.8 | Hard Disk for Dell Power Edge R730 | 1 | | 800.00 |
| 2.9 | Hard Disk for HP Proliant DL380 G7 | 1 | | 800.00 |
| 2.10 | 128 GB RAM upgrade for HP Proliant DL380 G7 Server | 1 | | 4,000.00 |
| 2.11 | Laptop Computers | 8 | | 28,000.00 |
| 2.12 | Desktop Computers | 8 | | 20,000.00 |
| 2.13 | 600 VA UPS | 8 | | 1,200.00 |
| 2.14 | Apple Mac Mini Server with monitor | 1 | | 4,500.00 |
| 2.15 | Switch (C1000-24T-4G-L) | 1 | | 5,000.00 |
| 2.16 | Routers (Cisco ISR 4221/K9 with IOS-XE Image with Payload Encryption) | 1 | | 7,000.00 |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டித்தன்மையிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை பல்கலைக்கழகத்தின் சிறாப்பர் கரும்பீடத்திற்கு செலுத்தி அல்லது எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையின் ஊடாகவும் றுஹுணு பல்கலைக்கழகத்தின் (மக்கள் வங்கி, காலி பிரதான வீதி) 169100121871753 எனும் கணக்கிலக்கத்திற்கு மீளளிக்கப்படாத கட்டணத்தை வைப்புச் செய்த பின் ஸ்கேன் செய்யப்பட்ட வரவுத் துண்டை சமர்ப்பிப்பதன் பேரில் 2023-09-22ஆம் திகதி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை (ஆங்கில மொழியில்) காலி, ஹப்புகல, பொறியியல் பீடத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். (2023 டிசம்பர் 26ஆம் திகதி வரை)
5. உருப்படிகளின் அடிப்படையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.
6. விலைமனுக்களுடன் இலங்கையில் செயற்படும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் ஏற்புடையதான விலைமனுக்கோரல் உருப்படிகளுக்கு உரித்தான (நிபந்தனையற்ற) விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் செல்லுபடியாகும் காலத்திற்கு அப்பால் 30 நாட்கள் வரையில் விலைக்கோரல் பிணைமுறி செல்லுபடியாகும் தன்மையில் (2024 ஜனவரி 26ஆம் திகதி வரை) இருத்தல் வேண்டும் என்பதுடன் அது ''துணை வேந்தர், றுஹுணு பல்கலைக்கழகம்'' என முகவரியிடப்பட்டிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2023-09-25ஆம் திகதி பி.ப. 2.00 மணியாகும்.
9. 2023-09-08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு காலி, ஹப்புகல, பொறியியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் நிகழ்நிலையின் ஊடாக இடம்பெறும். (Zoom Meeting)
10. உரிய முறையில் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பதிவுத் தபாலில் **தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, றுஹுணு பல்கலைக்கழகம், வெல்லமடம, மாத்தறை** எனும் முகவரியில் கிடைக்கும் வகையில் மேற்கூறப்பட்ட முடிவுறுத்தப்படும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும் அல்லது றுஹுணு பல்கலைக்கழக வெல்லமடம, மாத்தறை பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள 1ஆம் இலக்க கேள்விப் பெட்டியில் மேற்கூறப்பட்ட முடிவுறுத்தப்படும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் மற்றும் இலக்கம் ஆகியன சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.
11. விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டவுடன் உடனடியாகவே மேலேயுள்ள முகவரியில் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
12. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை காலி, ஹப்புகல, றுஹுணு பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் உதவி நிதியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 091-2245765 மின்னஞ்சல்: ab@eng.ruh.ac.lk.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**றுஹுணு பல்கலைக்கழகம்,**
**வெல்லமடம, மாத்தறை.**
**2023 செப்டெம்பர் 03ஆம் திகதி.**



தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
முதல் 15 சொற்களுக்கு
330/- ரூபா
ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
E-Mail :- classified@lakehouse.lk
011 2 429 383 / 011 2 429 347



## ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை
## வெற்றிடங்கள்
## முறைமை நிர்வாகி பதவி
**(Post of IT System Administrator)**

மேற்கூறப்பட்ட பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள் மற்றும் அனுபவம்** :
01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட MIS / கணனி விஞ்ஞானம் / தகவல் தொழில்நுட்பத்தில் நான்கு வருட இளமாணிப் பட்டம்
அத்துடன்
சான்றுபடுத்தப்பட்ட வலையமைப்பு மற்றும் முறைமை நிர்வாகி (C/NSA) அல்லது மைக்ரோ சொப்ட் முறைமை நிர்வாகி (MCSA) போன்ற தொழில்சார் சான்றுபடுத்தல்கள்
மற்றும்
02. தகவல் தொழில்நுட்ப முறைமை நிர்வாகியாக குறைந்தபட்சம் 3 வருட கால அனுபவம்

**வயது** : விண்ணப்பதாரர்கள் 22 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : MN6, தரம் II
ரூபா 49390 - 10x895 - 58,340/-
மேற்படி சம்பளத்திற்கு மேலதிகமாக ஒப்புதல் அளிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**சேவைக்கு அமர்த்துவதற்கான நியதிகள்:** நிரந்தரம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் அடிப்படையிலாகும்.

அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் 2023-09-18ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**
**2023-08-31**



## அமெரிக்க தூதரகம், கொழும்பு
### விசா உதவியாளர் (புலம்பெயர்ந்தோர்/புலம்பெயர்ந்தோர் அல்லாதவர்) [ஆண் / பெண்]

[illegible]

இந்த பதவிக்கான வேலை நேரம் : முழுநேரம் - வாரத்திற்கு மொத்தம் 40 மணித்தியாலங்கள்

[illegible]

**தேவையான தகுதிகள்:**

1. கல்வி: [illegible]
2. தொழில் அனுபவம்: [illegible]
3. மொழித்திறன்: [illegible]
4. தொழில் அறிவு: [illegible]
5. திறன் மற்றும் திறமைகள்: MS Word மற்றும் Outlook [illegible] MS Excel மற்றும் Power Point [illegible]

**தேவைப்படும் ஆவணங்கள்:**

[illegible]

**விண்ணப்பிக்கும் முறை:**

[illegible] https://lk.usembassy.gov/embassy/jobs/ [illegible] [ERA] [illegible]

**நீங்கள் அனுப்பும் கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.**
உங்கள் விண்ணப்பம் 2023 செப்டம்பர் 15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் [illegible]

## இலங்கைக்கு மீளக்...(04 ஆம் பக்கத் தொடர்)

அன்றைய மன்னர் ஆட்சிக் காலத்திலும் கூட இலங்கை ஆயுதங்களின் தொழில்நுட்பம் உயர் மட்டத்தில் இருந்திருக்கலாம் என எண்ணக் கூடிய பல காரணிகள் உள்ளன. அது தொடர்பிலும் நாம் ஆய்வாளர் சாமிகர பிலப்பிட்டியவிடம் கேட்டோம்.

மன்னன் ஆட்சிக் காலத்திலும் இலங்கையில் ஆயுதத் தொழில்நுட்பம் உயர் மட்டத்தில் இருந்ததை எண்ணிப் பார்க்க பல காரணிகள் உள்ளன. அதுபற்றி ஆய்வாளர் சாமிகர பிலப்பிட்டியவிடமும் கேட்டோம்.

"அந்த யுத்தத்தில் கண்டி இராணுவம் துப்பாக்கிகள், பீரங்கிகள் மற்றும் ரொக்கட்டுக்களைப் பாவித்திருப்பதாக டச்சு ஏடுகளில் எழுதப்பட்டுள்ளது.

அன்று ரொக்கட்டுக்கள் தீயை எழுப்பும் துப்பாக்கி என்றே அறியப்பட்டிருக்கின்றது. அதற்குப் புறம்பாக மர பீரங்கிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அந்த மரத்தினாலான பீரங்கிகள் இன்றைய க்ளைமோ மைன்ட் எனப்படும் தொழில்நுட்பத்திற்குச் சமனானதாகும்"

நெதர்லாந்தில் எமது நாட்டிற்கு சொந்தமான சுமார் 3000 தொல்பொருட்கள் இருப்பதாகவும், அவை அனைத்தும் இல்லாவிட்டாலும் குறிப்பிட்டளவினையாவது முன்னுரிமை ஆவணத்தின் பிரகாரம் திருப்பி வழங்குவதற்கு நெதர்லாந்து அரசாங்கம் ஆயத்தமாக இருப்பதாகவும் தேசிய அருங்காட்சியகத்தின் பணிப்பாளர் நாயகம் சனுஜா கஸ்தூரியாராச்சி தெரிவித்தார்.

இலங்கை மற்றும் நெதர்லாந்து நாடுகளின் நிறுவனங்களிடையே கலாசார ஒத்துழைப்பு நடவடிக்கைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, வரும்காலங்களில் தொழில்நுட்ப அறிவினைப் பரிமாறிக் கொள்ளல், கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புக்கள் போன்ற பல விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த தொல்பொருட்களை இலங்கைக்கு கொண்டு வரும் விடயத்தில் அதிக ஆர்வத்தையும், அர்ப்பணிப்பையும், வழிகாட்டல்களையும் வழங்கிச் செயற்படும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்ரமநாயக்கா, அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன, இலங்கைக்கான நெதர்லாந்து தூதுவர் பொனி ஹொபாஸ் ஆகியோருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதற்கும் பணிப்பாளர் நாயகம் மறந்து விடவில்லை.

நெதர்லாந்திலிருந்து இந்நாட்டிற்கு கொண்டு வரப்படும் தொல்பொருட்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அமைச்சர் விதுர விக்ரமநாயக்கா தெரிவித்தார்.

# இலங்கை கடற்படை
## பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை கடற்படைக்கு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்குமான களஞ்சியப் பொருட்களை விநியோகித்தல் தொடர்பாக உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், வழங்குனர்கள், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் கேள்வி கோருதல்

1. இலங்கை கடற்படைத் திணைக்களத்தின் கொள்வனவு குழுத் தலைவரினால் இலங்கை கடற்படைக்கு 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதியில் இருந்து 2024 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்குமான காலப்பகுதிக்கு கீழே குறிப்பிடப்படும் வேறு வேறு களஞ்சியப் பொருட்கள் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களையோ ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் விநியோகிப்பதை உறுதி செய்யக்கூடிய இலங்கையின் வர்த்தக நிறுவனங்கள், இறக்குமதியாளர்கள் உற்பத்தியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள் போன்ற வழங்குனர்களிடமிருந்து விலைகள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் சமர்ப்பிக்கும் விலைகளின் செல்லுபடியாகும் காலம் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01ஆம் திகதி முதல் 2024 டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையிலாகும்.

   (அ) தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களினால் குறித்த களஞ்சியப் பொருட்கள் ரகம, வெலிசரையிலுள்ள இலங்கை கடற்படை கப்பல் மஹாசென் நிறுவனத்தில் உள்ள இடைநிலை களஞ்சியச் சாலைக்கு ஒப்படைக்க வேண்டும்.

   (ஆ) இது தொடர்பாக கரிசனை காட்டுபவர்கள் ஒவ்வொரு வகையறாவுக்குமான மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமான ரூபா.5,000.00 ஐ காசாக நிதிப் பணிப்பாளர், இலங்கை கடற்படைத் தலைமையகம், த.பெ. எண் 593, கொழும்பு 01. என்பவரிடம் செலுத்தவும். விண்ணப்ப படிவங்கள் 2023 செப்டம்பர் மாதம் 04 திகதியில் இருந்து 2023 செப்டம்பர் மாதம் 27 ஆம் திகதி வரை வாராந்த வேலை நாட்களில் காலை 10.00 மணி தொடக்கம் 14.00 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் பெற்றுக் கொள்ள முடியும். உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பொது களஞ்சிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்க வேண்டும்.

2. 2024 ஆம் ஆண்டுக்கு ஒவ்வொரு நிறுவனத்துக்குமான தேவைகளின் அளவுகள் மற்றும் விபரங்கள் ஒவ்வொரு வகையறாவின் கீழும் தேவைப்படும் அளவுகள் விண்ணப்படிவத்துடன் வழங்கப்படும்.

கேள்விப்பத்திர இலக்கங்களும் ஒவ்வொரு வகையறாவும்

| விடயங்களின் வகைப்படுத்தல் இலக்கம் | விடயங்களின் வகைப்படுத்தல் விடய விபரம் | முடிவுத் திகதியும் பத்திரங்களை திறக்கும் திகதியும் நேரமும் |
|---|---|---|
| எஸ்எல்என்/எல்ஓஜி/01/ஆர்சி/2024 | அனைத்து வகையான பேட்டரிகள் | 2023 அக்டோபர் 02, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/02/ஆர்சி/2024 | சுற்றுக்கம்பிகள் (Winding wires) | 2023 அக்டோபர் 02, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/03/ஆர்சி/2024 | வீட்டினுள் பாவிக்கும் மின் வயர்கள் | 2023 அக்டோபர் 02, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/04/ஆர்சி/2024 | பொறுத்திகள் - Swich (MCB/ MCCB/ RCCB) | 2023 அக்டோபர் 02, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/05/ஆர்சி/2024 | குளியலறை உபகரணங்கள் | 2023 அக்டோபர் 02, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/07/ஆர்சி/2024 | டயர் டியுப் வகைகள் | 2023 அக்டோபர் 02, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/08/ஆர்சி/2024 | கொம்பியுட் மற்றும் உதிரிப்பாகங்கள் | 2023 அக்டோபர் 02, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/09/ஆர்சி/2024 | உருக்குக்கம்பி (கட்டிட நிர்மாணம்) | 2023 அக்டோபர் 02, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/10/ஆர்சி/2024 | கைதொழிலுக்கு பாவிக்கப்படும் வாயு (Industrial gases) | 2023 அக்டோபர் 02, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/11/ஆர்சி/2024 (கோப்பு எண் 01) | கட்டிட கட்டுமானத்துக்காக பயன்படுத்தப்படும் பொருட்கள் - மென்மையான இரும்பு மற்றும் கால்வனேற்றப்பட்ட பொருட்கள் | 2023 அக்டோபர் 02, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/11/ஆர்சி/2024 (கோப்பு எண் 02) | கட்டிட கட்டுமானத்துக்காக பயன்படுத்தப்படும் பொது பொருட்கள் - கதவுகள் மற்றும் ஜன்னல்களுக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் பாகங்கள் | 2023 அக்டோபர் 02, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/11/ஆர்சி/2024 (கோப்பு எண் 03) | கட்டிட கட்டுமானத்துக்காக பயன்படுத்தப்படும் பொது பொருட்கள் | 2023 அக்டோபர் 02, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/12/ஆர்சி/2024 | தூய்மை செய்யும் உற்பத்திப் பொருட்கள் | 2023 அக்டோபர் 02, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/13/ஆர்சி/2024 | தொலைபேசி கம்பி வகைகள், ட்ரொப்வயர், தொலைபேசி உதிரிப்பாகங்கள் | 2023 அக்டோபர் 02, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/14/ஆர்சி/2024 | காரியாலய காகிதாதிகள் | 2023 அக்டோபர் 03, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/15/ஆர்சி/2024 | அச்சுக்கூடதாசி மற்றும் கோப்பிகள் | 2023 அக்டோபர் 03, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/16/ஆர்சி/2024 | உள்நாட்டு பலகை வகைகள் | 2023 அக்டோபர் 03, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/17/ஆர்சி/2024 (கோப்பு எண் 01) | பொது பொறியில் உடமைகள் | 2023 அக்டோபர் 03, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/17/ஆர்சி/2024 (கோப்பு எண் 02) | பொது பொறியில் உடமைகள் | 2023 அக்டோபர் 03, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/17/ஆர்சி/2024 (கோப்பு எண் 03) | பொது பொறியில் உடமைகள் | 2023 அக்டோபர் 03, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/18/ஆர்சி/2024 | ஒட்டும் உருளைக் கம்பிகள் (Welding electrodes) | 2023 அக்டோபர் 03, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/19/ஆர்சி/2024 | பிவிசி குழாய் உதிரிப்பாகங்கள் | 2023 அக்டோபர் 03, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/20/ஆர்சி/2024 | ஒட்டுப்பலகை வகைகள் உள்நாட்டு வெளிநாட்டு | 2023 அக்டோபர் 03, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/21/ஆர்சி/2024 | பொதுவான வர்ணங்கள் | 2023 அக்டோபர் 03, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/24/ஆர்சி/2024 | மின் குமிழ்கள் | 2023 அக்டோபர் 03, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/25/ஆர்சி/2024 | சிங்கிள் (Roofing Sheets) | 2023 அக்டோபர் 03, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/26/ஆர்சி/2024 | வாகன வர்ணங்கள் | 2023 அக்டோபர் 03, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/27/ஆர்சி/2024 | அச்சிடும் பொருட்கள் | 2023 அக்டோபர் 04, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/28/ஆர்சி/2024 | வெளிநாட்டு பலகை வகைகள் | 2023 அக்டோபர் 04, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/29/ஆர்சி/2024 | ஜீ.ஆர்.பீ கண்ணாடி துரும்பு | 2023 அக்டோபர் 04, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/30/ஆர்சி/2024 (கோப்பு எண் A) | வாகன பொருட்கள் | 2023 அக்டோபர் 04, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/30/ஆர்சி/2024 (கோப்பு எண் B) | வாகன பொருட்கள் | 2023 அக்டோபர் 04, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/30/ஆர்சி/2024 (கோப்பு எண் C) | வாகன பொருட்கள் | 2023 அக்டோபர் 04, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/30/ஆர்சி/2024 (கோப்பு எண் D) | வாகன பொருட்கள் | 2023 அக்டோபர் 04, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/30/ஆர்சி/2024 (கோப்பு எண் E) | வாகன பொருட்கள் | 2023 அக்டோபர் 04, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/30/ஆர்சி/2024 (கோப்பு எண் 02) | வாகனங்களுக்குள் பயன்படுத்தப்படும் தரைவிரிப்புகள், கவர்கள் மற்றும் துணிகள் | 2023 அக்டோபர் 04, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/33/ஆர்சி/2024 | நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்காக பயன்படுத்தப்படும் பாகங்கள் | 2023 அக்டோபர் 04, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/34/ஆர்சி/2024 | சீமெந்ட் (50 கிலோ) | 2023 அக்டோபர் 04, 1000 மணி |
| எஸ்எல்என்/எல்ஓஜி/37/ஆர்சி/2024 | ஸ்மார்ட் ஐடிகளுக்கான அச்சிடும் பொருட்கள் | 2023 அக்டோபர் 04, 1000 மணி |

3. ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் தகமைகளை பூர்த்தி செய்ய வேண்டும். (விலைகளை விமர்சிக்கும் போது இவ்விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.)
   - i. அரச நிறுவனங்களுக்கு களஞ்சியப் பொருட்களை சிறப்பான முறையில் விநியோகித்தமை தொடர்பான 2 வருட அனுபவம்.
   - ii. நிலையான மூலதன வசதிகள்.
   - iii. ஒழுங்காக வரி செலுத்தியமைக்கான அறிக்கை
   - iv. போதுமான தொடர்பாடல் வசதிகள் (தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, தொலைகல், மின் அஞ்சல்)
   - v. போதுமான களஞ்சிய சாலை வசதிகள்
   - vi. போதுமான தொழிலாளர் மற்றும் அலுவலக வசதிகள்
   - vii. போதுமான வகையில் போக்குவரத்து வாகன வசதிகள்
   - viii. வர்த்தக நிறுவனமாக பதிவு செய்து கொண்டுள்ள சான்றிதழ் அல்லது நிறுவன ரீதியாக ஒன்றிணைந்து செயற்பட்டமை தொடர்பான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 3 வருடத்துக்கு மேற்பட்ட காலப்பகுதியில் தொடர்ந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

4 விண்ணப்பதாரிகள் விலைகளை சமர்ப்பிக்கப்படும் போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) செலுத்துபவராக பதிவு செய்த இலக்கத்தை சமர்ப்பித்தல் கட்டாயமாகும். இவ்வாறு பதிவு செய்து கொள்ளாத விண்ணப்பதாரிகள் வரி விலக்களிக்கப்பட்டமை தொடர்பாக இறை வரித் திணைக்கள ஆணையாளரின் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் மேற்குறித்த தேவைகளை பூர்த்தி செய்யாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5 விண்ணப்பதாரிகள் விலைகளை சமர்ப்பிக்கப்படும் போது கடித அட்டையின் இடது பக்கம் மேல் மூலையில் **"இலங்கை கடற்படைக்கு 2023 ஆம் ஆண்டுக்கான களஞ்சியப் பொருட்களை விநியோகிப்பதற்கான ஒப்பந்த விலைகளை சமர்ப்பித்தல்"** (விடய விபரம்) **எஸ்எல்என்/எல்ஓஜி/...../ஆர்சீ/2023** கேள்விப்பத்திரப்பெட்டியில் (டெண்டர்) விண்ணப்பங்கள் திறக்கும் திகதி/நேரம் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் கீழ் காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். அல்லது குறித்த கேள்விப்பத்திரப்பெட்டியில் (டெண்டர்) இட வேண்டும்

தலைவர்,
திணைக்களக் கொள்வனவுக் குழு,
இலங்கை கடற்படை,
இலங்கை கடற்படை தலைமையகம்,
த.பெ. எண் 593,
கொழும்பு 01.

6 குறித்த நேரம் முடிவடைந்த உடனேயே கேள்விப்பத்திரம் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பிக் கொடுக்கப்படும். விண்ணப்பதாரிக்கோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கோ கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் இந்த சந்தர்ப்பத்திற்கு சமூகமளிக்க முடியும்.

7 உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விலைகோரல் ஆவணங்கள், உரிய எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை ஏற்றல் அல்லது நிராகரித்தல் கேள்விச் சபைச் தலைவரின் அதிகாரத்துக்குட்பட்டது.

8. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடல் தொடர்பாக பதிவுத் தபாலில் அறிவிக்கப்படும்.

9 கேள்விப் பத்திர விண்ணப்பங்களை எதுவித கொடுப்பனவுகளும் இன்றி பணிப்பாளர் நாயகம் (வழங்கல் மற்றும் சேவைகள்), இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு 01. என்னும் இடத்தில் பரிசீலிக்க முடியும்.

10. மேலதிக விபரங்களுக்குத் பணிப்பாளர் நாயகம் வழங்கல் மற்றும் சேவைகள், இலங்கை கடற்படைத் தலைமையகம், த.பெ. எண் 593, கொழும்பு 01. பணிப்பாளர் வழங்கல் மற்றும் சேவைகள், தொலைபேசி 011 7712326 மூலம் தொடர்பு கொள்ளவும்.

11. இக்குறிப்பிட்ட ஒவ்வொரு வகையறாவுக்குமான விலைக்கோரல் தொடர்பான விபரங்களை கடற்படையின் இணையத்தளமான www.navy.lk யிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

**தலைவர்,**
**திணைக்களக் கொள்வனவுக் குழு,**
**இலங்கை கடற்படை**
**கொழும்பு 01.**



# வாரபலன்

03.09.2023 - 09.09.2023

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

(அஷ்விணி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)

லக்னாதிபதி செவ்வாய் 6இல் இருப்பது ஒரு விதத்தில் நல்லது தான். எட்டுக்குடையவன் கெட்டிருக்கிறான் அல்லவா. அது இலாபம். பொதுவாக செவ்வாய் 3, 6, 11 ஆகிய இடங்களில் இருப்பது ஒரு நல்ல அமைப்புத் தான். எதிர்பாராத சில திருப்பங்கள் நிகழும். எங்கிருந்தோ தைரியம் வந்து செயல்களை கவனத்தோடும் வேகத்தோடும் செய்ய வைக்கும். வழக்கம் போல் குரு 5ஆம் இடத்தையும் 7ஆம் இடத்தையும் பார்ப்பதும் மனோரதங்களை நிறைவேற்றும் அமைப்பு தான். வணிகம் தொழில் புது யுக்தி தேவைப்படும். தொழில் விஸ்தரிப்பு இப்போது செய்ய வேண்டாம். நட்பு சில நேரம் பகையாகும்.

## ரிஷபம்

(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )

இராசிநாதன் சுக்கிரன் 3இல் வக்கிரமடைவதால் சில நன்மைகள் உண்டு. கேந்திரத்தில் சூரியன் ஆட்சி பெற்று இருக்கிறார். பொதுப்பணிகளில் ஆர்வம் இருக்கும். இடமாற்றங்கள் உண்டு. வார இறுதியில் பொருளாதார சுணக்கம் நீங்கும். உத்தியோகமாற்றம் உண்டு. பதவி உயர்வுக்கு வாய்ப்பும் உண்டு. வக்கிரகதியில் மகர இராசியில் சனி உலவுவதால் சில எதிர்பாராத நன்மைகள் ஏற்படும். மனை வாங்கும் முயற்சி வெற்றி பெறும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பூர்வீக சொத்து பிரச்சினை தீரும். கேது 6 இல் இருக்கிறார். ஆலய தரிசனம் செய்யும் வாய்ப்பு ஏற்படும். வேலையாட்கள் ஒத்துழைக்க மறுக்கலாம்.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)

இராசிநாதன் 3 இல் யோக நிலையில் சூரியனோடு சேர்ந்து இருக்கிறார். கன்னியில் இருக்கும் செவ்வாயால் சில நன்மைகள் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். கூட்டுத்தொழில் வெற்றி பெறும். வாரக் கடைசியில் வக்கிர நிவர்த்தி ஆகும் இராசிநாதன் புதனால் நழுவிய வாய்ப்பு திரும்ப கிடைக்கும். சுப நிகழ்வுத் தடைகளும் அகலும். வணிகம் லாபகரமாக இருக்கும். திருத்தல மற்றும் ஆன்மிக தரிசனம் உண்டு. 5,12க்கு உரிய சுக்கிரன் வக்கிரம் பெறுவதால் பிள்ளைகளால் சில பிரச்சினைகள் மற்றும் மனக்குழப்பங்கள் ஏற்படும். அஷ்டமத்து சனி மறுபடியும் ஆதிக்கத்தில் வருவதால் இன்னும் சில காலம் நீங்கள் காத்திருக்க வேண்டி இருக்கும்.

## கடகம்

( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)

சுகாதிபதி சுக்கிரன் வக்கிரமடைந்திருக்கிறார். தாயின் உடல்நிலை அபிவிருத்தியாகும். புதிய சொத்துக்களை வாங்கும் அமைப்பு உண்டு. புதிய வாகனங்களை மாற்றலாமா என்று நினைப்பீர்கள். வெளிநாட்டு முயற்சி வெற்றி அளிக்கும். முக்கிய பிரமுகர்களின் ஆதரவு கிடைக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். தடைப்பட்ட கடன் உதவிகள் கிடைக்கும். நட்பு உள்ளங்கள் உதவி செய்யும். கலைத்துறையில் நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். புதிய ஆடை ஆபரணம் வாங்குவதும், சொந்த உறவுகளைச் சந்திப்பதும் நடைபெறும். கண்டகச் சனி நடப்பதால் சில தவிர்க்க முடியாத சங்கடங்கள் உண்டு. குரு வக்ரகதியில் இருப்பதால் இடமாற்றம் வேலை மாற்றம் உண்டு.

## சிம்மம்

(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)

12 ஆம் இடத்தில் சுக்கிரன் வக்கிரமடைந்திருக்கிறார். தொழில் மாற்றங்கள் உண்டு. திட்டமிட்டு செயல்பட்டால் வெற்றி உண்டு. நிதி பொருளாதாரம் முதலியன முன்னேறும். உங்கள் ஆலோசனைக்கு மதிப்புக் கொடுப்பார்கள். மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். உத்தியோகத்தில் சாதகமான பலன்கள் உண்டு. செவ்வாய் 2ஆம் இடத்தில் இருப்பதால் தனவிருத்தி ஏற்படும். புதிய வீடு வாங்கும் யோகம் உண்டு. மனை கட்டி குடிபோகும் வாய்ப்பும் உண்டு. பல கிரகங்கள் சுபத்துவதோடு இருக்கின்றன. எனவே பிரச்சினை இல்லாத வாரமாக அமையும். கலைஞர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். கொடுத்த கடனைப் பெறுவதில் கவனம் தேவை.

## கன்னி

(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2 ஆம் பாதம்)

சுக்கிரன் அதாவது தனகாரகன் 11இல் வக்கிரம். வெளியூர் பயணங்கள் வெற்றி பெறும். எடுத்த காரியங்கள் நல்ல முறையில் முடியும். குடும்பத்தினர் ஆசைப்பட்டது வாங்கி தருவீர்கள். தொழில் வெற்றி உண்டு. ஆதாயமான தகவல்கள் கிடைக்கும். மேலதிகாரிகள் இணக்கம் காட்டுவார்கள். குருவும் வக்கிரமடைய அஷ்டம தோஷங்கள் விலகும். சுப காரிய தடைகள் விலகும். பொது வாழ்வில் ஏற்றம் உண்டு. 12இல் சூரியன் மற்றும் புதன். வீடு, வாகனம் வாங்குவீர்கள் அல்லது மாற்றக் கூடிய வாய்ப்பு இருக்கும். குடும்பத்தில் இனிமை இருக்கும். சந்தோசம் இருக்கும்.அவ்வப்பொழுது அசதியும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். சனியின் வக்கிரகதியால் பிள்ளைகளால் சில கவலைகளும் பிரச்சினைகளும் ஏற்படும்.

## துலாம்

(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)

சுக்கிரனே அட்டமாதிபதி. அவர் வக்கிரம். எடுத்த செயல்களில் வெற்றி கிடைக்கும். உங்கள் மதிப்பு உயரும். 11 இல் சூரியன் ஆட்சி என்பது நல்ல அமைப்பு. கூடவே பாக்கியாதிபதி புதன் இருக்கிறார். நிதிநிலை முன்னேற்றமாக இருக்கும். இலாபகரமான முயற்சிகள் செய்வீர்கள். புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். புதிய ஒப்பந்தங்களும் கிடைக்கும். முக்கிய புள்ளிகளைச் சந்திப்பீர்கள். அது உங்களுக்கு உதவும். வேலை செய்பவர்களுக்கு ஊதிய உயர்வு, பதவி உயர்வு முதலியவை கிடைக்கும் வாய்ப்பு உண்டு. ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும்.

இராசிநாதன் வக்கிரம் என்பதால் ஆரோக்கியம் அவ்வப்போது சீர்கெடும். இடமாற்றம் உண்டு. தொழில் மாற்றங்களும் உண்டு. எதிர்பாராத விரயங்கள் அதிகரிக்கும்.

## விருச்சிகம்

(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

சூரியன் ஆட்சி பெற்று இருக்கிறார். அது அவருக்கு தொழில் இடம். தொழில் தடைகள் விலகும். பங்குதாரர்கள் அனுசரணையோடு நடந்து கொள்வார்கள். எதுவும் சற்று அனுகூலமாகவே இருக்கும். வருவாய் அதிகரிக்கும். நண்பர்கள் ஒத்துழைப்பார்கள். பொருளாதாரத்தில் நிறைவு காண்பீர்கள். சுய தொழில் விருத்தி ஆகும். சுக்கிரன் பாக்கியஸ்தானத்தில் வக்கிரம் அடைந்து இருப்பதால் ஆபரண சேர்க்கை யோகம் உண்டு. புதிய பதவிகள் கிடைக்கும். இளைய சகோதரர்களால் உதவி உண்டு. அவர்கள் வீட்டு சுபகாரியங்களிலும் கலந்து கொள்ளும் வாய்ப்பு உண்டு. எனவே ஆசைகள் நிறைவேறும். அரசாங்க அலுவல்கள் சாதகமாக நடைபெறும். குரு வக்கிரமாக இருப்பதால் எச்சரிக்கையோடு இருக்கவும். திடீர் செலவுகள் ஏற்படும். பழைய கடன்கள் எதிர்பாராத நிலையில் வந்து தொல்லை தரும்.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)

சுக்கிரன் 6இல் வந்து வக்கிரம் பெறுகின்றார். இது ஒரு விபரீத இராஜயோகம். வாகனம் வீடு போன்ற தொழில்கள் சிறக்கும் உறவுகள் கைகொடுக்கும் குலதெய்வத்தின் அருள் உண்டு. இந்த வாரத்தில் வருவாய் பரவாயில்லை. தந்தைவழி உறவுகள் நன்றாக இருக்கும். பயணத்தில் ஆதாயங்கள் கிடைக்கும் செவ்வாய் பத்தில் இருப்பதால் புதிய ஒப்பந்தங்கள் உருவாகும். புதிய வேலைகளும் கிடைக்கும். வார இறுதியில் புதன் வக்கிர நிவர்த்தி ஆவதால் எதிலும் தெளிவாக அணுகும் புத்திசாலித்தனம் ஏற்படும். எனவே எவ்வளவு முயற்சி செய்தாலும் யாரோ திடீர் என்று காலை பிடித்து இழுப்பது போல உணர்வீர்கள்.

## மகரம்

(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)

செவ்வாய் பாக்கியஸ்தானத்தில் இருக்கிறார். சுகாதிபதி பாக்கியஸ்தானத்தில் இருப்பதால் நினைத்தது நடக்கும் வாய்ப்பு உண்டு. எதிலும் தைரியம் பிறக்கும். நல்ல தகவல்கள் கிடைக்கும். குரு 12க்குரியவர். வக்கிரம் பெறுவது நல்லதுதான். சகோதரர்களால் உதவிகளும் ஆதாயங்களும் உண்டு. வீண்விரயம் குறையும். சுபச் செலவுகள் ஏற்படும். புதன் பாக்கிய அதிபதி. அவர் மறைவது நல்லது. நிறைந்த பலனை அவர் தருவார். துன்பங்களை வெல்லும் மனவலிமையும் அறிவாற்றலையும் ஏற்படுத்துவார். எதிர்பார்ப்புகளில் தடங்கல்கள் வரும். வீண் சண்டைகள் தலைதூக்கும் என்பதால் நிதானம் முக்கியம். சில பயணங்களை தவிர்க்கப் பாருங்கள்.

## கும்பம்

( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)

7இல் சூரியன் ஆட்சி பெற்று இருக்கிறார். புதன் சூரியன் இணைப்பு. நண்பர்கள் ஒத்துழைப்பார்கள். முயற்சிகள் வெற்றிபெறும். வழக்கு சாதகமாகும். தம்பதிகள் கருத்து வேற்றுமை மறையும். செய்த முயற்சிகள் பலன் கிடைக்கும். புதன் பலம் பெறுகிறார். பிள்ளைகளால் நிம்மதி உண்டு. அவர்களுடைய மேற் படிப்பு வேலை முதலிய முயற்சிகள் பலிக்கும். வெளிநாட்டு வேலை முயற்சிகளும் சாதகமாக அமையும். வீடு மாற்றம், வேலை மாற்றம் உண்டு. ஆரோக்கிய குறைவுகள் ஏற்படலாம். ஏற்கனவே உள்ள நோய்களின் தீவிரம் அதிகரிக்கும். வீண் வாக்குவாதங்கள் வேண்டாம். சில காரியங்கள் அதிக செலவில் நடைபெறும்.

## மீனம்

(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)

சூரியன் 6இல் ஆட்சி பெற்று இருக்கிறார். ஆரோக்கியம் அதிகரிக்கும். வரவுகள் அதிகரித்து பொருளாதார நெருக்கடி நீங்கும். திருமணம் போன்ற சுப காரியத் தடைகள் நீங்கும். 8க்குரிய சுக்கிரன் வக்கிரத்தை அடைவதால் தூர தேச பயணம் ஏற்படும் 7 ஆம் ஆதி புதனின் கேந்திர தோஷம் வக்கிரமாக இருப்பதால் வார கடைசி வரை விலகி விடுகிறது. அதனால் இப்போதைக்கு குடும்ப ஒற்றுமை பலப்படும். வழக்குகள் ஒரு முடிவுக்கு வரும். செவ்வாயினுடைய அமைப்பினால் பூமியோகம் ஏற்படலாம். வீட்டை பழுது பார்ப்பது, கட்டுதல் நடைபெறும். இராசிநாதன் குரு வக்கிரம் அடைந்திருக்கிறார். உங்களுக்கு நீங்களே எதிரியாவீர்கள்.

---

# தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்



அருணாசலம் லெட்சுமணன் 02






## "கறுப்புப்பெட்டி கறுப்பு நிறமாக இருக்கும் என்றே பலரும் நினைப்பதுண்டு"

"இப்போது எல்லோரும் பறக்கலாம்" "Now everyone can fly" இதுதான் நாம் பயணிக்கவுள்ள விமானத்துக்கு சொந்தமான விமான சேவை நிலையமான எயார் ஏசியா நிறுவனத்தின் மகுடவாசகமாகும். இந்த மகுடவாசகத்தை உருவாக்கிய ஆளுமையின் பெயர் டோனி பெர்னாண்டஸ். 1993 டிசம்பர் 20 அன்று தனது முதல் சேவையை தொடங்கிய இவ்விமானசேவை 1996 வரையில் அரசுக்குச் சொந்தமானதாகவே இயங்கியது. தென்கிழக்காசிய வட்டாரத்தில் விமான நுழைவு சீட்டு, இருக்கை பதிவு இல்லாமல் சேவையை தொடங்கிய நிறுவனமாக தடம் பதித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறான தடம் பதித்தலோடு சேவையை தொடர்ந்தாலும் பெரும் கடன் சுமையால் பாரிய நட்டத்தை எதிர்கொண்டது.

நாற்பது மில்லியன் ரிங்கிட் கடனோடு நிறுவனத்தை பொறுப்பேற்ற டான்ஸ்ரீ அந்தோனி பிரான்சிஸ் பெர்னாண்டஸ் தனது திட்டமிட்ட செயற்பாடுகளின் காரணமாக ஆசியாவின் முன்னணி நிறுவனங்களில் ஒன்றாக எயார் ஏசியாவைக் கட்டியெழுப்பியமையும் குறிப்பிடத்தக்கது. எயார் ஏசியா நிறுவனத்தோடு துணை நிறுவனங்களாக எயார் ஏசியா இந்தோனேசியா, எயார் ஏசியா பிலிப்பைன்ஸ், எயார் ஏசியா தாய்லாந்து, எயார் ஏசியா இந்தியா ஆகியவை விளங்குகின்றன. 165க்கும் மேற்பட்ட நாடுகளோடு தொடர்புபட்ட பயண சேவையுடன் 255க்கும் மேற்பட்ட விமானங்களை சொந்தமாகக் கொண்டிருப்பதும் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட ஊழியர்களை தன்னகத்தே கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

டான்ஸ்ரீ டோனி பெர்னாண்டஸ் என்று அழைக்கப்படும் இவர் மலேசிய பொருளாதாரத்துக்கு வலிமை சேர்த்தவர்களில் முக்கியமானவராக திகழ்கிறார். பொதுமக்களுக்கு மேற்கொள்ளும் சேவையை மதித்து மலேசிய அரசாங்கத்தால் வழங்கப்படும் விருதே டான்ஸ்ரீ விருதாகும். "பாங்லிமா மாங்கு நெகாரா" "பாங்லிமா செத்தியா மக்கோத்தா" ஆகிய விருதுகளே டான்ஸ்ரீ விருது என அழைக்கப்படுகிறது. இவ்வாறே மலேசியாவில் பிரயோகத்தில் உள்ள விருதுகள் வித்தியாசமான பெயர்களில் அழைக்கப்படுகின்றன. அவ்வப்போது அவ் விருதுகளின் பக்கம் பார்வையை செலுத்தலாம்.

"எயார் ஏசியா" என்றவுடன் கிவ் 28501 விமானம்தான் ஞாபகத்திற்கு வருகிறது. டிசம்பர் 28.2014 அன்று 162 பயணிகளுடன் விபத்துக்குள்ளான, இந்தோனேசியாவில் இருந்து சிங்கப்பூர் நோக்கி சென்ற விமானம். காணாமல் போனதாக அறியப்பட்ட இவ் விமானம் பின்னர் அதன் பாகங்கள், இறந்த பயணிகளின் உடல்கள் என மீட்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. விமான தகவல்கள் அடங்கிய கறுப்புப்பெட்டியும் கண்டுபிடிக்கப்பட்டது.

கறுப்புப்பெட்டி என்றவுடன் கறுப்பு நிறமாக இருக்கும் என்றே பலரும் நினைப்பதுண்டு. ஆனால் இது செம்மஞ்சள் நிறமுடையது. விமானத்தில் அதிகம் சேதமடைய மாட்டாதெனக் கருதப்படும் பகுதியில் பொருத்தப்பட்டிருக்கும். கறுப்புப்பெட்டி இரு பகுதிகளை கொண்டதாக அமைக்கப்பெறும்.

விமானியின் அறைக்கும் தரைக் கட்டுப்பாட்டு மையத்துக்கும் இடையிலான இரண்டு மணி நேர உரையாடலின் குரல் பதிவு இதில் சேமிக்கப்பட்டிருக்கும். மற்றைய பகுதியில் விமானத்தின் வேகம், கருவிகள் மற்றும் பொறிகளின் செயற்பாடுகள், காற்றழுத்தம் உட்பட நானூறு காரணிகள் வரையில் பதிவு செய்யப்பட்டிருக்கும். தீயினால் எரிந்து சேதமுறாது. கடலுக்குள் மூழ்கினாலும் சில காலங்கள் பழுதடையாமல் காணப்படும். உயரத்தில் இருந்து விழுந்தாலும் இலகுவில் உடையாமல் எங்கு விழ்ந்ததோ அங்கிருந்தும் தகவல் அனுப்பும் தன்மையை பெற்றிருப்பது அதன் சிறப்பம்சமாகும். இதன் ஊடாகவே பல விமான விபத்துக்கள் தொடர்பான ஊகிப்புகளை உறுதிப்படுத்தப்படுகின்றன.

18 ஆகஸ்ட் 2023 அன்று இடம்பெற்ற மலேசிய தனியார் விமான விபத்தில், பத்து பேர் பலியாகிய சம்பவம் மலேசியாவை மிகுந்த சோகத்தில் ஆழ்த்தியிருந்தது. லங்காவி தீவிலிருந்து கோலாலம்பூருக்கு மேற்கே சிலாங்கூருக்கு பயணித்த விமானமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியது. இவ் விமானம் நெடுஞ்சாலையில் மோதுண்டதால் பாதையில் நிறுத்து வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் மற்றும் கார் உட்பட வாகனங்களில் இருந்தவர்களும் பலியாகியமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் விமான விபத்து என்றவுடன் 1974 டிசம்பர் 04 அன்று இரவு 10.10 மணிக்கு மஸ்கெலியா, நோட்டன் பிரிஜ், தெப்டன் பகுதியில் 191 உயிர்களைக் காவு கொண்ட மாட்டின் எயார் டி.சி 8 ரக பயணிகள் விமான விபத்தே நினைவுக்கு வரும். சப்த கன்னியர் மலை என சிறப்பிக்கப்படும் ஏழு கன்னியர் மலைத்தொடரின் ஐந்தாவது மலையில் மோதுண்டு இவ்விமானம் சிதறியுள்ளது. இறந்தவர்களில் 190 பேரின் உடல்களை தெப்டன் தோட்டம் கொத்தலென பகுதியில் புதைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ் விமானத்தில் பணிப்பெண்ணாக பணியாற்றிய பெண்ணின் உடலை மாத்திரம் அவளது காதலன் இந்தோனேஷியாவுக்கு விசேட ஹெலி கொப்டர் மூலம் எடுத்து சென்று அடக்கம் செய்ததாக அறிய முடிந்தது. இந்தோனேஷியா சுராபயாவில் இருந் து மக்கா நோக்கி செல்லும் போதே மேற்படி விபத்து ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவ் விபத்தின் நினைவாக விமானத்தின் டயர் நோட்டன் நகரத்தில் நினைவு அடையாளமாக வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2018ஆம் ஆண்டு கம்போடியாவில் "உலகத் தமிழர் மாநாடு" இடம் பெற்றது. அம் மாநாட்டில் "இலங்கையில் தமிழர் தொன்மங்கள்" இராமாயணம் காட்டும் ஆதாரங்கள் குறித்த பார்வை எனும் ஆய்வுக் கட்டுரையுடன் மாநாட்டில் பங்கேற்றேன். இவ் ஆய்வுக்கு தேவையான ஆதாரங்களாக இவ் விபத்து இடம்பெற்ற சூழலும் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இராவணனின் புஷ்பக விமானம் நிறுத்தும் ஓடு பாதையோடும் தொடர்புபட்ட தளத்திற்குரிய ஆதாரங்களையும் கொண்டமைந்துள்ளமையும் கவனிக்கத்தக்கது. இன்று இராவணனின் இன அடையாளத்துடன் தொடர்புபட்ட வாதப்பிரதிவாதங்கள் முனைப்புப் பெற்றுள்ள நிலையில் அதற்கு தெளிவான பதிலாக மேற்படி தலைப்பிலான எனது கட்டுரை அமைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அன்றைய தினம் (18.07.2023) என்னை அறியாமலேயே விமான விபத்துக்கள் பற்றிய எண்ண ஓட்டமே மனதில் நெருடிக்கொண்டிருந்தது. நான் அதிபராக தொழில் புரியும் பாடசாலையில் முறையாக கடமைகளை பொறுப்பளிக்க வேண்டியது, சுற்றுநிருபத்தின் கடப்பாடும் ஆகும். முறையாக பெற்றுக்கொண்ட அனுமதியின் பிரகாரம் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் பதிந்து கடமையை பொறுப்பேற்கும் ஆசிரியர் திருமதி சுகந்தி கனகராஜிடம் பொறுப்புகளை ஒப்படைத்தேன். பின்னர் ஆசிரியர்களை காரியாலத்திற்கு அழைத்து அவர்களோடு உரையாடினேன். அவ் உரையாடலில் பொறுப்புடன் கடமையை செய்யுங்கள் என வலியுறுத்தியதோடு என்னையும் அறியாமல் தொடர்ந்து நான் வராவிட்டாலும் உங்கள் பொறுப்புகளை சரியாக செய்யுங்கள் என்றேன். ஆசிரியர்களிடமிருந்து ஏன் சேர் அப்படிச் சொல்கிறீர்கள்? என வினாத் தொடுக்கப்பட்டது. எதுவும் நடக்கலாம். விமானம் விபத்துக்கும் உள்ளாகலாம். என்ற எனது பதிலும் என்னில் ஓர் நெருடலை ஏற்படுத்தியது. நடுத்தர வருவாயில் பொருளாதார சுமையையும் பொருட்படுத்தாது வேலைப்பளுவுக்கு மத்தியிலும் வாசிப்பு, இலக்கியம், ஆய்வு முயற்சிகள் என்பதெல்லாம் எத்தனை அனுபவங்களை தந்திருக்கிறது என்பது எனக்கு மட்டுமே தெரியும். என் தியாகங்களோடு இணைந்த பொறுத்துக்கொள்ளும் எனது மனைவி, பிள்ளைகள் என்றும் போற்றுதற்குரியவர்கள். அவ்வப்போது ஆறுதல் அளிக்கும் உறவுகள், நட்புகளையும் நினைத்துக் கொள்கிறேன். அனுதினமும் ஆறுதலையும் உற்சாகத்தையும் பகிர்ந்தளிக்கும் முகநூல் நட்புகள் என்னுள் காணப்படும் உணர்வை மதித்து வழங்கும் தூண்டுதலை எண்ணி அகம் மகிழ்ந்தேன்.

நிலா நாயகன் என வர்ணிக்கப்படும் பி.வீரமுத்துவேலின் சந்திராயன் 3 வெற்றியினை பார்த்து அகமகிழும் அவரது தந்தையின் உணர்வை பார்த்து ஏங்கியவனாக இதனை பதிகிறேன். எனது தந்தை உயிருடன் இருந்தபோது அண்மைய நகரத்தில் கருத்தரங்குக்குச் சென்றாலும் கூட என்னை முத்தமிட்டு நாவலப்பிட்டி நகருக்கு வந்து வழியனுப்புவார். அம்மாவின் ஆசீர்வாதமும் இணைந்திருக்கும். அந்த சுகானுபவங்களை இழந்த துரதிர்ஷ்டவாதியாக என்னை நொந்துக் கொள்வதுமுண்டு. விமான நிலையம் நோக்கிய கண்டியிலிருந்தான பஸ் பயணத்தின் போது என்னில் மிகுந்த தாக்கம் செலுத்தும் உறவினர்கள், நண்பர்களின் தொலைபேசி தொடர்பும் அந்த வேளையில் என்னை மேலும் உற்சாகப்படுத்தியது. அந் நல்லுள்ளங்கள் பற்றிய தகவல்களையும் அவ்வப்போது பதிவு செய்வேன்.

தாய், தந்தை பற்றிய ஏக்கங்கள் மனதில் நிறைந்திருந்தாலும் சகோதரிகளின் தொலைபேசி உரையாடல்கள் ஆறுதல் அளித்த வண்ணமே, எனது கட்டுநாயக்க விமான நிலையம் நோக்கிய நகர்வும் அமைந்திருந்தது.

18.07.2023 இரவு 10:55க்கு சரியான நேரத்தில் விமானம் ஓடு பாதையில் நகர ஆரம்பித்தது. மறுநாள் பொழுது மலேசியா, கோலாலம்பூரில் புலர்ந்தது. காலை வணக்கம் மலேசியா...

(தொடரும்)



# படித்ததும் பகர்வதும் 158



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### குழந்தைகளும் செல்போன்களும்!

இன்றைய காலகட்டத்தில் குழந்தைகள் எந்த நேரமும் செல்போன்களில் மூழ்கிக்கிடப்பதை பரவலாகப் பார்க்கமுடிகிறது. செல்போனை வெகுநேரம் பார்ப்பதால் சிறுவயதிலேயே அவர்களின் கண்பார்வை பாதிக்கும் வாய்ப்பு அதிகமாகிறது.



மக்களிடையே செல்போன் பயன்பாடு தற்போது மிக மிக அதிகமாக உள்ளது. பலர் ஒன்றுக்கு மேற்பட்ட செல்போன்களை பாவிப்பதும் சாதாரணமாக உள்ளது. இதனால் வீடுகளில் பொதுவாக எல்லோர் கைகளிலும் செல்போன்கள் இருப்பதைக் காணலாம்.

அழும் போது குழந்தைகளை சமாதானம் செய்ய, பெற்றோர்கள் ஸ்மார்ட் செல்போனை குழந்தைகளின் கையில் கொடுத்து அழுகையை நிறுத்துகின்றனர். காலம் போகப்போக, சாப்பிடுதல், தூங்குதல், விளையாடுதல் உட்பட அனைத்து விடயங்களுக்கும் 'செல்போன் வேண்டும்' என குழந்தைகள் அடம்பிடிக்க ஆரம்பித்து விடுன்றனர்.

ஸ்மார்ட் போன்களால் எந்த அளவுக்கு நல்ல விஷயங்கள் இருக்கிறதோ, அதற்கு நேர்மாறாக பல்வேறு பிரச்சினைகள் கூடவே உள்ளன. குறிப்பாக குழந்தைச் செல்வங்கள், பள்ளிகளுக்கு செல்லும் சிறுவர், சிறுமியர் செல்போன்களில் உள்ள விளையாட்டுகளுக்கும், செல்பி, போட்டோக்கள், வீடியோக்கள் உட்பட வேறுபட்ட விடயங்களுக்கும் மிக இலகுவாக அடிமையாகி விடுகிறார்கள்.

தங்களது குழந்தைகளுக்கு விளையாடுவதற்காக செல்போனை கொடுத்துவிட்டு, அதனை குழந்தைகள் எவ்வாறு இலாவகமாக பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பார்த்து மகிழும் சில பெற்றோரும் இருக்கின்றனர். ஆனால் அதுவே, தம் பிள்ளைகளை பயங்கரமாக ஆக்கிரமித்துக் கொள்ளும் என்பதை அவர்கள் ஏனோ புரிந்துகொள்வதில்லை.

முன்னைய காலங்களிலே சிறு குழந்தைகள், வீட்டு முற்றங்களில் நன்றாக ஓடி ஆடி, பல்வேறு விளையாட்டுக்களை விளையாடுவதை எல்லோரும் காணக்கூடியதாக இருந்தது. குழந்தைகளின் உடல் தசைகள் சீராகவும், அவர்கள் ஆரோக்கியமானவர்களாக வாழவும் அது உதவியது. ஆனால் இப்போது அத்தகைய நிலைமைகளை காண முடிவதில்லை. பல வீடுகளில் குழந்தைகள் எப்போதும் செல்போன்களில் மூழ்கிக் கிடப்பதையே காணமுடிகிறது. இதனால் அவர்களின் உடல் போதிய வலுப் பெறுவதில்லை. சுறுசுறுப்பு குறைந்து, இயல்பான செயல்பாடுகளில் மந்தநிலை ஏற்படுவதற்கே அதிக வாய்ப்பு உள்ளதாகக் குழந்தைகள் நல மருத்துவர்கள் கூறுகின்றனர்.

செல்போனின் கதிர்வீச்சுக்கள் குழந்தைகளை எளிதாக தாக்குகின்றன. செல்போனை வெகுநேரம் பார்ப்பதால் சிறுவயதிலேயே கண்பார்வை பாதிப்புகுள்ளாகும் வாய்ப்பு அதிகமாகிறது. சுய சிந்தனை, கற்பனைத்திறன், உடல் உழைப்பு என்பவற்றுக்கான சக்தி குறைவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

எனவே, இந்த விடயத்தில் பொதுமக்கள் பொறுப்புடன் நடந்து கொள்வது அவசியம். வெறும் அலங்காரத்திற்காகவும், ஆடம்பரத்திற்காகவும், செல்போனை பயன்படுத்துவதை தவிர்த்தல் வேண்டும். குழந்தைகளுக்கு அவற்றைக் கொடுக்காமலிருப்பது, வருங்கால தலைமுறைக்கு செய்யும் சமூக கடமையாகும். குழந்தைகளின் படிப்பு, எதிர்காலத்தை கருதி அவர்கள் கல்வியில் வெற்றி பெறும்வரை செல்போன்கள் வாங்கிக் கொடுப்பதையும், கட்டுப்பாடின்றி அவற்றை பாவிப்பதற்கு இடமளிப்பதையும் தவிர்ப்பதோடு, தாம் பாவிக்கும் செல்போன்களை அவர்கள் பயன்படுத்தாதவாறு கண்காணிப்பதும் மிகவும் அவசியமாகும்.

## நெஞ்சுக்கு நீதி

செல்போனால் குழந்தைகளுக்கு நன்மைகளில்லை
என்பதனை கேட்டியங்கிடவே இங்கு யாருமில்லை
செல்போனை குழந்தைக்கு கொடுத்தால் தொல்லை
சொல்லுகிறோம் நன்மைகள் தாம் விளையுதில்லை

## பாராட்டுறோம்! வாழ்த்துகிறோம்!!

### கம்பன் விருது பெற்ற பேராசிரியர் மு. அப்துல் சமது

அண்மையில் நடைபெற்ற சென்னை கம்பன் கழகத்தின் 49வது ஆண்டு கம்பன் பெருவிழாவில் நீதியரசர் மு. மு. இஸ்மாயில் நிறுவிய 'பேராசிரியர் கே. சுவாமிநாதன் விருது', தமிழ்நாடு இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் மேனாள் பொதுச்செயலாளர் பேராசிரியர் முனைவர் மு. அப்துல் சமதுக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார். விழாவின்போது தமிழ்நாடு உயர் நீதிமன்ற நீதியரசர் ஆர். மகாதேவன், கம்பன் கழகத்தின் துணைத்தலைவர் ஜெகத்ரட்சகன் (எம்.பி.) இருவரும் இணைந்து அவருக்கு இதனை வழங்கி வைத்தனர்.

மிகச்சிறந்த பேராசிரியரும், எழுத்தாளரும், சொற்பொழிவாளருமான முனைவர் மு. அப்துல் சமது தமிழகத்தின் தலைசிறந்த தமிழ்ச் சங்கங்களிலும், கம்பன் கழகங்களிலும், கல்லூரிகளிலும், பல் சமய ஆன்மீக அரங்குகளிலும், இலக்கியக் கூட்டங்களிலும், பட்டிமன்றங்களிலும் பங்கேற்று உரை நிகழ்த்தி வரும் பிரபலமிக்கவராவார்.



மலேசியா, சிங்கப்பூர், மஸ்கட், இலங்கை, சவூதி அரேபியா, துபாய், சாஜா, அபுதாபி, கத்தார், குவைத் என பல்வேறு நாடுகளில், தமிழ் இலக்கிய சொற்பொழிவுகள், பட்டிமன்றங்கள், சமய சொற்பொழிவுகள் நிகழ்த்தியுள்ளார். அத்துடன் தமிழகத்தின் அனைத்து தொலைக் காட்சிகளிலும் இலக்கிய, பட்டிமன்ற நிகழ்ச்சிகளில் பேசிவருவதோடு பல்வேறு வானொலிகளின் நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று வருகிறார்.

முப்பத்திரண்டு வருட கால பேராசிரியர் பணியில் எழுத்து, பேச்சு, சமூகசேவை என பல துறைகளில் பங்களிப்புகளைச் செய்துள்ள இவர், தியாகத்தின் நிறம் பச்சை, இஸ்லாத்தில் மனித மதிப்பு, அறியப்படாத வாழ்வும் பண்பாடும், ஒரு குச்சி ஒருவானம், திருப்பி அனுப்பும் வானம், நவீன வாசிப்பில் இஸ்லாம், உட்பட எட்டு நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். அத்துடன் காணாமல் போன ஒட்டகம், தமிழக இசை மரபில் முஸ்லிம்கள் ஆய்வுக்கோவை, கவிக்கோ கருவூலம் உள்ளிட்ட உட்பட எட்டு நூல்களின் தொகுப்பாசிரியருமாவார்.

கோவை திருக்குர்ஆன் அறக்கட்டளையின் சிறந்த மார்க்க, இலக்கியப் பணிக்கான 'அல்லாமா அ.க.அப்துல்ஹமீது பாகவி விருது', நியூ செஞ்சரி புத்தக நிறுவன இலக்கிய விருது, சீதக்காதி அறக்கட்டளை இலக்கிய விருது, இந்திய சமூக கலாசார நட்புறவுக் கழகத்தின் சமூக நல்லிணக்க விருது, நாட்டு நலப்பணித்திட்ட சிறந்த அதிகாரிக்கான மாநில விருது, மற்றும் மதுரை காமராசர் பல்கலைக்கழக விருது, இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கழகத்தின் 'தமிழ் மாமணி' விருது, தமிழர் தந்தை சி. பா.ஆதித்தனார் பேரவையின் 'மனித நேயத் தமிழறிஞர் விருது உள்ளிட்ட சுமார் பன்னிரெண்டு விருதுகளைப் பெற்றுள்ள முனைவர் மு. அப்துல் சமதுவை, சென்னை கம்பன் கழகம் 'பேராசிரியர் கே.சுவாமிநாதன்' விருது வழங்கி மேலும் கௌரவித்துள்ளது.

தான் பெற்றுள்ள விருதுகளோடு மேலும் ஒரு விருதினை சேர்த்துக் கொண்டுள்ள பேராசிரியர் முனைவர் மு. அப்துல் சமதுவை பாராட்டி, அவரது இலக்கியப் பணிகள் உட்பட அனைத்து முயற்சிகளும் வெற்றிபெற வாழ்த்துகிறோம்.

## புது வரவு

### இனிய நந்தவனம் இலங்கைச் சிறப்பிதழ்

இந்தியாவின் தமிழ்நாட்டிலிருந்து, தொடர்ந்து இருபத்தாறு ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் 'இனிய நந்தவனம்' மக்கள் மேம்பாட்டு மாத இதழின் இலங்கைச் சிறப்பிதழ், 2023 ஆகஸ்ட் மாத இதழாக வெளிவந்துள்ளது. 100 பக்கங்களில் கட்டுரைகள், கவிதைகள், நேர்காணல்கள், செய்திகள் என பல்வேறு விடயங்களையும் உள்ளடக்கி, காத்திரமான தனியொரு நூல் போன்று வெளிவிடப்பட்டிருப்பது சிறப்பு.

இதுகால வரை பல வெளிநாட்டு சிறப்பிதழ்களையும், இந்திய தமிழ்நாட்டின் பல மாவட்டங்களுக்கான சிறப்பிதழ்களையும் இனிய நந்தவனம் ஏற்கனவே வெளியிட்டுள்ளது. ஆனால், 'இனிய நந்தவனம்' ஆசிரியர் த.சந்திரசேகரன் இலங்கையை பிறப்பிடமாகக் கொண்டவராக இருந்த போதிலும், இலங்கை சிறப்பிதழ் தாமதமாக இப்போதுதான் வெளியிடப்பட்டுள்ளது. ஆனாலும் இதழாசிரியர் இத் தாமதத்திற்கான காரணத்தை இதழின் நுழைவாயிலில் குறிப்பிடத் தவறவில்லை.

இலங்கையின் பிரபலமான பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர்களின் நேர்காணல்கள் இவ் இதழில் விசேடமாக சேர்க்கப்பட்டுள்ளன. "அச்சு ஊடகத்தின் தனித்துவம் எக்காலத்திலும் மங்கிடாது" என்ற தலைப்பில் தினகரன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவரின் நேர்காணலும், "வாசிப்பின்மீது ஆர்வமுள்ளவர்களுக்கு இணைய வாசிப்பு முழுமை தராது" எனும் மகுடத்தில் "தமிழன்" பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சிவராஜாவின் பேட்டியும், "பத்திரிகைத் துறையில் சேவை நோக்கத்துடன் செயல்பட வேண்டும்" எனும் தலைப்பில், வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஸ்ரீகஜன் வழங்கியுள்ள நேர்காணலும் சிறப்பாக இடம்பெற்றிருக்கின்றன. இவை தவிர மேலும் ஏழு பிரபலங்களின் நேர்காணல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.



பல்வேறு விடயங்கள் தொடர்பாக இடம்பெற்றுள்ள பத்து கட்டுரைகளில் "இலக்கியங்களின் அடைக்கலம் புலவர் ஹாசிம் உமர்" என்ற கட்டுரையில் இலக்கிய தளத்தில் ஹாசிம் உமரது தனித்துவ நிலை, அவரது பங்களிப்பு பற்றி சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. அத்துடன் கே.பொன்னுத்துரையின் "ஈழத்து சிற்றிதழ்கள்" கட்டுரையில் இலங்கையில் இதுவரை வெளிவந்த பல சிற்றிதழ்கள் பற்றி கண்ணோட்டம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் மரபுக்கவிதைகள், புதுக்கவிதைகள், ஹைக்கூ கவிதைகள் என பத்தொன்பது கவிதைகள் இதழ் முழுவதும் பரவலாக இடம்பெற்றுள்ளன.

'இனிய நந்தவனம்' இலங்கையின் கண்டி நகரில் வெளியிடப்பட்டது. இதன் அறிமுக விழாக்கள் ஐந்து இடங்களில் நடைப்பெற்றன. இறுதியாக கொழும்பில் நடைபெற்ற விழாவில் இலங்கை சிறப்பிதழோடு நின்றுவிடாமல், இலங்கையிலுள்ள வெவ்வேறு மாவட்டங்களுக்கான தனித்தனி சிறப்பிதழ்களையும் தான் வெளியிடப்போவதாக இதன் ஆசிரியர் தெரிவித்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இதழ்; இனிய நந்தவனம் இலங்கைச் சிறப்பிதழ், இதழாசிரியர்; த. சந்திரசேகரன், வெளியீடு; ஆகஸ்ட் 2023, பக்கங்கள்; 100, விலை; இந்திய ரூபா.100/=,

## ஞாபகம் வருகிறதா?







# திருவள்ளுவர் எனும் தெய்வீக முகாமையாளர்

கே. பத்மானந்தன் 54

# திருவள்ளுவத்தில் அதிகாரங்களை பகிர்ந்தளித்தல்



அமெரிக்க அரசியலமைப்புச் சட்டத்தில் அதிகாரப் பரவலாக்கம் என்பது அரசாங்கத்தின் மூன்று கிளைகளில் ஒன்றாகிய நிர்வாகம், பாராளுமன்றம் மற்றும் நீதித்துறை ஆகியவற்றில் ஏதாவது ஒன்றின் ஒரு குறிப்பிட்ட அதிகாரத்தை மற்றொரு கிளைக்கு அல்லது ஒரு சுயாதீன நிறுவனத்துக்கு மாற்றுதல் என்று வரையறை செய்யப்படுள்ளது. இவ்வாறு அதிகாரங்களை பகிர்ந்தளித்தல் என்பது இன்றைய நவீன முகாமைத்துவத்திலும் ஒரு உத்தியாகக் கருதப்படுகிறது. ஒரு நிறுவனம் ஒன்றில் அதிகாரப் பரவலாக்கல் என்பது முகாமையாளர் ஒருவரின் கீழ் வேலை செய்யும் ஒருவருக்கு நிறுவனம் சார்ந்த விடயங்கள் தொடர்பாக முடிவெடுக்கும் பொறுப்பை வழங்குவதனைக் குறிக்கிறது.

மற்றவர்களிடம் சில பொறுப்புகளை ஒப்படைப்பதன் மூலம் வேலையைப் பெறுவது ஒரு கலை. ஒரு நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர் எவ்வளவு திறமையானவராக இருந்தாலும் அவரினால் தனது நிறுவனம் சார்ந்த எல்லா வேலைகளையும் தனி ஒருவராகச் செய்யமுடியாது. நிறுவனத்தின் இலக்குகளை அடைவதற்கான முழுச் சுமையையும் தானாகச் சுமக்க இயலாது. எனவே வேலைகளை பல்வேறு மட்டங்களிலும் உள்ளவர்களுக்குப் பகிர்ந்தளித்தலானது ஒரு மேம்பட்ட கலையாக நிறுவனங்களில் கையாளப்பட்டு, எடுத்த காரியங்களை நேர காலத்துடன் வினைத்திறனுடன் செய்து முடித்து இலக்குகளை அடைவதற்குப் பயன்படுகிறது.

எனவே ஒரு நிறுவனத்தின் முகாமையாளர் என்பவர் தொழில்நுட்ப அறிவு (Technical Skills), ஆராய்ந்து முடிவெடுக்கும் அறிவு (Analytical Skills), நிறுவன ஒழுங்கமைப்பு சார்ந்த அறிவுடன் (Organizational Skills) தன்னிடம் இருக்கும் அதிகாரங்களையும் பொறுப்புகளையும் தனக்கு அடுத்த நிலைகளில் இருப்பவர்களிடம் எவ்வாறு பகிர்ந்தளிக்கலாம் என்ற அறிவையும் கொண்டிருக்க வேண்டும். அப்போதுதான் அவரால் தனது நிறுவனத்தைச் சரியாக நிர்வகிக்க முடியும். அதிகாரங்களை பகிர்ந்தளித்தல் என்பது ஒரு கீழ்நிலை அதிகாரிக்கு குறிப்பிட்ட செயல்பாடுகளை முடிப்பதற்கான முறையான அதிகாரம் மற்றும் பொறுப்பை வழங்குவதற்கான செயலாகும்" (ஸ்டோனர், 1995). இவ்வாறு அதிகாரங்களையும் பொறுப்புகளையும் கீழே உள்ளவர்களுக்கு பகிர்ந்து வழங்குவது, அவர்களுக்கு வேலைகளைச் சிறப்பாகச் செய்ய உதவுவதுடன் முகாமையாளரின் செயல்திறனை அதிகரிக்கிறது.

சிரேட்ட முகாமையாளர் பொறுப்புகளை பகிர்ந்தளிக்கச் சரியான ஒருவரைத் தெரிவு செய்ய வேண்டும். அவ்வாறு பொறுப்புகள் பகிந்தளிக்கப்படுகின்றவர் நம்பிகைக்கு உரியவராகவும் வினைத்திறன் உடையவராகவும் இருக்க வேண்டும் என்பதை சிரேட்ட முகாமையாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவரிடம் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்ட பின் அவர் தனது கடமைகளைச் செய்வதற்கு சிரேஷ்ட முகாமைத்துவம் எந்த வித இடையூறுகளையும் செய்யாது இருக்க வேண்டும். இக்கருத்துக்களை கீழ்வரும் ஈரடியில் திருவள்ளுவர் சிறப்பாக விளக்குகின்றார்.

**"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்". (குறள் 517)**

இந்தச் செயலை இன்ன கருவியாலும் இன்ன ஆள் பலத்தாலும், இன்ன பொருள் பலத்தாலும் இவன் செய்து முடிப்பான் என்பதை நன்கு ஆராய்ந்த பிறகே அத் தொழிலை அல்லது பொறுப்புகளை அவனிடம் ஒப்படைக்க வேண்டும் என்கிறார் திருவள்ளுவர். என்ன பணிசெய்ய வேண்டும்? அதனை எப்படிச் செய்ய வேண்டும்? என்று தெளிவாக ஆராய்ந்தபின், ஒரு பணியினைத் தொடங்கும் முன்னர், யார் அதைச் செம்மையாகச் செய்து முடிக்கக்கூடிய வல்லமை உள்ளவர் என்பது தீர்மானிக்கப் பட்டு அத்தகைய திறன் படைத்தோரை தேர்ந்தெடுக்க வேண்டும்.

அவ்வாறு தெரிவு செய்யும்போது செயலைச் சூழ்நிலைக்கேற்ப எல்லைகளுக்கு உட்பட்டு சிறப்பாகவும் குறைவான செலவில் குறைவான நேரத்திலும் செய்து முடிக்கும் திறன் படைத்தோரை தேர்ந்தெடுக்க வேண்டும். அதேவேளை அவர் அக் குறிப்பிட்ட செயலை எவ்வாறு எக்கருவி கொண்டு எவ்வழி முறையால் செய்து முடிப்பார் என்று ஆராய வேண்டும். அச் செயலைச் செய்து முடிக்க அனுபவம் தேவையெனில் அவ்வனுபவம் உள்ளோரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அதேவேளை தேர்ந்து எடுக்கப்படுபவன் அச்செயலைச் செய்து முடிப்பானா அல்லது பாதியில் விட்டுவிடுவானா என்று ஆராய வேண்டும்.

இவ்வாறு ஒரு செயலை செய்யவல்லவனை ஆராய்ந்து அவனிடம் அச்செயலை விட்டுவிட வேண்டும், அவனை அதற்குப் பொறுப்பாளனாக்க வேண்டும். செயல், செய்முறைகள், செயலை முடிக்கக்கூடியவன் இம்மூன்றும் பொருந்திவரும்போது அச்செயலை அவனிடம் விடுக என்கிறார் திருவள்ளுவர்.

இங்கு விடல் என்ற சொல்லினைப் பயன்படுத்துவதன் மூலம் தெரிவு செய்யப்படுபவனிடம் செயலை ஒப்படைத்து விட்டுவிடவேண்டும் அதாவது அச்செயலை அவனுக்கு உரியதாக்கி அதன்பின் செயல் முடியும்வரை அவன் பொறுப்பிலேயே முழுவதுமாக விட்டுவிடவேண்டும் என்பதனை திருவள்ளுவர் வலியுறுத்துகின்றார். அதாவது நுண் முகாமைத்துவம் (micromanagement) செய்யக்கூடாது என்கிறார். அதேபோன்று 'இதனை' என்ற இடத்தில் எந்தப் பணியை வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளலாம். இதனால் என்ற இடத்தில் எந்த ஓர் உத்தியையோ, கருவியையோ சாதனத்தையோ பயன்படுத்திக் கொள்ளலாம். அதாவது இன்ன கருவியால், துணைவரும் பொருளால், இன்ன காரியத்தினாலே, இன்ன வகையால், இன்ன காரணத்தால், இம்முறையான், காரணத்தால், இடத்தால், பிற சாதனங்களால், இவ்வழியால், இன்ன ஆள் பலத்தாலும் பொருள் பலத்தாலும் என்றும் பொருள் கொள்ளலாம். இவன் என்ற இடத்தில் எந்த ஒரு பணியாளரையோ அல்லது அலுவலரையோ அல்லது நிபுணரையோ போட்டு நிரப்பிக் கொள்ளலாம் என்பது திருவள்ளுவரின் கருத்தாகும்.

திருவள்ளுவரின் இக்கருத்துக்களை பழமொழிப் பாடலொன்றும் வலியுறுத்துகின்றது.

**"உற்றான் உறாஅன் எனல்வேண்டா ஒண்பொருளைக்**
**கற்றானை நோக்கியே கைவிடுக்க – கற்றான்**
**கிழவனுரை கேட்கும் கேளா னெனினும்**
**இழவன் றெருதுண்ட உப்பு."**
**(பழமொழி.38)**

அதாவது நமக்கு இவன் உற்றான், உறவினன் அல்லதுன் வேண்டாதவன் என்று எண்ணாமல் செய்யவேண்டிய செயலைச் செய்வதற்கு வேண்டிய கருவியும் கல்வியறிவும் நிரம்பிய ஒருவனிடம் செயலை ஒப்படைக்க வேண்டும். அவன் அச் செயலைச் செய்வதற்காக ஏனையவர்களிடம் அல்லது நிபுணர்களிடம் கேட்டுச் செய்யாமல் போனாலும் ஒரு குறையும் இல்லை எடுத்த காரியத்தைச் சிறப்பாகச் செய்து முடிப்பான்.

எவ்வாறு கொள்ளுக்கு உப்புக் கலந்து வைத்தால் நோய் வராமல் காப்பாற்றப்பட்டு வலிமை பெருகும் எருது தனது எஜமானுக்கு நட்டம் ஏற்படாமல் நன்றாக வேலை செய்யுமோ அவ்வாறே கற்றறிந்த ஒருவனைத் தெரிந்து எடுத்துப் பணிகளைப் பொறுப்புக் கொடுத்தால் அவன் நிறுவனத்திற்கு நட்டம் ஏற்படாமல் வேலை செய்வான் என்பது இப்பாடலின் மையக் கருத்தாகும்.

(தொடரும்)

# 'நாயகி' பரத நாட்டிய அரங்கேற்றம்



கருப்பொருளுடன் கூடிய புத்தாக்க நடன மார்க்கங்களை தொடர்ந்து வழங்கி வரும் அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளியின் புதிய படைப்பாக அரங்கேறுகிறது அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி மாணவி ரிஷிகேஷா செம்பையாவின் பரதநாட்டிய அரங்கேற்றம் "நாயகி"

"கலாசூரி" திவ்யா சுஜேனின் உருவாக்கத்தில் நாயகியர் பலரை சித்தரிக்கும் விதமாக அமைந்துள்ள இம் மார்க்க உருப்படிகளுக்கு மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கொள்ளுப் பேரன் டாக்டர் ராஜ்குமார் பாரதி அவர்கள் இசையமைப்பு வழங்கியதோடு நிகழ்விற்கு பிரதமவிருந்தினராகவும் வருகை தரவுள்ளார். அத்தோடு பெண்களின் கலை, கல்வி, வாழ்வாதாரத்திற்கு பெரும் துணை வழங்கி வரும் சமூக சேவையாளர், மனித நேயம் நம்பிக்கை நிதியம் மற்றும் இலங்கை நுண்கலைக் கல்லூரி அமைப்பாளர் அபிராமி கைலாசபிள்ளையும் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

"பொன்னியின் செல்வன் புகழ்" திருமதி கீர்த்தனா வைத்தியநாதன், ஈஸ்வர் ராமகிருஷ்ணன், முனைவர் குரு பரத்வாஜ் ஆகியோரின் இசைப் பங்களிப்பில், கிருஷ்ணன் வெங்கடேஷின் ஒளி அமைப்பில் நாயகி அரங்கேறவுள்ளது.

இந்த பரதநாட்டிய அரங்கேற்ற நிகழ்வு 09.09.2023 மாலை 5.30 மணிக்கு பிஷொப்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 78

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | | 08 | 09 |
| 10 | 11 | 12 | 13 | | |
| 14 | | 15 | 16 | 17 | 18 |
| | 19 | | 20 | | 21 |
| 22 | 23 | | 24 | 25 | 26 |

பெயர் ..................................................

வகுப்பு ..................................................

தொலைபேசி இல ..................................................

பாடசாலை பெயர் ..................................................

வதிவிட முகவரி ..................................................

..................................................

.............................. ..............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியவற்றை 'ஐம்பூதம்' என்றனர் ஆன்றோர். இவை ஐந்துமே வெகுண்டெழுந்தால் அனர்த்தம் அதிகம். இங்குள்ள சொல் காற்றின் அதிவேகத்தினால் உண்டாகும் இயற்கை அனர்த்தம் ஆகும். இதனால் உண்டாகும் உயிர், உடைமை அழிவுகள் அதிகம்.

(8) இந்தியாவின் அக்காலத்து பறம்பு நாட்டின் மன்னன் இவன். இல்லாதோருக்கு வாரிவழங்கிய வள்ளல். கொழுகொம்பு அற்றுக் கிடந்த முல்லைக்கொடிக்கு தனது தேரை ஆதாரமாக வழங்கியவன்.

(10) வீட்டுக்குள் வெளிச்சமும், காற்றும் வருவதற்காக வைக்கப்படுவது.

(15) நீண்ட கழுத்துக் கொண்ட அழகிய வெண்ணிறப் பறவை. அக்கால இலக்கியங்களில் வர்ணிக்கப்பட்ட பறவை. இதன் நடையை அக்காலப் புலவர்கள் வர்ணித்தார்கள் (தலைகீழான சொல்)

(22) மரம், கருங்கல் சிற்பவேலைகளில் செதுக்கல் உபகரணமாகப் பயன்படுத்தப்படுவது. (தலைகீழான சொல்)

(24) உணவுக்கு உறைப்புச் சுவைக்காகச் சேர்க்கப்படுவது. மிளகாய் அல்ல.

**மேலிருந்து கீழ்**

(1) உலகின் பிரதான சக்தி முதல். உலகுக்கு ஒளியும், வெப்பமும் தருவது மாத்திரமன்றி புவியின் மாறுபட்ட காலநிலைகளுக்கும் இதுவே காரணமாகின்றது.

(3) முகத்தின் ஒத்தபொருள் சொல்.

(5) பாம்புக்கு எதிரி இப்பிராணி.

(13) வானத்தில் இருந்து தரையைத் தாக்குகின்ற இயற்கை அனர்த்தம். முகில்களில் உருவாகின்ற மின்னேற்றத்தின் காரணமாக ஏற்படுகின்ற இயற்கை அனர்த்தம். (தலைகீழான சொல்)

(18) ரசிக்கத்தக்க தோற்றம் இருந்தால், அதனை இவ்வாறு கூறிப் பாராட்டுவோம்.

(19) இரவில் வானத்தை அண்ணாந்து பார்த்தீர்களானால், பலநூற்றுக்கணக்கில் கண்சிமிட்டி மின்னுகின்ற இவற்றைக் காணலாம். தாரகை, விண்மீன் என்றெல்லாம் சொல்வோம் (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 77

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. திமிங்கிலம் 10. மகுடி 13. விசா 16. மாலை
19. சதி 21. சிறுமி 24 மகள்

**மேலிருந்து கீழ்**

02. மிளகு 04. கிவி 06. சாரம் 10. மஞ்சள்
12. மாடி 17. சிலை 20. கதி 22. ஆறு

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 76

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.எம்.எம். அப்ராஸ்**
தரம் 05, மா/சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை,
இல. 37, கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

**2. ஸீனத்துல் இஸ்மா இல்யாஸ்**
தரம் 06C, களு/ அல் பஹ்றியா ம.கல்லூரி,
23A, இப்றாஹிம் வீதி, பாணந்துறை,

**3. எம்.ஏ.எப். அலீனா**
தரம் 08B, க/ பதிஉதீன் மகளிர் வித்தியாலயம்,
இல. 98/A, சுஜாதா லேன், மடிகே, கலகெதர.

**4. பஹ்மா ருஷ்டி**
தரம் 09A, பென்ஹில் கல்லூரி,
இல. 12/22A, இளவத்துறை, கம்பளை.

**5. தையிபா ஹசன்**
தரம் 08, பா.மு.ம. கல்லூரி,
இல. 34, டி வாஸ் லேன், கிரேன்பாஸ், கொழும்பு 14.

**6. எம். அப்லல் அஹமத்**
தரம் 05, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**7. கு. துவாரகன்**
தரம் 06C, கமு/ கார்மேல் பற்றிமா கல்லூரி,
இல. 33A, சருவோதய வீதி, பெரியநீலாவணை 01.

**எம்.ஏ. ஆயிஷா ஸைனப்**
தரம் 11B, க/ பதியுதீன் மகளிர் கல்லூரி,
இல. 34/12, செமனரிவத்த வீதி, தென்னக்கும்புர, கண்டி.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 78
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



இனியவை கூறல்: அகன்அமர்ந் தீதலின் நன்றே
முகனமர்ந்து இன்சொலன் ஆகப் பெறின்

**தெளிவுரை :**
முகம் மலர்ந்து இன்சொல் உடையவனாக இருக்கப்பெற்றால், மனம் மகிழ்ந்து பொருள் கொடுக்கும் ஈகையைவிட நல்லதாகும்.

# இவ்வார மழலை



தனுர்ஷான் அகிலேஷ்

# மழை பெய்யாத கிராமம்

தென்மேற்கு பருவக்காற்று வீசி மழை பெய்யும்போது தான் இத்தனை மாதங்களாக கொளுத்தி எடுத்த வெயிலில் இருந்து தப்பித்தோம் என்ற ஆறுதலும் குளுமையான உணர்வும் ஏற்படுகிறது. இத்தனை நாட்கள் வறண்டு கிடந்த இடங்கள் எல்லாம் மழை பெய்த பிறகு தான் புத்துயிர் பெற்றது போல இருக்கிறது.

ஆனால், மழை பெய்யாத கிராமம் என்று ஒன்று இருக்கிறது. கேட்பதற்கு கொஞ்சம் ஆச்சரியமாக தான் இருக்கும். இன்று வரை மழை பெய்யாத கிராமம் என்று அல்ஹுதீப் அழைக்கப்படுகிறது.

ஏமன் நாட்டின் தலைநகர் சனாவில் தான் அல் ஹுதீப் என்ற இந்த கிராமம் உள்ளது. இந்த கிராமம் தரை மட்டத்திலிருந்து சுமார் 3200 மீற்றர் உயரத்தில் ஒரு சிவப்பு மணற்கல் மலையின் உச்சியில் உள்ளது.

மற்ற இடங்களை விட உயரமாக இருந்தாலும் இந்த இடம் வறட்சியுடன் தான் காணப்படுகிறது.

உலகம் முழுவதும் வருடத்தின் வெவ்வேறு நேரங்களில் மழை பெய்கிறது. ஆனால் அல்ஹுதீப் கிராமம் எப்போதும் மழை பெய்யாததால், மிகவும் வறண்டு காணப்படும். பகலில் அதிகப்படியான வெப்பமும் இரவில், கிராமத்தில் உறைபனி குளிரும் இறங்குகிறது. மீண்டும் காலை சூரியன் உதிக்கும்போது வானிலை வெப்பமடைகிறது.

ஆனால் இந்த கிராமத்தில் ஏன் மழை பெய்வதில்லை என்ற கேள்வி எழும். அதற்கு காரணம், ஏமனின் இந்த பகுதியில் நீர் நிலைகள் போதுமானதாக இல்லாதது மற்றும் மேகங்கள் குவியாத உயரத்தில் கிராமம் அமைந்துள்ளது தான் காரணம். அதன் கீழ் அடுக்குகளில் மேகங்கள் குவிகின்றன.

அல் ஹுதீப் கிராமத்தின் இடம் சமவெளியில் இருந்து சுமார் 3200 மீற்றர் உயரத்தில் உள்ளதால், சாதாரண மழை மேகங்கள் சமவெளியில் இருந்து 2000 மீற்றருக்குள் குவியும்.

எனவே அல்ஹுதீபின் மீது மேகங்கள் குவிவதில்லை. மேலும் மேகங்கள் இல்லாவிட்டால் மழை பெய்ய வாய்ப்பில்லை. அதனால் தான் இங்கு மழையே பெய்வதில்லை.





மல்வானை அத்பால் பாலர் பாடசாலையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டியில், விநோத உடை நிகழ்ச்சியில் கயிறு மற்றும் சணல் கயிற்று மாடல் அழகியாக சல்ஹா ஷிஹார் கலந்து கொண்டு முதலாம் இடத்தை பெற்றுக் கொண்டார்.

## வா...வா....மழையே....!

மேகங்களே மழை மேகங்களே
மிக்க நாட்களாய் போனதெங்கே
தாகங்கொண்டு தரைக ளெல்லாம்
தவியாய் தவிப்பதை பாருங்களே
கொஞ்சம் பாருங்களே...?
(மேகங்களே மழை.....)

ஆறும் குளமும் கிணறுகள் கூட
அடியோடு வற்றி வறண்டு போச்சுது
அல்லி தாமரை மீனினம் தவளை
அனைத்துமே இறந்து பலநா ளாகுது.
(மேகங்களே மழை...)

மானும் மரையும் மந்தைகள் எல்லாம்
நீரைத் தேடி அலைந்தே அழியுது
காணும் மரங்கள் செடிகள் கொடிகள்
கருகி எரியுது வெயிலின் அனலால்.
(மேகங்களே மழை...)

கதிரைக் கக்கிய பயிரும் வாடுது
கண்ணீர் சிந்தி அழுகிறார் உழவர்
குடிக்க நீரின்றி அலைகிறார் மனிதர்
கொஞ்சம் கருணை காட்டினால் என்ன.?
( மேகங்களே மழை)

ஷெல்லிதாசன்... (திருகோணமலை)



அமோர்போபல்லஸ் டைட்டானியம், உலகின் மிகப்பெரிய பூக்களில் ஒன்றாகும். இது 40 ஆண்டுகளுக்கு ஒரு முறை 4 நாட்களுக்கு பூக்கும்.

## Dead Sea

Dead Sea என்று அழைக்கப்படும் 'சாக்கடல்' மேற்கு ஆசியாவில் இஸ்ரேல், ஜோர்தான் எல்லையில் சுமார் 50 கி.மீ. தூரத்துக்கு விரிந்து பரவியிருக்கிறது. இதை 'சாக்கடல்' என்று நாம் அழைத்தாலும் அது கடல் அல்ல. நான்கு பக்கங்களிலும் நிலத்தால் சூழப்பட்ட மிகப் பெரிய ஏரி. அதேபோல், இந்தக் கடலில் விழுந்தால் மூழ்க முடியாது. அதனால் உயிர் இழக்கும் வாய்ப்பும் இல்லை.

**பிறகு ஏன் இதை 'சாக்கடல்' என்று அழைக்கின்றனர்?**

இந்த ஏரித் தண்ணீரின் தன்மைதான் 'சாக்கடல்' என்கிற பெயரைக் கொடுத்திருக்கிறது. சாக்கடல் தண்ணீரை எடுத்துச் சுவைத்தால் அளவுக்கு அதிகமாக உப்புக் கரிக்கும். கடல் நீரின் உப்பைவிட, சாக்கடல் நீரின் உப்பு சுமார் பத்து மடங்கு அதிகமாக இருக்கும். அதாவது ஒரு லீற்றர் கடல் நீரைக் காய்ச்சினால் 35 கிராம் உப்பு கிடைக்கும். ஒரு லீற்றர் சாக்கடல் நீரைக் காய்ச்சினால் 345 கிராம் உப்பு கிடைக்கும்.

கடலில் சோடியம் குளோரைட் உப்புதான் அதிகமாக இருக்கும். அதாவது 97 சதவீதம் சோடியம் குளோரைட்டும் 3 சதவீதம் இதர உப்புகளும் இருக்கும். சாக்கடலில் 30 சதவீதம் மட்டுமே சோடியம் குளோரைட் இருக்கிறது. பொட்டாசியம், புரோமைன், கல்சியம் போன்ற பிற உப்புகள் அதிகமாக இருக்கின்றன.

அளவுக்கு அதிகமான உப்பு சாக்கடலில் இருப்பதால்தான் மீன், நண்டு, தவளை போன்ற நீர்வாழ் உயிரினங்களோ தாவரங்களோ அதில் வாழ முடியவில்லை. அதனால்தான் இந்தக் கடலை 'சாக்கடல்' என்று அழைக்கிறார்கள்.

சாக்கடலில் உப்பின் அடர்த்தி அதிகமாக இருப்பதால்தான் மனிதனால் இந்தக் கடலில் மிதக்க முடிகிறது. நீரில் மூழ்கிவிடுவோம் என்கிற பயமின்றி நீச்சல் தெரியாமலே மிதந்துகொண்டே படிக்கலாம். விளையாடலாம்.

**சாக்கடலில் மட்டும் ஏன் இவ்வளவு உப்பு?**

சாக்கடலுக்கு வெளியிலிருந்து வரக்கூடிய நீரின் அளவு குறைவு. ஆனால், சாக்கடலில் இருந்து ஆவியாகும் நீரின் அளவு அதிகம். அதனால் அளவுக்கு அதிகமான உப்பு கடலில் தங்கிவிடுகிறது.

உயிரினங்களால் இந்தக் கடலில் வாழ முடியாவிட்டாலும் சுற்றுலாப் பயணிகள் இந்தக் கடலை நோக்கிப் படையெடுக்கிறார்கள்.



## அறிந்து கொள்வோம்



1. உலகப்புகழ் பெற்ற மோனாலீசா ஓவியம் இடது கையால் வரையப்பட்டது.
2. எப்போதும் காற்று வீசும் திசையிலேயே தலை வைத்துப் படுக்கும் மிருகம் நாய்.
3. தேசியக் கொடியை முதல் முதலில் உருவாக்கிய நாடு டென்மார்க். 1219இல் உருவாக்கியது.
4. எறும்புகள் உணவு இல்லாமல் 100 நாட்கள் வாழும்.
6. பாம்புகளுக்கு கேட்கும் சக்தி கிடையாது.
7. நண்டிற்கு தலை கிடையாது, அதன் பற்கள் வயிற்றில் இருக்கும்.
8. வெள்ளை என்பது ஒரு நிறம் அல்ல. அது ஏழு வர்ணங்களின் கலவை.
9. முற்றிப் பழுத்து காய்ந்த தேங்காய் மரத்திலிருந்து பகலில் விழாது இரவில்தான் விழும்.
10. நமக்கு உடல் முழுவதும் வியர்க்கும், ஆனால் நாய்க்கு நாக்கில் மட்டுமே வியர்க்கும்.
11. சிலந்திப் பூச்சிக்கு எட்டுக் கண்கள் உள்ளன.

# கண்டுபிடிப்பாளர்கள்

## டாவின்சி வரைந்த சைக்கிள்



சைக்கிள் நமது வாழ்க்கையோடு வாழ்க்கையாகப் பின்னிப் பிணைந்த வாகனம். மோட்டர் சைக்கிளின் எண்ணிக்கை பெருகிவிட்ட இன்றைய காலகட்டத்திலும் சைக்கிள் உபயோகிப்பவர்கள் இருந்து கொண்டு தான் இருக்கிறார்கள். சைக்கிள் சந்துபொந்துகளில் எல்லாம் வளைந்து செல்லும் சுதந்திர வாகனம். சைக்கிள்களுக்குச் சிக்னல்கள் ஒரு பொருட்டும் இல்லை. இந்த சைக்கிள் பற்றிச் சில சுவாரஸ்யமான தகவல்கள் இருக்கின்றன. சைக்கிளைப் பயன்படுத்துபவர்களில் 25 சதவிகிதத்தினர் வீட்டிலிருந்து சுமார் 2 கி.மீ. தூரப் பயணத்திற்கே அதைப் பயன்படுத்துகிறார்கள். வாரத்திற்கு 3 மணி நேரமோ 30 கிலோ மீற்றரோ சைக்கிள் பயணம் மேற்கொண்டால் இதயம் தொடர்பான வியாதிகளைத் தள்ளிவைக்கலாம். உலகத்தில் சுமார் 100 கோடி சைக்கிள்கள் வீதியில் பயணிக்கின்றன என்றும் ஆண்டுதோறும் 10 கோடி சைக்கிள்கள் தயாரிக்கப்படுகின்றன என்றும் ஒரு ஆய்வு சொல்கிறது.

**டாவின்சி வரைந்த சைக்கிள்**

சைக்கிளைக் கண்டுபிடிக்கும் முயற்சி நீண்ட காலத்திற்கு முன்னரே தொடங்கியுள்ளது. கி.பி. 1490இலேயே லியானார்டோ டாவின்சி ஏறக்குறைய சைக்கிள் மாதிரியான ஒரு வாகனத்தை வரைந்திருக்கிறார். சைக்கிளை முதலில் டி சிவ்ராக் என்னும் பிரெஞ்சுக்காரர் கி.பி 1790இல் வடிவமைத்துள்ளார். இதில் பெடலோ ஸ்டியரிங்கோ கிடையாது. ஆனால் பார்ப்பதற்கு சைக்கிள் போலவே இருந்துள்ளது.

இதைவிட மேலான சைக்கிளை 1817இல் கார்ல் வான் ட்ரைஸ் என்னும் ஜெர்மன் பிரபு உருவாக்கியுள்ளார். இதிலும் பெடல் கிடையாது. கால்களைத் தரையில் ஊன்றித்தான் இழுத்துச் சென்றுள்ளார்கள். இதற்கு டிரைசைன் (Draisine) எனப் பெயர்.

இந்த வாகனத்தை 1818ஆம் ஆண்டு ஏப்ரல் 6 ஆம் திகதி இவர் பாரிசில் காட்சிக்கு வைத்துள்ளார். இந்த இரு சக்கர வாகனம்தான் சைக்கிளை உருவாக்கச் சரியான வழியைக் காட்டியுள்ளது.

இதன் பின்னர் ஸ்கொட்லாந்தைச் சேர்ந்த கிர்க்பாட்ரிக் மெக்மில்லன் 1839இல் நவீன சைக்கிளை வடிவமைத்துள்ளார். இதுவும் தோல்வியில்தான் முடிந்தது. சைக்கிள் உருவாக்கும் முயற்சிக்கிடையில் பைசைக்கிள் என்னும் சொல் பிரான்ஸில் 1860இல் தான் புழக்கத்திற்கு வந்துள்ளது. மெக்மில்லனைத் தொடர்ந்து 1863இல் பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த கொல்லரான எர்னஸ்ட் மிச்செள என்பவர் இரும்புச் சட்டம், மரத்தாலான சக்கரம் கொண்ட, ஓட்டுவதற்கு எளிதான சைக்கிளைத் தயாரித்துள்ளார். இவர் 1866இல் தொடக்க கால சைக்கிள் தயாரிப்பு நிறுவனத்தையும் அமைத்துள்ளார்.

மரச் சக்கரத்திற்குப் பதில் கெட்டியான இறப்பர் டயர் பயன்படுத்தப்பட்ட சைக்கிள் 1869இல் உருவாகியுள்ளது. ஆனால் காற்றடைத்த டயரை 1889இல் தான் உருவாக்கியுள்ளனர். சைக்கிள் வடிவம் ஓரளவு முழுமையான பின்னர் 1884இல் ஜே.கே.ஸ்டார்லி என்பவர் பாதுகாப்பான சைக்கிளை உருவாக்கியுள்ளார். 1962இல் நவீன சைக்கிள் பெருகத் தொடங்கியுள்ளது. இப்போது மின்சக்தி மூலமாக இயங்குகிற சைக்கிள்கள் சந்தையில் கிடைக்கின்றன.

குறிப்பிட்ட தூரத்தைக் காரில் கடப்பதற்குத் தேவைப்படும் ஒக்சிஜனில் பாதியிருந்தால் போதும், அதே தூரத்தை சைக்கிளில் கடந்துவிடலாம். அது மட்டுமல்ல சைக்கிள் சுற்றுச்சூழலுக்கு உகந்த வாகனம். ஒரு கார் நிறுத்தும் இடத்தில் சுமார் 15 சைக்கிள்களை நிறுத்திவிடலாம். சைக்கிளில் செல்ல நாமெல்லாம் ஹெல்மட் அணிவதில்லை.

ஆனால், அவுஸ்திரேலியா நாட்டில் சைக்கிளுக்கும் ஹெல்மட் கட்டாயம். கிரேக்க நாட்டுத் தலைநகர் ஏதன்ஸின் பிரெட் பிர்ச்மோர் என்னும் சாதனையாளர் 1935இல் சைக்கிளிலேயே உலகம் முழுவதும் சுமார் 40 ஆயிரம் மைல்கள் சுற்றி வந்துள்ளார். இதில் 25 ஆயிரம் மைல்கள் தூரத்தை சைக்கிள் பெடலை மிதித்தே கடந்துள்ளார். எஞ்சிய தூரம் படகுப் பயணம். டூர் த பிரான்ஸ் என்பது ஆண்டுதோறும் பிரான்ஸில் நடைபெறும் உலகப் புகழ்பெற்ற சைக்கிள் பந்தயமாகும்.

# விளையாட்டு




# திருப்பம் காட்டினார் பத்திரண







கையை மிக தாழ்வாக சுழற்றி பந்தை வீசும் பாணியை சர்வதேச கிரிக்கெட்டில் பிரபலப்படுத்தியவர் லசித் மாலிங்க. ஆனால் அவர் பாணியில் பந்துவீசும் மதீஷ பத்திரணவின் கை அவரை விடவும் தாழ்வாக சுழல்கிறது. இதனாலேயே அவரால் புதிய பந்துகளில் மாலிங்க அளவு சோபிக்க முடியவில்லை. அதாவது அவரால் பந்தை அதிகம் சுவிங் செய்ய முடியவில்லை.

ஆனால் துடுப்பாட்ட வீரர்கள் எதிர்கொள்ள கடினமான யோக்கர்கள், பௌன்ஸர்கள் வீசுவதில் பத்திரண தேர்ந்துவிட்டார். பந்தை மெதுவாக வீசுவதற்கு அவர் மாலிங்கவிடம் இருந்து கற்றுக் கொண்டார்.

மத்திய ஓவர்கள் மற்றும் கடைசி ஓவர்களில் பத்திரணவின் பந்து அதிகம் தாக்கம் செலுத்துவதாக மாறி வருகிறது. இந்த ஆண்டு இந்திய பிரீமியர் லீக் தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் அனைவரையும் திரும்பிப் பார்க்கச் செய்த வீரராக பத்திரண மாறினார்.

என்றாலும் 20 வயதேயான பத்திரண இலங்கை அணியின் முன்னணி பந்துவீச்சாளர் அல்ல. அவர் பற்றி அணியில் இன்னும் உறுதியான நம்பிக்கை வரவில்லை. வீரர்கள் காயப்பட்டதால் இடைவெளி நிரப்புதற்கே அணியில் இடம்பெற்று வருகிறார்.

துஷ்மன்த சமீர மற்றும் டில்ஷான் மதுஷங்க உடல் தகுதியுடன் இருந்திருந்தால் பத்திரணவுக்கு இலங்கை அணியில் இடம்பிடிப்பது என்பது கடினமாக இருந்திருக்கும். சமீர மற்றும் லஹிரு குமார காயமடையாது இருந்திருந்தால் பத்திரண அண்மையில் நடந்த உலகக் கிண்ண தகுதிகாண் போட்டியில் இலங்கையில் இடம்பெற்றிருக்க மாட்டார்.

ஆசிய கிண்ணத் தொடரிலும் இதே கதைதான் சமீன, லஹிரு குமார மற்றும் மதுஷங்க உபாதை ஏற்பட்டதாலேயே அவருக்கு இடம் கிடைத்தது. ஆசிய கிண்ணத் தொடரில் இலங்கை ஆடிய பங்களாதேஷுடனான முதல் போட்டியில் பத்திரண பதினொருவர் அணியில் இடம்பெற்றதும் இடைவெளி நிரப்புவதற்காகத் தான்.

என்றாலும் கண்டிக்கு அருகில் பல்லேகலவில் இடம்பெற்ற அந்த ஆட்டத்தில் பத்திரணவின் பந்துவீச்சில் இதுவரை இல்லாத முதிர்ச்சி, திறமை தெரிந்தது. இது தான் பல்லேகலவில் அவர் ஆடிய முதல் சர்வதேச போட்டி.

பந்துவீச அழைக்கப்பட்ட முதல் ஓவரில் எதிர்பாராத பௌன்ஸர் ஒன்றை வீசி தனது முதல் விக்கெட்டை சாய்த்தார். தாமதித்து பந்துக்கு துடுப்பை சுழற்ற விக்கெட் காப்பாளரிடம் பிடிகொடுத்தார் ஷகீப் அல் ஹசனின். 5 ஓட்டங்களுடன் வெளியேறிய ஹசனின் ஆட்டமிழப்பு பங்களாதேஷுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது.

பின்னர் மத்திய வரிசையில் வந்த அனுபவ துடுப்பாட்ட வீரர் முஷ்பீகுர் ரஹீமையும் பத்திரணவால் வீழ்த்த முடிந்தது. தலைக்கு மேலால் வந்த பௌன்ஸர் பந்தை அடிக்க அதனை திமுத் கருணாரத்ன பௌண்டரி அருகில் பிடியெடுத்தார். பின் வரிசையில் தக்சின் அஹமட்டை டக் ஆவுட் செய்த பத்திரண கடைசி விக்கெட்டாக முஸ்தபிசுர் ரஹ்மானையும் பூச்சியத்திற்கு வெளியேற்றினார்.

இதன்மூலம் பங்களாதேஷ் அணியை 164 ஓட்டங்களுக்கு சுருட்ட இலங்கை அணியால் முடிந்ததோடு போட்டியில் 5 விக்கெட்டுகளால் வெற்றியீட்டவும் முடிந்தது. துஷ்மன்த சமீர, லஹிரு குமார, டில்ஷான் மதுஷங்க, போதாக்குறைக்கு சுழல் வீரர் வனிந்து ஹசரங்கவும் இல்லாத நிலையில் களமிறங்கிய இலங்கை அணிக்கு பந்துவீச்சே பெரும் கவலையாக இருந்தது.

என்றாலும் முதல் போட்டியில் பத்திரணவின் பந்துவீச்சு இதுவரை காணாத அளவுக்கு நேர்த்தியாக இருந்தது. தனது குறுகிய ஒருநாள் கிரிக்கெட் வாழ்வில் அவர் பந்தை மிக கட்டுக்கோப்போடு வீசிய இன்னிங்ஸாக இதனை குறிப்பிடலாம். இந்தப் போட்டிக்கு முன்னர் பத்திரண ஓவர் ஒன்றுக்கு தலா 6.48 ஓட்டங்களை விட்டுக் கொடுத்திருந்தார். ஆனால் இந்தப் போட்டியில் 4.17 சராசரியையே பெற்றார். இது அவரது பந்துவீச்சு நேர்த்தியாக இருந்ததை உறுதி செய்ய போதுமானது.

பங்களாதேஷுடனான போட்டியில் அவர் 7.4 ஓவர்கள் பந்துவீசி 32 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதற்கு முன்னர் நான்கு ஒருநாள் போட்டிகளிலேயே ஆடி இருந்த பத்திரணவின் சிறந்த பந்துவீச்சு இதுவென்பதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால் ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 4 விக்கெட்டுகளை வீழ்த்திய இலங்கையின் இளம் பந்துவீச்சாளர் என்ற சமிந்த வாசின் சாதனையை பத்திரண முறியடித்திருக்கிறார். பத்திரண இந்த நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தும்போது அவரது வயது 20 ஆண்டு, 256 நாட்களாகும். முன்னதாக சமிந்த வாஸ் 20 வயது 280 நாட்களில் நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தியதே சாதனையாக இருந்தது.

பத்திரணவின் இந்த பந்துவீச்சு மிக முக்கிய திருப்பத்தை காட்டுகிறது. தனது பந்துவீச்சு பற்றி நம்பிக்கை அதிகரிக்கும்போது அவர் அணியில் ஸ்திரமான இடம் ஒன்றை பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

"அவரது ஆட்டத்திறன் கொஞ்சம் காலமாக அதிகரித்து வருவதை பார்க்க முடிகிறது" என்று இலங்கை அணியின் பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வுட் கூறுகிறார்.

"ஐ.பி.எல் தொடரில் அவருக்கு நல்ல அனுபவம் கிடைத்ததோடு தொடர்ந்து உலகக் கிண்ண தகுதிகாண் தொடரில் அவர் எம்முடன் வந்தார். புதிய பந்தில் எப்படி பந்து வீசுவது என்பது பற்றி நாம் அதிகம் பணியாற்றினோம்" என்றும் அவர் குறிப்பிட்டார்.

என்றாலும் பங்களாதேஷுடனான போட்டியில் பத்திரண பதினொராவது ஓவரில் வைத்தே பந்துவீச அழைக்கப்பட்டார். எதிர்பார்த்தது போல் அவர் கடைசி ஓவர்களில் சிறப்பாகவே பந்துவீசினார். பத்திரணவின் வேகத்தை எதிர்கொள்ள தக்சின் அஹமட் தடுமாறியதை காண முடிந்தது.

என்றாலும் ஒரு முழுமையான பந்துவீச்சாளராவதற்கு அவர் புதிய பந்திலும் அதிக கட்டுப்பாட்டுடன் பந்து வீச வேண்டி இருக்கிறது. "அறிவுறுத்தல்களை அவர் விரைவாக புரிந்துகொள்கிறார். போட்டியில் உடன் அதனை செயற்படுத்துகிறார். அதனை அவர் தமது போக்கில் செயற்படுத்துகிறார். அவர் புதிய பந்தை பெறுவதற்கு நீண்ட காலம் செல்லாது" என்கிறார் சில்வர்வுட்.

ஆசிய கிண்ண தொடரில் நடப்புச் சம்பியனாக இலங்கை இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டி இருக்கிறது. தனது இரண்டாவது மற்றும் கடைசி குழுநிலை போட்டியில் இலங்கை அணி வரும் செவ்வாய்க்கிழமை (05) ஆப்கானிஸ்தான் அணியை எதிர்கொள்ளவிருக்கிறது. அதுவும் பாகிஸ்தானின் லாகூர் நகரிலேயே அந்தப் போட்டி நடைபெறவுள்ளது.

ஆசிய கிண்ணத் தொடரின் சுப்பர் போர் சுற்றுக்கு முன்னேற இந்தப் போட்டியில் இலங்கை வெல்வது கட்டாயமாகும். தொடர்ந்து சுப்பர் போர் சுற்றில் பெரும்பாலும் பலம் மிக்க இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளை இலங்கை எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

தொடர்ந்தும் இலங்கை அணி பந்துவீச்சில் பலவீனமாகவே தெரிகிறது. பங்களாதேஷுடனான போட்டியில் கசுன் ராஜித்தவுடன் சேர்ந்து சுழற்பந்து வீச்சாளர் மஹீஷ் தீக்ஷனவே வீசினார். தீக்ஷனவுக்கு புதிய பந்தை கையாண்டு பழக்கம் இருப்பதோடு அந்தப் போட்டியில் அவர் 8 ஓவர்கள் பந்து வீசி 19 ஓட்டங்களை மாத்திரம் விட்டுக்கொடுத்து 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தவிர தனஞ்சய டி சில்வா, துனித் வெள்ளாலகே மற்றும் தசுன் ஷானக்க ஆகிய வீரர்களே பந்துவீச்சு இடைவெளியை நிரப்பினார்கள். எனவே பத்திரணவின் பந்துவீச்சில் தொடர்ச்சியான போக்கு நீடிப்பது இலங்கை அணி ஆசிய கிண்ணத்தில் ஆதிக்கம் செலுத்துவதற்கு கட்டாயக் காரணியாக மாறியிருக்கிறது.

**எஸ்.பிர்தௌஸ்...**

# முத்த விளையாட்டு



அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடந்து முடிந்த மகளிர் உலகக் கிண்ண கால்பந்து போட்டி மகளிர் விளையாட்டுக்கு முன்னர் காணாத பெருமையைத் தேடித் தந்தது. போட்டியை பார்க்க அதிக ரசிகர்கள் அரங்கில் திரண்டார்கள். தொலைக்காட்சி ரசிகர்களும் அதிகரித்தார்கள். முன்னரை விடவும் பணம் கொட்டியது.

அதற்கு ஏற்பவே கடந்த ஓகஸ்ட் 20 ஆம் திகதி நடந்த இறுதிப் போட்டியும் ஆடவர் கால்பந்துக்கு நிகராக பரபரப்பாக இருந்தது. இங்கிலாந்து மற்றும் ஸ்பெயின் ஆடிய இறுதிப் போட்டியில் ஸ்பெயின் 1–0 என கிண்ணத்தைக் கைப்பற்றியபோது கொண்டாட்டம் உச்சத்தை தொட்டது.

ஆனால் ஸ்பெயின் கால்பந்து சம்மேளனத்தின் தலைவர் லுவிஸ் ருபியல்ஸின் கொண்டாட்டம்தான் அட்டகாசமாக இருந்தது. ஆனால், அதனை சாதாரணமான கொண்டாட்டமாக பார்க்க முடியாது.

மகளிர் உலகக் கிண்ணப் போட்டியின் அந்தஸ்த்தை சில நிமிடங்களில் குறைப்பதாகக் கூட எடுத்துக் கொள்ளலாம்.

ஸ்பெயின் உலகக் கிண்ணத்தில் வெற்றி பெற்ற உடன் அரங்கில் இருந்த ருபியல்ஸ் தனது மர்ம உறுப்பை பிடித்தபடி ஆட்டம்போட்டதோடு பின்னர் ஒரு ஸ்பெயின் வீராங்கனையை தோள்பட்டையில் சுமந்து சென்றார்.

இத்தோடு நிற்காத அவர் பரிசளிப்பு நிகழ்வில் ஸ்பெயின் வீராங்கனைகளை இஷ்டத்திற்கு கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்ததோடு ஜென்னி ஹெர்மோசோவுக்கு கொடுத்த முத்தம்தான் உச்சம். பதக்கம் பெற வந்த அவரின் தலையை இறுக்கப்பிடித்த ருபியல்ஸ் நேராக உதட்டில் முத்தம் கொடுத்தார்.

உண்மையில் அவரது நடத்தை இயல்புக்கு மிஞ்சியது மாத்திரமல்ல, பெண்களின் விளையாட்டையே கேவலப்படுத்துவதாக இருந்தது. எனவே, அவர் மீது எதிர்ப்பு கிளம்பியதில் ஆச்சரியம் இல்லை.

இந்த முத்தம் இப்போது ஸ்பெயினில் விளையாட்டுக்கு அப்பால் அரசியல், சமூகப் பிரச்சினையாக மாறிவிட்டது. முத்தத்தை பெற்ற ஹெர்மோசோவும் அதனைத் தான் விரும்பவில்லை என்று கூறிவிட்டார்.



ஸ்பெயின் அணியின் முகாமையாளர் தவிர்த்து ஒட்டுமொத்த பயிற்சிக் குழுவும் பதவி விலகிவிட்டது. ஸ்பெயின் கால்பந்து சம்மேளனத் தலைவராக ருபியல்ஸ் இருக்கும் வரை தாம் ஸ்பெயின் அணிக்காக ஆடப்போவதில்லை என்று உலகக் கிண்ணத்தை வென்ற ஒட்டுமொத்த மகளிர் அணி வீராங்கனைகளும் கூறிவிட்டார்கள்.

ஸ்பெயின் வீதிகளில் பெண் உரிமைக் குழுக்கள் ஆர்ப்பட்டத்தில் இறங்கி இருக்கின்றன. அரச தரப்பில் இருந்தும் ருபியல்ஸை பதவி விலக அழுத்தம் அதிகரித்திருக்கிறது.

சர்வதேச கால்பந்து சம்மேளனம் கூட ருபியல்ஸை 90 நாட்களுக்கு இடைநிறுத்திவிட்டது. அதாவது அவருக்கு உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் கால்பந்து செயல்பாடுகளில் ஈடுபட முடியது. ருபியல்ஸ் ஐரோப்பிய கால்பந்து சம்மேளனத்திலும் முக்கிய புள்ளியாக இருக்கிறார்.

இதன் உச்சமாக ருபில்ஸ் மீது பாலியல் தாக்குதல் தொடர்பில் குற்றவியல் குற்றச்சாட்டு சுமத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. இதனால் ஒரு முத்தத்தால் ருபியல்ஸ் சிறை வரை செல்லும் வாய்ப்பு இருக்கிறது.

என்றாலும் ருபியல்ஸ் தொடர்ந்து தனது நிலையில் விடாப்பிடியாக இருப்பதாகவே தெரிகிறது. ஆரம்பத்தில் அவர் பதவி விலகப்போவதாக கூறப்பட்டபோதும் அது உண்மையாக இருக்கவில்லை. அவர் தொடர்ந்து ஸ்பெயின் கால்பந்து சம்மேனத்தின் தலைவராக நீடிக்க முயன்று வருகிறார். இதற்கு அந்த சம்மேளனத்தின் பெரும் புள்ளிகள் முதலில் ஆதரவாக இருந்தாலும் நாளுக்கு நாள் அந்த ஆதரவு குறைந்து வருகிறது.

உண்மையில் ருபியலின் இந்த நடத்தை என்பது மகளிர் விளையாட்டில் காலம் காலமாக இருக்கும் பிரச்சினை ஒன்று அம்பலத்திற்கு வந்த நிகழ்வாகவே பார்க்க முடிகிறது.

பெண் விளையாட்டு வீராங்கனைகள் தமது பயிற்சியாளர், முகாமையாளர் அல்லது நிர்வாகத்தில் இருப்பவர்களின் பாலியல் தொந்தரவுக்கு முகம்கொடுக்கும் அவ்வப்போது வெளியே வந்து சர்ச்சையை கிளப்பும்.

2016இல் அமெரிக்க ஜிம்னாஸ்டிக் தேசிய அணியின் மருத்துவர் லரி நாசர் மீது 265க்கும் அதிகமான பெண் வீராங்கனைகள் பாலியல் குற்றச்சாட்டு சுமத்திய சம்பவம் இதன் பாரதூரத்தை குறிப்பிட நல்ல உதாரணம். கடைசியில் நாசர் ஆயுள் கைதியாக மாறிவிட்டார்.

2020 ஆம் ஹெய்ட்டி கால்பந்து சம்மேளனத் தலைவர் யிவேஸ் ஜீன் பார்ட் மீது அந்நாட்டின் பல கால்பந்து வீராங்கனைகளும் பாலியல் தொந்தரவுகள் பற்றி அடுக்கடுக்காக குற்றச்சாட்டுகளை சுமத்தினார்கள். இதில் ஒரு பெண், பார்ட் தம்மை கற்பழித்ததாகவும் இதனால் தாம் கருக்கலைப்பு செய்ய வேண்டி இருந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார்.

2020 நவம்பரில் ஜீன் பார்ட்டுக்கு பிஃபா வாழ்நாள் தடை விதித்தது.

விளையாட்டில் ஈடுபடும் ஒவ்வொரு வீராங்கனையும் சிறிய அளவிலாவது இவ்வாறான தொந்தரவுகளை தாண்டி இருக்க வாய்ப்பு அதிகம்.

எனவே பெண் விளையாட்டு வீராங்கனைகளை பாதுகாப்பதற்கு ருபியல்ஸ் போன்றவர்களின் நடத்தையை கட்டுப்படுத்துவதும் அவசியமாக உள்ளது.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# Senthooram செந்தூரம்

2023 செப்டெம்பர் 3 ஞாயிற்றுக்கிழமை





இனிய நந்தவனம் இதழ் அறிமுக விழா 04



கல்வியையும், இலக்கியத்தையும் பேணிக் காத்த ஆலங்கேணி கேணிப் பித்தன் அருளானந்தம் 06



08

சமந்தாவிடம் அத்துமீறும் விஜய் தேவர்கொண்டா

தமிழ்த் திரைப்பட நாயகி காயத்ரிசான்

# உலகின் நீளமான நதி எது?

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்



அமேசன், நதி அளவில் பெரிது என்றாலும் உலகில் நைல் நதி தான் நீளமானது என்று நம்புகிறோம். புவியியல் பாடங்களும் அறிவியல் புத்தகங்களும் இதைத் தான் சொல்கிறது. ஆனால் உண்மையிலேயே உலகில் நீளமான நதி எது என்பதில் குழப்பம் இருக்கத் தான் செய்கிறது.

அமேசன் நதியின் நீளம் என்ன என்பது பற்றி விஞ்ஞானிகள் 14 நாட்கள் நடத்திய ஆய்வு ஒன்றில் அதன் நீளத்திற்கு மேலும் சுமார் 176 மைல்கள் சேர்க்கப்பட்டன. இதனால் அந்த நதி நைல் நதியை விடவும் 65 மைல்கள் நீண்டது என்று கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த ஆய்வுக் குழு வெளியிட்ட முடிவுகளின்படி அமேசன் நதி 4,225 மைல்கள் நீண்டது. ஆனால் நைல் நதியின் நீளம் 4,160 மைல்கள்.

# அதிசய இரட்டையர்





அமெரிக்காவின் ஒஹியோ மாநிலத்தில் பிறந்த இரட்டை குழந்தைகளும் மூன்று வாரங்கள் தான் ஒன்றாக இருந்தார்கள். பின்னர் அவர்களை சம்பந்தமே இல்லாத வெவ்வேறு குடும்பங்கள் தத்தெடுத்தன. இருவரும் சுமார் 40 மைல் இடைவெளியில் வாழ்ந்தபோதும் எந்த தொடர்பும் இருக்கவில்லை. கடைசியில் 39 வயதில் அதாவது 1979 ஆம் ஆண்டு முதல் முறை சந்தித்துக் கொண்டார்கள்.

கதையில் என்ன சுவாரஸ்யமே இல்லை என்று பார்க்கிறீர்களா? இந்த இரு இரட்டையர்களின் வாழ்க்கையை பார்க்கும்போது அச்சு அசல் ஒரே மாதிரி இருந்தது. இது தற்செயல் என்பதை விட ஆச்சரியமானது.

இருவருக்கும் அவர்களை தத்தெடுத்த பெற்றோர் வைத்த பெயர் ஜிம். இருவருக்கும் கணக்கு மற்றும் மரவேலைகள்தான் பிடிக்குமாம். இருவருமே பாதுகாவலர்களாகத்தான் வேலை பார்த்திருக்கிறார்கள். இந்த அளவில் தற்செயல் என்று வைத்துக் கொள்வோமே, இதற்கு மேலும் இவர்களின் வாழ்வின் ஒற்றுமைகள் விஞ்ஞானத்தால் விளக்க முடியாதது.

இருவரும் திருமணம் முடித்த பெண்ணின் பெயர் லின்டா, அந்த திருமணம் இருவருக்கும் கசந்துபோக சில ஆண்டுகளில் இரண்டாவது திருமணம் முடித்திருக்கிறார்கள். இருவரதும் இரண்டாவது மனைவிகளின் பெயர் பெட்டி.

இருவரும் தமது மகன்களுக்கு வைத்த பெயர் ஜேம்ஸ் அலன்.

இருவருமே இடைவிடாது புகைபிடிப்பவர்கள். இருவரும் கார் ஒன்று வைத்திருந்தார்கள், அந்த இரண்டுமே செவ்ரோல்ட்.

# வெங்காயத்தின் மாண்மியம்



உணவு வரலாற்று ஆய்வாளர்களின் பரவலான கருத்து. 5000 ஆண்டுகளுக்கு முன் சீன தோட்டங்களில் வெங்காயம் வளர்த்தார்களாம், பண்டைய இந்திய வேதங்களில் வெங்காயம் பற்றி வருகிறது. கி.மு 3500 ஆண்டுகளுக்கு முன் பாரோக்கள் காலத்து எகிப்திலும் வெங்காயம் இருந்திருக்கிறது. கி.மு 2500 வாக்கில் சுமேரியன்கள் வெங்காயம் வளர்த்ததாக ஆதாரங்கள் இருக்கின்றன. வெங்காய தோட்டம் செய்ய நகர ஆளுநரிடம் ஒருவர் துண்டு நிலம் கேட்டதாக 2500 ஆண்டுகளுக்கு முந்தைய சுமேரிய பதிவு ஒன்று இருக்கிறது.

ஒன்றும் தெரியாதவர்களுக்கு வெங்காயம் என்று திட்டுவது வழக்கமானது. ஆனால் வெங்காயத்திற்கு என்று ஒரு வரலாறு உண்டு. வெங்காயத்தின் பூர்வீகம் மத்திய ஆசியா என்பது தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள், தாவரவியலாளர்கள் மற்றும்

ஆனால் எகிப்தியரைப் போல் வெங்காயத்தை வாழ்த்தி வணங்கியவர்கள் எவரும் இல்லை. பண்டைய பாரோக்கள் வெங்காயத்தோடுதான் அடக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். வெங்காயம் என்பது அவர்களுக்கு முடிவற்ற நிலைத்த தன்மையை காட்டுவதாக இருந்திருக்கிறது. வெங்காயம் என்பதற்கு ஒன்றுமில்லை என்பதற்கு அப்பால் இப்படியும் ஒரு தத்துவம் சொல்லலாம் என்பதை பண்டைய எகிப்தியரைப் பார்த்தே படித்துக் கொள்ள வேண்டும்.

வெங்காயத்தை வணங்கிய பண்டைய எகிப்தியர் பிரமிட்டுகளின் உட்சுவர்களிலும் வெங்காயத்தை செதுக்கி வைத்திருக்கிறார்கள்.

# உயரத்தில் ஒரு திருட்டு!



செங்குத்தான பாறை மீது ஏற வேண்டும்... மெல்லிய இரும்புக் கம்பிவடங்களில் பள்ளத்தாக்கைக் கடக்க வேண்டும்...

இதெல்லாம் சாகசம் புரியவா? இல்லை!

சுவிட்சர்லந்தில் கொள்ளையடிக்கப் பாடுபட்டு 2,350 மீற்றர் உயரம் ஏறியிருக்கின்றனர் சிலர். உள்ளூர் மலையேறிகள் குழுவின் நன்கொடை பெட்டியைக் கொள்ளையடிப்பது திட்டம்.

அதில் சுமார் 500 சுவீஸ் பிராங்க், அதாவது இலங்கை நாணயத்தில் சுமார் இரண்டு இலட்சம் ரூபா இருந்திருக்குமெனக் கூறப்படுகிறது.

நாட்டில் பாதுகாக்கப்பட்ட மலையேறும் பாதைகளில் லுக்கர்பட் வட்டாரத்துக்கு அருகிலுள்ள மலைப் பாதை நீளமானது. மலையேறிகள் குழு மலைப்பாதையை நிர்வகிக்கிறது.

அதில் ஏறுவது மிகவும் சிரமம். அனுபவம் வாய்ந்த மலையேறிகள் மட்டுமே செல்லமுடியும்.

கொள்ளைக்காரர்கள் மலையேறுவதற்குப் பயன்படுத்தும் கருவிகளைக் கொண்டு நன்கொடைப் பெட்டியை உடைத்திருக்கிறார்கள். கொள்ளையடித்த பின்னர் மலையிலிருந்து இறங்காமல் அவர்கள் தொடர்ந்து மலை உச்சிக்கு ஏறியதாகக் கூறப்பட்டது.

நல்ல பருவநிலை காரணமாக பலர் மலையேற்றத்தில் ஈடுபடுவதால், கொள்ளைக் கும்பலைக் கண்டுபிடிப்பது சிரமம் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தமக்குள் போரிட்ட அமெரிக்கா, கனடா



அலஸ்காவின் அலூடியன் தீவுக் கூட்டத்தில் இருக்கும் ஒரு தீவுதான் கிஸ்கா தீவு. 35 கிலோமீற்றர் தான் நீளம். சாதாரண மக்கள் வாழ்வதில்லை, வாழவும் முடியாது. ஆனால் இரண்டாம் உலகப் போர் காலத்தில் மூலோபாய முக்கியம் வாய்ந்த இடமாம். இல்லாவிட்டால் எங்கேயோ இருக்கும் ஜப்பான் அந்த தீவை ஆக்கிரமித்திருக்குமா? அப்போது அங்கே அமெரிக்காதான் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்தது.

எனவே ஜப்பானை அந்த தீவில் இருந்து துரத்தியடிக்க நேச நாடுகள் திட்டம் போட்டன. அதுதான் கொட்டகை படை நடவடிக்கை. அமெரிக்கா மற்றும் கனடா நாடுகள் பிரமாண்ட படையை கிஸ்கா தீவுக்கு அனுப்பியது.

1943 ஓகஸ்ட் 15 ஆம் திகதி அமெரிக்க மற்றும் கனடா படைகள் கிஸ்கா தீவை அடைந்தது. ஆனால் இரண்டு படைகளும் தீவின் இரு பக்கமாகவே ஆக்கிரமித்தன. அப்போது எதிர்ப்பட்ட இரு படைகளும் முன்னே இருப்பது ஜப்பானிய படைதான் என்று நினைத்து பயங்கரமாக சண்டை பிடித்தன.

கிட்டத்தட்ட கனடா மற்றும் அமெரிக்காவின் சுமார் 100 வீரர்கள் கொல்லப்பட்டார்கள், 200க்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர். கடைசியில் பார்த்தால் சண்டை பிடித்திருப்பது அமெரிக்க மற்றும் கனடிய படைகள்தான். அங்கே ஜப்பானிய படை இருக்கவில்லை.

ஜப்பானியர்கள் மூன்று வாரத்திற்கு முன்னரே தீவில் இருந்து கிளம்பிவிட்டார்கள். இது தெரியாமல் அமெரிக்காவின் 34,000 படையினர் மற்றும் கனடாவின் 5,300 படையினர் தமக்குள் சண்டை பிடித்துக்கொள்ளவே ஒன்றாக தீவுக்கு சென்றிருக்கிறார்கள்.

# Sri Lankan Top 100 Awards
























# இனிய நந்தவனம் இதழ் அறிமுக விழா



'இனிய நந்தவனம்' இலங்கைச் சிறப்பிதழின் அறிமுக விழா கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு 'ஞானம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் 'சாகித்திய ரத்னா' தி.ஞானசேகரன் தலைமை தாங்கினார். தமிழ் வாழ்த்தை கொழும்பு சைவமங்கையர் வித்தியாலய மாணவி சக்திகா சிறி குமரனும், வரவேற்புரையை எழுத்தாளர் பவானி சச்சிதானந்தனும், தலைமையுரையை 'ஞானம்' சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் தி.ஞானசேகரனும், ஏற்புரையையும் நன்றியுரையையும் இனிய நந்தவனம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரனும் நிகழ்த்தினர். சிறப்பு அதிதிகளாக தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், வீரகேசரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் எஸ்.ஸ்ரீ கஜன், தினக்குரல் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் கே.பி.ஆர்.ஹரன் ஆகியோர் கலந்துகொண்டனர். சிறப்பு விருந்தினர்களாக கல்வி அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் உடுவை எஸ்.தில்லைநடராஜா, எழுத்தாளர் 'சாகித்திய ரத்னா' மு.சிவலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்வை கவிதா ராம்குமார் (டான் ரீ.வி.) தொகுத்து வழங்கியதுடன், 'கலாபூஷணம்' பொன்னுத்துரை நிகழ்வை ஒருங்கிணைத்தார்.

# கவிதை மழையில் நனைய வைத்த 91 ஆவது வகவ கவியரங்கம்





ஒவ்வொரு பௌர்ணமி தினத்தையும் தனக்குரிய தினமாகக் கொண்டாடும் வலம்புரி கவிதா வட்டம் ஆகஸ்ட் மாதத்தின் இறுதியில் இரண்டாவதாக வந்த பௌர்ணமி தினத்திலும் கவியரங்கை வெற்றிகரமாக நடத்திஇலக்கிய உலகை புளகாங்கிதம் கொள்ளச் செய்தது.

வலம்புரி கவிதா வட்டம் தனது 91 ஆவது கவியரங்கை கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடாத்தியது.

கவியரங்கிற்கு புரட்சிக் கவிஞர் ரவூப் ஹஸீர் தலைமை தாங்கினார். தனது உணர்வுப்பூர்வமான, உற்சாகமான கவிதைகளினால் ரவூப் ஹஸீர் கவியரங்கை இறுதிவரை கலகலப்பாக நடாத்தினார்.

வகவ நிகழ்வுகளை வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நெறிப்படுத்தினார். பொருளாளர் ஈழ கணேஷ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

91 ஆவது கவியரங்கில் கவிஞர்கள் சமூகஜோதி ரபீக், லைலா அக்ஷியா, தி. ஸ்ரீதரன், ஆர். தங்கமணி, மலாய்கவி டிவாங்ஸோ, மஸீதா அன்சார், யாழ் அஸீம், தாமரைச் செல்வி, கவிஞர் திலகம் எம். பிரேம்ராஜ், உணர்ச்சிப் பூக்கள் ஆதில், கம்மல்துறை இக்பால், ரவூப் ஹஸீர், கிண்ணியா அமீர் அலி, ரஷீத் எம். றியாழ், ராஜா நித்திலன், சிந்தனைப் பிரியன் முஸம்மில், நியாஸ் ஏ. சமத், ஆர். எஸ். ரஸ்மியா, சிறுமி இ. கலைநிலா, எஸ். யூ. கமர்ஜான் பீபி, வதிரி சி. ரவீந்திரன், தமிழ்த் தென்றல் அலி அக்பர், எம். எம். நவாஸ்தீன், ஏ. கே. இளங்கோ, மினுவன்கொடை ஏ. சிவகுமார் ஆகியோர் கவிதை பாடினர்.

ஒவ்வொரு கவிஞரினதும் வித்தியாசமான கருப் பொருள் கவியரங்கை களை கட்ட வைத்தது. நீண்ட கவிஞர் பட்டியல் இருந்த போதும் கவியரங்கு இறுதிவரை அலுப்புத் தட்டாமல் சுவையாக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

கலாபூஷணம் எம். எஸ். எம். ஜின்னா, வெலிப்பன்னை அத்தாஸ், கல்லொளுவை பாரிஸ், நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், க. ஜெகதீஸ்வரன், எச். எம். பர்ஸான், உக்குவல எம். ஏ. இர்பானா, தெல்தொட்ட எம். எப். அஸ்மா, இப்திகார் இஃபாம், ஐ. எல். எம். ஆசிக், ஆனந்த கிருஷ்ணன் சாந்தி, கவிதா இளங்கோ போன்றோர் சபையை அலங்கரித்தனர்.

(படங்கள் முஹம்மத் நசார்)

# முதியோர்களை கௌரவித்து காத்தான்குடி முதியோர் இல்லத்தில் சிறப்பாக களை கட்டிய இஸ்லாமிய இலக்கியக் கழகத்தின் ஒன்பதாவது பௌர்ணமி கவியரங்கு








காத்தான்குடி இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் ஒன்பதாவது மாதாந்த பௌர்ணமி கவியரங்கு காத்தான்குடி முதியோர் இல்லத்தில் இஸ்லாமிய இலக்கிய கழகத்தின் தலைவர் கவிமாமணி ரீ. எல். ஜவ்பர்கான் தலைமையில் நடைபெற்றது.

கவியரங்கிற்கு மௌலவி எச் எம் எம் இக்பால் பலாஹி தலைமை வகித்தார்.

கவியரங்கில் கவிஞர்களான சாகிர் ஹுசைன், இல்மி அகமது லெப்பை ,அஜீரா ஹலீல்தீன்,எச் எம் இக்பால் கான், ஏ எல் எம் சித்திக், உஸனார் ஜாபீர், ஆனா லேனா பத்ருதீன், கலைமதி ரபாய்தீன நூன் ரஹீம் ஆகியோர் கவி மழை பொழிந்தனர்.

காத்தான்குடி மத்திய சபை முன்னாள் தலைவர் எம் ஐ எம் உசனார், காத்தான்குடி முதியோர் இல்லத்தின் தலைவர் ஓய்வு பெற்ற அதிபர் கே எம் ஏ எஸ் அஜீஸ் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டனர்.

கவி அரங்குக்கு தலைமை வகித்த கவிஞர் மௌலவி எம்எச்எம் இக்பால் கவி மேகம் என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். (படங்களும் தகவலும் ரீ.எல். ஜவ்பர்கான் மட்டக்களப்பு குறூப் நிருபர் )

# கல்வியையும், இலக்கியத்தையும் இரு கண்களைப்போல் பேணிக் காத்த ஆலங்கேணி கேணிப் பித்தன் அருளானந்தம்



இலக்கிய வானில் சிறகடித்துப் பறக்கும் பட்சியாய் வலம் வரும் திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா ஆலங்கேணியைப் பிறப்பிடமாகவும், உவர்மலையை வசிப்பிடமாகவும் கொண்ட கலாநிதி, இலக்கிய வித்தகர்,கலாபூசணம், கிழக்கு மாகாண ஆளுநர் விருது போன்ற பல பட்டங்களை சூடியவர் கேணிப் பித்தன் ச. அருளானந்தத்துக்குக் கல்வியும், இலக்கியமும் இரு கண்களைப் போன்றதாகும்.

தனது ஆரம்பக் கல்வியை ஆலங்கேணிப் பாடசாலையிலும், ஆங்கிலக் கல்வியை மட்/சிவானந்த வித்தியாலயத்திலும், ஆசிரியப் பயிற்சியினை மட்/ ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியிலும், பட்டப்படிப்பினைப் பேராதனை பல்கலைக்கழகத்திலும் பெற்றார். புவியியலில் PHD பட்டத்தையும், முன் பள்ளிக் கல்வியில் டாக்டர் பட்டத்தையும் பெற்றார். 1982ம் ஆண்டு கல்வி நிருவாக சேவையில்(SLEAS சித்தி பெற்றார்.

ஆங்கில ஆசிரியராக, அதிபராக, வவுனியா மாவட்டக் கல்வி அதிகாரியாக, கோட்டக் கல்வி அதிகாரி, வகிமா கல்வி அமைச்சின் மேலதிகக் கல்விப் பணிப்பாளர் ஆகிய பதவிகளை வகித்து ஓய்வு பெற்ற பின் பல அரச சார்பற்ற நிறுவனங்களில் கடமையாற்றினார்.

அனர்த்த முகாமைத்துவத் துறையில் ஆலோசகராகவும் சேவையாற்றினார். ஈழத்து இலக்கியப் பரப்பில் மூத்த எழுத்தாளரும், பன்முக ஆளுமையுள்ள கல்விமானும், சமூக சேவையாளருமாவார்.

ஓய்வு என்பது ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலையைத் தொடங்குவதாகும் என்பது இவரது தாரக மந்திரமாகும்.

இலக்கியத்தில் பல்வேறு சாதனைக ளைப் புரிந்துள்ளமையை விசேசமாகக் கூறலாம். இலங்கை சாஹித்திய விருதுகள்04, மாகாண சாஹித்திய விருதுகள் 04, மாவட்ட ரீதியாக நடந்த போட்டிகள், இன்னும் பல போட்டிகளில் கலந்து முதல் பரிசுகளை வென்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

விசாலமான இலக்கியப் பரப்பில் பல்வேறு கோணங்களில் ஆக்கங்களைப் படைத்துத் தமிழுக்குப் பல தொண்டாற்றினார். ஆரம்பக் கல்வி மாணவர்களின் ஆசிரியர் கைந் நூலில் இவரது சிறுவர் பாடல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம், நாடகம், தமிழியல் ஆய்வு, கிராமியப் பாடல்கள் போன்றவற்றை அச்சு, இலத்திரனியல் ஊடகங்களுக்கு எழுதினார்.

பல நாடகங்களை எழுதி நடித்துள்ளார்.

அதில்" தங்கக் கோடரி" என்ற நாடகம் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது. நன்கு பாடக் கூடிய ஆற்றலுமுள்ளது.

பாடசாலை விளையாட்டுப் போட்டி களில் சிறப்பு வர்ணனை அறிவிப்பாளராகவும் காணப்பட் டார். இவரது வர்ணனை உச்சரிப்புகள் பலரையும் காந்தமாய் கவர்ந்திழுக்கும். அக் காலத்தில் விளையாட்டு வீர ராகவும் காணப்பட்டார். எல்லோரோடும் சிரித்துப் பழகும் பண்பாளராகவும், அன்பானவராகவும் விளங்குகிறார். இதுவரை வெளிவந்த இவரது நூல்கள் சிறுவர் பாடல்கள்22, சிறுவர் கதைகள் 16, சிறுவர் கட்டுரைகள்10, சிறுவர் நாவல்கள்11, சிறுகதைத் தொகுதி06, இளைஞர் நாவல்கள09, கல்வியல்04, சிறுவ ர்களுக்கான சாதனைப் பெண்கள்01, ஆனந்த அனுபவக் கதைகள்01, வாழ்க்கை வரலாறு அனுபவக் கதைகள்01, ஆய்வு நூல்கள்06, சிறுவர் ஆங்கிலக் கதைகள்10, எனது வாழ்க்கை நாடகம் 01, கவிதைகள்02, நாவல்கள்06

இத்தனை நூல்களையும் வெளியிட்ட பெருமை கேணிப் பித்தன் அருளானந்தம் சேரையே சாரும். 2010ம் ஆண்டு இவரது 03 நூல்கள் தேசிய ரீதியில் தெரிவானது பெரிய தொரு சாதனையாகும். நிறை குடம் தளம்பாது என்பதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இற்றைவரை 106 நூல்களை வாசகர்களா கிய எமக்கு வழங்கியுள்ளார். எனது வாழ்க்கை நாடகம் என்ற அனுபவக் கதைகள் வாசிப்பதற்குச் சுவையாகவும், சிந்திப்பதற்கும், வியப்பதற்குமுரிய நூலாகும். இது 304 பக்கங்களை கொண்டது.

சிறியவர், பெரியவர் என்ற பாகுபாடின்றி, அனைவரது நூல்களையும் விருப்போடு வாசித்து மேலும் எழுதுவதற்குத் தட்டிக் கொடுப்பார். பலரது நூல்களை அச்சி டுவதற்கும் ஊக்கமூட்டுவார்.

கொழும்பைச் சேர்ந்த லூர்து மேரியைத் திருமணம் செய்தார். வாழ்க்கைப் பயணம் குதூகலமாகச் சென்று கொண்டிருக்கையில், யார் கண்பட்டதோ..? நோயின் பிடிக்குள் அகப்பட்டு மரணமானார். சொல்லொணாத் துயரம டைந்தார். இரு மகன்களையும் படிக்க வைத்து வெற்றியும் கண்டார்.

அமரர் அருள் பாஸ்கரன் சித்திரப் பாட ஆசிரியரும், சிற்பியுமாவார். அருள் முரளி வைத்திய நிபுணத் துவ ஆலோசகர். இவர்களது பிள்ளைகள் வைத்தியத் துறையிலும், பொறியியல் துறையிலுமுள்ளனர். கேணிப் பித்தன் ச. அருளானந்தம் பல நூல் வெளியீடுகளையும், ஓவியக் கண்காட்சிகளை யும் நடாத்திப் பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌர வித்துள்ளார். இதனால் பலரது பாராட்டுக்களையும், நல்லபிப் பிராயங்களையும் பெற்றுள்ளார்.

இவர் தேகாரோக்கியம் பெற்று இன்னும் பல நூல்களை உலகிற்கு உவந்தளிக்க வாழ்த்துகிறோம், பிரார்த்திக்கிறோம்.



**ஜெனீரா தௌபீக்**
**ஹைரூல் அமான்**







# ஆளுமை கௌரவிப்பு விழா, ஆளுமையின் பிறந்தநாள் விழா, மூவருக்கு கலாவிபூஷண் விருது வழங்கும் விழா


















மக்கள் கலை இலக்கிய ஒன்றியமும் கண்டி இலக்கிய நண்பா்கள் கழகமும் இணைந்து நடத்திய தமிழகத்தின் இனிய நந்தவனம் சஞ்சிகையின் இலங்கை சிறப்பிதழின் வெளியீட்டு விழா கண்டி ஜின்னா ஞாபகர்த்த மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. அ. இராமன், கண்டி இலக்கிய நண்பா்கள் கழகத்தின் தலைவர் எம். தீபன் ஆகியோர் கௌரவிக்கப்படுவதையும் சமூகசேவகி திருமதி சந்திரவதனா ரட்ணராஜ குருக்கள் சஞ்சிகை ஆசிரியருக்கு புத்தக பொதியொன்றை வழங்குவதையும் காணலாம்.



# கதை கேட்காமல் சந்திரமுகியாக நடித்த கங்கனா ரனாவத்

சந்திரமுகி 2' திரைப்படம் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியாகவுள்ளது. இப்படத்தில் சந்திரமுகியாக கங்கனா நடிக்கிறார். இயக்குனர் பி.வாசு இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகி வரும் திரைப்படம் 'சந்திரமுகி 2'. இப்படத்தில் ராகவா லாரன்ஸ் கதா நாயகனாக நடித்துள்ளார். கங்கனா ரனாவத் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும் வடிவேலு, ராதிகா உள்ளிட்ட பல திரைப்பிரபலங்கள் இதில் நடித்திருக்கின்றனர். லைகா நிறுவனம் தயாரித்துள்ள இப்படத்திற்கு எம்.எம் கீரவாணி இசையமைத்துள்ளார். 'சந்திரமுகி 2' திரைப்படம் தமிழ், தெலுங்கு, மலையாளம், இந்தி, கன்னடம் ஆகிய மொழிகளில் விநாயகர் சதுர்த்தி அன்று வெளியாகவுள்ளது.

இந்நிலையில், இப்படத்தின் கதை கேட்காமலேயே சந்திரமுகியாக நடிக்க கங்கனா ஒப்புக் கொண்டதாக இயக்குனர் பி. வாசு கூறியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. அதாவது, கங்கனாவிடம் இந்திப் படம் ஒன்றின் கதையை சொல்ல சென்றதாகவும் அப்போது 'சந்திரமுகி 2' படத்தின் படப்பிடிப்பு நடைபெற்று வருவதையும் அதில் சந்திரமுகி கதாபாத்திரத்தில் நடிக்க யாரையும் முடிவு செய்யவில்லை என்று தெரிந்ததும் நானே நடிக்கிறேன் என்று கங்கனா ஒப்புக் கொண்டதாகவும் அவர் தெரிவித்ததாக கூறப்படுகிறது.



# ஏர்போர்ட்டில் வசமாக சிக்கிய தமன்னா ஜோடி

தமன்னா மறைத்து வைத்த விஷயம் வெளிப்படையாக தெரிந்து விட்டது. தமன்னா இப்போது தனது செகண்ட் இன்னிங்ஸை தொடங்கி இருக்கிறார். தமிழில் ஒரு காலகட்டத்தில் முன்னணி நடிகையாக இருந்த தமன்னா ஒரு கட்டத்தில் மார்க்கெட்டை இழந்து விட்டார். இதனால் பாலிவுட் பக்கம் பறந்து அங்கு ஒரு சில படங்களில் நடித்துக் கொண்டிருந்தார். சமீபத்தில் ஜெயிலர் படத்தில் சிறு கதாபாத்திரத்தில் தமன்னா என்ட்ரி கொடுத்திருந்தார். அந்த படத்தில் இடம்பெற்ற காவாலையா பாடலுக்கு இவர் போட்ட குத்தாட்டம் பட்டி தொட்டி எங்கும் ட்ரெண்ட் ஆனது. இந்நிலையில் 33 வயதாகும் தமன்னா தற்போது வரை திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கிறார். அவர் பல காதல் சர்ச்சைகளில் சிக்கிய நிலையில் இப்போது ஏர்போட்டில் வசமாக சிக்கி உள்ளார்.

அதாவது தமன்னா லஸ்ட் ஸ்டோரிஸ் 2 என்ற தொடர் ஒன்றில் நடித்திருந்தார். இதில் அவர் காட்டிய தாராள கவர்ச்சி சர்ச்சையை ஏற்படுத்தி இருந்தது. மேலும் இத்தொடரில் தமன்னாவுடன் நெருக்கமான காட்சிகளில் நடித்திருந்தார் விஜய் வர்மா. இவர்கள் இருவரும் டேட்டிங் செய்து வருவதாக இணையத்தில் காட்டு தீயாய் செய்தி பரவியது.

இதை உறுதிப்படுத்தும் விதமாக தமன்னாவே ஒரு பேட்டியில் விஜய் உடன் பழகும்போது மிகவும் நம்பிக்கை உடையவராக இருக்கிறார் என்று கூறினார். மேலும் இது தங்களுக்குள் முதல் படம் என்றாலும் இதிலேயே காதல் மலர்ந்துள்ளதாக கூறியது பரபரப்பை கிளப்பியது. விஜய் வர்மாவும் தமன்னா மீது உள்ள காதலை பலமுறை வெளிப்படுத்தி இருக்கிறார். இப்போது படப்பிடிப்புக்கு இடையே உள்ள விடுமுறை காரணமாக தமன்னா மற்றும் விஜய் வர்மா இருவரும் தனித்தனியாக வெளிநாடு புறப்பட்டு உள்ள வீடியோ ஒன்று வெளியாகி இருக்கிறது. ஆனால் ஆகஸ்ட் 26 ஆம் திகதிதான் புறப்பட்டு இருக்கிறார்கள். இவ்வாறு இவர்கள் இருவரும் தனித்தனியாக சென்றாலும் ஒன்றாகத்தான் விடுமுறையை வெளிநாட்டில் செலவிடப் போகிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிவதாக ரசிகர்கள் கருத்து கூறி வருகிறார்கள். மேலும் இந்த வீடியோவால் ஜாலி மூடில் தமன்னா கையும் களவுமாக சிக்கி இருக்கிறார்.





# சீதையாக சாய் பல்லவி

அலியாபட்டுக்கு பதிலாக சீதை வேடத்தில் நடிக்க சாய்பல்லவியை படக்குழுவினர் பரிசீலிப்பதாக தகவல் வெளியாகி உள்ளது ராமாயண கதையை ஏற்கனவே சிலர் படமாக எடுத்து வெளியிட்டு உள்ளனர். தமிழ், தெலுங்கில் ராமராஜ்ஜியம் என்ற பெயரில் வெளியான ராமாயண படத்தில் பாலகிருஷ்ணா ராமராகவும் நயன்தாரா சீதையாகவும் நடித்து இருந்தனர். ஆதிபுருஷ் என்ற பெயரில் தயாரான ராமாயண படத்தில் ராமராக பிரபாஸ், சீதையாக கீர்த்தி சனோன், ராவணனாக சயீப் அலிகான் ஆகியோர் நடித்து இருந்தனர். தற்போது தமிழ், தெலுங்கு, இந்தி மொழிகளில் 3டி தொழில்நுட்பத்தில் இன்னொரு ராமாயண படமும் தயாராக உள்ளது. பாகுபலி கிராபிக்ஸ் காட்சிகளை மிஞ்சும் வகையில் அதிக பொருட் செலவில் 3 பாகங்களாக இந்த படத்தை எடுக்கின்றனர். நிதிஷ் திவாரி டைரக்டு செய்கிறார். அல்லு அரவிந்த், மது மந்தெனா ஆகியோர் தயாரிக்கிறார்கள். இந்த படத்தில் ராமராக ரன்பீர் கபூரும் சீதையாக அலியாபட்டும் நடிக்க இருப்பதாக தெரிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் கால்ஷீட் பிரச்சினைகளால் படத்தில் இருந்து அலியாபட் விலகி விட்டார். இதையடுத்து அலியா பட்டுக்கு பதிலாக சீதை வேடத்தில் நடிக்க சாய்பல்லவியை படக்குழுவினர் பரிசீலிப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. சாய்பல்லவியும் ராமாயண படத்தில் நடிக்க ஆர்வமாக இருப்பதாக கூறப்படுகிறது.



# சமந்தாவிடம் அத்துமீறும் விஜய் தேவர்கொண்டா

சமந்தா கோலிவுட் மற்றும் டோலிவுட் ஆகிய மொழிகளில் முன்னணி நடிகையாக வலம் வந்து கொண்டிருந்த நிலையில் உடல்நிலை பிரச்சனை காரணமாக மிகப்பெரிய பிரேக் எடுத்தார். ஆனாலும் புஷ்பா படத்தில் இவர் ஆடிய ஐட்டம் டான்ஸ் பட்டி தொட்டி எங்கும் பட்டையை கிளப்பி வேற லெவலுக்கு கொண்டு சென்றது. இந்த சூழலில் விஜய் தேவர் கொண்டா உடன் இணைந்து குஷி என்ற படத்தில் சமந்தா நடித்திருக்கிறார். இப்போது இணையத்தை பார்த்தாலே குஷி படத்தின் ப்ரோமோஷன் நிகழ்ச்சி தான் ஒளிபரப்பாகி வருகிறது. ஆனால் இந்த படத்தை முடித்தவுடன் வெளிநாட்டில் ஓய்வு எடுக்கலாம் என்று சமந்தா போய் விட்டாராம். ஆனால் சமந்தா பிரமோஷன் செய்தால்தான் படம் வேற லெவலில் ஹிட் ஆகும் என விஜய் தேவர்கொண்டா விடாப்பிடியாக சமந்தாவை வரவழைத்துள்ளார். குஷி படம் காதல் மற்றும் குடும்பம் ஆகியவை சம்பந்தப்பட்ட படமாக எடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ப்ரமோஷன் நிகழ்ச்சியில் விஜய் தேவர் கொண்டா மற்றும் சமந்தா நெருக்கம் காட்டி வருகிறார்கள். இதை பார்த்த ரசிகர்கள் படத்தைக் காட்டிலும் நேரில் ஓவர் கெமிஸ்ட்ரி ஒர்க் அவுட் ஆகுவதாக விமர்சனம் செய்து வருகிறார்கள். ஏற்கனவே சமந்தா நாக சைதன்யாவை திருமணம் செய்து கொண்ட நிலையில் சில வருடங்களில் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து விட்டனர். இப்போது சமந்தா தனிமையில் தான் இருந்து வருகிறார். மேலும் விஜய் தேவர்கொண்டா நடிகை ராஷ்மிகா மந்தனாவுடன் டேட்டிங் செய்வதாக கிசுகிசுக்கள் வெளியானது. இந்த சூழலில் இப்போது சமந்தாவுடன் விஜய் தேவர் கொண்டா ஓவர் நெருக்கம் காட்டுவது சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது. படத்தின் பிரமோஷனுக்காக என்றாலும் இப்படியா செய்வது என ரசிகர்கள் முகம் சுளிக்கின்றனர். ஆனால் சமந்தாவை பற்றி நிறைய விஷயங்களை விஜய் தேவர்கொண்டா பகிர்ந்து இருக்கிறார். சமந்தாவுக்கு இருக்கும் பிரச்சினை காரணமாக படப்பிடிப்பில் முகம் வீங்கிவிடும் என்றும், மிகுந்த அவதிப்பட்டார் எனவும் கூறியிருக்கிறார். கண்டிப்பாக குஷி படம் இவருக்கு மிகப்பெரிய வெற்றியை கொடுக்கும் என்ற நம்பிக்கையும் தெரிவித்து இருக்கிறார்.

# மனைவிக்கு வித்தியாசமாக திருமண வாழ்த்து சொன்ன சிவகார்த்திகேயன்



தமிழ் சினிமா உலகில் முன்னணி ஹீரோவாக இருக்கும் சிவகார்த்திகேயன், ஆரம்ப காலகட்டத்தில் சின்ன திரையில் ஸ்டாண்ட் அப் காமெடியனாகவும், தொகுப்பாளராகவும் தன்னுடைய பயணத்தை தொடங்கி, இயக்குனர் பாண்டிராஜ் இயக்கத்தில் வெளியான மெரினா படத்தின் மூலம் ஹீரோவாக தமிழ் சினிமா உலகில் அறிமுகமானவர்.

இவருக்கு வருத்தப்படாத வாலிபர் சங்கம், மான் கராத்தே, காக்கி சட்டை போன்ற படங்கள் ஆரம்ப காலகட்டத்தில் நல்ல வரவேற்பை கொடுக்க அடுத்தடுத்து வெற்றி படங்களை கொடுத்து முன்னணி ஹீரோவாக வெற்றி கண்டார். சமீபத்தில் இவருடைய நடிப்பில் வெளியான மாவீரன் படம் சூப்பர் ஹிட் அடித்து இருக்கிறது.

சிவகார்த்திகேயன் சின்னத்திரையில் இருக்கும் பொழுதே தன்னுடைய உறவுக்கார பெண்ணான ஆர்த்தியை திருமணம் செய்து கொண்டார். இவர்கள் இருவருக்கும் ஆராதனா சிவகார்த்திகேயன், குகன் தாஸ் சிவகார்த்திகேயன் என்ற இரு பிள்ளைகள் இருக்கிறார்கள். இதில் அவருடைய மகள் ஆராதனா சிவகார்த்திகேயன் கனா படத்தில் வாயாடி பெத்த புள்ள என்னும் பாடலை பாடி ரசிகர்களிடையே வரவேற்பை பெற்றிருக்கிறார்.

தனது 13 வது வருட திருமண நாளை கொண்டாடிய சிவகார்த்திகேயன், தன்னுடைய மனைவி ஆர்த்தியுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் ஒன்றை பகிர்ந்து, என் சந்தோஷ கண்ணீரே என்று பதிவிட்டு இருக்கிறார். இந்த க்யூட்டான புகைப்படம் தற்போது சமூக வலைத்தளங்களில் பயங்கர வைரலாகி வருகிறது.

# குழந்தைகளுடன் ஓணம் கொண்டாடிய நயன்தாரா



நயன்தாரா விக்னேஷ் சிவன் தங்களது குழந்தைகளுடன் ஓணம் பண்டிகை கொண்டாடும் புகைப்படங்களை சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளனர் கேரளாவில் கொண்டாடப்படும் முக்கிய பண்டிகைகளில் ஒன்று ஓணம் பண்டிகை. ஆவணி மாதம் திருவோணம் நட்சத்திரம் நாளில் இந்த பண்டிகை கொண்டாடப்பட்டு வருகிறது. உலகின் பல பகுதிகளில இருக்கும் கேரள மக்கள், ஓணம் பண்டிகைக்கு தங்கள் சொந்த மாநிலத்துக்கு வந்து உறவினர்களுடன் மகிழ்ச்சியாக ஓணம் பண்டிகையை கொண்டாடுவது வழக்கம். பொதுவாக ஓணம் பண்டிகை என்றால் தங்க நிற பார்டர் கொண்ட வெண்பட்டு நிறத்திலான புடவை அணிந்து அத்தப்பூ கோலமிட்டு ஓணத்தை கொண்டாடுவார்கள். இந்த ஆண்டு ஓணம் பண்டிகை நாளை (செவ்வாய்க்கிழமை) கொண்டாடப்பட இருக்கிறது.

திரையுலகிலும் ஓணம் பண்டிகையை வரவேற்க தயாராகிவிட்டனர். குறிப்பாக நடிகைகள் இப்போதே கேரளாவின் பாரம்பரிய புடவை அணிந்து அசத்தல் போஸ் கொடுத்து, அந்த புகைப்படங்களை சமூக வலைதளங்களில் வெளியிட்டு ஓணத்தை வரவேற்க தயாராகிவிட்டனர்.

சிலர் இதற்காகவே தனி போட்டோஷூட்டும் நடத்தியிருக்கிறார்கள். நட்சத்திர காதல் ஜோடியான நயன்தாரா விக்னேஷ் சிவன் தம்பதிக்கு கடந்த ஆண்டு இரட்டை ஆண் குழந்தைகள் பிறந்தனர். இதற்கிடையில் நயன்தாரா விக்னேஷ் சிவன் தங்களது குழந்தைகளுடன் ஓணம் பண்டிகை கொண்டாடுவது போன்ற புகைப்படங்களை சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளனர்.

இந்த படத்திலும் அவர்களது குழந்தைகளின் முகத்தை அவர்கள் காட்டவில்லை.





# 68ஆவது படத்திற்கு தயாரான விஜய்...!

நடிகர் விஜய், வெங்கட் பிரபு, தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி ஆகிய மூவரும் பட வேலையாக அமெரிக்கா சென்றுள்ளனர். லோகேஷ் கனகராஜ் இயக்கிய லியோ படத்தில் விஜய் நடித்து முடித்துள்ளார். இந்த படம் அக்டோபர் மாதம் திரைக்கு வருகிறது. அடுத்து வெங்கட்பிரபு இயக்கத்தில் தனது 68வது படத்தில் நடிக்க தயாராகி உள்ளார். இதில் விஜய் இரட்டை வேடங்களில் நடிப்பதாகவும் ஒருவருக்கு ஜோதிகாவும் இன்னொருவருக்கு பிரியங்கா மோகனும் ஜோடியாக நடிக்க இருப்பதாகவும் தகவல் பரவி உள்ளது. ஏற்கனவே அழகிய தமிழ் மகன், பிகில் படங்களில் விஜய் இரு வேடங்களில் நடித்து இருக்கிறார். இதில் பிரபுதேவா, மாதவன், ஜெய் ஆகியோரும் நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் விஜய், வெங்கட் பிரபு, தயாரிப்பாளர் அர்ச்சனா கல்பாத்தி ஆகிய மூவரும் பட வேலையாக அமெரிக்கா சென்றுள்ளனர். அங்கு விஜய் உடல் முழுவதும் ஸ்கேன் செய்ய உள்ளனர். படத்தில் விஜய் தோற்றத்தை நவீன தொழில் நுட்பம் மூலம் வடிவமைப்பதற்காகவே ஸ்கேன் செய்ய இருக்கிறார்கள். ஏற்கனவே கமல்ஹாசனின் இந்தியன் 2, ஷாருக்கானின் பேன் ஆகிய படங்களில் இந்த ஸ்கேன் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி இருப்பதாக கூறப்படுகிறது.



# வீட்டு வன்முறையும் பெண்கள் உரிமையும்





கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...

ஒரு பெண்ணின் குடும்பம் அவளின் திறமைக்கு பக்கபலமாக இருந்துவிட்டால் அவளால் எத்தனை சவால்களையும் கடக்க முடியும். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னும் பெண் இருப்பாள் என்று காலம் காலமாக கூறுகிறார்கள் .ஒவ்வொரு பெண்ணின் வெற்றிக்குப் பின்னும் ஒரு ஆண் மகன் இருந்துவிட்டால் அவளின் முடிவு வெற்றியாகவே இருந்துவிடும் என்பதில் ஐயமில்லை .

அடி, உதை, அதிகாரம், வன்முறை இவற்றையெல்லாம் செய்து பெண்களை வழிநடத்துவதை விட அன்பினால் அவளைக் கட்டியாளலாம் என்கிற சிந்தனை பலருக்கு தெரியாமல் இருக்கிறது.

பெண்களில் சாதாரண உரிமைகள் பற்றி பார்த்தோமானால், பெண்களின் உரிமைகள் என்பது பாலியல் வன்முறைகளிலிருந்து விடுபடுதல், வாக்குரிமை, பொது நிறுவனங்களில் வேலை செய்தல், குடும்ப உறவில் பெண்களின் உரிமை, சமமான ஊதியம் அல்லது சரியான ஊதியம் பெறுவது, குழந்தை பிறப்பு உரிமைகள், சொத்துரிமை, கல்வி உரிமை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

உரிமைகள் மீதான போராட்டங்களை விட மனித உணர்வுகள் மீதான அக்கறை நிறைய மாற்றங்களை கொண்டுவந்து கொடுக்கும் .

வீட்டு வன்முறையைத் தவிர்க்க முதலில் அதிகாரம் செய்வதை நிறுத்தி என் மகள், என் மனைவி, என் தாய் என் தோழி என்கிற என்னுடைய என்கிற உணர்வை மனதால் விதையுங்கள். உங்கள் பெண் உறவுகளை நேசியுங்கள். அவர்களின் பாதுகாவல் அரண் நீங்களென உணருங்கள், உணர்த்துங்கள். மகிழ்ச்சியில் பங்கெடுத்து துக்கத்தில் தோள் கொடுத்து உற்சாகப் படுத்துங்கள் .

திட்டமிடல் ஆலோசனை என்பவற்றை இணைந்து செய்யுங்கள்.

வீட்டு வன்முறையெனும்போது ஆண்கள் மட்டும் வன்முறைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. சீதனப் பிரச்சினை, மாமியார் மருமகள் உறவில் விரிசல், தாய் பிள்ளைக்கான கருது வேறுபாடு, சகோதரிகளின் புரிந்துணர்வு இல்லாமை, நாத்தனார் பொறாமை என எல்லாமே வீட்டு வன்முறைக்கு வித்திடும் செயல்களில் சிலவாகும்.

எனவே நம் குடும்பங்கள் பல சேரும் போதே இந்த சமுதாயம் உருவாகிறது. இந்த சமுதாயம் சிறப்பாக திகழ நம் ஒவ்வொரு இல்லத்திலும் அதற்கான முயற்சியை மேற்கொள்ள சிறந்ததொரு சமுதாய சூழலை நாம் உருவாக்கலாம். நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

# செலவில்லாத அழகுக் குறிப்புகள்



செலவில்லாத அழகுக் குறிப்புகள்

வீட்டில் உள்ள பொருட்களைப் பாவித்து இந்த அழகுக் குறிப்புகளைச் (Beauty tips) செய்யலாம். இவை உங்கள் முக அழகை மேலும் மெருகேற்றி, மிளிரச் செய்யும். முகப்பரு,வறண்ட தோல்,கரும்புள்ளி போன்ற அனைத்திற்கும் நல்ல தீர்வு கிடைக்கும்.

வீட்டில் அன்றாடம் பாவிக்கும் பொருட்களைக் கொண்டே செய்வதால் . எந்தவிதமான எதிர்விளைவுகளும் ஏற்படாது.தைரியமாக செய்ய தொடங்கலாம்.குறிப்பாக இதற்காக தனியான செலவு இல்லை. (Beauty tips) அழகு குறிப்புகள்

ஆரஞ்சு பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து, பத்து நிமிடம் கழித்து சோப்பு போட்டு கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும் இளமையுடனும் இருக்கும்.

முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்க அடிக்கடி எலுமிச்சை சாற்றை தடவ வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும்.

பருமனாக இருப்பவர்கள் எடையை குறைக்க தினமும் காலையில் ஒரு டம்ளர் வெதுவெதுப்பான வெந்நீரில் ஒரு மூடி எலுமிச்சை பழச்சாற்றை பிழிந்து அதனுடன் அரை ஸ்பூன் தேன் கலந்து சாப்பிட்டால் எடை குறையும்.

நகங்களை வெட்டும் முன் எண்ணெயை தடவிவிட்டு, சிறிது நேரம் கழித்து நகத்தை வெட்டினால், விரும்பும்வடிவத்திலும், அழகாகவும் வெட்ட இயலும்.

கூந்தலில் எண்ணெய் பசை அதிகமாக இருந்தால், கோழி முட்டையில் கொஞ்சம் சர்க்கரையை கலந்து தலையில் லேசாக தடவிக்கொண்டு பிறகு தலைக்கு ஊற்ற வேண்டும்.

இதனால் எண்ணெய் பசை நீங்கி முடி அழகு பெறும்.

தேநீரில் வடிகட்டிய பின், மிஞ்சும் தேயிலைத் தூளில் எலுமிச்சை சாறை பிழிந்து, தலையில் தேய்த்துக்குளித்தால், தலைமுடி பளபளப்பாகும்.

வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காயவைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குழைத்து,முகத்தில் பூசி, 20 நிமிடம் ஊற வைத்து குளித்தால், முகப்பரு வராமல், வெயிலில் கறுத்துப் போகாமல் இருக்கும்.

இளம் சூடான ஒரு லிட்டர் நீரில், இரண்டு ஸ்பூன் உப்பைப் போட்டு, கண்களை கழுவினால் கண்கள் பிரகாசமாக இருக்கும்.

கை, கால் முட்டிகளில் கறுப்பு நிறம் அதிகமாக இருந்தால், தொடர்ந்து அந்த இடத்தில் எலுமிச்சம்பழ சாற்றை தேய்த்து சோப்பு போட்டு குளிக்க வேண்டும்.

நாளடைவில் கறுப்பு நிறம் போய் விடும்.

தோல் வரட்சி,தோல் சுருக்கம் இருந்தால் ஆலிவ் ஆயிலைப் பூசி, சிறிது நேரம் ஊற வைத்து, சோப்பு போட்டு குளிக்க வேண்டும்.

# பெண் பிள்ளைகளுக்கான சிங்கார ஆடைகள்









பெண் குழந்தைகளுக்கான ஆடைகளில் அன்றாடம் புதிய வரவுகள் இருந்து கொண்டேதான் இருக்கின்றன. எத்னிக் உடைகள், பார்ட்டி உடைகள் போன்றவற்றிக்கு என்றுமே தனி மவுசுதான். பெண் குழந்தைகளுக்கான ஆடைகளில் அன்றாடம் புதிய வரவுகள் இருந்து கொண்டேதான் இருக்கின்றன. எத்னிக் உடைகள், பார்ட்டி உடைகள் போன்றவற்றிக்கு என்றுமே தனி மவுசுதான்.

பார்ட்டி உடைகளில் கவுன்களும், லாங் ஃப்ராக்குகளும் தங்களுக்கென்று ஒரு தனி இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளன.

இந்த கவுன்களில் இருக்கும் ஒரு கைக்கும், கவுனின் கீழ்புறம் சுற்றிலும் ஃபிரில்கள் இணைக்ககப்பட்டு, இடுப்புப் பகுதியில் லேசானது இணைக்கப்பட்டு, ஜிப்பானது பக்கவாட்டில் பொருத்தப்பட்டு, பூக்கள் சீக்வின் எம்பிராய்டரி வேலைப்பாடு உடல் முழுவதும் செய்யப்பட்டிருக்கும் இந்தக் கவுன்கள் மென்மையான நிறங்களில் பார்ப்பதற்கு அம்சமாகவும், அழகாகவும் உள்ளன.

ஆர்கன்ஸா, காட்டன் மற்றும் ஷேட்டின் துணிகளில் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த கவுன்கள் ஒரு வயது குழந்தை முதல் பதினோரு வயது குழந்தைகளுக்கேற்ற பல்வேறு அளவுகளில் கிடைக்கின்றன. இவை பிறந்த நாள் விழாக்கள் மற்றும் பார்ட்டிகளுக்கு அணிய ஏற்ற ஆடைகளாக உள்ளன.

விஸ்கோஸ் எம்பிராய்டரி நெட் கவுன்கள் இந்த கவுன்கள் பெரும்பாலும் நெட்டட் முழுக்கைகள் அல்லது கைகளே இல்லாமலும் வடிவமைக்கப்படுகின்றன. மார்பிலிருந்து கழுத்துப்பகுதியானது நெட்டட் துணியில் கழுத்தைச்சுற்றிலும் அழகான எம்பிராய்டரி வேலைப்பாடுகளுடன் தைக்கப்பட்டுள்ளன. உடலின் மேற்பகுதியில் கவுனானது உடலைப் பிட்டித்தவாறு சிக்கென்றும் இடுப்பிலிந்து குதிங்கால் வரை ஃப்ளேர்களுடனும், ஷேட்டின் துணியின் மேல் நெட்டில் எம்பிராய்டரி செய்யப்பட்ட மற்றொரு லேயரானது இணைக்கப்பட்டு மிகவும் பிரமாதமாக காட்சியளிக்கின்றது.

# கோவிலூர் செல்வராஜனின் மூன்று நூல்களின் அறிமுகம்











கலையுலகில் பொன்விழாக் கண்ட கோவிலூர் செல்வராஜனின் மூன்று நூல்களின்அறிமுகம் தெற்கு லண்டனில் நியூமோல்டனில் உள்ள ஷிராஸ் மிராஸ் மண்டபத்தில் 27.08.2023 அன்று மதியம் 12 மணியளவில் நிகழ்ந்தது. பண்பட்ட எழுத்து வித்தகர் வன்னியூர் இரா.உதயணனின் தலைமையில், பிரபல அரசியல் விமர்சகர் ஐயா வீ.சிவலிங்கத்தின் " நல்லதே நடக்கும் " எனும் சிறுகதைத் தொகுப்பின் ஆய்வுடன் விழா களை கட்டியது. இப்பொன்விழாக் கண்ட பல்துறைக் கலைஞர் அண்ணன் கோவிலூர் செல்வராஜனின் வேண்டுகோளுக்கிணங்க அவரது " கிழக்கிலங்கையின் மறைந்த இலக்கிய ஆளுமைகள் " எனும் கட்டுரைத் தொகுப்பினை அறிமுகம் செய்யும் சந்தர்ப்பம் அடியேனுக்குக் கிட்டியது. குடத்துள் விளக்காக எரிந்து, குடத்துள் விளக்காக மறைந்த 38 கிழக்கிலங்கையின் மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 38 இலக்கிய ஆளுமைகளின் பெருமைகளை வெளிக்கொணர்வதற்கு ஒரு தனித்துவமான ஆளுமை தேவை. அவ்வளுமையை அளப்பரிய அளவில் கொண்டவர் எம் அண்ணன் கோவிலூர் செல்வராஜன் என்றால் அது மிகையில்லை. இன்றைய பதிவுகள் எதிர்கால சந்ததியினருக்கு காலத்தின் கண்ணாடியாகும் என்பார்கள். இலக்கிய அறிவுஜீவிகள் அத்தகைய வகையில் கோவிலூராரின் இப்படைப்பு இப்போதே பல்கலைக்கழக மாணவர்களின் தேடுதலுக்கீடான கையேடாகிறது என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமே. கல்முனை நெற் அமைப்பினரின் வெளியீடான " பரிணாமம் " சஞ்சிகையில் வெளியான தொடர் கட்டுரைகள் மேலும் பல ஆளுமைகளை வெளிக் கொணரும் வகையில் தொடரும் என அண்ணன் கோவிலூர் செல்வராஜனின் நம்பிக்கை வெற்றியடைய அன்பு வாழ்த்துகள்.

**சக்தி சக்திதாசன்**
**லண்டன்**

# அறுபத்தி மூன்றாவது பிரமாண்ட இசைமேடை 'தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்'

மீண்டுமொரு இதமான பழைய இடைக்கால முத்தான பாடல்களின் கோர்வையில் Colombo Commodities pvt ltd பிரதான அனுசரணையில் கவிக்கமல் , பாசில், ரஜினி இணைந்து வழங்கும் "அக்ஷரா" "வீனஸ்" இசைக்குழுவினர்களின்" இனிய இசையில் இலங்கையின் முன்னணி பாடக பாடகிகளான கவிக்கமல், பாசில், மொரின் ஜெனற் ,கோபி, கீதா, லோகநாதன், கலந்து சிறப்பிக்கும் "தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள் " இன்னிசை மாலை, எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிறு மாலை 5.00 மணிக்கு கொழும்பு 07. பொது நூலகத்தில் அமைந்துள்ள பொது நூலக மண்டபத்தில் மிக கோலாகலமாக நடைபெறுகிறது.

இலக்கியங்களின் அடைக்கலம் இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை அதிதியாக சிறப்பிக்கும இந்நிகழ்விற்கு முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினரும் சமூக சேவையாளருமான எம் எஸ் எம் பைரூஸ் தலைமை தாங்குகிறார்.

பிரதம அதிதியாக சமூக சேவையாளரும் , தொழிலதிபருமான டாக்டர் எம் சீ பஹாரதீன் ஹாஜியார் கலந்து சிறப்பிக்கிறார்.

விஷேட அதிதியாக தினகரன் பத்திரிகை பிரதம ஆசிரியர் தே. செந்தில் வேலவர் கலந்து கொள்ளும் இந்நிகழ்விற்கு

ஐ டி எம் நேஷன்ஸ் கெம்பஸ் சர்வதேச செயற்பாடுகளுக்கான சமூக நலத்துறையின் தலைவருமான அதி வணக்கத்திற்குரிய பிதா அருட்கலாநிதி எஸ் சந்துரு பெர்ணான்டோ கௌரவ அழைப்பில் வருகைத் தரவிருக்கிறார்.

அதிதிகளாக கொழும்பு பிரதிமேயர் எம் ரி எம் இக்பால் . selco continental pvt ltd நிர்வாக இயக்குனர் நிறுவனத்தின் பணிப்பாளர் S.H.Colour House உரிமையாளரும், சமூகசேவையாளருமான ஜனாப் சாஜஹான், திரைப்பட நடிகரும், நடன கலைஞரும், அரசியல் பிரமுகருமான தேசமான்ய, தேசபந்து, சாமஸ்ரீ கலாஜோதி DISCO RAJA ஜனாப் எம். எப் .நய்சர் conso ஜனாப் பீ. எம் ரமீஸ் மொஹமட், சமூக சேவையாளர் ஜனாப் எம் என் எம் ஹிமாஸ், சமூக சேவையாளர் மொஹமட் நிஜாம், கொழும்பு நகரசபை உறுப்பினர் , கலைஞர் எம். என் நசார், தொழிலதிபர் எம் என் எம் ரபீக் சமூக சேவையாளர் மொஹமட் ஹமீட், சமூக சேவையாளர் கொழும்பு நகரசபை உறுப்பினர் எம். பி சுதர்சன் , மௌசூம் ஜிபரி, டச் என் டச் சேதுராஜா , சமுகசேவையாளர் சமன்குமார், வசந்தம் எப். எம். முகாமையாளர் லெட்சுமணன் கிருபாகரன். கலைஞர் நந்தகுமார் கலந்து கொள்கிறார்கள்.












சிறப்பு அதிதிகளாக ஜனாப் மொஹமட் சிறாஜ், கலைஞர் ஏ ரவீந்திரன், தொழிலதிபர் மொஹமட் அர்சாத், திருமதி கௌசலாதேவி கோவிந்தபிள்ளை, கவிஞர் திலகம் பிரேமராஜ், தொழிலதிபர் இராமசாமி சதானந்தன், குருசாமி பிச்சைக்கிருஷ்ணா, கலைஞர் சண்முக, ஓவியநாதன், ஜனாப் எஸ். எம். வாஜிட் அலி, கலைஞர், கவிஞர் தனபாலன், கவிஞர் கலாநிதி ஜனாப் அப்துல் அஸீஸ், மற்றும் தெகிவளை நகரசபை உறுப்பினர் முஸ்தபா ஷரீனா கலந்து கொள்கிறார்கள்.

கலை அதிதிகளாக கலைஞர் ராதாமேத்தா, கலாநிதி சண்முக சர்மா ஜெயபிரகாஷ், கலைஞர் இளங்கோ, இசையமைப்பாளர் பசால் ஜின்னாஹ் , கலாபூசணம் மொஹமட் அலி, இசையமைப்பாளர் எம் ரி தவராசா, பாடகர் இசையமைப்பாளர் முபாறக் இல்யாஸ், சிரேஷ்ட ஊடகவியலாளர் கே ஈஸ் வரலிங்கம் , கவிஞர் ஈழகணேஸ், கவிமணி நஜ்முல் ஹுசைன்,இளநெஞ்சன முர்சிதீன், கவிஞர் முஸம்மில் ,

யாழ் அசீம், தமிழ் தென்றல் அலிஅகபர், மற்றும் கிரிஸ்டி ரோஸ், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ எல் எம் உவைஸ், கெப்பிட்டல் எப் எம் அலைவரிசை பிரதானி ஷியா உல் ஹசன் ஆளுமைகள்,கவிஞர்கள் , அரசியல் பிரமுகர்கள், ஊடகவியலாளர்கள்,கலைஞர்கள்,தொழில் அதிபர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து சிறப்பிக்கும் இந்நிகழ்வை இலவசமாக கண்டுகளிக்க அன்புடன் அழைக்கிறார்கள் விழா ஏற்பாட்டாளர்கள். நிகழ்ச்சி தொகுப்பு சிரேஷ்ட கலைஞர் இராமன் கேதீஸ்வரன்.

இந்நிகழ்ச்சியில் கலைஞர்களை ஊக்குவிக்கும் "உழைப்பால் உயர்ந்தவர்கள்" வரிசையில் இம்முறை நான்கு அனுசரணையாளர்கள் சமூக சேவையாளர்கள், கௌரவிக்கப் படவிருக்கிறார்கள். அந்த வரிசையில் தேசமான்ய ,தேசசக்தி, லங்காபுத்ர முன்னாள் கொழும்பு மாநகர சபை உறுப்பினர் கலைஞர் ஜோசப் பெரண்னான்டோ, தேசசக்தி அகில இலங்கை சமாதான நீதவான் சமூக சேவையாளர் நடேசன் புவனேஸ்வரன், சமூக சேவையாளர் அகில இலங்கை சமாதான நீதவான் மக்கள் நலன் சம்மேளனத்தின் தவிசாளர் ஜனாப் அஸீஸ் லக்கானா, மற்றும் இலங்கை கிரிக்கட் சபை பயிற்சிவிப்பாளர் விஷ்வ கீரத்தி, ஜனாப் ஜே எம் எம் ரிஸ்வான் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர். இந் நிகழ்ச்சிக்கான பிரதான ஊடக அனுசரணை தினகரன் பத்திரிகை, கெப்பிட்டல் எப். எம், மொஹபத் tv, அக்ஷரா தமிழ் வழங்குகின்றன.

## நிறம் தீட்டுங்கள்



## படத்திற்கு பொருத்தமான தொனிகளை இணைப்போம்




## தொடர்புபடுத்துங்கள்




## வழிகாட்டுங்கள்



## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



# தென்கிழக்கின் இலக்கியப்பரப்பில் மிளிரும் இலக்கிய ஆழுமை மருதமுனை எஸ்.ஏ.அப்துல் ஹப்பார்

தென்கிழக்கின் இலக்கியப்பரப்பில் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டிருப்பவர் இலக்கிய ஆழுமை எஸ்.ஏ.அப்துல் ஹப்பார். புன்னகையுடன் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் இலக்கிய ஆழுமை இவர். இன, மத பேதமின்றி நட்பை நன்றாகப் பேணி வருபவர். வளர்ந்து வரும் இளம் இலக்கியப் படைப்பாளிகளுக்கு கரம் கொடுத்து வழிகாட்டுபவர்.

“வெண்ணிலா” என்ற பெயரில் கவிதை மஞ்சரி காலாண்டு சஞ்சிகை ஒன்றை வெளியிட்டு பல மூத்த, இளைய கவிஞர்களின் படைப்புகளுக்கு உயிரூட் டிவருகின்றார். கொம்பியூட்டர் கவிதைகள், (2000) நிலவு அவள் கவிதை (2019) ஆகிய இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளார். தினகரன், தினகரன் வாரமஞ்சரி, விடிவெள்ளி, தமிழன் உள்ளிட்ட பல சஞ்சிகைகளிலும் இவரது கவிதைகள், சிறுகதைகள் ஏனைய ஆக்கங்கள் பிரசுரமாகியுள்ளன.















### பிறப்பும், கல்வியும்

மர்ஹூம்களான சுலைமாலெவ்வை செயினுல் ஆப்தீன் (ஓய்வுநிலை அதிபர்) முகம்மது அபூபக்கர் முஸ்தபா வீவி தம்பதிக்கு 1959-01-09ஆம் திகதி மகனாக மருதமுனையில் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை மருதமுனை அல்ஹம்றா வித்தியாலயத்திலும், இடைநிலைக்கல்வியை கல்முனை கார்மேல் பாத்திமா கல்லூரியிலும், உயர் கல்வியை சம்மாந்துறை முஸ்லிம் மகாவித்தியாலயத்திலும் கற்றவர். டிப்ளோமாக் கல்வி, கணினி வரைகலைக் கல்வி (1995) கணினி வன்பொருள் பொறியியல் கல்வி, (2000) தொடர்பாடல் ஆங்கிலக் கல்வி.

### இலக்கியப் பிரவேசம்:

1977 ஜுன் ஜுலை 'ஸாஹிறா' இலக்கிய இதழில் 'அவன் என்ன செய்து விட்டான்' என்ற தலைப்பில் இவரது முதலாவது சிறுகதை பிரசுரமானது. இதுவே இவரது முதலாவது இலக்கியப் படைப்பாகும். அப்போது இவருக்கு வயது 18. தொடர்ந்து 1977 அக்டோபர் 'உள்ளம்' இலக்கிய இதழில் 'உயரத்திலிருப்பவன்' உருவகக் கதையும் பிரசுரமானது. மேலும் தேசிய நாளேடுகளிலும் சஞ்சிகைகளிலும் அவ்வப்போது கவிதைகளும் சிறுகதைகளும் பிரசுரமாகின. 1978 எப்ரல் மாதம் 'காவியன்' என்ற புனைப் பெயரில் 'வெண்ணிலா' கலை இலக்கியச் சஞ்சிகை என்னால் வெளிக்கொணரப்பட்டது. தொடர்ந்து 12 இதழ்கள் வெளிவந்தன.

2004–2006 காலப்பகுதியில் எழுதி தேசிய பத்திரிகைகளில் வெளிவந்த இவரது கவிதைகளில் 25 கவிதைகளைத் தெரிவுசெய்து 'நிலவு அவள்' கவிதைத் தொகுதியை 2019ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளியிடப்பட்டது. 43 வருடங்களின் பின் ஏப்ரல் 2021ஆம் ஆண்டு மீண்டும் 'வெண்ணிலா கவிதை மஞ்சரி' என்ற பெயரில் கவிதைக்கான காலாண்டிதழ் வெளியிடப்பட்டு தொடர்ச்சியாக 10 இதழ்கள் வெளிவந்துள்ளன.



### இவர் பெற்ற விருதுகள்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் கல்முனைப் பிரதேச செயலகத் ஊடாக 'கலைஞர் சுவதம் விருது 2021' 08-02-2022 வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். 08-02-2004 தினகரன் மானஸி நிறுவனம் இணைந்து நடாத்திய முத்திரைக் கவிதைப் போட்டியில் 'என் காதல் நீதான்' கவிதை முதற்பரிசு பெற்றது.

### இவரது ஏனைய வெளியீடுகள்:

மேலும் இவர் கணினிக் கல்வி மற்றும் கணினி மென்பொருள் தொடர்பான 08 புத்தகங்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிட்டுள்ளார்.

1. A Guide to PC users (Tamil)
2. A Guide to PC users (English)
3. Quick reference to MS Excel 2000 (Tamil)
4. Quick reference to MS Excel 2000 (English)
5. Quick reference to MS Word 2000 (Tamil)
6. Quick reference to MS Word 2000 (English)
7. Quick reference to MS Access 2000
8. இன்ரநெட்டும் ஈமெயிலும்.

### தொழில்:

1981ஆம் ஆண்டு இலங்கை வங்கியில் ஓர் இலிகிதராகக் கடமையேற்று 2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் இலங்கை வங்கி தலைமைக் காரியாலயத்தில் கணினிப் பிரிவிலும் கடமையாற்றியதுடன் சுமார் 34 வருடங்கள் சேவையாற்றி பல பதவியுயர்வுகளையும் பெற்று இறுதியாக முகாமையாளராக கடமையாற்றி 27-02-2015ஆம் ஆண்டு ஓய்வுபெற்றவர். 2005ஆம் ஆண்டு தொடக்கம் ஓய்வுபெறும்வரை இலங்கை வங்கி கிழக்கு மாகாண கணினி தொழிநுட்ப ஆதரவு அதிகாரியாகக் கடமையாற்றியது குறிப்பிடத்தக்கது.

### தற்போது:

அரச சேவையில் இருந்த ஓய்வு பெற்றதன் பின் வெண்ணிலா கவிதை மஞ்சரியைத் தொடர்ச்சியாக வெளியிடுவதுடன் தேசிய நாளேடுகளிலும் சஞ்சிகைகளிலும் கவிதைகளையும் சிறுகதைகளையும் எழுதிவருகின்றார். அண்மைக் காலத்தில் தேசியப் பத்திரிகைகளில் அதிகமான சிறுகதைகள் வெளிவந்துள்ளன. அத்துடன் தன்னை நாடிவரும் நண்பர்களுக்கும் மாணவர்களுக்கும் கணினி மென்பொருள், வன்பொருள் மற்றும் இன்ரநெட் சம்பந்தமான கல்வியினை இலவசமாக வழங்கிவருகின்றார். இவரது கலை. இலக்கியப்பணி சிறக்க செந்தூரம் வாழ்த்துகின்றது.

—பி.எம்.எம்.ஏ.காதர்—
(மருதமுனை தினகரன் நிருபர்)





தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com
Whatsap: 0714901181

# புதுநானூறு

'நவீன தமிழ் இலக்கியத்தின் மாமேதை பிரமிள்'நவீன கவிதையில் மேல் நோக்கி நிமிர்ந்த கவிதைத் திமிர். 'கைப்பிடிக்குள் கடலைச் சிறைப்பிடித்த கவிஞன் பிரமிள்' தன் எழுத்துச் சிறகுகளால் வானத்தை அளந்தவன்.'நட்ஷத்திரங்களைப் பார்த்துக்கொண்டிருப்பதே போதுமானதாக இருக்கிறது'என அமைதி காண்பவன். 'கவிதை,மனசின் விவரிக்கமுடியாத மனோசக்தி இயக்கம்'என நம்பிய பிரமிள் என்கிற தர்மு சிவராமு கவிதையில் உள்மன யாத்திரை செய்தவர்;கவிதை இயக்கமாக ஆர்ப்பரித்தெழுந்தவர்.

புதுநானூறு பிரமிள் கவிதைகளின் வாசிப்பை பாய்ச்சுகிறது.'பிரமிளின் சிறிய சொற்கள் உட்கொண்டிருக்கும் கனதி தோண்டத் தோண்டப் புலப்படும் கவிஞான வித்துக்கள்' எனலாம்.

பிரமிள் நவீன கவிதையின் 'காவியம்'
"சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின்
தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது"

இந்தக் கவிதை நிகழ்த்தும் அற்புதம் தான் பிரமிளிஸம்.




தமிழின் நவீன கவிதைப் பாய்ச்சலின் புதிய கோணம் பிரமிள்;வரைந்த பதிய கோலம் காவியம் என்கிற பெரும் பரப்பின் குறும் சொற் கனம். படிமக் கவிஞனென முத்திரை பதித்த பிரமிள் புதிய சிந்தனைவீச்சத்தை ஏற்படுத்தினார்;கவிதையின் புதிய புதிய தளங்களைக் கண்டடைய வாசக மனப்பரப்பைத் திறந்தார். பிரமிளின் இந்தக்கவிதை விரிக்கும் அகக்காட்சி ;அதனடியாகத் தொற்றும் உணர்வுக்கிளர்வு;சிந்தனைப் பரப்பில் எறியும் தத்தளிப்பு;காலம் பற்றிய அல்லது வாழ்வு பற்றிய எழுவினா; என கவிதை பல் நோக்கு வாசிப்பை நிகழ்த்துகிறது.

தமிழின் நவீன கவிதைப்பாய்ச்சலின் புதிய கோணம் பிரமிள்;வரைந்த பதிய கோலம் காவியம் என்கிற பெரும் பரப்பின் குறும் சொற் கனம்.

படிமக் கவிஞனென முத்திரை பதித்த பிரமிள் புதிய சிந்தனைவீச்சத்தை ஏற்படுத்தினார்;கவிதையின் புதிய புதிய தளங்களைக் கண்டடைய வாசக மனப்பரப்பைத் திறந்தார்.

பிரமிளின் இந்தக்கவிதை விரிக்கும் அகக் காட்சி ;அதனடியாகத் தொற்றும் உணர்வுக்கிளர்வு;சிந்தனைப் பரப்பில் எறியும் தத்தளிப்பு;காலம் பற்றிய அல்லது வாழ்வு பற்றிய எழுவினா என கவிதை பல் நோக்கு வாசிப்பை நிகழ்த்துகிறது.

இந்தக் கவிதை பாரதியின் அக்னிக் குஞ்சை எனக்குள் நினைவுறுத்துகிறது.அக்னிக்குஞ்சு குறியீடாகி நிகழ்த்தும் அரசியல் அல்லது சமூகவியல் மானுடவியல் கேள்வி முக்கியமானது.

அது வெந்து தணிக்கும் அறியாமை;அடிமைத்துவம்;பிற்போக்கு;ஒற்றுமையீனம் எல்லாம் குறியீடு வழி வழிகிறது.

பிரமிளும் இறகின் கனதியை செதுக்குகிறார்.

சிறகு இறகு காற்று பறவை வாழ்வு என்பனவான சொற்களின் பிணைவு அல்லது தொடரறா நிகழ்த்துகைதான் வாழ்வை எழுதிச்செல்கிறது.

வாழ்வை எழுதிச்செல்லும் களம் எது நிலமா?வானமா? காற்றெழுந்த வெளியா?

கவிதையின் கனதி வாசிப்பை ஆழமாக்குகிறது காற்றின் தீராப்பக்கங்கள்' என்ற சொற்பரப்பு வாழ்வின் முழுமையை அல்லது இன்பம்,துன்பம்,கண்ணீர்,கவலை,வெற்றி,தோல்வி,ஏற்ற இறக்கமென அதன் கணத்தை அல்லது காலத்தை குறிக்கிறது.

இதன் மீது பறவையின் சினை சிறகு,சிறகின் சினை இறகு இயங்குவதென்பது நம் சிந்தனைப்பரப்பில் அதிர்வெழுப்புகிறது.

இறகு சிறகின் ஒரு சிறு துண்டு.அதனால் தனித்தியங்க முடிகிறதா?பறவையின் பறப்புத் தொழிலைச் செய்ய முடியுமா? அதுவொரு அலைபொருள்.காற்றின் திக்கில் அள்ளுறும் சினை.எனினும் அதன் அலைதல் என்பது தன் முழுமையின்பறவையின் இயக்கத்தை நிகழ்த்துதல் தானே. தனிமையின் தவிப்பு;ஆவல் பூத்த வாழ்வா;எதிர்காலம் பற்றியதான ஏக்கம்;பறவையின் இயங்கலின் ஊக்கலென்றெல்லாம் சிந்திக்கத் தூண்டுகிறது.

நிலையாமை மீது நிலைத்தல் என்கிறதொரு தத்துவம் அடியில் உறைந்துகிடப்பதாய் தோன்றுகிறது.

கவிதையில் வாசகன் சேர்ந்து பயணிக்க வேண்டும்;தேடிக் கண்டடைய வேண்டும்; கவிதையை முழுமைப்படுத்த வேண்டுமென்கிற நவீன நோக்கு பிரமிள் கவிதை வாசிப்பினூடாக நிகழ்கிறதென்ற வகையில் அவர் வென்று நிற்கிறார்.

பறவையொன்றின் சிறு உறுப்பு அதிலிருந்து பிரிந்ததெனினும் அதனுடனான பிரியா உறவின் மீது குவிக்கும் தீராக்காதல் இந்தக் கவிதையின் பிரமிளின் தீராக்காதலை எழுதிச்செல்கிறது.

பிரமிள் எழுதியெழுதிச் சென்ற சிற்றலை;பெருங்கடல்.

## மறுசொல்
### முல்லை முஸ்ரிபா



# அன்பின் கவிதை



ஈழத்துக் கவிதையில் புதுக்கவிதை முன்னோடிகளில் ஒருவராக மதிக்கத்தக்கவர் காவிகளும் ஒட்டுண்ணிகளும் தந்த அன்பு ஜவஹர்ஷா அவர்கள்.கவிதைகளுக்கப்பால் கல்வித்துறையின் தவிர்க்கமுடியா ஆளுமை இவர்.கண்ணியமும் இரக்க சிந்தையும் மிகுந்தவர்.ஆசிரியர்களை ஆற்றுப்படுத்துவதில் வல்லவர்;ஆர்வத்துடிப்புக் கொண்ட அன்பு ஜவஹர்ஷா ஆசிரியராக,அதிபராக,கல்வியியலாளராக,வெளிப்பட்ட இவருக்குள் கவிஞன் அமுங்கி விட்டான்.

1964 இல் இடைநிலையில் படித்துக் கொண்டிருந்த போதே இவரது பேனாவுக்குள் கவிதை முளைவிடத் தொடங்கி விட்டது.

அன்பு ஜவஹர்ஷா என்கிற பெயருக்குப் பின்னால் இவரது தந்தையார் அப்துல் காதர் முஹம்மது ஹனிபாவின் கதை இருக்கிறது.அன்புதாசன் என இலக்கியத்தில் இயங்கியவர்.அவர் ஜஹவர்லால் நேருவின் அபிமானி;பித்தன் கே.எம்.ஷாவின் இதயத்துக்கு நெருக்கமான நண்பர்; அதனால் 'அன்பு'(தாசன்)' ஜவஹர்(லால் நேரு)'ஷா(பித்தன்)என்கிற மூன்றாளுமைகளின் கூட்டு நாமமாக நமது அன்புக்குரிய அன்புஜவஹர்ஷா வெளிப்பட்டார்.

எழுபதுகளில் இலக்கிய வீச்சம் கொண்ட கலாபூஷணம் அன்பு ஜவஹர்ஷா அவர்கள் 1975இல் காவிகளும் ஒட்டுண்ணிகளும் தந்தவர்.நன்றியுடன் அதிலிருந்து ஒரு கவிதை.

சேர்ந்தே வருகின்ற
துன்பத்துகள்கள் வெடிக்கும்
ஒருநாளில் அதை இன்றையதாக்க
'ஆட்'பேப்பரில் செந்நிறத்தூரிகையால்
கத்தி அரிவாள்களை ஆடம்பரமாய்ப்
போட்டோம் ஹோட்டேல் இன்ரகொண்டினெண்டில் 'ஹொட்' ரிங்சுடன் மார்க்ஸ் ,ஏங்கல்ஸ் பற்றி 'பெரிய'டிஸ்கஷன்ஸ் செய்தோம்.

'ஓபன் எயர்'தியேட்டரில் 'ஒபரேசன்' பற்றி 'லெக்ஷர்'வைத்தோம்.சே...

இந்தத் தொழிலாளர் விவசாயிகள் சுத்த மோஷம் மார்க்சிஸம் காலாவதியாகி விட்டது.'ஈகோ' விழித்துக்கொண்டது.'அனுபவமென்சூடு''மெய்முதல்வாதம்''சமுதாய ஆன்மீகப் பார்வை' இவைகளையும். ஒரு கை பார்த்தாலென்ன?

ஈழத்துக் கவிதையில் புதுக்கவிதை முன்னோடிகளில் ஒருவராக மதிக்கத்தக்கவர் காவிகளும் ஒட்டுண்ணிகளும் தந்த அன்பு ஜவஹர்ஷா அவர்கள்.கவிதைகளுக்கப்பால் கல்வித்துறையின் தவிர்க்கமுடியா ஆளுமை இவர்.கண்ணியமும் இரக்க சிந்தையும் மிகுந்தவர்.ஆசிரியர்களை ஆற்றுப்படுத்துவதில் வல்லவர்;ஆர்வத்துடிப்புக் கொண்ட அன்பு ஜவஹர்ஷா ஆசிரியராக,அதிபராக,கல்வியியலாளராக,வெளிப்பட்ட இவருக்குள் கவிஞன் அமுங்கி விட்டான்.



# உடல் மொழி இலக்கியம்

மொழிகளில் முதன்மையானது உடல் மொழி."நான் இரண்டு மொழிகள் பேசுகிறேன். ஒன்று தாய் மொழி.இன்னொன்று உடல் மொழி"என்று சொல்லுமளவு உடல் மொழி முக்கியமானது. ஒரு மனிதனின் மனதின் ஜன்னல் உடல் மொழிதான். இதைத்தானே அகத்தின் அழகு முகத்தில் தெரியுமென்கிறோம். மற்றவர்களின் மனதை வாசிக்க;படிக்க;புரிந்து கொள்ள விரும்புகிறோம்.இதற்கு புரிதல்,நுண்ணுணர்வு,உள்ளுணர்வு ஆகிய அதி நுண் உணர்திறன் அவசியமாகிறது.

ஒருவருடைய மனநிலையை சைகைகள்,முகபாவங்கள்,குரல் சமிக்ஞைகள் ஆகிய ஜன்னல்களூடாகப் புரிந்து கொள்ளலாம். உடல்மொழியைப் புரிவதில் இலக்கியமும் பங்காற்றுகிறது. மொழி கட்டமைக்கும் இலக்கிய வடிவங்களூடாக உயிர்கள் அல்லது மனிதர் வெளிப்படுவதால் உடல்மொழிப்புரிதலாகின்றது. சங்கப் படைப்புகள் முதலாக தமிழில் உடல் மொழி இலக்கியப் புரிதல் நிகழ்கிறது. இலக்கிய வாசிப்பில் முற்றுருவப்பாங்கான காட்சிக்கட்டமைப்பு நுண்ணுதர்தல் சார்பான மொழியுடல் அல்லது உடல்மொழியைக்கட்டமைத்து விடுகிறது.எனவேதான் உடல்மொழி கலை,இலக்கியங்களில் உயிர்ப்பாகிறது.

# மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்—23

தமிழ் சினிமா உலகத்தில் எம்.ஜி.ஆர் மக்கள் திலகம் ஆகவும் சிவாஜி கணேசன் "நடிகர் திலகம்" ஆகவும் விளங்கினர். இருவரும் தாய்ப்பாசத்தில் அதிக பற்று கொண்டவர்கள். இருவரும் நாடகம் நடிக்கும் போது நெருக்கமான உறவு ஏற்பட்டது. நண்பர்களாக இருந்தனர். காலையில் டிபன் சாப்பிடுவதற்கு எம்.ஜி.ஆர் சிவாஜி கணேசனுக்காக காத்திருப்பார். பகல் சாப்பாடும் இப்படித்தான் நடக்கும். இரவில் நாடகம் முடித்து வரும்வரை எம்.ஜி.ஆர் சிவாஜிக்காக காத்திருப்பாராம். இருவரும் அந்தளவுக்கு நல்ல நண்பர்களாக பழகினர். எம்.ஜி.ஆரும் சிவாஜியும் ஒன்றாக சினிமா பார்த்துவிட்டு இரவு ஒரு மணிக்கு தங்க சாலை தெரு கடைசியில் இருந்த சேட்டு பால் கடைக்கு போய் இருவரும் சப்பாத்தியும் பாலும் சாப்பிடுவார்களாம். எல்லாம் எம்.ஜி.ஆரின் செலவுதானாம். அப்போது எம்.ஜி.ஆரிடம் தான் கொஞ்சம் பணம் இருக்குமாம். அப்பவே மற்றையவர்களுக்கு உதவி செய்யும் பழக்கம் எம்.ஜி.ஆரிடம் அதிகம். அதுக்கப்புறம் சிவாஜியை வீட்டில் விட்டு விட்டு தனது வீட்டிற்கு எம்.ஜி.ஆர் திரும்புவார்.சிவாஜி கணேசனின் திருமண வைபவத்தில் சாப்பாடு பரிமாறும் வேலையை எம்.ஜி.ஆரே கவனித்து கொண்டார். திருமண வீட்டில் சிவாஜியையும் மனைவியையும் உட்கார வைத்து சாப்பாடு போட்டவரும் எம்.ஜி.ஆரே.எம்.ஜி.ஆரும் சிவாஜியும் நாடக உலகில் எப்படி நண்பர்களாக இருந்தார்களோ அப்படி சினிமா உலகிலும் நண்பர்களாகவே வலம் வந்தனர். ஒருமுறை சிவாஜியின் தாயாருக்கு உடல்நிலை மிகவும் மோசமான நிலையில் இருந்த போது எம்.ஜி.ஆர் சிவாஜியுடன் சேர்த்து இரண்டு நாட்கள் சிவாஜியின் தாயாரின் படுக்கை அருகிலேயே உட்கார்ந்திருந்தார். எம்.ஜி.ஆரும் சிவாஜியும் நண்பர்களாகவும் அண்ணன் தம்பியுமாக பழகினர்.



பொதுவாக எம்.ஜி.ஆர் கிழவிகள் யாரையும் பார்த்தால் கட்டி அணைத்து தாய்ப்பாசத்தை பொழிவார். சிலர் அரசியல் காரணத்திற்காக கிண்டல் செய்வார்கள். ஆனால் எம்.ஜி.ஆருடைய மனதில் எங்கே ஒரு மூலையில் தாய்ப்பாசம் இருப்பதனால் தான் இப்படி செய்கிறவராக இருந்தார். எம்.ஜி.ஆரும் சிவாஜியும் இணைந்து நடித்த "கூண்டுக்கிளி" படமானது 1954 இல் வெளியானது. பரணி ஸ்ரூடியோவில் ஒரு நாள் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்த போது, ஒரு காட்சி முடித்து அடுத்த காட்சிக்காக லைட்டிங் நடந்து கொண்டிருந்தது. சிவாஜி கணேசனும் டைரக்டரும் எதிரெதிரே உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர்.ஸ்ரூடியோ நுழைவாசலை நோக்கியபடி அமர்ந்திருந்த டைரக்டருக்கு திடீரென ஓர் அதிர்ச்சி. கேட்டை திறந்து கொண்டு ஏறத்தாழ ஐம்பது இளைஞர்கள் உள்ளே நுழைந்து சிவாஜியை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அந்தக் கூட்டத்துடன் வந்து கொண்டிருந்த எம்.ஜி.ஆரை பார்த்ததும் டைரக்டருக்கு மேலும் அதிர்ச்சி. டைரக்டர் சிவாஜியை நோக்கி திரும்பி பாருங்க எம்.ஜி.ஆர் இளைஞர் கூட்டத்தோடு வந்து கிட்டிருக்காரு என்றார்.எம்.ஜி.ஆர் சிவாஜியிடம் தம்முடன் வந்த இளைஞர்களை காட்டி இவர்கள் எல்லோரும் உங்க ரசிகர்களாம். காலையில் ஸ்ரூடியோவை தாண்டி போகிற போது இவர்களே ஸ்ரூடியோவுக்கு வெளியில் நிற்கிறதை பார்த்தேன். இப்போது திரும்பி போகிற போதும் பார்த்தேன். வெளியில் நின்னுகிட்டு இருந்தாங்க. அதான் உங்களை சந்திக்கட்டுமேன்னு உள்ளே கூட்டிக்கிட்டு வந்தேன். நான் வரட்டுமா என்று கூறி எம்.ஜி.ஆர் விடைபெற்றார். எம்.ஜி.ஆருக்கு எந்த சந்தர்ப்பத்திலும் சிவாஜி மீது போட்டி, பொறாமை இருந்ததில்லை. சிவாஜியின் நடிப்பு திறமையை சினிமா உலகத்தில் பாராட்டாதவர்கள் யாருமில்லை. எம்.ஜி.ஆர் கூறுவாராம். நடிப்பில் அவர் பாணி எனக்கு வராது. என்னுடைய பாணி அவருக்கு வராது" என்பாராம்.எம்.ஜி.ஆரும் சிவாஜியும் சினிமாவில் மட்டுமல்ல அரசியலிலும் போட்டி, பொறாமையின்றியே காணப்பட்டனர். சிவாஜி 1953 இல் தி.மு.க இல் இருந்து காங்கிரஸில் இணைந்தார். எம்.ஜி.ஆர் அண்ணாத்துரை முன்னிலையில் தி.மு.க இல் இணைந்தவர். தமிழ் நாடு அரசியலில் இருவரும் முக்கியஸ்தர்களாக இருந்தும் கூட போட்டி, பொறாமை இல்லாது இருந்தனர்.ஆனால் எம்.ஆர் ராதா அப்படியல்ல. 1967 இல் ஒரு நாள் பகலில் எம்.ஆர் ராதா எம்.ஜி.ஆரிடம் நேரில் பார்த்து பேச வேண்டும் என்று நேரம் கேட்டு எம்.ஜி.ஆரின் வீட்டிற்கு வந்து பேசிக்கொண்டிருக்கும் போது சற்று விவாதம் ஏற்பட்டு கோபமடைந்த எம்.ஆர் ராதா சற்றும் எதிர்பாராத விதத்தில் திடீரென துப்பாக்கி எடுத்து எம்.ஜி.ஆரை நோக்கி சுட்டுவிட்டார். துப்பாக்கிச் சூட்டின் போது எம்.ஜி.ஆரின் காது ஓரம் கழுத்தில் குண்டு பாய்ந்து சக்தி இழந்து பாதியுடன் நின்றுவிட்டது. தர்மம் தலை காத்தது. எம்.ஆர் ராதா எம்.ஜி.ஆரை நோக்கி சுட்டு விட்டு எம்.ஆர் ராதா தன்னைத் தானும் சுட்டுக் கொண்டார். உடனடியாக இருவரும் அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். காது ஓரம் கழுத்தில் பாய்ந்த துப்பாக்கி குண்டோடு ஆஸ்பத்திரிக்கு அழைத்து செல்லப்பட்ட மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அதிர்ஷ்டவசமாக நல்ல முறையில் வைத்தியம் செய்து மருத்துவர்களால் காப்பாற்றப்பட்டார். உடனேயே எம்.ஜி.ஆர், அண்ணண் ராதா அவர்களின் நிலைமை என்னாயிற்று என்று தன் படுக்கை அருகில் உள்ளவர்களிடம் கேட்டார். எம்.ஜி.ஆருக்கு துணைக்கு இருந்தவர்கள் எம்.ஆர் ராதா பற்றிய விடயத்தை சொன்னார்கள். இதைக் கேட்ட எம்.ஜி.ஆர் அதிர்ச்சியடைந்து போய் அங்குள்ள முக்கியஸ்தர்களையும், டாக்டர்களையும் அழைத்து ராதா அண்ணனுக்கு நல்ல முறையில் வைத்தியம் செய்ய வேண்டும் என்று பணிவோடு வேண்டினார்.துப்பாக்கியால் சுடப்பட்டு மருத்துவ மனைக்கு கொண்டு செல்லும்போது ஒரு பிரபல சினிமா நடிகரும், தி.மு.க வில் ஒரு உறுப்பினராக சென்றார். அந்த சமயம் தமிழ் நாட்டில் தேர்தல் நடக்க இருந்தது. வைத்தியம் முடிந்து எம்.ஜி.ஆர் வீட்டிற்கு வரும் போது பரங்கிமலை தொகுதியின் எம்.எல்.ஏ. ஆக வந்தார். அதே நேரத்தில் எம்.ஆர்.ராதா, எம்.ஜி.ஆரை துப்பாக்கியால் சுட்ட குற்றத்திற்காக ஜெயிலுக்கு சென்றார். ஜெயிலிலிருந்து எம்.ஆர்.ராதா விடுதலையாகி வரும்போது எம்.ஜி.ஆர் தமிழ்நாட்டிற்கு முதலமைச்சராகி விட்டார்.

(தொடரும்)



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# காந்த கண்ணழகி

தமிழ்த் திரைப்பட உலகின் முதல் கனவுக்கன்னி என்ற பெயர் பெற்ற கருப்பழகி டி ஆர் ராஜகுமாரி. தஞ்சையில் ஒரு கலை குடும்பத்தில் 1922இல் பிறந்தார். பெயர் ராஜாயி என்பது. ராஜகுமாரியின் அத்தை எஸ் பி எல் தனலெட்சுமி சினிமாவில் நடித்து வந்தார். 46இல் நாதஸ்வர சக்கரவர்த்தி டி என் ராஜரத்தினம் பிள்ளை நடித்த காளமேகம் என்ற படத்தில் கதாநாயகியாக நடிக்க தனலட்சுமி ஒப்பந்தமானார். அவர் சென்னைக்கு படப்பிடிப்புக்குச் செல்லும் போது ராஜாகுமாரியும் உடன் சென்றார்.

சென்னையில் தங்கியிருந்த தனலட்சுமியை ஒரு படத்திற்கு ஒப்பந்தம் செய்வதற்கு டைரக்டர் கே சுப்ரமணியம் வந்திருந்தார்.எம் கே தியாகராஜ பாகவதரையும் எம் எஸ் சுப்புலட்சுமியையும் திரை உலகிற்கு அறிமுகப்படுத்தியவர் இவர்தான்,

தனலட்சுமியிடம் சுப்ரமணியம் பேசிக்கொண்டிருந்த பொழுது ஒரு பெண் காபி கொண்டுவந்து கொடுத்தாள். கருப்பு நிறம். வேலைக்காரியோ என எண்ணும் உருவம். யார் இந்தப் பெண் என்று விசாரித்தார். என் சொந்தக்காரப் பெண் உதவிக்கு வந்திருக்கிறாள் என்றார் தனலட்சுமி.

நாளைக்கு இவளை ஸ்டூடியோவுக்கு அழைத்துவாருங்கள். மேக் அப் டெஸ்ட் போட்டுப் பார்ப்போம் என்று சொல்லி விட்டுச் சென்றார்.

மறுநாள் ராஜகுமாரி ஸ்டூடியோவுக்குச் சென்றார். அக்காலத்தில் புகழ் பெற்ற மேக் அப் மேன் ஹரி பாபு வுக்கு போன் செய்து ஒரு பெண்ணை அனுப்புகிறேன் மேக் அப் போட்டு அனுப்புங்கள் என்றார்.



மேக்கப் போடுவதற்கு காத்திருந்த ஹரிபாபு கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்த பெண்ணைப் பார்த்து மிரண்டு போனார். யாரம்மா நீ என்று விசாரித்தார். என் பெயர் ராஜாயி மேக்கப் டெஸ்டுக்காக டைரக்டர் சுப்ரமணியம் சார் அனுப்பினார் என்ற பதிலைக் கேட்டதும் ஹரிபாபுவுக்கு மயக்கமே வரும் போலிருந்தது. நிறமோ கருப்பு, பெயரோ ராஜாயி இவளுக்கா மேக்கப் டெஸ்ட் சுப்ரமணியத்துக்கு பைத்தியம் பிடித்துவிட்டது என்றபடி அங்கிருந்து ஓட்டம் பிடித்தார். மூச்சு வாங்கியபடி சுப்ரமணியத்தின் அறைக்குள் நுழைந்தார். நிஜமாகவே இந்தப் பெண்ணுக்கு மேக்கப் போடச் சொல்லுகிறீர்களா எனக் கேட்டார்.

அந்தப் பெண் கருப்பாக இருந்தாலும் கேமரா கோணங்களுக்கு பொருத்தமாக இருப்பாள். சீக்கிரம் போய் மேக்கப் போட்டு அனுப்புங்கள் என்றார் சுப்ரமணியம். திரும்பி வந்த ஹரிபாபு அரை மனதுடன் ராஜாயிக்கு மேக்கப் போட்டு அனுப்பினார்.

ராஜகுமாரியை பல்வேறு போஸ்களில் படம் எடுத்தார். படங்கள் பிரிண்ட் போட்டு வந்ததும் சுப்ரமணியத்துக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை. எதிர்பார்த்தற்கு மேலாகவே அழகாக தோன்றினார் ராஜாகுமாரி. என் படத்தில் நீ நடிக்கிறாய் என்றார். அதைக் கேட்டு மகிழ்ந்தார் ராஜகுமாரி. ஏதோ தோழி வேடம் கிடைக்கப் போகிறது என்று நினைத்தார். நான் கச்ச தேவயாணி என்ற படம் தயாரிக்கிறேன். அதில் நீதான் கதாநாயகி என்றதும் தான் காண்பதெல்லாம் கனவா அல்லது நனவா என்ற சந்தேகம் ஏற்பட்டது ராஜாகுமாரிக்கு. தன் கண் எதிரே இருந்த புகைப்படங்களைப் பார்த்தார். தன் தோற்றம் அடியோடு மாறி கவர்ச்சிக் கன்னியாக தோன்றுவதைக் கண்டார். உடனே அவர் சுப்ரமணியத்தின் காலில் விழுந்து வணங்கினார். இனி உனக்கு நல்ல காலம்தான். விரைவில் பிரபல நடிகையாக நீ வருவாய் என்று அவர் வாழ்த்தினார். அவர்தான் ராஜாயி என்ற பெயரை ராஜாகுமாரி என்று மாற்றினார்.

ராஜாகுமாரியின் முதல் படமான கச்ச தேவயாணி 41இல் வெளிவந்தது. முதல் 3 நாட்களில் தியேட்டர்களில் கூட்டமே இல்லை. படம் பார்த்தவர்கள் நன்றாக இருக்கிறது. கச்ச தேவயானியாக கச்சைக் கட்டிக்கொண்டு புது நடிகை ராஜாகுமாரி நடிக்கிறார். ஆஹா என்ன அழகு என்று கூற, தியேட்டர்களில் நாளுக்கு நாள் கூட்டம் அதிகரித்தது. பிறகு தினமும் ஹவுஸ்புல் தான். தமிழகம் முழுவதும் 25வாரம் ஓடியது. படத்தின் நாயகன் கொத்தமங்கலம் சீனு.

41இல் சூர்யபுத்திரி என்ற படத்தில் ராஜாகுமாரி நடித்தார். இயக்கியவர் பல உன்னதமான படங்களை இயக்கிய அமெரிக்க டைரக்டர் எல்லிஸ் ஆர் டங்கன். படம் சுமாராக ஓடியது.

ஆனால் அடுத்த ஆண்டில் பி யு சின்னப்பாவுடன் ஜோடியாக நடித்த மாடர்ன் தியேட்டர்ஸின் மனோன்மணி சூப்பர் ஹிட் ஆனது. சின்னாப்பா ராஜாகுமாரி ஜோடிப் பொருத்தம் பிரமாதம் என்று ரசிகர்கள் எண்ணினார்கள். எனவே மீண்டும் அவர்கள் குபேர குலசாவில் நடித்தார்கள். இதில் சின்னப்பா பாடிய நடையலங்காரம் கண்டேன் என்ற பாடல் பிரபலமானது.

43 இல் சிவகவி என்ற மகத்தான வெற்றிப் படத்தில் பாகவதருடன் முதல் முதலாக நடித்தார் ராஜகுமாரி. ஜோடியாக இல்லாவிட்டாலும் அதற்கு இணையான ராஜநர்த்தகியாக நடித்தார். கலைகளில் சிறந்தது நாட்டியக் கலையே என்று பாகவதர் பாட, ராஜகுமாரி ஆட, ரசிகர்கள் கிறுகிறுத்துப்போனர்கள்.

44 இல் வெளிவந்து தமிழ்ப் பட உலகில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்திய ஹரிதாஸ் படத்தில் பிரபல பாடகி என் சி வசந்தகோகிலம் பாகவதரின் ஜோடியாக நடிக்க , பாகவதரை மயக்கும் தாசி ரம்பாவாக ராஜகுமாரி நடித்தார். மூன்று தீபாவளிகளைத் தாண்டி ஓடி சாதனை நிகழ்த்தியது இந்தப் படம். மன்மதலீலையை வென்றார் உண்டோ? என்ற பாடலை பாகவதர் பாடிட ராஜகுமாரி ஆடிய நடனம் பல லட்சம் ரசிகர்களை ராஜகுமாரிக்கு தேடித் தந்தது. காலத்தை வென்ற இப்பாடலை எழுதி இசையமைத்தவர் பாபநாசம் சிவன் என்பது குறிப்பிடத் தக்கது.



எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

# Little Aid Skills நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் விழா

LITTLE AID SKILLS DEVELOPMENT CENTER

CERTIFICATE CEREMONY - 2023




இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 செப்டெம்பர் மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.